544
948

ஸ்ரீ

ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநமஃ.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணவசனம்

கிஷ்கிந்தாகாண்டம்.

யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும்பொருட்டு

ஸ்ரீமத் உபயவேதாந்த

எதிராஜமடி திருமலை லக்ஷ்மிகுமாரர் கோடி கன்னிகாதானம்,

வித்வான் அஷ்டாவதானம்,

மேல்பாக்கம்

தாததேசிகதாதாசாரிய சுவாமி யவர்களால்,

வடமொழியினின்றும், தென்மொழியில் வசனகடையாய்

மொழி பெயர்ப்பித்து,

இராயவேலூர் - கன்னையப்ப நாயுடு அவர்களால்,

சென்னை,

தமது ஸ்ரீராமாயண முத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விகுவாசு (ஹ) தனுர்மீ

1905.

Registered Copy Right.

கிஷ்கிந்தாகாண்ட ஸர்க்கங்களின் அட்டவணை.

ஸர்க்கம்.	விஷயம்.	பக்கம்.
க	பெருமாள் இளையபெருமாள் பம்பா புஷ்கரணி கரையில் எழுந்தருளி யிருக்கக்கண்டு மஹாராஜர் அச்சமுற்று நடுங்கியது.	,,
உ	மஹாராஜர் பெருமாள் இளையபெருமாள்களை இன்னரென்றறிவதன் பொருட்டுச் சிறியதிருவடியை யனுப்பியது.	,,
ங	சிறியதிருவடி பெருமாள் இளையபெருமாளைக் கிட்டி புகழ்ந்து குல கோத்திரங்களை விளவ, இளையபெருமாளாலேவப்பட்டு விடை யருளிச்செய்தது.	,, ,, கo
ச	சிறியதிருவடி இளையபெருமாள் தங்கள் குலகோத்திரங்களையும், இவ் விடத்திற்கு எழுந்தருளிய காரணத்தையும் அருளிச்செய்ய ஸ்ரீராம லக்ஷ்மணர்களை தன் திருத்தோள்களிலெழுந்தருளப்பண்ணிக்கொ ண்டு மஹாராஜரிடஞ் சேர்த்தது.	,, ,, ,, ,, கங
ஞ	பெருமாள் மஹாராஜருடன் நட்புசெய்து வாலியைக்கொன்று உனக் குப் பட்டங்கட்டுவிப்பேனென்று முன்னமே பிரதிஜ்ஞைசெய்து அபயஞ்செய்தருளியது.	,, ,, ,, கசு
சு	மஹாராஜர் பிராட்டியார் ஆகாயத்தில் செல்லுகையில், கீழேபோட்ட திருவாபரணங்களைக் காப்பாற்றி பெருமாளுக்கு ஸமர்ப்பித்தது.	,, ,, கஙு
எ	பெருமாள் பிராட்டியைத்தேடும்படி கட்டளையிட்டு வாலியைவென்று மஹாராஜருக்குபட்டாபிஷேகஞ்செய்விப்பேனென்று பிரதிஜ்ஞை செய்து மகிழ்வித்தருளியது.	,, ,, ,, உக
அ	மகாராஜர் பெருமாள் வாலியைக்கொலைசெய்வேனென்று பிரதிஜ்ஞை செய்தபின்னர், வாலி தன் மனையாளை யபகரித்துத் தன்னை வெரு ட்டியதும், வாலியுடன் பகைநேர்ந்த காரணத்தை உரைசெய்ததும்.	,, ,, ,, உச
கூ	மஹாராஜர் மாயாவியுடன் வாலி பகைகொண்டு போர்செய்தது முத லிய சேதியைப் பெருமாளுக்கு அறிவித்தது.	,, ,, உஅ
கo	மஹாராஜர் பெருமாளை நோக்கி, வாலி என் வேண்டுகோளுக்கிரங்கா மல் வெருட்டினனென்றும், பெருமாள் அவனைக் கொலைசெய்து ராஜ்ஜியத்தை யளிப்பேனென்று அபயமளித்தது.	,, ,, ,, உக
கக	மஹாராஜர் பெருமாளுடன் வாலிக்கு நேர்ந்த மதங்கமாமுனியின் சாபத்தை யுரைசெய்து அவனுடைய தோள்வலியை புகழ்ப் பெரு மாள் மஹாராஜருக்கு விசுவாஸம் வருவதற்காக துந்துபியின்சரீர த்தை இடதுகால்கட்டைவிரலில் பத்துகாதவழிதூரம் தள்ளினது	,, ,, ,, ,, ங க
கஉ	பெருமாள் ஸப்தஸாலங்களையும் பிளந்து மஹாராஜனைவாலியுடன் போர்செய்வித்துப் பின்பு பேதம்தெரியாமல் தோல்வியுற்றோடி வந்த அந்த மஹாராஜருக்கு அடையாளங்கட்டி மீளவும் போர் செய்யத் தூண்டியருளியது.	,, ,, ,, ,,

அட்டவணை.

ஸர்க்கம்.	விஷயம்	பக்கம்.
ககூ	வாலி தாரைக்குச் சமாதானமுரைத்து புறத்தில் வந்து மகாராஜருடன்	,,
,,	போர்செய்து பெருமாள் எய்த பாணத்திலுல் அடிபட்டுத் தரையில்	,,
,,	விழுந்தது.	கரு
கஎ	வாலி பெருமாளை இகழ்ந்தது.	கஎ
கஅ	பெருமாள் வாலிக்குச்சமாதானம் அருளிச்செய்ததும், வாலி அபராத	,,
,,	க்ஷாபனம் செய்துக்கொண்டதும்.	ருக
ககூ	வாலி இறந்ததைக்கேட்டுத் தாரை அங்கதனுடன் அங்கோடி வந்தது.	ருஎ
உ0	தாரை புலம்பி அழுதது.	ருஅ
உக	பிராயோபவேசஞ்செய்த தாரையைச் சிறியதிருவடி இனிய மொழி	,,
,,	களிலுலே தேற்றியது..	கூ0
உஉ	வாலி மூர்ச்சை தெளிந்து மகாராஜர் அங்கதன் இவர்களுடன் மேலே	,,
,,	நடக்கவேண்டிய விதத்தை யுரைசெய்து அவ்வண்ணமே செய்யும்	,,
,,	படி வேண்டியது.	கூஉ
உரு	தாரையின் புலம்பல்.	கூரு
உச	தாரைதுன்புற்றதைக்கண்டு மஹாராஜர் சோகமடைந்து தியில்விழுந்	,,
,,	திறப்பேனென்று பெருமாளைவேண்டியதும். பெருமாள் கேட்டுத்	,,
,,	தாரையைத் தேற்றுவதன்பொருட்டுச் செல்லுகையில், தாரை	,,
,,	பெருமாளை நோக்கி புலம்பியதும், நன்மொழியால் பெருமாள்	,,
,,	தேற்றியதும்.	கூஎ
உருு	மஹாராஜர், அங்கதகுமாரன் முதலானவர்களுடன் வாலிக்குக் ஸம்	,,
,,	ஸ்காரஞ்செய்து நீர்க்கடனையும் முடித்துவிட்டு பெருமாளரு	,,
,,	கில் வந்தது.	எரு
உசு	மழைகாலம் சேர்ந்தமையின், சீதையைத்தேட முடியாதாதலின்,	,,
,,	இப்போழ்து பட்டாபிஷேகஞ் செய்துகொள்கவென்று பெருமாள்	,,
,,	அருளிச்செய்து பட்டமுங்கட்டுவித்து அங்கதகுமாரனுக்கும் இள	,,
,,	வரசு பட்டம் கட்டுவித்தது.	எஎ
	மஹாராஜர் பட்டாபிஷேகம்	எக
உஎ	பெருமாள் இளையபெருமாருடன் மழைகாலத்தை மலைக்குகையிற்	,,
,,	போக்கிப் பிராட்டியாரை நினைத்து வருந்துகையில், இளையபெரு	,,
,,	மாள் சோகந்தணிய தேற்றியது.	அ0
உஅ	பெருமாள் இளையபெருமாருடன் கார்காலத்தை வர்ணனைசெய்	,,
,,	தருளியது.	அரு
உக	சிறியதிருவடி மகாராஜருக்குணர்வூட்டிச் சேனைகளை யழைப்பிக்கும்	,,
,,	படி கட்டளைசெய்வித்தது.	அஅ
ரு0	கார்காலம் கழிந்தும் மகாராஜர் முயற்சியின்றி யிருப்பதறிந்து பெரு	,,
,,	மாள் திருவுளந் சிறியருளியது....	ககூ
ருக	இளையபெருமாள் சினங்கொண்டு கிஷ்கிந்தைச்கழுந்தருளுகையில்.	,,
,,	அங்கதன் கண்டு மகாராஜருக்கறிவித்தது.	கூசு
ருஉ	சிறியதிருவடி மகாராஜருக்கு இதமுரை செய்தது.	கூக
ருரு	சினங்கொண்டு வந்த இளையபெருமாளைத் தாரை இனியமொழியால்	,,
,,	தேற்றிச் சீற்றத்தை யாற்றியது.	கஅக
ருச	இளையபெருமாள் மகாராஜருக்குப் பெருமாளுடைய கட்டளையை	,,
,,	யறிவித்தருளியது.	கஅரு
ருரு	மீளவும் தாரை இளையபெருமாள இனியமொழிகளினுல் சமாதானஞ்	,,
,,	செய்து சீற்றத்தைத் தணித்தது.	கஅஎ
ருசூ	இளையபெருமாளும் மகாராஜருமும் சினமும் மயக்கமும் தீர்ந்துமகிழ்	,,
,,	வுடன் ஸம்பாஷணைஞ் செய்துகொண்டது.	கஅஅ
ருஎ	மாஹராஜருடைய கட்டளையின்படி வாநரசேனைகள் வந்து கூடியது.	ககஅ

ஸர்க்கம்.	விஷயம்.	பக்கம்.
ஈஅ	மஹாராஜர் இளையபெருமாளுடன் பெருமாளெழுந்தருளியிருக்குமிட	,,
,,	த்திற்கு வந்து அவரைக்கண்டு மகிழ்ந்தது..	ககஉ
ஈக	வானரசேனைகளெல்லாம் மகாராஜரிடம் வந்து கூடியது ...	ககஈ
சO	பிராட்டியைத் தேடுவதற்காக விதனென்னும் யூதபதியைமகாராஜர்	,,
,,	சிழ்திசைக்குக் கட்டளைசெய்தனுப்பியது.	ககடு
சக	மஹாராஜர் தென்திசைக்கு வாநரர்களை யனுப்பியது.	கஉக
சஉ	மஹாராஜர் மேற்குதிசைச்கு வாநரர்களை யனுப்பியது	கஉச
சஈ	மகாராஜர் வடதிசைக்குச் சதவலியென்னும் யூதபதியைக் கட்டளை	,,
,,	செய்தனுப்பியது.	கஉள
சச	பெருமாள் கிறியதிருவடியிடத்தில் தமது மோதிரத்தைப் பிராட்டி	,,
,,	யாருக் கடையாளமாக அளித்தருளியது.	கஈக
சடு	நாற்றிசையிலும் அனுப்பப்பட்ட வானரர்களெல்லோரும் பிராயணப்	,,
,,	பட்டது.	கஈஉ
சஈ	மகாராஜர் தாம் முன்பு பார்முழுதும் சுற்றியதற்குக் காரணத்தை	,,
,,	தம்மை விஞ்வியருளிய பெருமாளுக் குரைசெய்தது ...	கஈஈ
சள	தென்திசைநீங்கலான மூன்று திசைகளிலும் சென்ற வாநரர்கள் பிரா	,,
,,	ட்டியாரைத் தேடிக் காணுமல் மீண்டெய்திவிட்டது ...	கஈடு
சஅ	தென்திசையிற்சென்றசிறியதிருவடி முதலாளோர் நடுவழியில் ஒரஸ	,,
,,	ரனைக்கண்டு கொடிய ராவணனென்றெண்ணிக் கொலைசெய்தது.	கஈசு
சக	அங்கதன் முதலாளோர்கள் மற்றும் பிராட்டியைத் தேடியது...	கஈள
கO	சிறிய திருவடி முதலாளோர்கள் நிகும்பிலமென்னுங் குகையினுள்ளே	,,
,,	புகுந்து விட்டது	கஉக
கக	அந்த நிகும்பிலத்தின் வரலாற்றைஅங்குள்ள சுயம்பிரபையென்பவள்	,,
,,	சிறியதிருவடி முதலாளோர்க் குரைசெய்தது.	கசக
கஉ	சிறியதிருவடி சுயம்பிரபைக்குத் தாங்களங்கே வந்ததற்குக் காரண	,,
,,	முரைசெய்தது	கசஉ
கஈ	வாநரர்களெல்லோரும் நிகும்பிலத்து நின்றும் புறத்தில் வந்து மகா	,,
,,	ராஜர் கெடுவிட்ட காலம் கழிந்தும் பிராட்டியைக்காணுமல் போன	,,
,,	தைக் குறித்து மிகச் சிந்தித்து வெறுப்புற்றிருந்தது ...	கசச
கக	சிறிய திருவடி அங்கதனுக் கிதங்கூறல்	கசள
கடு	வாநரர்களெல்லோரும் தமக்குக் குறித்த காலந் தீர்ந்துவிட்டதன்	,,
,,	மேல் அச்சங்கொண்டு பிராயோபவேசஞ்செய்தது	கசக
கசு	பிராயோபவேசஞ்செய்த வாநரர்கள் ஸம்பாதியைக்கண்டு ஸம்பா	,,
,,	தியனைஞ் செய்தது	கஙO
கள	வாநரர்களெல்லோரும் ஸம்பாதியின் விஞ்வுக்கு விடை கூறியது	கஙஉ
கஅ	ஸம்பாதி வாநரர்களுக்குப் பிராட்டி யிலங்கையிலிருக்கின்றனளென	,,
,,	வுரை செய்தது	கஙச
ககு	ஸம்பாதி வாநரர்களுக்கு மீளவும் பிராட்டியின் சேதி கூறியது	கஙசு
கஙO	ஸம்பாதி தன்னுடைய மூற்செய்லை மீளவும் வாநரர்களுக்கு மொ	,,
,,	ழிந்தது	கஙக
கஙக	இதுவுமது	கசO
கஙஉ	நிசாகரமாமுனி ஸம்பாதிக்கு இதமுரைத்தது	கசக
கஙஈ	வாநரர்கள் ஸம்பாதியிடத்தில் விடைபெற்றுக்கொண்டுதென்கடலின்	,,
,,	வடகரை சேர்ந்து அதனை எங்ஙனந் தாண்டுவதெனச் சிந்தையுற்	,,
,,	றது.	கசஉ
கஙக	வாநரர்களெல்லோரும் தென்கடலைக்கண்டு அதனைத் தாண்டுவதன்	,,
,,	பொருட்டுத் தந்தமக்குள்ள திறமையை கூறுமாறு நிச்சயஞ்	,,
,,	செய்துகொண்டது	கசச

ஸர்க்கம்	விஷயம்.	பக்கம்.
சுரு	அங்கதன் முதலிய வானரர்களெல்லோரும் தந்தம் திறமையைக்கூறி	,,
,,	யந்தச்காரியத்தைமுடிப்பவர் யாவருளரெனச் சிந்தையுருகையில்	,,
,,	ஜாம்பவான் சிறியதிருவடியை யேவமுயன்றது	கசுசு
சுசு	ஜாம்பவான் சிறியதிருவடியின் மகிமையைப் புகழ்ந்து அவரைச்	,,
,,	சென்று காரியத்தை முடிக்குமாறு உடன்படுத்தியது. ...	கசுஅ
சுஎ	சிறியதிருவடியலகடலேதாண்டுவதன்பொருட்டு மகேந்திரமலைமே	,,
,,	லேறி நின்று வானரர்களை மகிழ்வித்து மகிழ்ந்தது.	களெ0

கிஷ்கிந்தாகாண்டம்

வர்க்கங்களின் அட்டவணை,

முற்றிற்று.

ஸ்ரீ

படத்தின் அடடவணை,

படத்தின் நெ.	விஷயம்.	பக்கம்.
க	சிறியதிருவடி பெருமாளிடையபெருமாளைக் கண்டது.	க0
உ	சிறியதிருவடிக்கு இடையபெருமாள் தங்கள் குலகோத்திரங்களை	,,
,,	யுரைத்தது	கரு
ரு	பெருமாள் மஹாராஜருக்கு அபயமளித்தது.	கசு
சு	பெருமாள் தூதுபியின் எலும்பை இடதுகால்விரலால் தள்ளியது. ...	ருக
ரு	பெருமாள்வால்லியைக் சம்ஹாரம் செய்தருளியது.	சரு
சு	வாலியை ஸமஸ்காரம் செய்தது.	எரு
எ	மஹாராஜர் பட்டாபிஷேகம்.	எக
அ	ஸ்ரீராமர் சிறியதிருவடி கையில் மோதிரம் கொடுத்தது.	கரு
க	வானரர்கள் ஸம்பாதியைக் கண்டு சம்பாஷித்தது.	ச ட
க0	சிறியதிருவடி யலகடலேதாண்டி இலங்கைக்குச் சென்றது. ...	களெ0

படத்தின் அட்டவணை

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநமஃ.

ஸ்ரீரகுநந்தன பரப்ரஹ்மணேநமஃ.

ஸ்ரீமத்வால்மீகிராமாயணவசநம்

கிஷ்கிந்தாகாண்டம்.

த்யாநஸ்லோகம்.

పశ్యన్పుష్కరిణీంప్రసన్నసలిలాం పంపాంప్రహృష్యద్విజాం।
హృష్యన్మృగపక్షిణంస్మరన్నహీ భువం నుహ్యక్తలపక్షలక్ష్మణం॥
స్నిహ్యక్తసూర్యభువేసురేశ్వరభువే ద్రుహ్యక్తధరక్తభస్మసం।
న్నహ్యక్తరౌద్రవపూరణాయ సహరిస్నుస్యాత్స్వమన్దాంశ్రియం॥

பச்யன்புஷ்கரிணீம்ப்ரஸன்னஸலிலாம் பம்பாம்ப்ரஹ்ருஷ்யத்விஜாம்।
ஹ்ருஷ்யன்ம்ருக்தத்ருசம்ஸ்மரன் மஹிபுவம்ம்ருஹ்யன்லபன்லக்ஷ்மணம்॥
ஸ்நிஹ்யன்ஸூர்யபுவேஸுரேச்வர புவேத்ருஹ்யன்தரன்பஸ்மஸம்।
நஹ்யன்ரௌத்ரவபூரணாய ஸஹரிஸ்ஸ்நுஹ்யத்வமந்தாம்ச்ரியம்.॥

முதலாவதுஸர்க்கம்.

பெருமாளும் இளையபெருமாளும் பம்பா புஷ்கரணியின் கரையில் எழுந்தருளி யிருக்கக்கண்டு, மகாராஜர் அச்சமுற்று நடுங்கியது.

அநந்தரம் பெருமாள் இளையபெருமாளுடன் பற்பல மலர்கள் மலர்ந்த அந்தப் பம்பையைக்கண்டு, காமவேட்கை மிகுந்து, புலன்கள் நடுங்கி, இளையபெருமாளை நோக்கி, பாரடா லக்ஷ்மண! இந்தப் பம்பை வைடூரியம்போல நின்மலமான நீருடையதும், மலர்ந்த தாமரை நெய்தல் முதலிய பூக்களை உடையதும், பற்பல மரம், செடி, கொடிகளினல் சூழப்பட்டது மாக விளங்குகின்றது; இதைச் சுற்றிலுமுள்ள காட்டிலும் மலைகள்போல உயர்ந்த மரங்கள் வளர்ந்திருக்கின்றன; வசந்தருது சீதையைப் பிரிந்த என்னை வெறுக்கின்றது; பரதனுடைய துன்பத்திலும், சீதையைப் பிரிந்ததிலும், மிக வருந்துகின்ற எனக்கும் இப்பம்பை விளங்குகின்றது; இது பற்பல மலர்கள் மலர்ந்தும், குளிர்ந்த நீர் நிறைந்தும், தாமரைகளினல் மறைந்தும், காணற்கினியதாகின்றது; பாம்பு முதலிய கொடிய ஜந்துக்களும், பசு பக்ஷிகளும் அடர்ந்து, கறுத்தும், பசுமையாயுமுள்ள இந்த

இளம்புல் உள்ள பூமி பற்பல மலர்கள் உதிர்ந்து சித்திராசனம்போல விளங்குகின்றது ; மலர்ந்த மலர்களினால் நிறைந்த மரங்களின் நுனிகளும், மலர்ந்த கொடிகளினால் சூழப்பட்டுள ; இக்காலம் மிகவும் இனிய மந்த மாருதமுள்ளதாதலின், காமம் மிக வளர்கின்றது ; இச்சித்திரைமாசத்தில் எல்லாமலர்களும் மலர்ந்தமையின், மனம் மிக கமழ்கின்றது ; மலர்களை உதிர்க்கின்ற இம்மரங்களும், மழைபொழிகின்ற மேகங்கள்போலக் காணப்படுகின்றன ; அவைகளினின்றும் உதிர்ந்து காற்றினால் தூற்றப்பட்ட புஷ்பங்களைப்பார் ; எங்கும் பரவியிருக்கின்றன ; விழுந்தனவும், விழ்கின்றனவும், விழ்வனவுமாகிய மலர்களுடன் காற்று விளையாடுகின்றதுபோலும், மலர்ந்த மரங்களின் கிளைகளை அசைத்து வீசுகின்ற காற்று வண்டுகளினால் பின் தொடர்ந்து கானம் செய்யப்பட்டு, மதமேறிய குயில்களின் தொனிகளினால் மரங்களை ஆட்டுவிக்கின்றதுபோலும், குகைகளின் பிரதிதொனிகளினால் கானம்செய்கின்றதுபோலும், அதனால் அசைக்கப்பட்ட மரங்கள் ஒன்றுட னொன்று சேர்ந்து தொடுக்கப்பட்டனபோலும், இது சந்தனம்போலக் குளிர்ந்து, மணம் கமழ்ந்து, மெல்ல மெல்ல நகர்ந்து, சிரமத்தைப்போக்கு கின்றது; வாயுவினால் அசைக்கப்பட்ட இம்மரங்கள் வண்டுகளினால் கூவு கின்றனபோலும், உயர்ந்த மரங்களினால் இம்மலைகளும் மிக உயர்ந்து தோற்றுகின்றன; மலர்கள் நிறைந்த நுனி உள்ளனவும், காற்றினால் அசைக் கப்பட்டனவுமாகிய இம்மரங்கள் வண்டுகளினால் பாடுகின்றனபோலும், இந்தக் கோங்குமரங்களும், மலர்கள் நிறைந்து, பொன் அணிகளணிந்து, பீதகவாடை உடுத்த மனிதர்கள்போலத் திகழ்கின்றன ; இந்த வசந்த காலம் சீதையைப் பிரிந்த என்னை வெறுக்கின்றது; மன்மதன் என்னை பீடிக் கின்றான்; மகிழ்ந்த இக்குயில் என்னைக் கூவி அழைக்கின்றதுபோலும் ; இந்த வான்கோழியும், மலை அருவியில் மகிழ்ந்துகூவி என்னை வருத்தமுறச் செய்யும் ; மூன்று, பஞ்சவடியில் இதன் தொனியை ஜானகி செவியுற்று, என்னை அழைத்து மிக மகிழ்ந்து புகழ்ந்தனள் ; இவ்வண்ணம் பற்பல பறவைகளும் பலவிதமாகக் கூவி, மரம், செடி, கொடி, புதல்களில் தத்தம் இனங்களுடன் கூடி, தத்தம் மனைவிகளுடன் புணர்ந்து மகிழ்கின்றன ; இவைகளின் தொனிகளால் இம்மரங்கள் எனது வேட்கையை வளர்க்கின் றன; வசந்தமென்னும் அக்கினி, அசோகங்களின் பூங்கொத்தென்னும் தணலையும், வண்டுகளின் தொனி என்னும் இரைச்சலையும், தளிர்கள் என் னும் செவ்விய சுவாலைகளையுமுடையதாகி என்னை எரிக்கும்; அடர்ந்த இமைகளையுடைய குவலயம்போன்ற கண்களையும், சுரிகுழலையும், இனிய மொழியையுமுடைய சீதையைக் காணுமல்யான் பிழைப்பதில்யாதபயன்? இக்காலமும், இவ்விடமும், அவளுக்கு மிகவினியனவாகும்; காமவேட்கை யினால் தோன்றி, வசந்தத்தினால் வளர்க்கப்பட்ட என்னுடைய இத்துன்ப மென்னும் தீ என்னை விரைவில் எரிக்கும்; அந்தோ ! சீதையைக்காணுமல் இவைகளைக் காண்பதினால் எனது துன்பம் பெரும்பாலும் வளரும்; சீதை கட்புலனாகாமல் வருத்துகின்றனளே ! இவ்வசந்தருதுவோவெனில், தாணப்

பட்டே வருத்துகின்றது; இந்தத் தென்றல், சீதையைப்பிரிந்து மிக சிந்தை கொண்டிருக்கின்றமையின், தவிக்கச்செய்கின்றது; இம்மயில்களும் சிறகை விரித்துக்கொண்டு தங்கள் பேடுகளினால் சூழப்பட்டு மகிழ்ந்தாடுகின்றன; அடா லக்ஷ்மணா! ஆண்மயில் ஆடக்கண்டு, பெண்மயில் வேட்கைகொண்டு, அதற்கு எதிரில் ஆடுகின்றது பாராய்; அதைக்கண்டு இம்மயிலும் வேட்கை கொண்டு ஓடிச் சிறகுகளை விரித்து, தோகைகளினால் மயக்குகின்றது போலும்; இக்காட்டில் சீதை ராவணனால் பறிக்கப்பட்டிராள்; ஆதலின், இது காந்தையுடன் கூடி ஆடுகின்றது; இக்காலத்தில் பசு பக்ஷிகளும், மிக வேட்கைகொண்டு புணர்ந்து மகிழ்கின்றமையின், சீதை அன்றி நான் இங் கிருப்பது மிகவும் கடினம்; சீதை இருப்பாளாயின், இப்பெண்மயில் ஆண் மயிலை மகிழ்விக்கின்றதுபோல என்னையும் மகிழ்விப்பாளல்லளோ? பாரடா லக்ஷ்மணா! இம்மலர்ந்த மலர்களும், என் விஷயத்தில் பயனற்றனவாகின் றன; இம்மலர்கள் வீணாக வண்டுகளுடன் தரையில் உதிர்ந்து விழுகின் றன; கூட்டங்கூட்டமாகக்கூடி கூவுகின்ற இப்பறவைகளும், எனது காம வேட்கையைப் பெருக்குகின்றன; சீதை இருக்குமிடத்திலும் இந்த வசந்த காலமிருக்குமாயின், என்னைப்போலவே அவளும் வருந்துவாளல்லளோ? இது அவ்விடத்திலிராது; இருக்குமாயின், என்னை விட்டு அவள் எவ் வண்ணமுய்வாள்? ஒருகால் இந்த வசந்தமிருக்குமாயின், பிறர்களால் வெருட்டப்பட்ட அவள் யாது செய்வாள்? யௌவனமுடையவனும், காமனை இகழ்போன்ற கண்களை யுடையவளும், இனிதாகவும், மெதுவா கவும், முன்பு மொழிபவளுமாகிய என் நாயகி, இக்காலத்தில் உயிரையே விட்டு விடுவாள்; இவ்விஷயத்தில் என் மனம் சிறிதும் ஐயமுறுகின் றிலது;—

मयीभावस्तु वैदेह्या स्तत्त्वतो विनिवेशितः ।
ममापीभावस्तस्यां सर्वथा विनिवेशितः ॥

மயீபாவஸ்து வைதேஹ்யா ஸ்தத்த்வதோவிநிவேசிதः।
மமாபீபாவஸ்தஸ்யாம் ஸர்வதாவிநிவேசிதः ॥

வைதேஹிக்கு என்னிடத்திலும், எனக்கு அவளிடத்திலும், ஆசையும் அன்பும் உண்மையாக உள அல்லவோ? மனம் கமழ்ந்தும், குளிர்ந்தும் வீசுகின்ற இக்காற்றும், அவளைப்பிரிந்து வருந்துகின்ற எனக்குத் தீப்போ லத்தோற்றுகின்றது; யான் சீதையுடனிருக்கையில், இக்காற்றை எப்பொழு தும் குளிர்ந்தே யிருக்குமென நினைத்திருந்தேன்; இப்பொழுது அதுசீதை யின்றி, தீப்போலத் தீக்கின்றதே? இக்காக்கையும், முன்பு வன்மையாகக் கூவி இப்பொழுது இனிமையாகக் கூவுகின்றது; இக்காக்கையே முன்பு சீதையினால் ரக்ஷிக்கப்பட்டு, இப்பொழுது பிரதி உபகாரம் செய்கின்றது போலும்; ஆதலின், இது என் நாயகியின் சமீபத்தை அடைவிக்கும்; மலர் ந்த மலர்களின்மேல் மகிழ்ந்து கூவுகின்ற இப்பறவைகளைப் பாராய்; காற்றி னால் அசைக்கப்பட்ட நிலகமரத்தின் பூங்கொத்தை இந்த வண்டு மதத்தி

னல் மயக்குகின்ற நாயகியைப்போலச் சேர்கின்றது; காமிகளை மிகச் சோக மூறச்செய்கின்ற இந்த அசோகமரமும், காற்றில் அசைகின்ற பூங்கொத் துகளினல், என்னை வெருட்டுகின்றதுபோலும்; அடா லக்ஷ்மண! தளிர்த்து மலர்ந்த இம்மரஞ்சோலையும், மகிழ்ந்து செருக்குற்று, நற்சாந்தம்பூசிய மனிதர்போல விளங்குகின்றது; கின்னரங்களும், இப்பம்பையின் நாற்புறங் களிலும் உலாவுகின்றன; மலர்ந்த செந்தாமரைகளும், அப்பொழுது தோன்றிய சூரியன்போல விளக்குகின்றன; இப்பம்பையும் நிர்மலமான ஜலமுடையதும், தாமரை நெய்தல்கள் நிறைந்ததும், அன்னம் முதலிய நீர் ப்பறவைகள் ஒலிப்பதும், சுரும்புகள் அருந்திய மகரந்தங்களையுடைய செந் தாமரை திகழ்வதுமாகிக் காணப்படுகின்றது; யானை, மான் முதலிய விலங்கு களுமிறங்கி நீர் குடிக்கின்றன; கமலங்களும் காற்றினலுயர்ந்த அலைகளினல் மோதப்பட்டு அசைகின்றன; தாமரை இதழ்போலவகன்ற கண்களையுடைய நிரந்தரம் தாமரைமீது விருப்புற்ற சீதையைக்காணுமல், என் உயிர் வாழ்க் கையை நன்கு மதிக்கின்றிலேன்; அந்தோ! காமனது கொடுமையை என் னனஉரைப்பேன்; நெடுநாளாய்ப்பிரிந்து பார்க்கவரிய நாயகியை அவன் நினைக்கச் செய்கின்றனனே! இந்த வசந்தருது மலர்ந்த வன்கங்களையுடைய தாகி என்னை வருத்தாதாயின், காமனை வெல்வேன்; சீதையுடன் கூடியிருக் கையில் எவை எனக் கினியன வாயினவோ, அவை எல்லாம் இப்பொழுது இனியன ஆகின்றில; தாமரை இதழ்களை என் கண் சீதையின் கண்களென எண்ணுகின்றது;—

పద్మకేసరసంస్పృష్టో వృక్షాన్తరవినిస్సృతః।
నిశ్వాసఇవసీతాయా వాతివాయుమనోహరః॥

பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டோ வ்ருக்ஷாந்தரவிநிஸ்ருதः।
நிச்வாஸஇவஸீதாயா வாதிவாயுர்மநோஹரः॥

தாமரை தாதுக்களுடன் கூடி இனியமரங்களின் இடையினின்றும் தோன்றிய இக்காற்று, சீதையின்மூச்சுக்காற்றுபோல வீசி என் மனத்தை எரிக்கின்றது; பாரடா லக்ஷ்மண! பம்பையின் தென்கரையில் மலைத்தாழ் வரைமேல் மலர்ந்த கர்ணிகாரமரம் மிகத் திகழ்கின்றது; அம்மலையும் பற் பல தாதுக்கள் நிறைந்து, வாயுவினல் மோதப்பட்டு, பற்பல நிறமுள்ள தூளிகளைப் படைக்கின்றது; மலையின் தாழ்வரைகளும், மலர்ந்தனவும் இலை உதிர்ந்தனவுமாகிய பலாசு மரங்களினல் எரிகின்றனபோலக்காணும்; பம் பையின்கரையில் முளைத்த ஜாதிமல்லிகை, அரளி, தாழை, தொச்சி, சிறுமல் லிகை, பெருமல்லிகை, குருக்கத்தி முதலிய பூஞ்செடிகளும், புங்கம், இரு ப்பை, வஞ்சுளம், வகுளம், சண்டகம், திலகம், புன்னை, கடம்பு, கர்ச்சூரம், மாவலிங்கை, அசோகம், ஆனைவணக்கி, அழிஞ்சில், மா, பாதிரி, மலை அத்தி, வஞ்சி, காட்டுவாகை, சிம்சுபம், மருதாணி, சந்தனம் முதலிய பற்பல மரங் களும் மலர்ந்து, தேன் பொழிந்து, மலர்ந்தகொடிகளினல் சூழப்பட்டு, அடர்ந்து விளங்குகின்றன; தூரத்திலிருக்கின்றனவும், காற்றினல் அசைந்து

அருகினிருக்கின்றனபோலக் காணப்படுகின்றன ;காமிகள் காமினியர்களைப் போல இம்மரங்கள் கொடிகளைத்தழுவுகின்றன; இக்காற்றும் மரத்தினின்று மற்றொருமரத்திற்கும், மலையினின்று மலைக்கும், வனத்தினின்று வனத்திற்கும் சென்று பற்பல ரசங்களையும் முகந்து கமழ்ந்து வீசுகின்றன; சில மரங்கள் மிகுதியும் மலர்ந்து மதுவைப்பெருக்குகின்றன; சில முகிழ்த்துக் கருமையாகத் தோற்றுகின்றன; இது காண்டற்கினியது; இது நுகர்தற்குரியது; இது மலர்ந்தது; என்று பேராசைகொண்ட வண்டும், அங்கங்குத் திரிந்து அலைந்து உட்கார்ந்து, உடனே எழுந்து வேறு இடத்திற்கு நிகழ்கின்றது; இந்தப் பூமியும் தானே மலர்ந்து உதிர்ந்த மலர்களினால் பரப்பப்பட்டுப்படுக்கைபோல விளங்குகின்றது; வெவ்வேறு வண்ணமுள்ள மலர்கள் நிறைந்த சிலைகள் தனித்தனிக் காணப்படுகின்றன; இந்த வசந்தகாலத்தில் மலர்ந்த மலர்கள் எவ்வண்ணம் நிறைந்திருக்கின்றன பாராய்; மரங்கள்யாவும் ஒன்றுக்கொன்று பகையினால் முற்றும் மலர்ந்து வண்டுகளின்ஒலியினால் ஒன்றுக்கொன்று கூவி அழைக்கின்றனபோலும், இந்த நீர்க்காக்கை நீரில் மூழ்கிப் பேடுடன் புணர்ந்து மகிழ்கின்றது; இவைகளைக்காண்பதினால் என்னைக் காமத்தீப்பற்றி யெரிக்கின்றது; இந்தப் பம்பைபோல்வளவு அழகுற்றிருக்கின்றதோ, மந்தாகினியும் இவ்வளவு அழகுற்றதே; ஆதலின், அது உலகினில் புகழப்படுவது தகும்; அடாலசுந்தமணி! என் பிராணநாயகியும் காணப்பட்டு, இவ்விடத்தில் வாழ்வோமாகில், யான் இந்திரன் பட்டத்தையும் விரும்பேன்; திருவயோத்தியையும் நினையேன்; மிகவும் அழகிய இவ்விடங்களில் சீதையுடன் கூடி மகிழ்வேனாகில், வேறு சிந்தை எவ்வண்ணந்தோற்றும்? தளிர்த்து மலர்ந்த இந்தச்சோலைகளும், சீதையைப் பிரிந்த என்னைப் போதைமை செய்கின்றனவே! பாரடா லசுந்தமணி! இந்தப் பம்பை மலர்ந்த தாமரை முதலிய மலர்களாலும், கூவுகின்ற அன்னம் முதலிய பறவைகளாலும், சுற்றிலுமுள்ள மான்முதலிய விலங்குகளாலும், பெரும்பாலும் விளங்குகின்றது; மகிழ்ந்துகூவுகின்ற இப்பறவைகளும், எனது காமத்தை வளர்க்கின்றனபோலும்; முழுமதிபோன்ற திருமுகமண்டலத்தையும், தாமரையிதழ்போன்ற திருக்கண்களையுடைய என் நாயகியை நினைக்கையில், சோகம்வளர்கின்றதே! பற்பலவண்ணமுற்று அழகிய தாழ்வரைகளில், மான்கள் பெண்மான்களுடன் கூடிப் புணர்ந்து, சீதையையிழந்த என்னைத் துயருறச் செய்கின்றன; இவ்விடத்தில் யான் சீதையைக் காண்பேனாகில், உய்வேன்; வைதேகி என்னுடன் கூடி இந்தப் பம்பையின் காற்றைச் சேர்ந்து மகிழ்வாளாயின், யான் பிழைப்பேன்; அடாலசுந்தமணி! தாமரை செங்கழுநீர் முதலிய நறுமலர்களின் மணங்கமழ்ந்தும், குளிர்ந்தின்பந்தருவதும், காந்தையர்களுடன் சேர்ந்தோர்களது சோகத்தைப் போக்குவதுமாகிய இப்பம்பாசரோவரத்தையும், அருகிலுள்ள சோலைகளையும் தாக்கிவருகின்றமந்தமாருதத்தை நல்வினையர்களல்லரோ, மகிழ்ந்துதிர்பார்த்து அனுபவிக்கின்றனர்கள்; ஜனகராஜன் திருமகளும், யௌவனமுடையவளும், தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடையவளும், கற்புடையாளுமாகிய என் பிரா

நாயகி, இக்காலையில் எவ்வண்ணம் இறக்காமல் வாழ்வாள்? யான் சீதை யைப் பறிகொடுத்து வனவாஸந்தீர்ந்து உரியவீடு சேர்ந்து வாழ்கையில், ஜனகசக்கரவர்த்தியாரெழுந்தருளி என்னைக்கண்டு என் மகள் எங்கே யென்று கேட்டருள்வாராயின், யான் யாது மறுமொழி யுரைப்பேன்? யான் தந்தையினாலோட்டப்பட்டு அரசிழந்து காடு சேர்கையிலும், நல்வழிபற்றி நம்மைத் தொடர்ந்து வந்த என் நாயகி இப்போ தெங்கிருக்கின்றனள்? அடா தம்பி! யான் அவளை விட்டெவ்வண்ணம் உய்வேன்? மிகவும் அழ கிய அவளுடைய திருமுகமண்டலத்தைக்காணுமல் என் மனம் மிகவும் வரு ந்துகின்றது; புன்னகையுடன் இனிதாகவும், இதமாகவுமுரைக்கப்பட்ட என்னுயிரின் வாக்கியத்தை யான் கேட்டின்புறுவதெக்காலம்? யான் காடடைந்து திரிந்து வருந்துகையில், அவள் வருத்தமுறினும், வருத்தம ற்றவள்போலவும், மகிழ்வுற்றவள்போலவும், என்பால் இன்மொழிகள் மொழிவாளல்லளோ? யான் மீளவும் படைவீடு சேர்கையில், என் சீதை எங்கேயென்று கோஸலையார் கேட்பாராயின், யான் யாது பதிலுரைப் பேன்; ஆதலின், அடா லக்ஷ்மணா! நீயே திருவயோத்திக்குச்சென்று என் மீது மிகப் பத்தியுள்ள பூரீபரதனுக்குச் செய்தி கூறுக; யான் சீதையின்றி, உய்யேன்; என்று இவ்வண்ணம் மஹாத்துமாவாகியும், திறமையற்றவன் போலப் புலம்பி யழுதனர்.

இளையபெருமாள் அதுகேட்டவரை நோக்கிக் கேட்டருளீர் எம்மை யீர! தேவரீர் சோகத்தையுள்ளடக்கி யருள்க; தேவரீருக்கு மங்களமுண் டாகுக; துன்புறற்க; தேவரீர் புருஷோத்தமரல்லீரோ? தேவரீரைப் போன்ற பற்றற்ற தூயோர்களது திருவுளம் இவ்வண்ணம் மயக்குறுமோ? உலகத்தில் ஒருவர்க்கொருவர் பிரிவதும், அதனால் துன்புறுவதும் இயல்பே யாகுமென்றெண்ணி, இஷ்டர்களிடத்திலும் சோகத்தைமேற்கொள்ளாமல் துறந்தருள்க; ஸ்நேஹம் (எண்ணெய்—அன்பு) மிகுதியாயிருப்பதினா லன்றே, திரியீரமாயினும், எரிக்கப்படுகின்றது; அந்த ராவணன் பாதா ளத்திற்காயினும், மற்றெங்கேயாயினும் ஓடியொளித்துக்கொள்ளினும், அவன் நமக்குத் தப்பிப் பிழையான்; முன்பு அவனது செய்தியைமாத்திரம் அறிந்துகொள்ளவேண்டும்; அவன் பின்பு பிராட்டியாரையாயினும் விடு வான்; அல்லது, உயிரையாயினும் விடுவான்; அவன் அதிதியின்கர்ப்பத்தில் ஒளித்துக்கொள்ளினும், அங்கும் அவனைக் கொல்வேன்; ஆதலின், தேவ ரீர் தீரமுற்று நிலைகொண்டு தீனத்தைத் துறந்து மகிழ்க; ஒரு பொரு ளும் முயற்சியின்றிப் பெறப்படாது; எம்மையரே! உற்சாகமென்பதே சிறந்த பலமுடையது; இதற்கு நிகரான பலம் ஒன்றுமிலது; உற்சா ஹமுடையோர்க்கு இவ்வுலகினில் பெறற்கரிய பொருளொன்றுமிலது; உற் சாகமுடையோர்களே ஒரு விஷயத்திலும் சிக்கையுறுகின்றிலர்; ஆதலின், யாம் உற்சாஹத்தையே மேற்கொண்டு பிராட்டியாரைப் பெறுவோம்; தேவரீர் சோகத்தைப்பின்னடக்கிக் காமத்தையும் வென்று தீரமுறுக; தேவ ரீர் மஹாதீரமுடையோரென்பதையும், பெரியோர்களுடன் பழகிய மதி

யுடையோரென்பதையும், பரமபுருஷரென்பதையும், மாயாமானுஷவிக்கிரக ரென்பதையும் அறிகின்றிலீரோ? என்று விண்ணப்பஞ்செய்து தேற்றினர். உடனே பெருமாள் சோகத்தையும், மோகத்தையும் துறந்து தீரங்கொண்டு, மிகவும் அழகிய அந்தப் பம்பா புஷ்கரிணியைத்தாண்டி எழுந்தருளிப் பற்பல மரங்களையும், மலையருவிகளையும், குகைகளையும் கடாகூஷித்துக்கொண்டே இளையபெருமாருடன் கூடிப் புறப்பட்டருளினர். இளையபெருமாரும் இவ்வண்ணம் மிகவும் ஊக்கத்துடன் தருமத்திரளும், பலத்திரளும், புத்தியிரளும், பெருமாளைக் காத்துக்கொண்டிருந்தனர். இவ்வண்ணம் எழுந்தருளுகின்ற இவ்விருவரையும் ரிசியமூகமலையினருகி லுலாவிக்கொண்டிருந்த மஹாராஜர்கண்டு, வியப்பும், மயக்கும், ஐயமுமுற்று நடுங்கித் திகைத்து நின்று, கம்மைக் கொலைசெய்வதன் பொருட்டு வாலியே அனுப்பியிருப்பானென்று மஹாபயமடைந்து மிகவுந் துயருற்று வருந்தினர். மற்றுமுள்ள வானரமுதலிகளும், இவர்களைக்கண்டஞ்சி நாற்றிசைகளிலும் ஓடினர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முதலாவது ஸர்க்கம்

முற்றிற்று.

ஆரண்யகாண்டத்தில் தினஜனபரிபாலன ரூபமான தருமம் அனுஷ்டிப்பிக்கப்பட்டது; இக்காண்டத்தில் மித்ரஸம்ரக்ஷணரூபமான தருமம் அனுஷ்டிப்பிக்கப்படுகின்றது; முன்காண்டத்தில் மோக்ஷப்ரதத்வரூபமான பரதத்வநிரூபணம் அருளிச்செய்யப்பட்டது; இதில் அஸங்க்யேய கல்யாண குணகரத்வம் அருளிச்செய்யப்படுகின்றது; அன்றியும், சரணாகதிமந்திரத்தின் உத்தரகண்டத்தின், ஸ்ரீமச்சப்தார்த்தம் பாலகாண்டத்திலும், நாராயணசப்தார்த்தம், ஸர்வஜனவியாமோஹகரத்வ ப்ரதிபாதகமான அயோத்தியாகாண்டத்திலும், சதுர்த்த்யர்த்தம், பஞ்சவடிவாஸபர்யந்தமாக முனிஜனக்ருதகைங்கர்ய ப்ரதிபாதகமான ஆரண்யகாண்டத்தின் பூர்வபாகத்திலும், நமச்சப்தார்த்தம், காதிவத ப்ரதிபாதகபாகத்திலும் கூறப்பட்டன; அதன்மேல் சேதனர்கள் உஜ்ஜீவிக்கும் வகை கூறப்படுகின்றது; அதனுள் மாரீசதர்சனவ்ருத்தாந்தத்தால் ஸ்ரீபகவானுடைய நிரந்தரானுபவத்துக்குரிய சேதனர்கள் அதைத்துறந்து விஷயங்களில் காமுற்றலிவார்களென்பதும், ராவண விருத்தாந்தத்தால் அதனில் மோகம் மேற்கொள்வதும், ஜடாயு வ்ருத்தாந்தத்தால் கர்மமாத்திரத்தால் ராவணன்போல ஸம்ஸாரம் நீங்காதென்பதும், லங்கையில் புகுந்ததினால் சரீராந்தரப்ராப்தியும், ஆரகூக ராக்ஷஸி வியாபாரங்களினால் தாபத்ரயாதிதுக்கமும், பெருமாள் தேடுவதினால் பெருமாளுக்கு ஆசிரிதர்பாலுள்ள அவியாஜகாருண்யமும், ஆக ஆரண்யகாண்டத்தில் உரைக்கப்பட்டன; இந்தக் காண்டத்தில் ஆசார்யமுகத்தாலே சேதனர்களுக்குத் தம்மேல் பத்தியுண்டாகச்செய்து வீடேற்றுவதன்பொருட்டு, பெருமாள் அதைத் தேடுவது கூறப்படுகின்றது; அதனுள் முதல்ஸர்க்கத்தில் பெருமாள் நித்தியகைங்கர்யம்பண்ணும் நித்திய ஸூரிகளைக்கண்டு இவர்களைப்போலப் பத்தர்களும் என் என்னை யடைந்து மகிழ்கின்றிலரென்று க்லேசிப்பது கூறப்படுகின்றது;—

இதில் வஸந்த வர்ணன வியாஜத்தால் ஆசார்யலக்ஷணங்களும், சிஷ்யலக்ஷணங்களும், வர்ணச்ரமோசித வியாபாரங்கள் அவர் ஜனீயங்களென்பதும், ஞானபக்திகளுடையோர்களது தன்மையும், சித்திய விபூதியிலும், லீலாவிபூதியிலும், அவர்களிருக்கும் பிரகாரங்களும், மற்றும் பற்பல ரஹஸ்யங்களும், காமுகர்களது செயல்களும் சூசனை செய்யப்பட்டன; மதியுடையோர்கள் வாக்கியங்கள்தோறும் இவ்வர்த்தங்களைக் கண்டு கொள்வார்கள்; விரிவாக உரைசெயின், கிரந்தம் வளருமாதலின், கூறுகின்றிலேன்; —

தனிஸ்லோகி.

(பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டஃ) என்பதிலல் ஸர்வப்ராணிகளுக்கும் ப்ராணஹேதுவான காற்றுத்தானே நம்மை, ஸர்வஸ்வாபஹாரம் பண்ணுகின்ற தென்கிறார்; (பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டஃ) இக்காற்றின் காரியம் தூளியெழுந்து செல்லாகின்றது; தாமரையாள் கைவிட்டபடியாலே தாமரைத்தாதும் பிரதிகூலித்தது; (பாதாருந்துத மேலபங்கஜராஜஃ)என்று அவள்தனக்கு மகப்படப் பாதகமானது நமக்குப் பாத்தமாகச் சொல்லவேண்டாவிறே? இதினுடைய ராஜஸம் இருக்கும்படி நம்மையும் மதிக்கிறதில்லையே? இதுக்கு அடிகண்டகிகளோட்டை ஸம்ஸர்க்கமிறே? இத்தைக் காற்றென்றிருந்தோம்; இது கேஸரியாயிருந்த தீ ? தனக்கு மேலே கூட்டுப்படையுந் தேடிவாராகின்றது; ரூபவான்களிறே அசகாய சூராயிருப்பார்; இது ரூபஹீனமாகையாலே துணைதேடிமிறே? இப்படி பாதகமாய் வந்ததாகில், அறிந்தருகவே பரிஹரிக்கத்தட்டென்னென்ன? (வ்ருக்ஷாந்தரவிஷிஸ்ஸ்ருதஃ) தூரத்திலே கண்டு பரிஹரிக்கவொண்ணாதபடி குன்றாடுபொழில் நுழைந்தேனென்கிறபடியே மரங்களிலே வந்து பதுங்கிடந்து நடுவே புறப்படக் கண்டதித்தனை; செல்வப்பிள்ளைகள் வெயில் பொறுமல் நிழலிலே வருமாபோலே இதுவும் மரத்து நிழலிலே வாராகின்றது; கீழே (பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டஃ) என்று ஸௌரப்யஞ்சொல்லிற்று; விருக்ஷாந்தரவி ஷிஸ்ஸ்ருதஃ, என்று மரத்திலே தெங்கி இடைவெளியாலே யொழுகப் புறப்படுகையாலே மாந்த்யஞ்சொல்லிற்று, மரத்து நிழலிலே வருகையாலும், தாமரையிலுள்ள தேனிலளாவி வருகையாலும், சைத்தியஞ்சொல்லிற்று, ஆகசைத்தியமும், ஸௌரப்யமும், மாந்தியமும்சொல்லிற்று;(வ்ருக்ஷாந்தரவிஷிஸ்ஸ்ருதஃ)விடாய்த்த நம்மை மரத்தடியிலே யொதுங்கவொட்டுகிறதில்லை; இப்படி பாதகமாய் வந்தால் நம்மைக்கொண்டகலுமித்தனையன்றோ வென்ன; (ஸீச்வாச இவசீதாயாஃ) முகம்பழகுகைப்போலே யிருக்கையாலேயதுவுஞ் செய்யப்போகிறதில்லை; மைதிலியுடைய மூச்சுக்காற்றுப்போலே யிருக்கையாலே, அவள்தானிம்மரத்தடியிலே யொளித்து நின்று வருகின்றாளோ? என்கின்ற நசையாலே போகப்போகிறதில்லை; ஆமோதமுபஜிக்ரந்தெள ஸ்வஸீச்வாஸாநுவாதினம், என்று ஸீச்வாஸத்துக்குப் பரிமளமுண்டாகச் சொல்லக்கடவதிறே? ஸ்பர்சனமாய் நலிகிறதுக்குமேல் ஸ்மாரகமாயும் நலியாகின்றது; இப்படிக்கொத்த காற்றுதோன்றினவளவோவென்னில், (வாதி) காடு தன் பரப்புந்தாளும்படி யுலாவாகின்றது; அன்றியிலே, வாதியென்று பாதகமென்று கொண்டுபோக வொண்ணாதப்படிதான் சம்பாதித்த கந்தத்தாலே துவக்காகின்றது; இதுதான் கந்தவாஹமிறே? இப்படி பாதகமாக வந்து தோற்றி யுலாவுகிறதுதானே தென்னில், (வாயுஃ)ஸர்வோஜ்ஜீவநஹேதுவான காற்றுக்கெடுரிப்படி பாதகமாகிறது; பரப்பிரஹ்மமான் இவருக்கு அஞ்சித் திரிகிறகாற்றிறே? இவர் தம்மை யஞ்சப்பண்ணித் திரிகிறது; இப்படி யஞ்சப்பண்ணுகிறபடி என்னென்னில், (மநோஹரஃ) மேலெழுந்ததன்றியும், உள்ளுள்ள பதார்த்தமகப்பட அபகரியாகின்றது; இது லோகத்திலே ஒருவழிப்பறிகாரர் ஸமதியாய் நடக்கிறது;

(பத்மகேசரஸம்ஸ்ருஷ்டஃ) என்கையாலே தங்களை இன்னரென்று அறியாமைக்குமு, கண்டால் பயப்படுகைக்குமாகவும், அவர்களும் தூளநம்பண்ணி வருகிறப்போலே யிருக்கிறது; (வ்ருக்ஷாந்தரவி க்ஷிப்தஃ) என்கையாலே, அவர்கள் வழிப்போகிறவர்களை வருந்தினையும், மரத்தடிகளிலே பதிகிடந்து அவர்கள் அணுகவந்தவாறே புறப்படுமாபோலே யிருக்கிறது; (சிச்வாஸ இவஹீதாயாஃ) என்கையாலே, அவர்கள் கைகழியப்போகாமே தூவக்கும்படி பண்டுகண்டறியுமாபோலே யிருந்து உம்முடைய ஊர்சொல்லீர், பேர் சொல்லீர், என்றுப்போலே முகமறிவுசொல்லி யுகப்பிக்குமாபோலே யிருக்கிறது; (வாதி) என்கையாலே காரியம் கைப்புகருந்தினையும், அவர்கள் நின்றவிடத்திலே நில்லாதே பரகுபரகென்று சஞ்சரிக்குமாபோலே யிருக்கிறது; (வாயுஃ) என்கையாலே, யாரேனுந்தொடர்ந்து பிடிக்கப் புக்கால் உடம்போடுடம்பு தாக்காநிற்கச்செய்தேயும், கைக்குப் பிடிகொடாதே யிருக்கும்படியைச் சொல்லுகிறது; (மநோஹரஃ) என்கையாலே, மேலெழுந்த கீழ்ச்சீரையன்றியிலே, உள்ளுள்ளதடைய அபகரிக்கும்படி சொல்லுகிறது;—

இரண்டாவது லக்கம்.

மஹாராஜர் பெருமாள் இளையபெருமாள்களை இன்னரென்று அறிவதன் பொருட்டுச் சிறிய திருவடியை யனுப்பியது.

அந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் சிறந்த ஒளியுள்ளவர்களும், சிறந்த படைகளைக் கையிலேந்தியவர்களும், மிக வீரமுடையவர்களுமாக அங்கே உலாவினமையின், மஹாராஜர் கண்டு ஐயமுற்றுப் பத்துத் திசைகளையும் சுற்றிப்பார்த்து, எங்கும் நிலைகொள்ளாமல் நடுங்கி, மனம்பதைத்து, மிகச் சிந்தைகொண்டு, தன்னுடன் தொடர்ந்திருக்கின்ற வானரர்களைக் கூட்டியவர்களை நோக்கிக் கேளீர் நட்பினர்களே! இவ்விருவரும் புகற்கரிய இக்காட்டில் நம்மைக் கொலைசெய்வதன்பொருட்டே வாலியினாலேவப்பட்டு வந்தனர்களென்றே நம்புகின்றேன்; ஆதலின், கபடத்தினால் மரவுரியுடுத்து முனிவர்போலத் திரிகின்றனர்களென்றனன். அவ்வானரர்களும் அம்மொழிகேட்டு அவர்களையும் பார்த்துச் சந்தேகங்கொண்டு அவ்விடத்தை விட்டு மற்றொருவர் வந்து புகற்கரிய சிகரத்தின்மேற்சென்று மஹாராஜரைச் சூழ்ந்து நின்றனர்கள். அவர்கள் ஓடுகிறவேகத்தில் மரங்களும் முறிந்தன; அங்குள்ள விலங்குகள் அச்சங்கொண்டோடின; இவ்வண்ணம் யாவரும் பயந்தோடியொளித்துச் சிந்தையுறுகையில், மஹாபல பராக்கிரம முடையவரும், புத்திநுட்பமுடையவரும், மொழிவதிற் சிறந்தவருமாகிய சிறியதிருவடி மஹாராஜரை நோக்கி, வானரர் கோமானே! வாலிக்கு அஞ்சி ஏன் ஓடியொளித்துக்கொள்ளுகின்றீர்கள்; அச்சமுற்றக; இது ரிசியமூகமலையாதலின், இங்கு வாலியின் பயமில்லையே? நீங்கள் அஞ்சத்தக்க வாலியையும், இங்கே காண்கின்றிலேன்; ஆதலின், நீர் அஞ்சுதற்குக் காரணம் ஒன்றுமில்லை; இதனால் குரங்கின் தன்மையே நன்கு வெளிப்பட்டது; சஞ்சலசித்தமுடையவராகையால், மனதை அடக்கி தீரத்தை மேற்கொள்ளுகின்றிலீர்; தேவரீர் அரசாதலின், புத்தியினால் இங்கிதமேஷ்

டைகளை அறிந்து எல்லாக்காரியங்களையுஞ் செய்யவேண்டுமன்றே? புத்தி அற்றவன் அரசனுகி அரசாளுதிசெய்யான்; ஆதலின், அச்சம்துறந்து, தீர்ம் பூண்டு, நன்கு ஆராய்ந்து இனி நடக்கவேண்டுவதை உரையீரென மொழிந் தனர். மஹாராஜனும் இவ்வண்ணம் சிறியதிருவடி மொழிந்த வாக்கியத் தைக்கேட்டு அவரை நோக்கி, கேளீர் அனுமானே! நீண்டருண்ட திருக்கை களை யுடையவர்களும், செந்தாமரைமலர்போலகன்ற திருக்கண்களை யுடைய வர்களும், வில், கணை, வாள், முதலிய ஆயுதங்களை தரித்தவர்களும், தேவ குமார்கள் போன்றவர்களுமாகிய இருவர் எழுந்தருளுகின்றனர் பாரீர்; இவர்களைக்காணின், எவர்க்குத்தான் அச்சம் தோன்றுது; வாலியினுல் ஏவப்பட்டு நம்மைக் கொலைசெய்யும்பொருட்டே இவர்கள் இங்கேவருகின் றனரென்று நம்புகின்றேன்; அரசர்கள் பற்பல வீரர்களுடன் நட்புகொண் டிருப்பார்களல்லரோ? ஆதலின், நாம் இவர்களை நம்பி யிருத்தல் தீது; ஆதலின், மாறுவேஷம்கொண்டு இவர்களின் எண்ணத்தை அறியவேண்டும்; நாம் நம்பி யிருக்கின், சமயம்பார்த்து இவர்கள் நம்மை கொலைசெய்து விடு வார்கள்; ராஜகாரியங்களில் வாலி மிகவும் ஊக்கமுடையவன், ராஜர்களெண் ணுல், பற்பல உபாயங்களையும் அறிந்தவர்களல்லரோ? ஆதலின், கபட வேஷத்தினுலேயே இவர்கள் தன்மையை அறியவேண்டும்; ஆதலின், நீர் அற்பமனிதன்போல வேஷம்பூண்டு அவர்களிடம்சென்று இங்கிதங்களி னுலும், வியாபாரங்களினுலும், வாக்கியங்களினுலும், அவர்களுடைய கரு த்தை நன்கு அறிந்து கொள்க; நல்ல எண்ணமுடையவர்களாயின், அவர்களை பலவாறுகப் புகழ்ந்து விசுவாசத்தை உண்டு பண்ணி, அவர்கள் குலகோத்திரங்களையும், இங்கே வந்ததற்குக் காரணத்தையும், நான் கேட்பதாகக்கேட்டு அவர்கள் உரைக்கும் ப்ரதி உத்திரத்தினுல் உண் மையை நன்கு அறிந்துகொண்டு வாரீரென்று மொழிந்தேவினன். சிறிய திருவடியும் மஹாராஜரால் ஏவப்பட்டு அவ்வண்ணமே யாகுகவென்று மொழிந்து, ஸ்ரீராமலக்ஷ்மணர்க ளெழுந்தருளியிருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டனர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் - இரண்டாவது ஸர்க்கம்
முற்றிற்று.

மூன்றாவது ஸர்க்கம்.

சிறியதிருவடி, பெருமாள் இளையபெருமாளைக் கிட்டி புகழ்ந்து குலகோத் திரங்களை விளவு, இளையபெருமாள் பெருமாளால் ஏவப்பட்டு விடை அருளிச்செய்தது.

பின்பு சிறியதிருவடி, மஹாராஜர் வாக்கியத்தின்படி நிசியஞ்சகபரு வதத்தினின்று எழுந்து வானரரூபத்தை விட்டு ப்ரஹ்மசாரிரூபந்தரித்து,

---

* முதல் ஸர்க்கத்தில் சில சேதனர்கள் விஷயாந்தரத்தில் ஆவலுற்றிருப்பதைக் கண்டு, பெருமாள் சிந்தைகொண்டது உரைக்கப்பட்டது; இரண்டாவதில் சேதனர்

ஸ்ரீராமலக்ஷ்மணர்களெழுந்தருளியிருக்குமிடம் வந்து அவர்களுக்கு தண்டம் சமர்ப்பித்து அவர்களை நோக்கி, இனிதாகவும், மெதுவாகவும் மொழியலுற்றனர். மஹாநுபாவர்களே! தேவரீர்கள் ராஜரிஷிகளோ? தேவரிஷிகளோ? தாபசவேஷம்பூண்டிருக்கின்றீர்கள்; மிகவும் அழகுடைய தேவரீர்கள் இவ்விடத்திற்கு எழுந்தருளிய காரியம் யாதோ? தேவரீர்களைக் கண்டு மான் முதலிய விலங்குகள் அஞ்சுகின்றன; பம்பாதீரத்திலுண்டாகிய பற்பல மரங்களையும் கடாக்ஷித்துக்கொண்டு இவ்விடமெல்லாம் திகழச்செய்கின்றீர்கள்; தோழுடையவர்களும், தங்கம்போன்ற திருமேனியையுடையவர்களுமாகியும், மரவுரி உடுத்திருக்கின்றீர்கள்; தேவரீர்கள் யாவரோ? சிங்கம்போன்ற நோக்குடையவர்களும், மஹாபல பராக்கிரமங்களையுடையவர்களும், இந்திரதனுஸ்ஸுபோன்ற கோதண்டத்தையுடையவர்களும், காளைபோன்ற நடையுடையவர்களும், யானை துதிக்கைபோன்ற திருத்தோள்களையுடையவர்களும், பூமண்டலத்தை ஆளத்தக்கவர்களுமாகியும் இங்கு எவ்வுண்ணம் எழுந்தருளினீர்கள்; மிகவும் சூரர்களும், ஜடாதாரியுமாகியும் ஒருவர்க்கொருவர் நிகராகி, காந்தியிலும் தேவலோகத்து நின்றும் தற்செயலாய்வந்த சந்திர சூரியர்கள்போல விளங்குகின்றீர்கள்; அகன்ற திருமார்பும், தேவர்போன்ற திருமேனியும், சிங்கத்தின் தோள்போன்ற திருத்தோள்களும், உற்சாகமுங்கொண்டு தேவரீர்கள் மதமேறிய காளைகள்போல விளங்குகின்றீர்கள்; நீண்டிருண்ட திருபுஜங்களும், பரிகம்போல விளங்குகின்றன; இவை பற்பல அணிகளை அணிவதற்குரியனவாகியும், ஏன் அணிந்தில? தேவரீர் இருவரும் இப்பார்முழுதும் பாதுகாக்கவுல்லீர்களென எண்ணுகின்றேன்; இவ்விரண்டு கோதண்டங்களும், தங்கத்திலல் அலங்கரிக்கப்பட்ட இந்திரன் வச்சிராயுதம்போல விளங்குகின்றன; நெட்டுயிர்ப்பு விடுகின்ற நச்சரவம்போன்ற நாராசங்கள் நிறைந்த அம்பறாத்தூணிகளும், மிக வொளியிடுகின்றன; நீண்டகன்ற தங்கப்பிடி அமைந்த இவ்விரண்டு வாள்களும், அன்று புரைவிட்ட பங்கங்கள்போலத் திகழ்கின்றன; இவ்வண்ணம் யான் விளவியும், என் மறுமொழி அருளிச்செய்கின்றிலீர்? சுக்கிரீவரென்னும் வானரராஜன் தமையலல்துரத்தப்பட்டு உலகமெங்குந்திரிந்து வருந்தியிருக்கின்றனன்; மகாத்துமாவான அந்தச் சிக்கிரீவலல் ஏவப்பட்டு யான் இங்கு எய்தினேன்; அனுமான் என்னும் பெயர் உடையேன்; அந்தச் சுக்கிரீவன் தேவரீர்களுடன் நேசங்கொள்ள விரும்புகின்றான்; அந்தச் சுக்கிரீவமஹாராஜனுக்கு யான் மந்திரி, வாயுபகவான் மைந்தன், சுக்கிரீவனுக்கு இதம் செய்வதின்பொருட்டு எனது நிஜரூபத்தை மறைத்து, இந்த ப்ரஹ்மசாரிரூபத்தை தரித்து வந்தேன்; யான் வேண்டுமிடம் செல்லுவேன்; வேண்டிய ரூபங்களையும் தரிப்பேன் என்றிவ்

கள் தாம் செய்த அபராதத்திற்கு குரூரதண்டங் கிடைக்குமென்று அச்சமுற்றதும், அப்படி அஞ்சாமல் தம்மையே சேரும்படி தாம் அபிமுகங்கொண்டு எழுந்தருளினதும் உரைக்கப்பட்டது; இனி பெருமாளை அடைவதற்குக் காரணமான ஆசாரியஹ்ருதயம் இத்தன்மையதென்று உரைக்கப்படுகின்றது.

வண்ண முரைசெய்து மௌனமடைந்தனர். பெருமாள் அம்மொழியைக் கேட்டு இளையபெருமாளை நோக்கி, அடா தம்பி ! நாம் சுக்கிரீவனையே தேடி வந்தோமே, அவருடைய மந்திரியே தற்செயலாய் நம் ஸமீபத்திற்கு வந்தனர் ; இந்த மந்திரியும் மொழிவதில் மிகவுஞ் சிறந்தவர் ; ருக்கு யஜு ஸ்ஸு ஸாமமென்னும் மூன்று வேதங்களையும் ஓதாதவன் இவ்வண்ணம் நன்முக வார்த்தை சொல்லான். ஒன்பது வியாகரணங்களையும், இவர் நன்கோதி யுணர்ந்திருக்கின்றனர்போலும், வெகுவாக இவர் மொழிந்திருக்கினும், சிறிதேனும் பிழைமொழி யுரைத்திலர் ; முகத்திலாவது, கண்களிலாவது, நெற்றியிலாவது, புருவங்களிலாவது, மற்றுள்ள எந்த அங்கங்களிலாவது மொழியுங்காலையில், சிறிதேனும் விகாரந்தோன்றியிலது ; மிகவும் விஸ்தாரமின்றியும், சந்தேஹமின்றியும், விரைவின்றியும், மெதுவின்றியும், வாக்கியங்கள் மார்பில் தோன்றிக் கண்டத்தில் ஒலித்து மத்யமஸ்வரத்தில் மொழியப்பட்டன ; நன்முகப் பழக்கங்கொண்டு பிழை சிறிதுமின்றி, மெதுவும் வேகமுமில்லாமல் நடுத்தரமாக மிகவும் இனிமையாக மொழிந்தனர். உச்சநீசஸ்வரிதங்களுடன் மிகவு மினிதாகவுரைத்த இவருடைய வாக்கியத்தைக் கேட்கின், கொலைசெய்வதன்பொருட்டு வாளுயுருவிக்கொண்டெதிர்த்து வருகிற பகையாளிக்கும் சினந்தணிந்து, பெருமகிழ்வு லேலெழுந்து பெருகாதோ ? அடா லக்ஷ்மணு ! இவ்வண்ணம் மிகத் திறமையுள்ள தூதன் எந்த அரசனுக்கிலதே, அவனுடைய காரியங்கள் எவ்வண்ணங் கைக்கூடும் ? இவர்போன்ற தூதர்கள் எவர்களுக் கிருப்பார்களோ, அவர்களுடைய காரியங்களெல்லாம் தடையின்றிக் கடையேறும் ; ஆதலின், இவருடன் நீ மிகவும் அன்புடனும், ஊக்கத்துடனும், பதில் உரைசெய்க ; என்று மிக மகிழ்வுகொண்டருளிச்செய்தனர். இளைய பெருமாளும் அவ்வருளிச்செயலைக்கேட்டு, சிறியதிருவடியை நோக்கிக் கேளீர் அனுமானே ! யாங்கள் மஹாராஜருடைய நற்குணங்களையெல்லாம் கேட்டுணர்ந்திருக்கின்றனம் ; யாங்களும் அவரைத் தேடிக்கொண்டே இங்கெய்திலேம் ; மஹாராஜர் உரைசெய்ததாக நீர் உரைத்தபடியே செய்ய யாங்களும் விருப்பங்கொண்டிருக்கின்றனம் ; இவ்விஷயத்தில் சிறிதும் ஐயுறத்தக்கதில்லை என்று அருளிச்செய்தனர். சிறியதிருவடியும் அம்மொழியைக்கேட்டவுடனே பெருமகிழ்வுகொண்டு இனி நம்காரியமெல்லாம் நிறைவேறிற்றென்று நிச்சயமுற்று இவர்களுடன் மஹாராஜர்க்கு நட்புச் செய்விக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் மூன்றுவது ஸர்க்கம்
முற்றிற்று.

சிறியதிருவடி பெருமாள் இளையபெருமாள்களுடைய திருவுள்ளத்தை யறியும் படி மாறுவேஷம்பூண்டு வந்தும், அதை யறிந்துகொள்ளாமலே தாமே யவர்களுடன் தான் மாறுவேஷங்கொண்டு வந்தேனென்று உரைசெய்த தென்னென்னில், பெருமாள் மாயாமானுஷவிக்ரஹத்தாலும், நித்திய நிர்விகார நிரஞ்சன நிர்மாய ஸச்சிதானந்த பரிபூர்ண பரமபுருஷனுகையால், இவரை சேவித்தவுடன் சிறியதிருவடிக்கு



இலக்ஷ்மணர் சிறியதிருவடிக்கு தாம் இன்னரென் கூறியது-கஉ

நான்காவது லர்க்கம்.

சிறியதிருவடி, இளையபெருமாள் தங்கள் குலகோத்திரங்களையும், முறையே இவ்விடத்திற்கு எழுந்தருளிய காரணத்தையும் அருளிச்செய்ய ஸ்ரீராமலக்ஷ்மணர்களைத் தங்கிருத்தோள்களில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து மஹாராஜரிடஞ் சேர்த்தது.

அநந்தரம் மிகவும் மனமகிழ்வுகொண்ட சிறியதிருவடி இளையபெருமாளருளிச்செய்த வாக்கியத்தைக்கேட்டு, மனதில் மஹாராஜரை நினைத்து, இனி யவர்க்கு கிஷ்கிந்தாராஜ்ஜியம் கிடைக்குமென்று நிச்சயங்கொண்டு பெருமாளை நோக்கி,ஸ்வாமி! தேவரீர் மிகக் கொடிய இந்தப் பம்பாரணியத்திற்குத் திருத்தம்பியாருடன் ஏன் எழுந்தருளியது ; என்று விஜ்ஞாபிக்கவும், பெருமாளதற்குப் பதிலுரைக்கும்படி இளையபெருமாளை ஏவியருளினர். இளையபெருமாளதுகேட்டு மாருதியை நோக்கிக் கேளீர் அனுமானே! கோஸலநாட்டில் திருவயோத்திமாநகரந்தன்னில் மஹாபலபராக்கிரமரூபலாவண்ய சௌர்யாதிகுணங்கள் நிறைந்தவரும், தருமவழி வழுவாதவரும், நான்கு வர்ணங்களையும், தருமமாகப் பாதுகாத்தளிப்பவருமாகிய தசரதரென்னும் சக்கரவர்த்தியார் வாழ்ந்திருந்தனர். அவர் ஒருவரையும் பகைத்திலர் ; அவர்மீதும் ஒருவரும் பகைகொண்டுமிலர் ; அவர் எல்லாவுயிர்களுக்கும், மற்றொரு பிதாமஹதேவர்போல இனியராகி, அக்னிஷ்டோமம் முதலிய யாகங்களை விதிப்படி செய்து முடித்தனர். இவர் அந்தத் தசரதசக்கரவர்த்திக்கு மூத்த திருமகனர் ; ஸ்ரீராமரென்னும் திருநாமமுடையோர்; எல்லாவுயிர்களுக்குந் தஞ்சம்; பிதிர்வாக்கிய பரிபாலனத்தில் மிகவும் சிரத்தை யுடையவர் ; மிக வீரமுடையவர் ; சக்கரவர்த்தித்திருக்குமாரர்களுள்ளும், இவர் திருக்கல்யாணகுணங்களாலும் மிகச் சிறப்புற்றவர் ; ராஜலக்ஷணங்கள் யாவும் பூர்ணமாயுள்ளவர் ; மிகச் செல்வமுடையவ

ஸ்துவந்தலையெடுத்து, மன்தெளிவற்று விளக்கினமையின், பொய்மொழிய வாயெழாமையாலும், மிகவும் புத்திநுட்பமுடையவராதலின், அவர்களின் கருத்தையறிந்துவிட்டபடியாலும், தாமே முன்னதாகத் தான் வந்த செய்தியை யுரைத்துவிட்டனரென வுணர்க:—அனுமார் மஹாராஜருக்குத் தூதாகவந்தமையால், வேந்தர்கள் தூதர்களுடன் மந்திரிமுகமாக வார்த்தைசொல்வார்களே யன்றித் தாமே நேராகப் பேசார்களாதலின், பதிலுரைப்பதற்கு இளையபெருமாளை ஏவினரென வறிக:—

ஆசாரியமுகத்தாலேயே எம்பெருமானைச் சேரவேண்டுமென்பதை வெளிப்படுத்துவதற்காக மஹாராஜர் பெருமாளைச் சேர்வதற்கு சிறியதிருவடியை யாசாரியராக்கினர்; பெருமாள் வேதவேதாங்கங்களையும், அனுமார் அறிந்திருப்பாரென்றருளிச்செய்தமையால், ஆசார்யகுணபூர்த்தி சொல்லப்பட்டது ; இந்த அனுமான் போன்றவர்கள் தூதராயிருப்பவர்களுக்கெல்லாம் சித்திக்குமென்றதனால், சிஷ்யனிடத்தில் சிஷ்யகுண பூர்த்தியில்லாவிட்டாலும், ஆசார்ய மஹாத்துமியத்தால் சிஷ்யன் சித்தியுடையானென்பது அறிவிக்கப்பட்டது.

ராகியும், பிதாவின் வாக்கியத்தின்படி ராஜ்ஜியத்தைத்துறந்து, புலன்களை யடக்கிக் கானகத்தில் வாழ விருப்புற்று, என்னுடனும், சீதையென்னும் பிராட்டியாருடனும் கூடிப் புறப்பட்டிங்கே தண்டகாவனத்திற்கெழுந்தருளினர். காந்தி கதிரவனை எப்பொழுதும் விட்டுப் பிரியாததுபோலப் பிராட்டியாரும் இவரை விட்டுப் பிரியார்; யானும் இவருக்குத் தம்பி; இலக்ஷ்மணனென்னும் பெயருடையேன்; இவரது திருக்கல்யாண குணங்களிலீடுபட்டு, போகங்களையுந்துறந்து, தொண்டுபூண்டு, உடன் வந்து பணிவிடைசெய்து வருகிறேன்; மிகச் சிறந்தவரும், இன்புறுவதற்கே தக்கவருமாகியும், அரசிழந்து, காடுசேர்ந்து வாழ்கையில், யாவனோ வொரு ராக்ஷஸன் நாங்கள் ஒருவருமின்றித் தனியே யெழுந்தருளியிருந்த பிராட்டியாரைப் பறித்தோடி யொளித்துவிட்டனன்; அவன் யாவனோ? எங்கிருக்கின்றனனோ? எத்தன்மையனோ? அதனையும் யாங்களறியோம்; பின்பு, நாங்கள் பிராட்டியாரைத் தேடிக்கொண்டு வருகையில், தனுவென்னும் அஸுரன் சாபத்தினால் ராக்ஷஸனாகிக் கபந்தனென்னும் பெயர்பெற்று அக்காட்டில் வாழ்ந்த அவ்வஸுரன் எங்களால் கொலைசெய்யப்பட்டு சாபந்தீர்ந்து மகிழ்ந்து எங்களை நோக்கி, மஹானுபாவர்களே! ஸுக்கிரீவனென்னும் வானரராஜன் ரிஸ்யமூகமலையில் வாழ்கின்றனன்; அவனுடன் நட்புக்கொள்வீர்களாயின், அவன் சீதையிருக்குமிடத்தைத் தேடியறிவான்; ஆதலின், அங்கெய்துகவென்று உரைத்து விட்டு வானேறிவிட்டனன்; ஆதலின், யாம் மஹாராஜனைத் தேடிக்கொண்டே இங்கெய்தினேம்; இவ்வண்ணம் யாங்கள் இங்கெய்தியதற்குக் காரணம் முதலிய யாவும் உரைசெய்தேன்; யானும் எம்மையரும் மஹாராஜனையே தஞ்சமடைந்தோம்;

ఏషదత్వాచవిత్తాని ప్రాప్యచానుత్తమంయశః।
లోకనాథఃపురాభూత్వా సుగ్రీవంనాథమిచ్ఛతి॥
పితాయస్యపురాహ్యాసీ చ్ఛరణ్యోధర్మవత్సలః।
తస్యపుత్రశ్శరణ్యశ్చ సుగ్రీవంశరణంగతః॥

ஏஷதத்வாசவித்தானி ப்ராப்யசானுத்தமம்யசஃ।
லோகநாதஃபுராபூத்வா ஸுக்ரீவம்நாதமிச்சதி॥
பிதாயஸ்யபுராஹ்யாஸீ ச்சரண்யோதர்மவச்சலஃ।
தஸ்யபுத்ரச்சரண்யச்ச சுக்ரீவம்சரணங்கதஃ॥

இந்த எம்மையர் முன்பு, ஸகல லோகநாதனும், ஸர்வாந்தர்யாமியுமாகித் தன்னைச் சார்ந்தோரெல்லோர்க்கும் நற்செல்வங்களையளித்து மிகப்புகழ்பெற்றும், இப்போழ்து சுக்ரீவனைத் தமக்கு நாதனைகக் கோருகின்றனரந்தோ! யாவருடைய தந்தை எல்லோருந் தஞ்சமடையத்தக்கவரும், மிகவுந் தருமமுடையவருமாயினரோ, யாவர்தந்தையைப்போலவே எல்லோருந் தஞ்சமடையத்தக்கவராகிச் சக்கரவர்த்திதிருமகனு மாகின்றனரோ, அந்த எம்மையரே இப்போழ்து சுக்கிரீவனைத் தஞ்சமடைகின்றனர்

அனுமான் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை அழைத்தேதகியது. கடு

ரய்யோ! இவர் முன்பு, எல்லாவுலகங்களுந் தஞ்சமடையத்தக்கவராகியும், என்க்ருத் தமையனுகியும், மஹாராஜரைத் தஞ்சமடைகின்றனர்;—

యస్యప్రసాదేసతతం ప్రసీదేయురిమాఃప్రజాః।
సరామోవానరేన్ద్రస్య ప్రసాదమభికాంక్షతి॥

யஸ்யப்ரஸாதேஸததம் ப்ரஸீதேயுரிமாஃப்ரஜாஃ।
ஸராமோவானரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாம்க்ஷதி॥

யாவருடைய அருளினுல் மூவுலகங்களிலுமுள்ள இவ்வுயிர்களெல்லாம் மகிழ்ந்து வாழ்வுறுமோ, அந்த எம்மையரே வானரங்களுக்கு ராஜனுடைய அருளைக் கோருகின்றனர்; எவருடைய தந்தையைப் பாரிலுள்ள தார்வேந் தர்களெல்லோரும் பணிந்து மகிழ்ந்து இன்புற்றனர்களோ, அந்த எம்மை யர் உலகினில் மிகப் புகழ்பெற்றும், வானராராஜனைச் சரணமடைகின்றனர்; எம்மையர் மிகத் துயரமடைந்து தஞ்சமெனச்சேர்ந்தமையின், மஹாராஜர் இவர்மேல் அருள்செய்யக்கடவர் என்றிவ்வண்ணம் கண்ணீர் பெருக்கித் தீனமடைந்து வருந்தி மொழிந்தனர்.

சிறியதிருவடி இவ்வண்ணம் இளைய பெருமாளருளிச்செய்த வாக் கியத்தைக்கேட்டு மிகமகிழ்ந்து அவரை நோக்கிக் கேட்டருளீர் இளையபெரு மாளே! மிகவும் நன்மதி பூண்டும், சினத்தையடக்கியும், புலன்களை வென்றும், திவ்விய சத்தியுற்றும் விளங்குகின்ற தேவரீர்களைப்போன்ற மஹாநுபாவர்கள் தற்செயலாயிருக்கு மிடந்தேடி ஏழுந்தருளுகையில், மஹாராஜர் தேவரீர்களைக்கண்டு சேவித்து தன்னிய ராகத்தக்கவ ராகார்ரோ? மஹாராஜரும் அரசிழந்து, வாலியிலுல் பகைக்கப்பட்டு, மனைவியையும் பறிகொடுத்துக் காட்டிலலைந்து வருந்துகின்றனர்; கதிரவன் திருமகனை அந்த சுக்கிரீவமஹாராஜர் அப்படி துன்புற்றவரா யினும், எங்களுடன் கூடித் தேவரீர்களுக்குத் தடையின்றியுதவிசெய்வார்; ஆதலின், நாமெல்லேரும் மஹாராஜர் இருக்குமிடத்திற்குச் செல்வோம் எழுந்தருளுக என்று இனிமையாக விண்ணப்பஞ்செய்தனர். இளைய பெருமாள் அதைக்கேட்டு மகிழ்ந்து அவரைப் புகழ்ந்து பெருமாளை நோக்கி, எம்மையரே! இந்த மாருதி மகிழ்வுடன் கூறுகின்றமையின், இவர் உரைப் பது உண்மையே யாகும்; ஸுக்கிரீவர் சீதாதேவியைத் தேடுவதற்குத் துணை யாகுவாரென்பதில் ஐயமிலது; ஆதலின், தேவரீர் காரியம் முடிந்ததென வே எண்ணுக; இவர் வாயுபகவான் புத்திரராதலாலும், மகிழ்வினுல் முக மலர்ந்து, ஒளிதிகழ்ந்து மொழிந்தமையாலும், பொய்யுரைத்திலர்; இனியும் பொய்யுரையார்; ஆதலின், நாம் இவருடன் செல்லுவோமெழுந்தருளுக; என்று விண்ணப்பம் செய்தனர். உடனே சிறியதிருவடி மகிழ்ந்து அந்த பிரஹ்மசாரிரூபத்தை விட்டு நிஜரூபத்தை தரித்து, ஸ்ரீராமலக்ஷ்மணர்களிரு வரையும் தமது தோள்களின்மேலேற்றி எழுந்தருளப்பண்ணிக்கொண்டு

இனி எல்லாக்காரியங்களும் முடிந்ததென நிச்சயித்து, மஹாராஜர் வீற்றி ருந்த அந்த ரிசியமூக மலையை நோக்கி எழுந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நான்காவது ஸர்க்கம்
முற்றிற்று.

ஐந்தாவது ஸர்க்கம்.

பெருமாள் மஹாராஜருடன் அக்கினிஸாகூியாக நட்புச்செய்துகொண்டு வாலியைக்கொலைசெய்து உனக்குப் பட்டங்கட்டுவிப்பேனென்று முன்னமே பிரதிஜ்ஞைசெய்து அபயங்கொடுத்தருளியது.

பின்பு, நிறியதிருவடி, ஸ்ரீராமலக்ஷ்மணர்களை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு ரிசியமூகமலை சேர்ந்து, அவ்விடத்திலே இவர்களை யிறக்கி யோரி டத்திலெழுந்தருளி யிருக்கச்செய்து, இவர்களைக்கண்டு அச்சங்கொண்டு ஓடி மஹாராஜர் ஒளிந்திருந்த மலயமலைக்குச்சென்று மஹாராஜரை நோக்கிக் கேளீர் வானரர்கோமானே ! ரகுமஹாராஜாவின் திருவம்சத்தி லவதரித்து மிகச்சூரமுடையவர்களும், தசரதசக்கரவர்த்தித்திருக்குமார் களும், ஸ்ரீராமலக்ஷ்மணர்களென்னும் திருநாமமுடையவர்களுமாகிய இவ் விருவரும் மிகவுந் தருமகுணமுடையவர்களுமாகிப் பிதாவின் வாக்கியத் தைப்பரிபாலனஞ்செய்தவண்பொருட்டுத் தண்டகாவனத்தில் வாழ்கையில், ராவணன் ஸ்ரீராமபத்தினியாகிய சீதையென்னும் பிராட்டியாரைத் திருடிக் கொண்டோடிவிட்டான் ; ஆதலின், அவரைத் தேடிக்கொடுப்பதன்பொரு ட்டு உம்மைத் தஞ்சமென வந்தடைந்தனர்கள் ; பற்பல யாகங்கள்செய்து அளவற்ற தானங்கள்பண்ணிப் பார்முழுதும் ஒரு குடைக்கீழாண்ட சக்கர வர்த்தியாரின் திருக்குமார்களாகியும், சீதாபிராட்டியாரின்பொருட்டு உம் மைச் சரணமடைந்தனர்கள் ; உம்முடன் தோழமைகொள்ளவுங் கோரு கின்றனர்கள் ; யாவராலும் பூஜிக்கத்தக்கவர்கள் ; ஆதலின், நீர் அவர்களைக் கண்டு பூஜைசெய்து நட்புச்செய்து கொள்ளுக ; என்று மொழிந்தனர். மஹாராஜர் அம்மொழிகேட்டு மிக மகிழ்ந்து அச்சம் நீங்கி, மனந்தேர்ந்து, மானிடரூபம்பூண்டு, ரிசியமூகமலைசேர்ந்து பெருமாளைக்கண்டு ஸ்வாமி ! தேவரீர் மிகவும் தருமமுடையீரெனவும், ஒப்பற்ற தனிவீரரெனவும், ஸர்வ பூத தயாபரரெனவும், மற்றும் பற்பல திவ்விய கல்யாண குணகரெனவும், மாருதியுரைசெய்யக் கேட்டு மகிழ்ந்தேன் ; தேவரீர் ஸர்வலோக சரண்ய ராகியும், அற்பவானரனை அடியேனுடன் நட்புச்செய்யத் திருவுளங் கொண்டதென்பது, அடியேனுடைய பாக்கியமே ; இதுவே அடியேனுக் குயர்ந்த மரியாதை. தேவரீர்க்கு இவ்வண்ணந் திருவுளமிருப்பது உண்மை யாயின், அடியேன் இதோ வலதுகையை நீட்டினேன் ; தேவரீர் இதன்மேல் கைபோட்டுப் பிடித்துக்கொண்டருள்க ; தக்க ஏற்பாடுஞ்செய்தருள்க ;



என்று மொழிந்து கையை நீட்டினர். பெருமாளும் மகாராஜர் இவ்வண்ண முறைசெய்த வாக்கியத்தைக்கேட்டு,—

సప్రహృష్టమనాహస్తం పీడయామాస పాణినా।
హృద్యంసౌహృదమాలంబ్య పర్యష్వజతపీడితం॥

ஸப்ரஹ்ருஷ்டமனாஹஸ்தம் பீடயாமாஸபாணினா।
ஹ்ருத்யம் ஸௌஹ்ருதமாலம்ப்ய பர்யஷ்வஜதபீடிதம்॥

மிகவும் மகிழ்ந்தவராகித் தமது திருக்கரத்தினால் மஹாராஜருடைய கரத்தைப் பிடித்துத் திடமாகஅணைத்தாலிங்கனஞ்செய்துகொண்டு மகிழ்ந் தருளினர். உடனே சிறியதிருவடியும் பிரஹ்மசாரிவேஷத்தை விட்டுவிட்டு மறுபடியும் நிஜரூபத்தை யெடுத்துக்கொண்டு, இரண்டரணிக்கட்டைகளைக் கடைந்து தீயை யுண்டுபண்ணி வளர்த்து மலர்களினால் பூஜித்து எரிகின்ற அத்தீயை மஹாராஜர் பெருமாள் இவ்விருவர்களின் நடுவில் கொணர்ந்து வைத்தனர். உடனே ஸ்ரீராம ஸுக்கிரீவர்களிருவருரும் அச்செழுந்தீயை வலம் வந்து ஒருவர்க்கொருவர் நட்புச்செய்துகொண்டு ஒருவர்க்கொருவர் பார்த்து மகிழ்ந்தும், தழுவியும், புகழ்ந்தும், நீரே எனக்குத்தோழரும் இனி யருமாகின்றீர்; இனி நமக்குத் துன்பமும் ஒன்றே; இன்பமும் ஒன்றே; என்று சொல்லிக்கொண்டு மகிழ்ந்தனர்கள். அப்பொழுது மஹாராஜர் தாமே ஸாலமரத்தினது மலர்ந்த கிளைகளை முறித்துத் தரையில் பரப்பிப் பெருமாளுடன் வீற்றிருந்தனர். உடனே சிறியதிருவடியும் சந்தனமரத்தின் மலர்ந்த தழையைமுறித்துத் தரையில் பரப்பி இளையபெருமாளை எழுந் தருளியிருக்கச்செய்தனர். அப்பொழுது மஹாராஜர் பெருமாளை நோக்கி, ஸ்வாமி! அடியேன் தமையனுன வாலியினால் ராஜ்ஜியத்தையும், மனை யாளையும், அபகரித்துக்கொண்டு வெருட்டப்பட்டுப்பாரெங்கும் அலைந்திங்கே திரிந்துகொண்டிருக்கின்றேன்; அந்த வாலி என்மீது தீராப்பகைகொண் டிருக்கின்றமையின், துயிலுமின்றி, நிரந்தரம் அச்சங்கொண்டு வருந் துகின்றேன்; மஹாபாகராகிய தோழரே! அந்த வாலியின்பயம் எனக்கு எவ்வண்ணம் நீங்குமோ, எவ்வண்ணம் யான் இன்புற்றுச் சிந்தையின்றி வாழ்வேனோ, தேவரீர் அவ்வண்ணஞ் செய்து அடியேனைக் காத்தருள்க; இவ்வண்ணம் அடியேனுக் கபயமுந்தந்தருள்க; அடியேன் தேவரீரையே தஞ்சமடைந்தேனென்று விண்ணப்பஞ்செய்தனர். இவ்வண்ணம் மஹா ராஜர் உரைசெய்த வாக்கியத்தைப் பெருமாள் திருச்செவிசார்த்தித் தரும முணர்ந்தவரும், தருமத்தில் விருப்புடையவருமாதலின், கருணைகூர்ந்து புன்னகைசெய்துகொண்டே மஹாராஜரை நோக்கி,—

ఉపకారఫలంమిత్రం విదితమ్మేమహాకపే।
వాలినన్తంవధిస్యామి తవభార్యాపహారిణం॥

உபகாரபலம்மித்ரம் விதிதம்மேமஹாகபே!
வாலிநம்தம்வதிஷ்யாமி தவபார்யாபஹாரிணம்॥

கேளீர் வானரராஜரே! எனக்குத்தோழராயினவர்கள், என்னுல் செய்யப்பட்ட உபகாரத்தையே நற்பலனுகவுடையார் என்பது எங்கும் வெளிப்பட விளங்குகின்றதன்றே? ஆதலின், உம்முடைய பாரியையைப் பறித்த அந்தக் கொடிய வாலியை யான் விரைவில் கொலைசெய்வேன்; யான் எவ்வண்ணம் அவனைக் கொலைசெய்வேனென்று ஐயமுறற்க; என்னுடைய இக்கணைகள் குறி தப்பாதவைகளும், கதிரவனை நிகர்த்தனவும், கூராகத் தீட்டப்பட்டனவுமாகி விளங்குகின்றன; இவை யந்தவாலியின்மேலே விரைவாகப்பாய்ந்து அவனைக் கொலைசெய்யப்போகின்றன; இந்தக் கணைகள் கழுகின் இறகுகள் கட்டியும், கூரிய முனை பொருந்தியும், மேகமுமல் நீண்ட கணுக்கள் அமைந்தும், ஒலித்துஞ் செல்லுகையில், சினங்கொண்ட நச்சரவங்கள்போல விளங்கும். அந்த வாலி இந்தக் கணைகளினுல் அடிபட்டு வஜ்ஜிராயுதத்தினுலடிபட்ட மாமலைபோலத் தரையில்வீழ்ந்து கிடக்கையில், விரைவில் நீர் கண்ணுற்று மகிழ்வீர்; என்று அருளிச்செய்தனர். மஹாராஜர் இவ்வண்ணம் பெருமாள் அருளிச்செய்த வாக்கியங்களைக்கேட்டுப் பரமாநந்தமடைந்து பெருமாளை நோக்கி, ஸ்வாமிராகவகுல துரந்தரா! புருஷோத்தமா! தேவரீருடைய திருவருளினுல் அடியேன் மனையாளையும், ராஜ்ஜியத்தையும் இப்போழ்தே பெற்று மகிழ்வேன்; என் அண்ணனை அந்தப் பகைகொண்ட வாலி இப்பொழுதே எவ்வண்ணம் மரணமுறுவானே, அவ்வண்ணஞ்செய்து அடியேனைக் காத்தருள்க; என்று விண்ணப்பஞ்செய்து வேண்டினர். இவ்விருவரும் இவ்வண்ணம் தோழமைகொண்டு ஸம்பாஷணைஞ்செய்யுங்காலையில், பிராட்டியார்க்கும், வாலிக்கும், இராவணனுக்கும், முறையே தாரை மலையையும், பொன்னையும், தியையும் நிகர்த்த இடதுகண்கள் ஒரேகாலத்தில் துடித்தன;—

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐந்தாவது ஸர்க்கம்

முற்றிற்று.

சிறியதிருவடி மறுபடியும் பிரஹ்மசாரிவேஷத்தை விட்டு கிஜரூபந்தரித்தானென்றிருப்பதால் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை ரிசியமூககிரியில் எழுந்தருளப்பண்ணி விட்டு மஹாராஜரிடஞ்செல்லுங்காலையில், அவர் மனந்தெளிவுறுமளவும் அவரெதிரில் அவர் வாக்கியத்தின்படி மீளவும் பிரஹ்மசாரிவேஷந் தரித்தனரெனத் தோற்றுகின்றது;—

பெண்களுக்கு இடதுகண்துடிக்கின், விரைவில் மங்கலமுண்டாகுமென்றும், புருஷர்களுக்கு இடதுகண்துடிக்கின், துன்பம் நேருமென்றும், சகுனநூலிலிருக்கின்றமையின், இங்கு பிராட்டியார்க்கு இன்பமும், வாலி ராவணர்களுக்குத் துன்பமும் விளையுமென்பதை துடித்த இடதுகண்கள் அவரவர்களுக் கறிவித்தன;—

பெருமாள் முன்னமே வாலியைக் கொலைசெய்வேனென பிரதிஜ்ஞை செய்ததினுல், இவரே மும்மூர்த்திகளுள் முதன்மையானவரென்றும், ஒப்பாருமிக்காரும் இல்லாதாரென்றும், ஸர்வவல்லமையுடையரென்றும், யாவு மூணர்ந்தவரென்றும் நன்கு விளங்கும்

ஆரூவது துலர்க்கம்.

மஹாராஜர் பிராட்டியார் ஆகாயத்தில் செல்லுகையில், கீழேபோட்ட திருவாபரணங்களைக் காப்பாற்றி எடுத்துகொண்டுவந்து பெருமாளிடத்தில் ஸமர்ப்பித்தது.

மீளவும் மஹாராஜர் மகிழ்ந்து மாயாமானுஷவிக்ரஹனை பெருமாளை நோக்கி, ஸ்வாமி என்னினிய தோழரே! மஹாபலபராக்கிரமமுடையவரும் மிகச் சிறந்த புத்தியுடையவரும், அடியேனுக்கு நன்மந்திரியுமாகிய இந்த ஆஞ்சனேயர் என்னை நோக்கித் தேவரீர் பிதாவின்வாக்கியத்தைப் பரிபாலனஞ்செய்வதன்பொருட்டுத் திருவயோத்தியை விட்டுத் தண்டகாவனஞ் சேர்ந்து தேவியாருடனும், இளயபெருமாளுடனும் எழுந்தருளியிருக்கையில், ராவணன் கபடஞ்செய்து ஸ்ரீஜனகராஜன் திருமகளாகிய ஸ்ரீஸீதா பிராட்டியாரைப் பறித்தக்கொண்டோடிவிட்டதாகவும், அந்த ராவணன் நடுவில் ஜடாயுவையும் கொன்றுவிட்டதாகவும், அந்தப் பிராட்டியாரைத் தேடிக்கொண்டே தேவரீர்கள் இங்கெழுந்தருளியதாகவும் தெரிவித்தார். இது உண்மையாயினும், துயரற்க; விரைவில் துயரந்தீர்ந்து பிராட்டியாரைச்சேர்ந்து மகிழ்ந்தருள்வீர்; மதுகைடபர்களிரல் வேதச்ருதியைப் போல ராவணரல் ஒளிக்கப்பட்ட அந்தப் பிராட்டியாரை யான் விரைவில் தேடிப் பிடித்தெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருவேன்; பிராட்டியார் பாதாளத்திலாயினும், விண்ணுலகிலாயினும், மற்றும் எவ்விடத்திலாயினும் எழுந்தருளியிருந்தாலும், யான் தேடிக்கண்டெழுந்தருளப்பண்ணி வருவேள்; அன்றியிலே, அடியேன் ஒரு விண்ணப்பஞ்செய்கிறேன்; இதனை யுண்மையென்றே அறிந்தருள்க; தேவரீர் தேவியாராகிய பிராட்டியாரை இந்திரன் முதலிய தேவர்களும், தானவர்களும் கூடிக் கெடுக்க முயலினும், திறமைகொள்ளார்கள்; அவருடைய கற்பு யாவரையும் பற்றி யெரிக்கும்; ஆதலின், தேவரீர் துன்பத்தைத் துற்நதருள்க; அவரை யான் எவ்விதத்திலும் தேடியெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருவேன்; அடியேன் முன்பொருநாள் இவ்விடத்தில் இந்நான்குமந்திரிகளுடன் உட்கார்ந்திருக்கையில், ராவணன் ஒரு பெண்ணையெடுத்துத் தேரிலேற்றிக்கொண்டு ஆகாயத்தில் சென்றனன். அப்பெண்ணும் ராமா! ராமா! என்றும், லக்ஷ்மண! லக்ஷ்மண! என்றும், கூவி யழுதுகொண்டே சென்றனள். அந்தப் பெண் பிராட்டியாராகவேயிருக்கவேண்டுமென்றிப்போழ்து ஊஹிக்கிறேன்; அப்போழ்தவர் எங்களைக்கண்டு உத்தரீயத்தையும், திருவாபரணங்களையும் கட்டிப்போட்டனர். அவைகளை யாங்களும் எடுத்துவைத்திருக்கின்றனம்; இப்போழ்தவைகளை யழைப்பித்து ஸமர்ப்பிக்கின்றேன்; கடாக்ஷித்து அறிந்துகொண்டருள்க; என்று விண்ணப்பஞ்செய்தனர். பெருமாளும் அம்மொழியைக் கேட்டவுடனே மஹாராஜரை நோக்கித் தோழரே!

வன் இன்னும் ஆலஸியம் செய்கின்றீர் ; விரைவாக அந்த ஆடையாபரணங்களைக் கொணர்க ; என்று நியமித்தருளுதலும், மஹாராஜர் உடனே எழுந்து புகற்கரிய அம்மலையின் குகைக்குட்புகுந்து பிராட்டியாருடைய அந்த உத்தரீயத்தையும், திருவாபரணங்களையும் எடுத்துக்கொண்டுவந்து பெருமாளைக்கிட்டி ஸ்வாமி ! இதோ கொணர்ந்தேன் ; கடாக்ஷித்தருள்க ; என்று காட்டியளித்தனர். பின்பு பெருமாள் அவைகளைக் கைக்கொண்டு பனிநீர்த்துளிகளினால் சந்திரன் தடையுண்டு ஒளி குலைவதுபோலச் சோக நீர்களினால் சூழ்ந்து தடுக்கப்பட்டு அந்தோ, என் பிராணநாயகி ! என்று கூவித் தீரத்தை விட்டுச் சோகத்தை மேற்கொண்டு தரையில்வீழ்ந்து அந்த அணிகளைத் தமது திருமார்பின்மேலே வைத்துக்கொண்டு கோவினால் தூண்டிச் சினமுறுத்தப்பட்டுப் புற்றிலுறைகின்ற நச்சரவம்போலப் பெருமூச்சிறிந்து கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கி அருகிலிருந்த இளையபெருமாளைநோக்கிப் புலம்பலுற்றனர். பாரடா லக்ஷ்மண ! வைதேஹி ராவணனால் பறிக்கப் படுகையில், இவைகளைக் கீழே யெறிந்தனள் ; இந்த ஆடையாபரணங்கள் பசும்புல்லுள்ள இடத்தில் போடப்பட்டனபோலும், ஆதலின், பச்சை நிறமுற்றிருக்கின்றன ; இவை சீதையின் ஆடை யணிகளே யல்லவோ ? என்றிவ்வண்ணம் பெருமாள் புலம்பி யழுது விழுகையில் இளைய பெருமாள் பெருமாளை நோக்கி, எம்மையரே !—

నాహంజానామి కేయూరే నాహంజానామికుణ్డలే।

నూపురేత్వభిజానామి నిత్యంపాదాభివన్దనాత్॥

நாஹம்ஜாநாமிகேயூரே நாஹம்ஜாநாமிகுண்டலே।

நூபுரேத்வபிஜாநாமி நித்யம்பாதாப்பிவந்தநாத்॥

அடியேன் கேயூரங்களையும், (வங்கிகளையும்) அறியேன் ; அடியேன் குண்டலங்களையும் அறியேன் ; தினந்தோறும் திருவடிகளில் தண்டம் ஸமர்ப்பித்துக்கொண்டிருந்தமையின், பிராட்டியாரது நூபுரங்களை (கச்சை கொலுசுகளை) மாத்திரமே நன்றாக அறிந்துணர்கின்றேன் ; இவைகள் பிராட்டியார் திருவடிகளில் ஸமர்ப்பித்திருந்தனவே என்று விண்ணப்பஞ்செய்தனர். பின்பு, பெருமாள் தீனமடைந்து மஹாராஜரை நோக்கி, மந்திகளின் கோமானே உரையீர் ; எவ்விடத்தில் சீதையை ராவணன் எடுத்தோடுகையில் நீர் கண்டீர் ? அவள் எனக்கு உயிரினும் இனியளாயினளே ! எனக்கு மிகவுந் துயரமளித்த அந்த அரக்கன் எங்கு உறைகின்றனன் ? அவனெருவன் பொருட்டே யன்றோ, யான் எல்லா வரக்கர்களையும் கொலைசெய்யப் போகின்றேன் ; அவன் சீதையைப்பறித்து யான் சினமுறச்செய்ததென்பது தான் இறப்பதன்பொருட்டு வலுவில் மரணமுறும் வழியைத் திறந்துகொண்டதுபோலாயிற்று ; எந்த அரக்கன் என்னுடைய மிகவும் இனியளான மனையாளை மோஸஞ்செய்து பறித்துவந்தனனே, அவன் யாவன் ?

எங்குறைகின்றனன்? விரைவிலுரையீர்; உடனே யவனைக் கொலைசெய்து யமலோகத்திற் கனுப்பிவிடுவேன்; என்று முனிந்தருளிச் செய்தனர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஆறுவது ஸர்க்கம்
முற்றிற்று.

ஏழாவது ஸர்க்கம்.

பெருமாள் பிராட்டியாரைத் தேடும்படி மஹாராஜர்க்குக் கட்டளையிட்டு வாலியைவென்று உம்மை ராஜராக அபிஷேகஞ்செய்வித்தே னென்று பிரதிஜ்ஞைசெய்துகொடுத்து மஹாராஜரை மகிழ்வித்தருளியது.

இவ்வண்ணம் பெருமாள்வருந்திக்கண்ணீர்துடைப்பவிஞ்சைக்கேட்டுமஹாராஜர் தாமும் தோழமையினல் வருந்திக் கண்ணீர்பெருக்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு பெருமாளை நோக்கி, ஸ்வாமி! அடியேன் இப்போழ்து அந்தக் கொடிய ராவணனுடைய இருப்பிடத்தையும், பல பராக்கிரமங்களையும் நன்றாக அறிகின்றிலேன்; நீசகுலத்தில் பிறந்த அவனுடைய குலத்தையும் அறிகின்றிலேன்; ஆயினும், அடியேன் தேவரீருக்கு உண்மையாக ஒரு பிரதிஜ்ஞை செய்துகொடுக்கிறேன்; தேவரீர் துயரத்தைத் துறந்தருள்க; தேவரீர் எவ்வண்ணம் பிராட்டியாரைப் பெற்றுமகிழ்ந்தருள்வீரோ, அவ்வண்ணம் அடியேன் முயற்சிசெய்வேன்; யான் ராவணனைக் கூண்டுடன் கொலைசெய்து எனது தோள்வலியைப் பயன்படுத்தி விரைவில் தேவரீர் திருவுளம் மகிழுமாறு செய்வேன்; இதுவரையில் தீனமடைந்ததுபோதும், இயல்பாய் அடங்கியுள்ள தீரத்தை நினைந்தருள்க; இவ்வண்ணம் தீனமுறுவது தேவரீர்போன்றவர்களுக்கு உரியதன்று; யானும் பெண்டாட்டியைப்பறிகொடுத்து மிகவுந் துயரமடைந்தேன்; ஆகிலும், யான் இவ்வண்ணந் தீனமுறுகின்றிலேன்; தீரத்தையுந் துறந்து வருந்துகின்றிலேன்; யான் அற்ப வானரனையினும், மனையாளை நினைந்து சோகமுறுகின்றிலேன்; தேவரீர் மஹாத்துமாவும், பற்பலநூல்களைப்பயின்று குருகுலவாஸஞ்செய்தவரும், தீரமுடைய வருமாகியும் இவ்வண்ணம் வருத்தமுறுவது தகாதே

---

* பிராட்டியாருடைய நூபுரமும், முத்துவடமும், நடுவழியில் நழுவி வீழ்ந்துவிட்டன: மற்றுள்ள அணிகளையே பிராட்டியார் கழற்றிக் கீழே யெறிந்தனர்; சிறியதிருவடி முதலானோர் காட்டில் திரிந்து நூபுரத்தையும், முத்துவடத்தையுங்கூடக் கண்டெடுத்து வைத்திருந்தனர்களாதலும்; ஆதலின், இங்கே நூபுரத்தையும், மஹாராஜர் தந்தளித்தனரென்றறிக;—

ஆபரணதர்சன வ்யாஜத்தால் பகவான், யாத்ருச்சிக ப்ராஸங்கிகஸீதாதர்சனத்தாலும், சேதனஸம்ரக்ஷணத்தில் உத்யுக்தனாகுவானென்பது ஸூசிக்கப்பட்டது; மேல் ஸர்க்கத்திலும் இதுவே கூறப்படுகின்றது.

ன்பது விளுவல் வேண்டுமோ ? ஆதலின், தீரத்தை மேற்கொண்டு மேலெ ழுந்த கண்ணீரை யடக்கி யருள்க ; திறமையும், வலிமையும் கொண்டவர்க ளுக்கு எல்லையாயுள்ள தீரத்தைத்துறந்து வருந்தற்க ; துன்பம் நேரினும், பொருளழியினும், அச்சம் வாய்க்கினும், உயிர் மாயினும், தீரமுடையோன் தன் புத்தியினுலேதானே நன்காராய்ந்து மேன்மைகொண்டு மகிழ்வானே யன்றித் தீமையுளுன்; யாவனெருவன் எப்பொழுதும் தீனமுறுகின்ளுனே அவன் மடையனென்னப்படுவான் ; அவன் சுமப்பதற்கரிய பாரமேற்றிய படகு கடலில் மூழ்கிவிடுவதுபோல சோகக்கடலில் மூழ்கியழிவான் ; அடி யேன் நட்பினுல் இவ்வண்ணங் கைகூப்பி வேண்டி யுரைக்கின்றேன் ; சோக த்திற்கிடங்கொடாமல் பௌருஷத்தை மேற்கொண்டருள்க ; சோகத் தையே மேற்கொள்பவர்களுக்கு ஒருக்காலேயிலும் இன்பமிலது ; அவர்களு க்குத் திறமையும் அழிந்துவிடும் ; ஆதலின், தேவரீர் துயருறற்க ; மிகவும் சோகமுற்றவன் பிழைப்பதிலும் ஐயமே ; ஆதலின், சோகத்தைத் துறந்து தீரத்தையே மேற்கொண்டருள்க ;—

హితంవయస్యభావేన బ్రూమినోపదిశామితే।
వయస్యతాంపూజయన్నే నత్వంశోచితుమర్హసి॥

హితమ్వయస్యభావేన బ్రూమినోపదిశామితే।
వయస్యతామ్పూజయన్మే నత్వమ్శోచితుమర్హసి॥

அடியேன் தேவரீருக்குத் தோழனென்பதினுல் இதத்தை விண்ணப்பஞ் செய்து அறிவிக்கின்றேனே யன்றி,யுபதேசமாவது, கட்டளையாவது செய்கி ன்றிலேன்; தேவரீரும் அடியேன்மேல் அருள்செய்து தோழமையை விளங் குவிப்பதன்பொருட்டு இவ்விண்ணப்பத்தைத் திருவுளம்பற்றித் துயரத் தைத் துறந்து தீரத்தை மேற்கொண்டருள்க ; என்றிவ்வண்ணம் விண்ண ப்பஞ்செய்தனர்.

பெருமாளும் இவ்வண்ணம் மஹாராஜர் . இனிமையாகத்தேற்றின வாக்கியங்களைத் திருச்செவிசார்த்தி , உத்தரீயத்தின் முனையினுல் சோக நீர்த்துளிகளைத் துடைத்துக்கொண்டு மனந்தேர்ந்து தீரமுற்று மஹாராஜ னை மகிழ்ந்தாலிங்கனஞ்செய்துகொண்டவரைநோக்கிக் கேளீர்வானரர் சீமா னே! நேசமும், அன்பும், பிரியமும், இதமுமுடையோர்கள்தோழருக் குரை ப்பதுபோலவே தருதியுற்றதும், காலத்திற்குத் தக்கதும், இனியதுமாக நீர்உரைத்ததைக்கேட்டு மகிழ்ந்தேன் ; அவ்வண்ணமே யான்உம்மால் தேற்ற ப்பட்டு இயல்பாயுள்ள தீரத்தை மேற்கொண்டேன் ; இத்தருணத்தில் இவ் வண்ணம் உம்மைப் போல இதமுரைக்கத்தக்க தோழர் வாய்ப்பதரிது ; அன்றியிலே, சீதையைத் தேடும் விஷயத்தில் நீர் மிகவும் முயற்சிசெயல் வேண்டும் ; என்னுயிர்க்கு ஆகவேண்டிய காரியம் யாதோ அதனையும் ஐய மும், கூச்சமுமின்றி யுரைசெய்க ; மழைகாலத்தில் நல்ல நிலத்தில் விதை த்த எல்லா விதைகளும், தப்பாமல் முளை ப்பதுபோல என்னிடத்தில் இ

க்கப்பட்ட எக்காரியமும் கைக்கூடுமென்றே நம்புக ; இப்போது யானுரைத்த இந்த வாக்கியம் அபிமானத்தினாலாவது, அன்பினாலாவது, கசடினாலாவது உரைக்கப்பட்டதாக நினையற்க ; யான் உரைப்பதெல்லாம் உண்மையெனவே நம்புக ;—

అనృతంనోక్తపూర్వమ్మే నచవక్ష్యేకదాచన।
ఏతత్తేప్రతిజానామి సత్యేనైవచతేశపే॥

அந்ருதம்நோக்தபூர்வம்மே நசவக்ஷ்யேகதாசந।
ஏதத்தேப்ரதிஜாநாமி ஸத்யேநைவசதேசபே.॥

யான் இதுவரையில் பொய்மொழிமொழிந்தேயிலேன்; இனியும் ஒருக்காலும் மொழியேன்;இவ்வண்ணம் உமக்கு யான் பிரதிஜ்ஞை செய்துகொடுக்கிறேன்; எனது ஸத்தியத்தின்மேலும் ஆணையிட்டுக்கொடுக்கிறேனென்று தாமே பரப்ரஹ்மமென்பது விளங்க அருளிச்செய்தனர். மஹாராஜரும் மந்திரிகளுடன் பெருமாளிவ்வண்ணம் அருளிசெய்ததையும் பிரதிஜ்ஞைசெய்துகொடுத்தருளியதையுங் கேட்டுப்பரமானந்தமடைந்து திகழ்ந்தனர். இவ்வண்ணம் ஸ்ரீராம ஸுக்ரீவர்கள் மிக நட்புக்கொண்டு ஒருவர்க்கொருவர் துன்பவின்பங்களை மொழிந்துகொண்டு மகிழ்ந்தனர்கள். மஹாராஜரும் பெருமாள் அருளிச்செயல்களை முற்று முணர்ந்து தன் மனதில் தன் காரியம் முழுதும் முடிந்துவிட்டதாகவே எண்ணி மிகவும் மகிழ்வுகொண்டனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஏழாவது ஸர்க்கம்

முற்றிற்று.

இந்தஸர்க்கத்திலே ஆபரணதர்சன வியாஜத்தினாலே சேதனனுடைய யாத்ருச்சிக ப்ராஸங்கிக ஸுக்ருததர்சனத்தினாலே பகவானுக்கு அந்தச் சேதனனை யடையும் விஷயத்திலுண்டாகிய துரை யுரைக்கப்படுகின்றது ; இதில் மஹாராஜர் ராவணனுடைய இருப்பிடத்தையாவது பலபராக்ரமங்களையாவது அறியேனென்று விண்ணப்பஞ்செய்தார். மேலே பிராட்டியாரைத்தேடுவதற்கு வானரர்களை யனுப்புங்காலையில் தென்கடலின்நடுவில் நூறுயோஜனம் அகன்ற இலங்காத்தீவுயிருக்கின்றது ; அதுதான் ராவணன் உறையுமிடமென்று சொல்லுகிறார் ; ஆதலின், இது எப்படி பொருந்துமெனில், பொருந்தும்; முதலில் பெருமாளுக்கு ராவணன் செய்திகளை யறிவித்துவிட்டால் உடனே ராவணனைக்கொலைசெய்யும்பொருட்டுத் தாமே இளையபெருமாளைத் துணையாகக்கொண்டு எழுந்தருளிவிடுவரோ என்று எண்ணி, அப்படியானால் தான் உதவிசெய்து பெரும்புகழ்பெற்ற க்ருதார்த்தனாகுவதற்கில்லையே யென்று மறைத்தனர் மஹாராஜரென்றுணர்க. வாலி மரணமுறுமளவும் தான் மதங்காச்ரமத்தைவிட்டுப் புறப்பட அச்சங்கொண்டிருக்கின்றமையின்,இப்போது எவ்வண்ணம் பெருமாளுக்கு உதவிசெய்வார் ; வாலியைமுதலில் கொல்லுவித்துதான்அபிஷேகங்கொண்டபின்பானல் அநேகங்கோடி வானரர்களைக்கொண்டும் தாமும் பெருமாளுக்கு உதவியென்னும் கைங்கரியஞ்செய்து தன்யராகுவாரல்லரோ? ஆதலின், மறைத்தனர் ; ஆதலாலேதானே இதுமித்திரத்ரோஹமாகாதெனவுணர்க. முன்பு மஹாராஜர் ராவணனுடையசெய்தியை யறிந்தேயிலர் ; பின் தாரை இளையபெருமாளுடன் விண்ணப்பஞ்செய்த வாக்கியத்தைக் கேட்டே தெரிந்துகொண்டனர் என்று சிலர்கூறுவார்கள். அதுபொருந்தாது; முன்னேதான் வாலியினால்வெருட்டப்பட்டு லோகாலோகமலைவரையில்

எட்டாவது வர்க்கம.

பெருமாள் வாலியைக் கொலைசெய்வேனென்று பிரதிஜ்ஞைசெய்த பின்னர், மஹாராஜர், தான் யுவராஜாவாக விருந்ததையும், பின்பு வாலி தன் மனையாளை யபகரித்துக்கொண்டு தன்னை வெருட்டியதையும், வாலியுடன் பகைநேர்ந்த காரணத்தையும் உரைசெயலுற்றது.

இவ்வண்ணம் பெருமாள் அருளிச்செய்த வாக்கியத்தை மஹாராஜர் கேட்டு மிகமகிழ்ந்து, இளையபெருமாளுக்கெதிராகப் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் என்னருமை நடப்பினரே! திருக்கல்யாணகுணங்கள் யாவும் குறைவின்றி நிறைந்துள்ள தேவரீரே அடியேனுக்குத்தாழராயினமையின், தேவர்களும், தெய்வங்களும், என்மேல் அருளுடையர்களாயினர்கள்; இவ்விஷயத்தில் ஐயமென்பதேயில்லை; தேவரீர் திருவுள்ளத்தில் கருதின் அடியேனுக்குத் தேவேந்திரன்பட்டமும் பெறலரிதாகாது; அவ்வண்ணமாயின், இந்த கிஷ்கிந்தாராஜ்ஜியத்தைப்பெற்று மகிழ்வேன்? அடியேன் அக்கினிஸாகூஷியாக தேவரீருடன் நட்புக்கொண்டமையின், இனத்தார், சுற்றத்தார், தாழர்கள் யாவரும் இனி என்னைச் சேர்ந்து மகிழ்வார்கள்; அடியேனும் தேவரீர்க்குத் தகுதியான தாழனென்று தேவரீரே விரைவில் அறிந்தருள்வீர்; என்னுடைய குணங்களை யானே இப்போது புகழ்ந்து கொள்ளேன்; பிரஹ்மஜ்ஞான முடையவர்களுக்குத் தீரம் ஒருக்காலும் அழியாததுபோல தேவரீர்போன்ற மஹானுபாவர்களினுடைய அன்பும் ஒருக்காலும் அழிவுறுது; வெள்ளி, தங்கம், ஆடையாபரணம் முதலிய யாவும் தாழர்களுக்குப் பகுதியற்றனவென்றே தாழர்கள் நினைக்கின்றனர்கள்;—

எங்கும் ஓடியலைந்ததாக மஹாராஜர் உரைக்கின்றமையாலும், ராவணன் வாலியுடன் பகைத்துத்தோல்வியுற்றுப்பின்பு நட்புக்கொண்டிருந்தமையாலும், ராவணன்செய்தியை மஹாராஜர் அறியாரென்றுரைப்பதுவே அறியாமை; மஹாராஜர் அறிந்தே தனக்குக் கைங்கரியம் நேராமல் போகுமோ என்று மறைத்தனர்; ஆகையாலேதான் எவ்விடத்தில் சீதை ராவணனால் பறிக்கப்பட்டனளோ உரையீரென்று பெருமாள் வினவியதற்கும் மஹாராஜர் விடையுரைத்திலர்; சிலர், ராவணன் இருப்பிடம்முதலியவற்றை நன்கறியேன்; சிறிது அறிவேன்; என்று மஹாராஜர் உரைத்ததாகப் பொருள் கூறுவார்கள்; அதுவும் பொருந்தாது, ஆங்காயின் அறிந்தவரையிலுமாவது உரைத்திருக்கவேண்டுமன்றே? சிறிதும் உரைத்திலரே, ஆதலின் அறிந்தேமறைத்தனரென்றேயுணர்க. இவ்வண்ணமாயின் பெருமாளுக்கு இவர்மீது பொய்யரென்னும் மித்திரதுரோஹஞ் செய்பவரென்னும் அவிசுவாஸம்தோற்றுதோவெனில், தோற்றுது; பெருமாள்ஸர்வஜ்ஞஸர்வசக்தஸத்தியஜ்ஞானாநந்தஸ்வரூபியும் ஸர்வாந்தர்யாமியுமாகிய பரபிரஹ்மமேயாதலின், தாமே ஸ்வஸங்கல்பானுகுணமாக மஹாராஜர்க்கு புத்திபிரதானம் செய்தருளியிருக்க அவிசுவாஸம் தோற்றுவ தெவ்வண்ணம்; ஆதலின், பெருமாளுக்கும் இதுதான் திருவுளமெனவறிக; மஹாராஜர் ராவணன் இருப்பிடத்தை யறிவா

ஆ஢்யோவாபிதரித்ரோவா துக்கிதஸ்ஸுகிதோபிவா।
நிர்தோஷோவாஸதோஷோவா வயஸ்யஃபரமாகதிஃ.॥

தநத்யாகஸ்ஸுகத்யாகோ தேஹத்யாகோபிவாபுநஃ।
வயஸ்யார்தேப்ரவர்தந்தே ஸ்நேஹாந்த்ருஷ்ட்வாததாவிதம்.॥

தோழன் செல்வமுடையவனையினும், செல்வமற்றவனையினும், துன்புற்றவனையினும், இன்புற்றவனையினும், தீக்குணமுடையவனையினும், நற்குணமுடையவனையினும், அவனே தஞ்சமாகக்கடவன். நல்லோர்கள் தோழர்களின் பொருட்டுப் பொருளையிழந்தாவது, போகங்களைத் துறந்தாவது, உயிரை விட்டாவது அவர்களைக் கைவிடாமல் பாதுகாத்தளிப்பார்கள். ஆதலின், இனியடியேனுக்கு சிறிதுங் குறையிலது ; என்று விண்ணப்பஞ்செய்தனர். பெருமாளும் அதைத் திருச்செவிசார்த்தியது அவ்வண்ணமேயாகுமென்று உடன்பட்டு, எதிரிலுள்ள இளையபெருமாளுடன் உகந்தருளிச்செய்து மகிழ்ந்தருளினார்.

அநந்தரம் மஹாராஜர் பிராட்டியாருடைய திருவாபரணங்களை வாங்கிக் கடாகூடித்தழுதல் நின்றுகொண்டிருக்கின்ற பெருமாளைப்பார்த்து

ராயின். பிராட்டியைத்தேட நாற்றிசைகளிலும் வானரர்களை யனுப்பியதென்னெனில், ராவணன் மாயாவியாதலாலும், பிராட்டியைப்பறித்தோடி நெடுங்காலமாயினமையாலும், ஒருக்கால் வேறிடங்களில் ஒளித்துவைத்திருப்பானென்று ஐயுற்று அனுப்பினரெனவறிக; ஒருவருஷம்வரையில் ராவணன் பிராட்டியைக் காவலில்வைத்து வருத்தாவிட்டால் அவன்செய்த சிவபூஜையினாலுண்டாகிய தபோமகிமை குறையாது, அது குறையாவிட்டால் பெருமாளால் ராவணன் கொலைசெய்யப்படான்; ஆதலின் அது வரையில் மஹாராஜருக்கு ராவணன் செய்தி தோன்றுமலிருக்குமாறு சிவசங்கல்பமிருந்ததென்று அப்பயதீக்ஷிதன்சொன்னான், இது மிகவும் மடமையினாலுரைசெய்தது; அத்தன்மையதாகிய தபோமகிமை ராவணனுக்குளதாயின் சிவனர் என் பிராட்டியைப்பறிக்கும்படி செய்தார்; அதற்கு ஒரேவருஷமென்று என்ன ஏற்பாடு, அது உண்மையாயின் இதற்குமுன்னமே பற்பலபரத்தையல்களைப் பறித்து வருத்தியதினாலேதானே அத்திறமையழிந்திராதோ ? இதனால் மூடர் மயங்கினும் உணர்ந்தோர் மயங்குவாரோ ? மயங்கார்; ஆனால் அவன் செய்த சிவபூஜைக்குப் பயன்யாதெனில், பிருகுமஹாமுனிவர் சாபமிட்டபடி பரத்தையல்களைப்பறிப்பதும் பெரியோர்களைப் பகைப்பதும் நல்லொழுக்கத்தைத்துறந்து தீச்செயல்புரிவதும் பாவத்தண்டியாகித் திரிவதுமே பயனெனவுணர்க; இப்பிறவியில் பயன்நேரின் மறுபிறவியில் பயன் கற்பிக்கக் கூடாதென்று மீமாம்ஸாதிகியாயமிருப்பதால் இதுதான் நன்கு அமையும்; மஹாராஜர் இதற்குமுன் பெருமாளுடன் வார்த்தையுரைசெய்கையில் கைகளைக்கூப்பாமல் இப்பொழுது கைகளையுங்கூப்பிக் கண்ணீர்பெருக்கி யுரைசெய்யத்துடங்கினமையின், தாம் உண்மையை மறைத்துப் பொய்யுரைப்பதைப் பொறுத்தருளவேண்டுமென்னும் கருத்துடையரென்று நன்றுகவிளங்கும்; ஆகையாலேதான் உடனே இரண்டாவது சுலோகத்தில் பிரதிஜ்ஞையும் செய்தார்; இவைகளை நன்காராயின், பொருந்துமென்றுணர்வினர்களுணர்வார்கள்.

அவனை எழுந்தருளப்பண்ணுவதற்காக நாற்புறமும் நோக்கி, யருகில் தளிர்த்து மலர்ந்தடர்ந்த ஆச்சாமரத்தின் கிளையை முறித்துக் கீழபரப்பிப் பெருமாளை எழுந்தருளியிருக்கச்செய்து தாமும் உட்கார்ந்தனர். உடனே சிறியதிருவடி இளையபெருமாள் நிற்பதைக்கண்டு மற்றொருகிளையை முறித்துக் கீழபரப்பி யவரையும் வீற்றிருக்கச் செய்தனர். இவ்வண்ணம் அம்மலையின்மிசையில் கலக்கமற்றுத் தெளிந்த ஆழ்கடல்போல கம்பீரமாக வீற்றிருக்கின்ற பெருமாளை மஹாராஜர் நோக்கிப் பெருமகிழ்வினால் வாய்தழுதழுத்து மொழியலுற்றனர். கேட்டருளீர் மஹாநுபாவரே! அடியேன் தமையனை வாலியினால் வெருட்டப்பட்டு அச்சங்கொண்டிங்கே திரிந்தலைந்துகொண்டிருக்கின்றேன்; பாரியையும் இழந்து, மகிழ்வுகுன்றித்துன்பக் கடலில் மூழ்கி யிருக்கின்றேன்; அனைத்துலகங்களுக்கும் அபயங்கொடுத்துக் காத்தருளும் அருளாழியம்மானே! அடியேனையும் இந்த வாலியினின்றும் காத்தருள்செய்க; என்றிவ்வண்ணம் மஹாராஜர் விண்ணப்பஞ்செய்ததைப் பெருமாள் கேட்டருளித் தாம் தருமமறிந்தவரும், ஆசிரிதபரிபாலனஞ்செய்யவல்ல திவ்விய தேஜஸ்ஸை யுடையவரும், ஆசிரிதவாத்சல்ய முடையவருமாதலின், மந்தஹாஸத்துடன் மஹாராஜரை நோக்கிக் கேளீர் தோழரே! தோழமைக்கு உபகாரமும், பகைக்கு அபகாரமும் அடையாளமாதலின், யான் இப்போழ்தே அந்த வாலியைக் கொலைசெய்து உம்மை மகிழ்செய்வேன்; என்னுடைய இந்தக் கணைகள் மிகவேகமுள்ளனவும், இறகுடையனவும், கொடியவொளி யுடையனவும், கார்த்திகேயவனத்திலுண்டாயினவும், தங்கத்தட்டமைந்தனவுமாகி விளங்குகின்றன; இவைபகைவர்மேல் நச்சரவம்போலவும், வச்சிராயுதம்போலவும் பாய்ந்து கொலைசெய்யும்; உமக்கு அண்ணனென்னும் மாறு பெயருள்ள சத்துருவை இக்கணையிலல்அடிபட்டிறந்தனனெனவே எண்ணுக; இக்கணையிலை அவன் சிதறுண்ட மாமலைபோல வீழ்ந்திறப்பனேயன்றி, யுய்யானென்றருளிச்செய்தனர்.

மஹாராஜர் இம்மொழியைக்கேட்டு மகிழ்ந்து நன்குநன்கென்று புகழ்ந்து அவரை நோக்கி, ஸ்ரீராமசந்திரரே! அடியேன் மிகவும் சோகத்திலை வருந்தியிருக்கின்றேன்; சோகமடைந்தோர்களுக்குத் தேவரீரே தஞ்சம்; தேவரீர் தோழராயினமையின், அடியேன் தேவரீரிடத்தில் முறையிட்டழுகின்றேன்; தேவரீர் அக்கினிஸாக்ஷியாகக் கைகொடுத்தமையின், அடியேனுக்குத்தோழராயினீரல்லீரோ? ஆதலாலும், மிகவும் பலபராக்ரமமுடையீரென்பதாலும், அச்சமின்றி யுரைக்கின்றேன்; இவ்விஷயத்தில் சத்தியத்தின்மேல் ஆணையிட்டுத்தருவேன்; துன்பத்தை இதுவரையில் உள்ளே யடக்கிவைத்திருந்தமையின், என் மனதை யறுத்துக்கொண்டிருந்தது; என்றிவ்வண்ணமுரைத்துக் கண்ணீர்ப் பெருக்கிலை மேலே கெட்டியாகக்கூறுவதற்குத் திறமையற்றவராயினும், தீரத்திலை சோகத்தையும், கண்ணீர்ப்பெருக்கையும் உள்ளே யடக்கிக்கொண்டு, பின்பு, கண்ணீரையுந் துடைத்துக்கொண்டு பெருமூச்செறிந்து மனந்தேறி, மீளவும் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் இனியதோழரே! முன்னே வாலி என்னை வன்மொழிகள்மொழிந்து

நாட்டினின்றும் வெருட்டியோட்டி விட்டனன்; என்னுடைய இனிய மனையாளையும் பறித்துக்கொண்டனன்; என்னுடைய தோழர்களையும் சிறையில் வைத்தனன்; என்னைக் கொலைசெய்வதிலும் மிக முயற்சிகொண் டிருக்கின்றனன்; பல தடவைகளில் என்னைக் கொலைசெய்வதன்பொருட்டு அவனுலேவப்பட்டு வானரர்கள் இங்கெய்தி என்னுடன் போர்செய்து மடிந் தனர்கள்; தேவரீரும் வாலியினுலேவப்பட்டவரோ? என்று எண்ணியே தேவ ரீரைக்கண்டவுடன் எதிரில் வராமல் ஒளித்திருந்தேன்; அச்சமுற்றகாலையில், யாவரும் எதைக் காணினும் அச்சமுறுகின்றனர்களல்லரோ? இந்த அனு மான் முதலிய நால்வரே எனக்குத் துணையாகியிருக்கின்றனர்கள்; ஆகை யாலேதான் இவ்வண்ணம் மிகவும் துன்புற்றும் இறக்காமல் பிழைத்திருக் கின்றேன்; இவர்களை என்னைவிட்டுப் பிரியாமல் சென்றவிடத்தில் சென் றும், இருந்தவிடத்திலிருந்தும், என்னைப் பாதுகாத்துக்கொண்டு வருகின் றனர்கள்:—

என் தோழரே! இதுதான் என்னுடைய விண்ணப்பத்தின் சுருக்கம், விரிவாக உரைப்பதிலுல் யாதுபயன்; மிகவும் சிறந்த பலமுடைய என்தமை யனை அந்த வாலியே எனக்குச் சத்துரு; அவன் இறந்தாலொழிய என் துன்பம் தீராது; எனக்கு இன்பமும், உயிர்வாழ்வும், அவன் அழிந்த பின்பு தான் நிலைக்கும்; இதுதான் என்னுடைய துன்பத்தின் முடிவு; தோழனுக் குத் துன்புற்றவனையினும், துன்புற்றவனையினும், தோழனே தஞ்சமாதலின், உரைசெய்தேன்; என்று மொழிந்து மௌனமடைந்தனர். பெருமானும் அம்மொழியைக்கேட்டு மஹாராஜனை நோக்கி, வானரர் சிமானே! உமக் கும் வாலிக்கும் பகையேனுண்டாயிற்று.; அதை யான் கேட்டுணர விரும்பு கின்றேன்; அதைக்கேட்டபின் பலாபலங்களை எளிதாக வுணர்ந்து தேர் ந்து, மேலே நடக்கவேண்டியதை நடத்துவேன்; உம்மை இவ்வண்ணந் துன்புறுத்தியதைக்கேட்டு வாலியின்மேல் எனக்குக் கடுஞ்சினந்தோன்றி, மழைகாலத்தில் ஆற்றின்வேகம்போல என் மனத்தைப் பிளந்து மேலெழு கின்றது; ஆதலின், யான் கோதண்டத்தில் ஞாண்கட்டுவதற்குள் அதனை நிகழ்ந்துரைசெயீர்; யான் கணையைத் தொடுத்தெய்வேனுகில், உடனே வாலி இறந்தனனெனவே நம்புக; என்று விளவி யருளினர். மஹாராஜர் அதுகேட்டு நான்கு வானரர்களுடன் மிக மகிழ்ந்து பெருமானை நோக்கி, வாலியுடன் தமக்குப் பகைதோற்ற காரணத்தை மொழியலுற்றனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் எட்டாவதுஸர்க்கம்
முற்றிற்று.

ஒன்பதாவது ஸர்க்கம்.

ஸுஹாராஜர், மாயாவியுடன் வாலி பகைகொண்டு போர்செய்தது முதலிய செய்தியைப் பெருமாளுக்கு அறிவித்தது.

கேட்டருளீர் ஸ்ரீராமசந்திரரே! வாலியென்கிற என் தமையன் மஹா வீர முடையவனும், எம் தந்தைக்கும், எனக்கும், மிகவும் இனியனுமாகியிருந்தனன்; பின்பு, தந்தை பொன்னுலகமடைகையில், மந்திரிகளெல்லோருஞ்சேர்ந்து மூத்தவனென்பதினால், வாலிக்குப் பட்டங்கட்டுவித்தனர்கள். பின்பு, அவன் அரசாட்சிசெய்துவருகையில், யான் எப்பொழுதும் பிரியாமல் விஜயம்பூண்டு தொண்டன்போல அருகிலேதானே யிருந்துகொண்டிருந்தேன்; துந்துபிக்கு மூத்தவனும், மயாஸுரன் பிள்ளையுமாகிய மாயாவியென்பவன் அப்பொழுது ஒரு பெண்ணின் நிமித்தமாக வாலியுடன் பகைகொண்டிருந்து ஒருநாள் அர்த்தராத்திரியில் எல்லோரும் உறங்கின பின், கிஷ்கிந்தையின் கோபுரவாயிலில் வந்துகோரமாகச் சிங்கநாதஞ்செய்து வாலியைப் போர்வதற்கழைத்தனன்; துயில்கொண்டிருந்த வாலியும், அந்தக் கூக்குரலைக்கேட்டுத் துயிலுணர்ந்து அதனைப்பொறுமல் விரைவாக வெழுந்து அவ்வஸுரனுடன் போர்செய்யும்படி புறப்படுகையில், அந்தப் புரத்திலுள்ள வனிதையர்களும், யானும் பலவாறுகத் தடைசெயினுங் கேளாமல் சினங்கொண்டு புறப்பட்டு வந்தனன்; யானும் அவன்மீதுள்ள பத்திமையினால் அவனுடன் புறப்பட்டுச்சென்றேன்; அந்த மாயாவி எங்களிருவரையுங்கண்டு அச்சங்கண்டு மிகவும் வேகமாக ஓடிப்போயினன். அப்பொழுது சந்திரனெழுந்து வழியெங்கும் பிரகாசமாக விளங்கினமையின் யாங்களும் அவனை வெருட்டிக்கொண்டோடினேம்; அந்த அஸுரனும் புல்லெழுந்து மூடிய பூமியிலுள்ள ஒரு பிலத்தினுள்ளே புகுந்து மறைந்தனன். யாங்களும் அங்கே சென்று நிற்கையில், வாலி மிகவுஞ்சினமுடையவனாகின், மீளாமல் என்னை நோக்கி, அடா தம்பி! யான் வருமளவும் இவ்விடத்திலேயிருந்து மிகவும் ஊக்கத்துடன் இவ்வாயிலைக்காத்துக்கொண்டிரு; யான் இதனுள்ளே புகுந்து அந்த அஸுரனைத்தேடிக்கொலைசெய்து வருவேனென்று மொழிந்தனன். யான் அம்மொழிகேட்டு யானும் உடன் வருவேனென்று பலவாறுகவேண்டினேன்; அவன் அதற்குடன்படாமல் ஆணையிட்டுத் தகைந்துவிட்டு பெரிய அக்குகைக்குள்ளே புகுந்தனன். யான் அவன் கட்டளையின்படி அக்குகையின் வாயிலைக் காத்துக்கொண்டிருக்கையில், ஒரு வருஷமாகியும் அவன் வராமையால், அந்தோ! அண்ணன் இறந்துவிட்டனனென்று ஐயமுற்று மிகவுந் துயரமடைந்திருந்தேன்; பின்பு, நெடுநாளைக்கு அக்குகைக்குள்ளே அநேகமாயிரம் அசுரர்களின் இரைச்சலும், வாலியின் கூக்குரலுங் கேட்கப்பட்டன; உடனே நுரையுடன் கூடிய குருதியும் வெகுவாக அக்குகையினின்றுந் தோன்றிற்று; யான் இக்குறிகளினால்

வாலியே இறந்துவிட்டனனென்று நிச்சயித்து மிகவும் துன்பமடைந்து அந்த அசுரன் மீளவும் இங்கெய்தி எம்மையும் கொல்லசெய்வானே என்கின்ற எண்ணத்தினால் மலைபோன்ற பெரிய குண்டுக்கல்லை அந்தக் குகையின் வாயிலில் அடைத்து மூடிவிட்டு நீலாடி வாலியைக்குறித்துத் தருப்பணஞ் செய்து சோகத்தை யடக்கி இதன் உண்மையை அறியுமளவும், யார்க்கும் அறிவித்தலாகாதென்று இதனை யொருவர்க்கும் கூறாமல் மறைத்திருந்தேன்; ஆயினும், மந்திரிகள் இதனை எப்படியோ அறிந்துகொண்டு எல்லோருஞ் சேர்ந்து ஆலோசனைசெய்து என்னை நிர்ப்பந்தித்து அபிஷேகஞ் செய்வித்தனர்கள். பின்பு, யான் நீதிவழுவாமல் சிறிதுகாலம் அரசாட்சி செய்துகொண்டிருக்கையில், வாலி அந்த அஸுரனைக் கொலைசெய்துவிட்டு யான் அடைத்து வந்த கல்லினையுந்தள்ளி யந்தக்குகையாலேதானே வந்து யான் அபிஷேகங்கொண்டு அரசாட்சிசெய்வதையுங்கண்டு கதிஞ்சினம்பூண்டு கண்கள் சிவந்து என்னுடைய மந்திரிகளையுங்கட்டிச் சிறையில்வைத்து, என்னையும் நோக்கி, வன்மொழிகள் மொழிந்தனன். அப்போழ்து ராஜ்ஜியம் யாவும் என்வசத்திலிருந்தமையின், அவனை வெல்லுந்திறமையுற்றிருந்தேனாயினும், அவன்மீதுள்ள அன்பினாலும், பக்திமையினாலும், யான் அந்த எண்ணங்கொள்ளாமல் அவனைக்கண்டவுடனெழுந்து விதியின்படி வந்தனம் செய்தேன்; ஆயினும் அவன் சினந்தணிந்து மகிழ்ந்து ஆசீர்வாதஞ்செய்யாமலிருக்கையில், மீளவும் யான் வணங்கி வேண்டுகையிலும் சினந்தணியாமையால் அருள்செய்திலன்; மஹாபிரபுவாகிய என் தோழரே; என்று மொழிந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஒன்பதாவது ஸர்க்கம்
முற்றிற்று.

பத்தாவதுஸர்க்கம்.

மஹாராஜர் பெருமாளை நோக்கி, வாலி என் வேண்டுகோளுக் கிரங்காமல் வெருட்டினனென்றுரைத்ததும்; பெருமாள் அவனைக் கொலை செய்து உமக்கந்தராஜ்ஜியத்தை யளிப்பேனென்று அபயமளித்ததும்.

மீளவும் மஹாராஜர் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் என் பிரியமுள்ள தோழரே! மறுபடியும் யான் மிகச் சிற்றமுடைய வாலியை நோக்கி, எழுந்தருள்க எம்மையரே! என்னுடைய நல்வினையினால் நீர்குசலமுற்றெழுந்தருளினீர்; உம்மால் பகைவனும் கொலைசெய்யப்பட்டனன்; யான் அநாதனாயினேனென்று துயருற்றிருந்தேன்; எனக்கு நீர் ஒருவரே கருணைகூர்ந்த நாதனாகின்றீர்; இந்த நூறு சுலாகைகளையுடையதும், முழுமதிபோன்றதுமாகிய வெண்குடையினையும், வெண்சாமரங்களையும், உம்மிடத்திலே ஒப்பி

த்துவிட்டேன் ; உளமகிழ்ந் தேதற்றுக்கொண்டருள்க ; என்னையனே ! என்னுடைய இவ்விண்ணப்பத்தைக் கேட்டருள்க ; யான் உம்முடைய கட்டளையின்படி அந்தக்குகையை யொருவருஷம்வரையில் காத்துக்கொண்டு உம்மை எதிர்ப்பார்த்திருந்தேன் ; பின்பு, அதினின்றும் நுரையும் ரத்தமும் மிகுதியாகத் தோன்றிற்று ; அதைக்கண்டு உமக்கே தீமைநேர்ந்ததென்று எண்ணி மிகவுஞ் சோகக்கடலில் மூழ்கி யவ்வஸுரன் மீளவும் வந்து எம்மையுங் கொலைசெய்வானேனென்று அச்சங்கொண்டு மலையின் சிகரத்தினால் அக்குகையைமூடி யங்கிருந்து புறப்பட்டிங்கெய்தினேன் ; பின்பு, யான் தூயரங் கொண்டிருந்தமையின், மந்திரி முதலானேர்கள் யானிவ்வண்ணம் எண்ணி வந்ததை யறிந்துகொண்டு வலுவில் அபிஷேகஞ் செய்வித்தனர்கள். இதில் ஒருமொழியேனும் பொய்யுரைத்திலேன் ; ஆதலின், இதனை நண்குணர்ந்து இப்பிழையைப் பொறுத்தருள்க ; இனி நீரே அரசாகிப் பாதுகாக்கக்கடவீர். யான் முன்போலவே தொண்டுபூண்டிருப்பேன் ; நீர் இல்லாமையினால் யான் அரசுசெய்து வந்தேனேயன்றி, வேறில்லை ; வைப்பாகவிருந்த இந்த ராஜ்ஜியத்தைப் பகையின்றிப் பாதுகாத்து மீளவும் உமக்களிக்கின்றேன் ; ஆதலின், என்மீது சினமுறற்க ; இவ்வண்ணம் யான் கைகூப்பி வேண்டுகின்றேன் ; அரசற்ற ராஜ்ஜியம் செழிப்புறுதென்று அமைச்சர் முதலானேர் எனக்கு நிர்ப்பந்தம்பண்ணி அபிஷேகஞ்செய்வித்தனர்களேயன்றி, வேறில்லை ; என்றிவ்வண்ணமே உரைசெய்து வேண்டினேன் ; வாலி இதைக்கேட்டு அருள் செய்யாமல் எதிர்த்து அதட்டி யடா நீசா ! சீச்சீ உன்னை யிகழ்க ; என்று பலவாறுக வல்லுரையுரைத்து, காட்டார் நகரத்தோர்களையுங்கூட்டி என்னையுங்குறித்து அவர்களை நோக்கிக் கேளீர்கள் அன்பர்களே ! முன்பொரு நாள் இரவில் மாயாவியென்னும் அசுரன் கெடுமதிபூண்டு என்னைப் போர் செய்வதன்பொருட்டு அழைத்தனனே, அது உங்களெல்லீர்க்குந் தெரியுமன்றே ? அப்போது யான் அவனது வீரவாதத்தைக்கேட்டுப் பொறுமல் புறப்பட்டேன் ; அப்போது இந்தக் கொடிய சுக்கிரீவனும் என்பின்றொடர்ந்து வந்தனன் ; அந்த அஸுரன் எங்களிருவரையுங்கண்டு அச்சங்கொண்டோடினன் ; யாங்களும் அவனைத் தொடர்ந்தேகினேம் ; அந்த அசுரன் விரைவாக ஓடியொரு பெரிய குகைக்குள் புகுவதைக்கண்டு யான் இவனை நோக்கி, அடா தம்பி ! யான் வருமளவும் நீ இந்தக் குகையைக் காத்திரு ; யான் அந்த அஸுரனைக்கண்டு கொலைசெய்யாமல் மீளேனென்று உரைத்துவிட்டு இவன் இவ்வண்ணமேயிருப்பானென்றெண்ணி அந்தக் குகைக்குள் புகுந்து சென்றேன் ; பின்பு, அவனைத்தேடிப்பிடிப்பதற்கு ஒருவருஷமாகிவிட்டது. பின்பு, அவனைக்கண்டு இனத்தார் சுற்றத்தார்களுடன் எளிதில் கொலைசெய்துவிட்டேன் ; அப்போது அவனுடைய குருதி அக்குகையின் வாயில் வழியாகப்பெருகிற்று ; பின்பு, யான் அவ்வழியைத்தேடிவந்து வழியைக் கல்லினால் அடைத்திருப்பதைக்கண்டு, அடா சுக்கிரீவா ! என்று பலதடவை கெட்டியாகக்கூவியும் எதிர்மொழிகேளாமையினால், மிகவுந்துயரமடைந்து வெகுவாகக் கால்களினால் உதைத்து அக்கல்லைத்திறந்துகொ



ண்டு அந்த வழியினல் புறப்பட்டிங்கெய்தினேன் ; ஆதலின், இவனே ராஜ்ஜியத்தைத் தானே யாளவேண்டுமென்றெண்ணி, யான் இறக்கினும் இறக்குகவென்று கெடுமதிபூண்டு அக்குகையின் வாயிலை மூடிவிட்டு வந்தனன் ; இவன் கொடுமைபூண்டு அண்ணனென்னும் அன்பினையும் மறந்து இவ்வண்ணஞ் செய்தனன் ; என்றிவ்வண்ணமாக இகழ்ந்துரைத்து, மனையாளையும் அபகரித்துக்கொண்டு உடுத்த துணியுடன் வெருட்டியடித்தோட்டி விட்டனன். அவனல் வெருட்டப்பட்டே இப்பார்முழுவதும், காடு மலை யடங்கலும் திரிந்தலைந்தேன் ; பின்பு, வேறொருகாரணத்தினல் வாலி இவ்விடத்திற்கு வரக்கூடாமையை யறிந்து இந்த ரிசியமூகமலையைச்சேர்ந்துறைகின்றேன் ; கேட்டருளினீரோ எம் தோழரே ! யானிவ்வண்ணம் சிறிதும் பிழையின்றியே கடுந்துயரமடைந்தேன் ; இவ்வண்ணம் வாலிக்கும் எனக்கும் பகைநேர்ந்ததற்குக் காரணத்தை யுரைத்தேன் ; ஆதலின், இனி வாலியின் அச்சந்தீர்ந்து இன்புற்று அடியேன் மகிழ்ச்சியுற்று வாழுமாறு அருள் செய்க ; தேவரீர் அநாதரக்ஷகரும், ஆபத்பந்துவும், இனியதோழருமாகின்றீரல்லீரோ? என்று விண்ணப்பஞ்செய்து வேண்டினர். பெருமாளும் அம்மொழியைத் திருச்செவிசார்த்தி அஞ்சன்மின் என்று அபயமளித்து, அவரை நோக்கிக் கேளீர் மஹாராஜரே! குறி தப்பாமல் விரைவாகப் பாய்கின்ற என்னுடைய இக்கணைகள் கதிரவன்போல ஒளிகொண்டு வாலியின் மேலே விழப்போகின்றன ; மிகவும் தீச்செயல் பொருந்திய அந்த வாலி எனக்குக் கட்புலனுகும்வரையிலுமே பிழைத்திருப்பான் ; யான் துன்புற்றிருப்பதினலே நீரும் மிகவும் சோகக்கடலில் மூழ்கிக் கிடக்கின்றீரென அறிகின்றேன் ; உமது பாரியையைப் பறித்துக்கொண்ட அந்த வாலியை விரைவில் கொலைசெய்து உம்மைக் கரையேற்றுவேன் ; பின்பு, நீர் கோரிகையீடேறி இன்புற்று வாழ்வீரென்று புன்னகையுடன் அருளிச்செய்து தேற்றியருளினர். மஹாராஜரும் அம்மொழியைக்கேட்டு மிக மகிழ்ந்து பெருமாளை நோக்கி மொழியலுற்றனர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் பத்தாவது ஸர்க்கம்
மூற்றிற்று.

பதினேராவது ஸர்க்கம்.

மஹாராஜர் பெருமாளுடன் வாலிக்குநேர்ந்த மதங்கமாமுனியின் சாபத்தை யுரைசெய்து அவனுடைய தோள்வலியைப் புகழ்ப் பெருமாள் மஹாராஜர்க்கு விசுவாஸம் வருவதற்காக துந்துபியின் சரீரத்தை இடதுகால் கட்டைவிரலில் பத்துகாதவழிதூரம் தள்ளியருளியது.

அநந்தரம் மஹாராஜர் பெருமாள் அருளிச்செய்த திருவாய்மொழிகளைக் கேட்டதினல் பெருமகிழ்வுகொண்டு பெளருஷம்பெருகிப் புகழ்ந்து

மாயாவியென்பவன் துந்துபிக்கு உடன்பிறந்தோனும் ஒருவனுளன் ; இங்கே இவன் துந்துபியின் மகனெனவே தோற்றுகின்றது.

பூஜித்துப் பெருமானேநோக்கிக் கேட்டருளீர் அருளாழியம்மானே! தேவரீர் திருவுளஞ் சிறியருள்வீராகில், கொடிய கூரிய கணைகளினுல் மூவுலகங்களையும் ஊழிகாலையில் கொழுத்தெழுந்த செங்கதிரோன்போல எரித்தருள்வீரென்பதில் சிறிதும் ஐயமிலது. ஆயினும், வாலியினுடைய தீரத்தையும், வீரத்தையும், பௌருஷத்தையும், அடியேன் உரைக்கின்றேன் ; இதனைக் கேட்டருளிப் பின்பு, தக்கவண்ணஞ்செய்தருள்க ; வாலிதினந்தோறும் பின்மாலையிலெழுந்து, மேல்சமுத்திரத்திலிருந்து கீழ்சமுத்திரத்திற்குந் தென்சமுத்திரத்திலிருந்து வடசமுத்திரத்திற்கும் கதிரவன் உதிப்பதற்குமுன்னமே வருத்தமின்றிச் சுற்றிக்கொண்டு வருவான் ; மாமலையின் சிகரங்களைக் கையிலெடுத்துக்கொண்டு அம்மானை யாடுவான் ; காட்டிலுள்ள பற்பல முதிர்ந்த சிறந்த மரங்களையும், வேகத்தினுல் முறித்துச் சாய்ப்பான் ; ஒருக்கால் துந்துபியென்னும் அசுரன் கயிலைமலையின் சிகரம்போலப் பருத்துயர்ந்த காட்டெருமைக்கிடாவின் வேஷத்தை யெடுத்துக்கொண்டு ஆயிரம் யானை பலம் தனக்குளதென்றும் செருக்கினுல் மதமேறி வரம்பெற்றிருந்ததினுல், ஒருவரையும் மதிக்காமல் சமுத்திரராஜனைக்கிட்டிக் கேளீர் நீர்க்கடவுளே ! என்னுடன் போர் செய்யவருக; என்று அழைத்தனன். சமுத்திரராஜனும் எழுந்து அவனைநோக்கி, அடாதுந்துபி ! யான் இப்போது போர்செய்ய வல்லமை கொள்ளுகின்றிலேன்; உன்னுடன் போர்செய்ய வல்லவன் யாவனே, அவனை யுரைசெய்கின்றேன் கேளாய்; முக்கண்ணனுக்கு மாமனும், மாமலைகளுக்குக் கோமானும், பற்பல சுனை, காடு, ஆறுகளையுடையனுமாகிய வரையரையன் யிருக்கின்றனன் ; அவன் உன்னுடன் போர்செய்ய வல்லவன்; அங்குச் செல்லாயென்று உரைசெய்தனன். துந்துபி யதுகேட்டு சமுத்திரராஜன் தன்னைக்கண்டு அச்சங்கொண்டதாகநினைத்து, வில்லினின்றும் விடுக்கப்பட்டபாணம்போல விரைவாகப்பாய்ந்துவந்து இமயமலையைச் சேர்ந்து வெண்மை நிறமுள்ள சிறந்த சிகரங்களை முட்டிக் கீழ்தள்ளிச் சிங்கநாதஞ் செய்தனன். வரையரையனும் அதுகண்டு நீரற்று வெண்மை பொருந்திய மேகம்போன்ற இனியரூபந் தரித்துக்கொண்டு தனது சிகரத்தின்மீதில் வீற்றிருந்து துந்துபியை நோக்கி, அட்டா தானவா ! நீ யென்னையேன் துயருறுத்துகின்றனை; யான்போர்செய்யத் தக்கவனல்லேன்; மாமுனிவர்களெல்லோரும் என்னைச் சேர்ந்து தவம்புரிந்துக்கொண்டிருக்கின்றனர்கள்; ஆதலின், என்னை வருத்தற்க; என்று மொழிந்தனன். துந்துபி யதுகேட்டுச் சினத்திலுல் கண்சிவந்து அவனை நோக்கி, அடா மாமலை மன்னவா ! உன்னைப் போரில் சிறந்தவனென்று கூறுகின்றனர்களே ; என்னிடத்தில் அச்சங்கொண்டே இவ்வண்ணம் உரைக்கின்றனையோ ? ஆகில், என்னுடன் இப்போது யாவன் போர்செய்யவல்லனே, அவனை யுரைசெய்க; என்றுவினவினன். பர்வதராஜன் அதுகேட்டு அவனைநோக்கிக் கேளடா துந்துபி! வாலியென்னும் வானரராஜன் தேவேந்திரனுக்கு நிகரான பலபராக்கிரமமுண்டையவனாகிக் கிஷ்கிந்தையில் அரசு செய்து வருகின்றனன் ; அவன் உன்னுடன் போர்செய்ய மிகவும் வல்லவன், அவன் நமுசிக்கு வாஸவன்போல உனக்குத்

தக்கசூரன், உனக்குப்போர்செய்ய விருப்பமுளதாயின், விரைவாக அங்குச் செல்லுக; என்று உரைசெய்தனன். துந்துபி அதுகேட்டு உடனே புறப்பட்டுக் கிஷ்கிந்தாபுரிசேர்ந்து மழைகாலத்தில் நீருண்ட கொண்டல்போலப் பருத்துயர்ந்து மகிஷவேஷத்துடன் கோட்டைவாயலில்வந்து ரணபேரி முழங்கியதுபோலக்கூவினன்; அருகிலுள்ள மரங்களையும் முறித்தனன் பூமியையும் கால்களின் குரங்களினால் பிளந்தனன்; கோட்டைக்கதவினையும் யானைபோலக் கொம்புகளினால்மோதி முட்டிக் கொந்தினன்; அந்தப்புரத்தில் படுத்திருந்த வாலி யந்த ஒலியைக்கேட்டெழுந்து சினங்கொண்டு தாரை முதலிய பெண்களுடன் கூடி விண்மீன்களுடன் கூடிய சந்திரன் போலப்புறப்பட்டு வந்து துந்துபியை நோக்கி, அடா தானவா! எல்லா வானரங்களுக்கும் வாலி ராஜனாகியிருக்கையில், நீயேன் இவ்வண்ணம் கோட்டை வாயலில் கூவுகின்றனை; அடா உன்செய்தியையான் அறிவேன்; கப்சிப் என்னாமல் ஓடிவிட்டால் பிழைப்பாய்; என் உயிரை மாய்த்துக் கொள்ளுகின்றனை; உயிரைப் பாதுகாத்துக்கொள்ளடா; என்று மொழிந்தனன். துந்துபி யதுகேட்டுச் சினங்கொண்டு அவனை நோக்கி, அடா வாலி! நீ பெண்களின் நடுவிலிருந்து இவ்வண்ணம் மொழிவது உன்னுடைய வீரத்திற்குத் தக்கதன்று; என்னுடன் நீ இப்போது போர்செய்க; பின்பு உனது பலம் இத்தன்மையதென்று யான் அறிந்து கொள்வேன்; அன்றியில், இன்றிரவுமுழுதும் சினத்தையடக்கிப் பொறுத்திருக்கின்றேன்; அதற்குள் நீ இன்பங்களை யனுபவித்து, அன்பர்களை யணைந்துகொண்டு, கோரினவைகளை யளித்துவிட்டுத் தோழர்களையுங்கண்டு இந்நகரியையும் நன்கு கண்ணுற்று, உனக்கு நிகரான மற்றொருவனுக்குப் பட்டமும் கட்டுவித்து, மனைவிகளுடனும் புணர்ந்து வாழ்க; பின்பு, நாளையதினம் உதயத்தில் உன்னுடன் போர்ந்து உன் கொழுப்பை யடக்கிக் கொலை செய்து மகிழ்வேன்;—

యోహిమత్తంప్రమత్తంవా సుప్తంవారహితంపశుం।
హన్యాత్సభ్రూణహాలోకే త్వద్విధంమదమోహితం॥

யோஹிமத்தம்ப்ரமத்தம்வா ஸுப்தம்வாரஹிதம்பசும்
ஹந்யாத்ஸப்ரூணஹாலோகே த்வத்விதம்மதமோஹிதம்.

கள் முதலியவற்றைக் குடித்து மதங்கொண்டு மயங்கியிருப்பவனையும், ஊக்கமற்றுப் பராக்காயிருப்பவனையும், தூயில்கொண்டவனையும், ஆயுதமின்றித் தனித்திருப்பவனையும், உன்னைப்போலக் காமவேட்கைகொண்டு மயல்கொண்டவனையும், யாவனொருவன் கொலைசெய்வானோ, அவன் உலகினில் கருவையழித்த பாவத்தையும், வேதியரைக் கொலைசெய்த பாவத்தையும் அடைவானென்று தருமமுணர்ந்தோர் மொழிகின்றனர்களல்லரோ? என்று செருக்குற்று மொழிந்தனன். வாலியும் அம்மொழியைக்கேட்டு நகைத்துச் சினமுற்றுத் தாரை முதலிய பெண்களை யனுப்பிவிட்டு அவனை நோக்கி, அடடா மூடா! நான் மதங்கொண்டிருக்கேனென்றெண்ணற்க; நீ போரில் அச்சமற்றவனையின், எதிரே நின்று இப்போழ்தே போர்செய்

டா! என்னுடைய இந்த மதத்தையும், இந்தப்போர்க்கு வீரபானமென் றெண்ணடா! என்றிவ்வண்ணமுரைத்து தன்தந்தையான தேவேந்திரனல் அளிக்கப்பட்ட பொன்மயமான மாலையை தோள்களில் உயர எடுத்துக்கட் டிக்கொண்டு போர்செய்யச் சன்னத்தமாகி நின்றனன். உடனே யந்த துந் துபியும் போர்வதற் கெதிர்த்துவருகையில், வாலி யவனுடைய இரண்டு கொம்பு களையும் பிடித்துச் சுழற்றிக் கீழேயடித்துச் சிங்கநாதஞ்செய்து மகிழ்ந்தனன். அப்போது அந்த துந்துபியின் காதுகளினின்றும் குருதி தாரையாகப்பெருகி ற்று; பின்பு இருவரும் மிகச்சினங்கொண்டு கோரமாகச் சண்டை செய்கை யில், வாலி முஷ்டிகளினாலும், முழங்கால்களினாலும், குண்டுக்கல்லுகளினா லும், மரங்களினாலும் அடித்தனன். துந்துபியும் கொம்புகளினாலும், கால்க ளாலும் அடித்தனன். இவ்வண்ணம் போர்கையில், வாலிக்குக் காந்தியும், பலமும், பராக்கிரமமும் வளர்ந்தன; துந்துபிக்கு அவைமுறையே குறைந் தன; அப்போது வாலி துந்துபியைப் பிடித்துச் சுழற்றித் தரையில் அடித் தனன். உடனே துந்துபி தரையில்வீழ்ந்திறந்தனன். வாலியும் அப்போழ்து அந்த துந்துபியின் சரீரத்தை யெடுத்துக் கைகளால் சுழற்றியெறிகையில், அது ஒருகாதவழி தூரந்தாண்டித் தரையில் வீழ்ந்தது; வேகமாகத் தரை யில் அந்த உடல் வீழ்ந்தமையின், வாயினின்றும் இரத்தவெள்ளம்தோன் றிக் காற்றினால் மதங்கமாமுனியின் ஆசிரமமெங்கும் போய்ப்பாய்ந்தது; அங்கே வீற்றிருந்த மதங்கமாமுனிவர் அதைக்கண்டு மிகமுனிவுகொண்டு, யாவன் அவன் இவ்வண்ணம் செய்தவன்; அவன் என்மீதும் குருதிபடியு மாறு செய்தனனல்லனே! எவன் இவ்வண்ணம் மதியற்றவனும், மதிகெட் டவனும், மடமையுடையோனும், பெரியோர்களிடத்தில் பழக்கமற்றவனு மாகின்றனன்; என்று அருளிச்செய்து, ஆசிரமத்தின் புறத்திலெழுந்தருளி மாமலைபோல இறந்து வீழ்ந்துகிடந்த காட்டு மகிஷத்தைக்கண்டு ஞானக் கண்ணினால் இவ்வண்ணம் வாலியினால் செய்யப்பட்டதென்று அறிந்து அவன்மேல் மிகத்திருவுளஞ்சீறி அந்தவாலி இன்றுமுதலிவ்விடத்திற்கு வரக்கடவனல்லன்; மீறிவருவானாகில் உடனே இறக்கக்கடவன். அவன் இந்த துந்துபியின் உடலையெறிந்து மரக்கிளையும்முறித்து, சோணிதத்தை யும் இறைத்து, என்னாசிரமத்தைக் கெடுத்தனனல்லனே? அவன் சுற்றிலும் காதவழிதூரமுள்ள இந்த ஆசிரமத்தில் புகுவானாயின், உடனே யவன் இறந்து விடுவனென்பதில் சிறிதேதனும் ஐயமிலது; அவனுக்கு மித்திரர்க ளான வானரர்கள் யாவருளரோ அவரும் இவ்விடத்தில் வாழக்கடவரல் லர்; அவர்கள் என்னுடைய இம்மொழியைக்கேட்டு வேறிடந்தேடி போக க்கடவர்கள்; இதனைக்கேட்டும் இங்கிருப்பார்களாயின், அவர்கள்மேலும் சாபமிடுவேன்; யான் அருமையாகப் பிள்ளைகளைப்போலே வளர்த்துவந்த என்னுடைய இந்த ஆசிரமத்தை அந்தப்பாவி யழித்தனனே! இன்றுதினம் மாத்திரமே இங்குள்ள வாவியைச் சேர்ந்த வானரர்களுக்குக் கெடுவுகொடு த்திருக்கின்றேன்; நாளையதினம்முதல் யான் யாவனையாயினும் காண்டலை யின் அவன், அநேகம் ஆயிரம் வருஷங்கள் கல்லாகிக் கிடக்கக்கடவன்; என்று சாபமிட்டருளினர். அங்குள்ள வானரர்கள் எல்லோரும் அம்மொழி

யைக்கேட்டுணர்ந்து உடனே புறப்பட்டுக் கிஷ்கிந்தைக்கோடிச் சேர்ந்தனர் கள்: வாலியும் அவர்களைக்கண்டு வாரீர்கள் வானரர்களே! நீங்களெல்லீரும் மதங்கவனத்தில் வாழ்ந்து கொண்டிருந்தீர்களே, இப்பொழுது ஏன் இங்கேகூடி யோடிவருகின்றீர்கள்; அவ்விடத்தில் உங்களுக்கு நன்மை யுளதா? யாதேனுந் தீமை நேர்ந்ததோ? என்று விணவினன். பின்பு, அந்த வானரர்களும் வாலியை நோக்கிக் கேட்டருளீர் எம்மிறையே! தேவரீராலே எறியப்பட்ட துந்துபியின் குருதிபாய்ந்து மதங்கமாமுனியின் ஆசிரமமெங் கும் அழிந்தமையின், அவர்முனிந்து தேவரீரையும் தேவரீரைச்சேர்ந்த எங் களையும், இவ்வண்ணம் சாபமிட்டனரென்று நிகழ்ந்தவாறு மொழிந்தனர் கள். வாலியும் அம்மொழிகேட்டு விரைவாக வோடிவந்து அந்த மதங்கமா முனியைக்கண்டு வணங்கி யந்தச்சாபத்தைப் போக்கும்படிவேண்டினன். அம்முனிவர் அதுகேட்டும் இரங்காமல் அவனை இலக்ஷியஞ்செய்யாமல் நிரா கரித்துவிட்டு ஆசிரமத்துக்குள் புகுந்தனர். வாலி யதுகண்டு அச்சங் கொண்டு கிஷ்கிந்தை சேர்ந்து அன்றுமுதல் இந்த மதங்காசிரமத்துக்குள் புகுகின்றிலன். பின்பு, அவன் இங்கேவரக்கூடாதென்பதையறிந்து அச்சந் தீர்ந்து மந்திரிகளுடன் இன்புற்று வாழ்கின்றோன்; இதோ கண்டருளீர் அந்த துந்துபியின் எலும்புகளின் குவை காணப்படுகின்றது; இதுதான் வாலியினால் எறியப்பட்டு மலைபோல வீழ்ந்திருக்கின்றது; இதோ காணப் படுகின்ற இந்தப் பருத்துயர்ந்த ஏழு ஆச்சாமரங்களுமிருக்கின்றனவே? இவைகளுள் வாலி யொருமரத்தைப்பற்றி யசைப்பாலுகில், அது இலைகள் யாவுமுதிர்ந்து மொட்டையாகிவிடும்; ஸ்வாமி என் தோழரே! வாலியின் பலம் இவ்வண்ணம் ஒப்பற்றதா யிருக்கின்றதே. அத்தன்மையுகிய அந்த வாலியைப்போரில் தேவரீர்எவ்வண்ணங் கொலைசெய்தருள்வீரென்று மொழிந்தனர். மஹாராஜர் இவ்வண்ணம் மொழிந்ததை இளையபெருமாள் கேட்டருளி நகைத்து அவரைநோக்கி மஹாராஜரே! இப்பொழுது எந்தக் காரியத்தைச் செய்தால் என்னையர் வாலியைக் கொலைசெய்வாரென்று நீர் நம்புவீரோ, இதனை யுரைசெயீரென்று விணவியருளினர். மஹாராஜர் அது கேட்டு இவரை நோக்கிக்கேளீர் இளையபெருமாளே! இந்த ஏழு ஸால மரங்களையும் தனித்தனியம்சத்துப்பல்தடவைகளில் இலையுதிரச்செய்திருக் கின்றனன்; ஆதலின் பெருமாள் இவற்றுள் ஒன்றினை யொருகணையிலை அடித்துத்தள்ளினாலும், இந்த துந்துபியின் எலும்பையெடுத்து எண் ணூறுமுழந்தூரத்தில் எறிந்தருள்வாயினும், பெருமாள் வாலியைக்கொலை செய்து விடுவாரென்று யான் நம்பியச்சந்தீர்ந்து மகிழ்வேனென்று மொழி ந்து முகூர்த்தகாலஞ் சிந்தையுற்றிருந்து பின்பு, பெருமாளையும் நோக்கிக் கேட்டருளீர் தோழரே! அந்த வாலி மிகவும்சூரனும், சூரர்களைக்கொலை செய்பவனும், உண்மையாகப் புகழப்பட்ட பெருவலிமையுடையவனும், சிறந்த பல்முடையோனும், போரில் ஒருக்காலும் தோல்வியுறுதவனுமாகின்றனன்; அவனுடைய செயல்களில் ஒவ்வொன்றும் தேவர்களாலும், வியப்புறத்தக் கதாகின்றது; அவைகளை நினைந்தேயான் மிகவும் அச்சங்கொண்டு அவனு

டன் போர்செய்யாமல் இந்த ரிசியமூகமலையைச் சேர்ந்து வாழ்கின்றேன்; அந்த வாலி வெல்லவொண்ணுதவனெனவும், மிகச் சினமுடையவனெனவும், எண்ணியே இந்த இடத்தைவிட்டு நீங்காமலிருக்கின்றேன்; இங்கே வாழ்க்கையிலும், அச்சமுற்றே யாரைக்காணினும் அவனல் எவப்பட்டவர்களோ என்று ஐயமுற்று நடுங்குகின்றேன்; இந்த அனுமான் முதலான நன்மந்திரிகளினாலேதான் நான் இன்புற்றிருக்கின்றேன்; தேவரீரும் அடியேனுக்குச் சிறந்த தோழராக நேர்ந்தருளினீர்; தேவரீரும் என்னுடைய சோகத்தை போக்கியருளத் திருவுளங்கொண்டிருக்கின்றீரென்பதையும் அறிவேன், என்னுடைய தாபந்தீரும்படி இமயமலையைப்போலத் தேவரீரைத் தஞ்சமடைந்தேனதலின், இனி யெனக்குக் குறையில்லை யென்பதையும் அறிவேன்; ஆயினும், அந்தக்கொடிய வாலியின் பல பராக்கிரமங்களைக் கண்ணாரக் கண்டவனதலின், ஐயுறுகின்றேன்; தேவரீருடைய பல பராக்கிரமங்களை யடியேன் நேராகக் கண்டிலனல்லனே? ஆதலின், யான் இவ்வண்ணம் மொழிகின்றேனே யன்றி வேறில்லை; அடியேன் தேவரீரைப் பரீக்ஷை பார்க்கின்றேனென்றுவது, இகழ்கின்றேனென்றுவது, அச்சமுறுத்துகின்றேனென்றுவது எண்ணி யருளற்க; அந்த வாலியின் செயல்களினால் அடியேன் இவ்வண்ணம் விண்ணப்பம் செய்கின்றேன்; ராகவகுலதுரந்தரா! தேவரீருடைய திருவாய் மொழியும், தீரமும், ஆகாரமும், இம்மூன்றுமே நீறுபூத்த நெருப்புப்போல திவ்விய தேஜஸ்ஸு தேவரீரிடத்தில் உளது என்பதை யறிவிக்கின்றன; ஆதலின், வேறுவிதமாகத் திருவுளம் பற்றற்க; என்று விஜ்ஞாபனஞ் செய்தனர். இவ்வண்ணம் மஹாராஜர் செய்த விண்ணப்பத்தைப் பெருமாள் கேட்டருளிப் புன்னகைசெய்து மஹாராஜரை நோக்கிக்கேளீர் தோழரே! உமக்கு நம்முடைய திறமையில் நம்புதல் இல்லையாகில் நீர் நம்பும்படி செய்வோம் பாரீரென்று அருளிச்செய்து அங்கே கிடந்த அந்த துந்துபியின் காயத்தைச் தமது இடதுகால் கட்டை விரலினாலைசைத்துப் பத்துக்காதம் தூரம்போய்ச் செல்லுமாறு எறிந்தருளினர். மஹாராஜர் அதனைக்கண்டும் நம்புதலுறாமல் பெருமாளை நோக்கித் தோழரே! இந்த துந்துபியின் காயத்தை வாலி எறியுங்காலையில், இது புதியதாய் மாம்ஸங்களுடனும், இரத்தத்துடனும், தோலுடனும் சேர்ந்து ஈரமாய் மிகவும் பாரமாயிருந்தது; இப்போழ்தோவெனில், குருதி மாம்சங்களின்றி யுலர்ந்து எலும்புகள்மாத்திரம் மிகுந்து எளிதாகியிருக்கின்றது; அன்றியிலே வாலி இதனை எறியுங்காலையில் அவனுடன் நெடுநேரம் போர்செய் திளைத்திருந்தனன். தேவரீர் இப்போழ்திளைப்பின்றி மகிழ்ந்து எறிந்தருளினீர்; ஆதலின், இதனாலே தேவரீர் வாலியை விடச்சிறந்த பலமுடையீரென்று நம்புவதற்கிடமில்லை; மூன்று, இது ஈரமாயிருந்ததற்கும், இப்போது உலர்ந்திருப்பதற்கும், கனத்தில் வெகுவாக ஏற்றத்தாழ்வுண்டு; ஆதலின், தேவரீருடைய பலமே உயர்ந்ததோ, அவனுடைய பலமே யுயர்ந்ததோ, என்னும் ஐயம்அப்படியே யிருக்கின்றதேயன்றித் தீர்ந்திலது; ஆதலின், இந்த ஸாலமரங்களுள் ஒன்றினைத் தேவரீர் பிளந்தருள்வீராயின்,

அப்போது தேவரீருடைய பலம் விளங்கும்; ஆதலின் இந்தக் கோதண்டத்தில் கணையைத் தொடுத்து விட்டருள்க; தேவரீரால் எய்த இக்கணை இந்த மரத்தைப் பிளக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை; ஆதலின், தேவரீர் ஆலோசனை செய்யற்க; இவ்வண்ணம் அடியேனுடைய வேண்டுகோளைச் செய்தருள்க; ஒளிகளுள் கதிரவன்போலவும், மலைகளுள் இமயம்போலவும் நாலுகாலுடைய பசுக்களுள் சிங்கம்போலவும், வீரமுடைய மனிதர்களுள் தேவரீரே சிறந்தவராகின்றீர்; இவ்வண்ணம் அடியேன் பிரதிஜ்ஞைசெய்து பிரமாணம் பண்ணுகிவேன்; ஆதலின், இவ்வண்ணம் கிருபைசெய்தருள்க; என்று வேண்டினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதிநைராவது ஸர்க்கம்
முற்றிற்று.

பன்னிரண்டாவது ஸர்க்கம்.

பெருமாள் ஸப்தஸாலக்களையும் பிளந்து மஹாராஜரை வாலியுடன் போர் செய்வித்துப் பின்பு பேதம் தெரியாமையால் தோல்வியுற் றோடிவந்த அந்த மஹாராஜருக்கு அடையாளங்கட்டி மீளவும் போர்செய்யத் தூண்டியருளியது.

இவ்வண்ணம் மஹாராஜர் உரைசெய்த வாக்கியத்தைக்கேட்டருளிப் பெருமாள் கோதண்டத்தைத் திருக்கரத்திலேந்தி மஹாராஜர்க்கு நம்பிதண்டாவதன்பொருட்டு அதில் கூறிய கணை யொன்றினைத்தொடுத்து அந்த ஆச்சாமரங்களைக்குறித்தெய்தருளினர். அந்தக் கணை யுடனே பேரொலிகொண்டு புறப்பட்டு அம்மரங்களேழினையும் பிளந்துகொண்டு மலையின் தாழ்வரையையும் பிளந்து பாதாளத்திற்சென்று உடனே தரையைப் பிளந்துகொண்டு மேலெழுந்து பெருமாருடைய அம்பறுத்தூணியில் முன்போலச் சேர்ந்து திகழ்ந்தது; மஹாராஜர் இதனைக்கண்டு வியப்படைந்து மகிழ்ந்து கைகளைக்கூப்பிப் பெருமாளைத் திருவடிதொழுது பெருமாளை நோக்கி, ஸ்வாமி! ஸ்ரீசக்கரவர்த்தித்திருமகனான தேதாழரே!—

सप्तानपिसुरान्सर्वान् त्वंबाणैःपुरुषर्षभ ।
समर्थस्समरेहन्तुं किंपुनर्वालिनंप्रभो ॥
येनसप्तमहासाला गिरिर्भूमिश्चदारिताः ।
बाणेनैकेनकाकुत्स्थ स्तथातेकोरणाग्रतः ॥

सप्तानपिसुरान्सर्वान् त्वंबाणैःपुरुषर्षभ
समर्थस्समरेहन्तुं किंपुनर्वालिनंप्रभो.
येनसप्तमहासाला गिरिर्भूमिश्चदारिताः
बाणेनैकेनकाकुत्स्थ स्तथातेकोरणाग्रतः.

தேவரீர் ஓரே டாணத்திலுலே ஏழு ஆச்சாமரங்களையும், தாழ்வரையையும், பூமியையும் பிளந்து கணப்பொழுதில் மீளவும் அம்பறுத்தூணியில் அந்தக் கணையைச் சேர்க்குந் திறமுடையீராதலின், தேவரீர் இந்திரன் முதலாகியுள்ள தேவர்களெல்லோரையும் போரில் பாணங்களினுல் அடித்து வெற்றிகொள்ளவும் வல்லீர் எனின் இந்த வாலி யொருவனை வெற்றிகொள்ளீரோ? போர் முகத்தில் தேவரீர்க்கெதிராக நிற்பவன் யாவனுளன்; இப்போதுதான் யான் ஐயந்தீர்ந்தேன்; துன்பத்தையுந் துறந்தேன்; மிகவும் மகிழ்ந்தேன்; இந்திர வருணர்களுக்கு நிகராயுள்ள தேவரீரே அடியேனுக்குத் தோழராயினமையின், யாது குறையுளது; என்னை மகிழ்விப்பதன் பொருட்டு அந்த வாலியை இப்பொழுதே கொலை செய்தருள்க; அவன் எனக்கு உடன்பிறந்தோனுயினும், பகையே யல்லனே? இதன்பொருட்டுக் கைகூப்பி வேண்டுகின்றேன்; என்று மொழிந்தனர். பெருமானும் அம்மொழியைக்கேட்டருளி மஹாராஜனை மகிழ்ந்து தழுவிக்கொண்டு இளையபெருமானுடைய அபிப்பிராயத்தையும் அறிந்து மஹாராஜனைநோக்கித்தோழரே! இங்கிருந்து கிஷ்கிந்தைக்குச் செல்வோம் வாரீர்; நீர் முன்சென்று வாலியைப் போர்வதன் பொருட்டுக் கூவியழையீரென்று ஆருளிச்செய்தனர். உடனே எல்லோரும் விரைவாகக் கிஷ்கிந்தைசேர்ந்து அடர்ந்திருண்டு தழைத்துள்ள மரங்களில் மறைந்திருந்தனர். பின்பு, மஹாராஜர் மாத்திரம் முன்சென்று சிங்கநாதஞ்செய்து வாலியைப் போருக்கழைத்தனர். வானெங்கும் பிளக்கும்படி யொலித்த அந்த தொனியை வாலிகேட்டு மிகச்சினம் பூண்டு வெய்யோன் அஸ்தகிரியினின்றும் புறப்பட்டாற்போலே புறப்பட்டு மஹாராஜனைக்கிட்டிப் போர்ந்தனன். பின்பு, வாலி சுக்கிரீவர்களிருவருக்கும் பெருஞ்சண்டைவிளைந்து விண்ணிடையில் புதனுக்கும், அங்காரகனுக்கும்போலக் கோரமாக நடக்கையில், வச்சிரங்கள்போன்ற கரதலங்களினுலும், கைகுத்துகளினுலும், அவ்விருவரும் ஒருவர்கொருவர் அடித்துக்கொண்டு ஓயாமல் போர்கையில், பெருமாள் கடாக்ஷித்து அவ்விருவரும் ஒருவர்கொருவர் பேதமின்றியிருந்தமையின், இவன் வாலி இவர் மஹாராஜனென்று அடையாளந்தெரியால் அசுவினி தேவர்கள் போலவே இணையாகவிளங்கினமையின், தோழனுக்கே ஒருவேளை தீங்கு நேருமோ வென்று ஐயுற்றுக் கணைதொடுக்கத் திருவுளமுறுமல் மயங்கி நின்றருளினர்; அத்தருணத்தில் மஹாராஜர் வாலியினுல் அடிக்கபட்டுத் தம்மைப் பாதுகாத்தருளவல்ல பெருமானைக் காணுமல் அச்சங்கெண்டோடி. மீளவும் ரிசியமூகம் சேர்ந்து, மெய்முழுதுங் குருதிபடிந்து வாடிவதங்கி அடிகளினுல் மெய்முறிந்து வாலியினுல்வெருட்டப்பட்டு பெருங்காட்டினிடைசேர்ந்து ஒடுங்கியிருந்தனர். வாலியும் வெருட்டிக்கொண்டு வந்து மதங்கமாமுனியின் சாபத்தினுலே அவ்வனத்திடையில் செல்லாமல்மீண்டு மஹாராஜனை நோக்கி, அடா சுக்கிரீவா! இன்று தப்பி விட்டனை; மீளவும், என்கையில் அகப்படாம்ல் போவாயோ? ஆகுக; என்று மிதட்டிவிட்டுக் கிஷ்கிந்தை வந்து சேர்ந்தனன். பெருமானும் இளையபெருமானுடனும், சிறியதிருவடியுடனும், மீண்டெழுந்

தருளி மஹாராஜரிருக்குமிடஞ் சேர்ந்தருளினர். மஹாராஜரும் பெருமாளைக் கண்டு ஈணைத்திலேலை தலைகுனிந்து, தனையை நோக்கிக்கொண்டு ஸ்வாமி ! நீ போய் வாலியைச் சண்டைக்கழைபென்று அருளிச்செய்தனுப்பிவிட்டுத் தேவரீர் பராக்கிரமத்தை நன்கு விளங்கச்செய்தீர் ; தேவரீர் என்னை வாலியைக்கொண்டு கொல்வித்ததனுல் யாது செய்யப்பட்டதாயிற்று; அப்போதே நான் வாலியைக் கொலைசெய்யேனென்று உண்மையை யுரைத்துவிடுவீராயின், நான் இங்கிருந்து சென்றிரேனே; இவ்வண்ணம் என்னை வருத்தச்செய்வது தகுமோ? என்று தினமும் துயருங்கெண்டு மொழிந்தனர். பெருமாலும் இவர் இவ்வண்ணந் தீனங்கொண்டுரைசெய்ததைக் கேட்டருளி யவரை நோக்கி, மஹாராஜரே ! சினத்தைத்துறந்து யான் இப்போது வாலியைக் கொலைசெய்யாமல் வந்த காரணத்தை யுரைசெயக் கேளீர் ; அலங்காரத்தினலும், வேஷத்தினலும், உயரம் பருமன்களாலும், நடையினலும், கண்ட வொலியினலும், காந்தியினலும், கண்ணிணைக்கினலும், மொழிகளாலும், தோள்வலியினலும், நீரும் வாலியும் ஒரேரீதியாயிருந்தமையின், அடையாளந்தெரியாமல் உமக்கொருக்கால் தீங்குசேர்ந்துவிடப் போகிறதேயென்று அச்சங்கொண்டு குறிதப்பாமல் பாயவல்ல கூறியகணையைத் தொடுத்திலேன்; யான் அவஸரப்பட்டு பாணத்தை விட்டுவிடுவேனுகில் நம்மிருவருக்கும் முதல்மோசம்நேருமே ? யான் அறியாமையினல் பாணத்தை விடுதலும், அதனல் நீர் துன்புறுவீராயின், எல்லோரும் என்னை மடையனெனவும், இளைமையனெனவும் இகழ்ந்து பழிப்பார்களே !

దత్తాభయమధీనా మపాతకంమహచ్యతే.

தத்தாபயவதோநாம பாதகம்மஹதுச்யதே.

ஒருவனுக்கு அபயங்கொடுத்து நம்புவித்துப் பின்பு அவனைக் கொலை செய்வதென்பது, கொடும்பாவமென இகழ்ந்துரைக்கப்படுகின்றதன்றே ? அன்றியும், யானும், இலக்ஷ்மணனும், சீதையும், யாங்களெல்லோரும் உமக்கே அதீனமாகின்றேம். உம்மையே தஞ்சமடைந்திருக்கின்றோம். ஆதலின், நீரே எங்களுக்குத் தஞ்சம். அஞ்சற்க; பீளவுஞ்சென்று போர் செய்க; இனி முன்போல இகழற்க ; இந்த கூணைத்திலேதானே வாலியொரு கணையினல் அடிக்கப்பட்டுத் தரையில்வீழ்ந்து புரளக்காண்பீர் ; ஆனல், நீர் ஒரு அடையாளம் மாத்திரம் செய்துக்கொண்டு செல்க ; அதனல் யான் உம்மை யறிந்துகொண்டு வாலியைக் கொலைசெய்வேன் ; என்று அருளிச்செய்து தேற்றி இளையபெருமாளைக் கடாக்ஷித்து அடாலக்ஷ்மண ! இந்த மலர்ந்த கஜபுஷ்பியென்னுங் கொடியைப் பேர்த்து இந்த மஹாராஜருடைய கழுத்தில் அடையாளமாகக் கட்டுமென்று கட்டளையிட்டருளினர் ; உடனே இளையபெருமாள் அந்தமலையின் தாழ்வரையில் முளைத்து முழுதலும் மலர்கள் மலர்ந்த அந்தக் கொடியைக் கொணர்ந்து மஹாராஜர் கழுத்தில் கட்டினர்.

సత్యాశుభ్రేశ్మూ లత్యూక్ణసక్త్యూ ।
విపరీతజ్ఞవాకాశే సూర్యోనక్షత్రమాలయూ.॥

ஸதயாசுசுபேஸ்ரீமான் லதயாகண்டஸக்தயா
விபரீதஜ்ஞவாகாசே ஸூர்யோநக்ஷத்ரமால்யா.

அந்தமஹாராஜரும் இளையபெருமாளாலே தமது கண்டத்தில் கட்டப்பட்ட அந்தப் பூங்கொடிமாலையிலே கதிரவன் * தான் நடுவிலிருக்கையிலும், சுற்றிலும் ஒளிகுன்றுமல் விளங்கும் விண்மீன்களிலே சூழப்பட்டு விளங்கினை லெப்படியிருக்குமோ அப்படி விளங்கினார். இவ்வண்ணம் மஹாராஜர் அந்த மாலையிலல், பலாகைகளின் நிரையிலல், சந்தியின் சிகப்பிலல் சிவந்த மேகம்போல விளங்கிப் பெருமாளருளிச்செயலின்படி பெருமாளிளையபெமாளுடன் கூடி மகிழ்ந்து கிஷ்கிந்தையை நோக்கிப்புறப்பட்டனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பன்னிரண்டாவது ஸர்க்கம்
முற்றிற்று.

பதின்மூன்றாவது ஸர்க்கம்.

மஹாராஜர் கிஷ்கிந்தைக்குப் போகும்வழியில் ஸப்தஜனர்களினுடைய ஆசிரமத்தின் மகிமையைப் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்தது.

அநந்தரம் தர்மாத்துமாவான அந்தச்சக்கரவர்த்தித்திருமகனர் இளைய பெருமாளுடன் அந்த ரிசியமூகமலையினின்றும் வாலியினாலே பாதுகாக்கப்பட்ட கிஷ்கிந்தையை நோக்கி, எழுந்தருளத் திருவுளங்கொண்டு கோதண்டத்தையும் திருக்கரத்திலேந்திக் கூரிய கணைகளையும் கையிற்பிடித்து அம்பறுத்தூணிகளையுங் கட்டிக்கொண்டு புறப்பட்டருளினர். அப்போது முதலில் மஹாராஜரும், அவரைத்தொடர்ந்து இளையபெருமாளும், அவரைத்தொடர்ந்து பெருமாளும், அவரைத்தொடர்ந்து சிறியதிருவடியும், அவரைத்தொடர்ந்து நளனும், அவனைத்தொடர்ந்து நீலனும், அவனைத்தொடர்ந்து தாரனும் சென்றுகொண்டு மலர்ந்து தழைத்த பற்பல மரங்களையும், தெளி

---

*சிலர் சூரியன் என்பதற்கு விண்மீன்களினிடையில் விளங்குகிற சந்திரனென்று பொருளுரைத்து (தாராமத்ய கதச்சந்த்ரஸ்ஸூர்ய இத்யபிதீயதே) என்றுங்கண்டும் கற்பித்து வியாக்கியானம் செய்தனர்கள். அந்த வசனமும் இந்த கோசத்திலென்று குறித்திலர்; எக்குமக்கண்டிலோம்; வெய்யோனருகில் விண்மீன்கள் விளங்காவாதலின், இவ்வண்ணம் பொருள்கூறவேண்டுமென்பதே அவர்கள் கருத்து; ஆனால் அலங்காரசாஸ்திரத்தை யவர்கள ஆராய்ந்திருப்பார்களாயின், இவ்வண்ணம் கற்பனை செய்யார்கள்; ஆனல் அதற்கு என்னவழியெனின், அபூதோபமாலங்காரமென வறிக;—

ந்து குளிர்ந்து பெருகுகின்ற நதிகளையும், மலைகளையும், குகைகளையும், கற் பிளவுகளையும் வீடுபோன்ற கந்தரங்களையும், சிறந்த மலைச்சிகரங்களையும், சுனைகளையும், காவுறுகளையும், வைடூரியமணிகள்போல நின்மலமாயுள்ள இலை களையும், மலர்ந்த தாமரைகளையும்பொருந்தித் திகழும் மடுக்களையும், குளங் களையும், அன்னம், நாரை, ஸாரஸம், வஞ்சுளம், நீர்க்கோழி முதலிய நீர்ப் பறவைகள் ஒலித்தும், மெல்லிய இளம்புற்களை மேய்ந்து அச்சமின்றித் திக ழும் மான்கூட்டங்கள் நிறைந்தும் திகழுமிடங்களையும், வெண்மைநிறமுள்ள இரண்டு தந்தங்களையுடைய யானைகள் குளங்களிலிழிந்து கலக்கியும், கரை யை மோதியும் மகிழ்வதையும், சில யானைகள் மாமுகில்கள்போலவும், உருவங்கொண்டு திரியும் மாமலைகள்போலவும் மதமேறித் திரிவதையும், மற்றுமுள்ள பசுபக்ஷிகளையுங்கண்டு மகிழ்ந்துகொண்டே விரைவாகச் சென்றனர்கள். இவ்வண்ணம் யாவரும் செல்லுகையிலே அடர்ந்திருண்ட தொருகாட்டைப் பெருமாள் கண்ணுற்று மஹாராஜரை நோக்கித் தொழுதே! இந்தக் காடு கொண்டல்போலக் கறுத்திருண்டியர்ந்திருக்கின்றது; சுற்றி லும் மேகமாலைபோன்ற வாழைத்தோட்டங்களினால் சூழப்பட்டுளது; இஃது யாருடையது? என்னபெயருடையது? இதனை யறியவேண்டு மென மிக விருப்பங்கொண்டிருக்கின்றேன்; நன்றாக உரைசெய்கவென்று வினவியருளினர். மஹாராஜரும் அதுகேட்டு நடந்துகொண்டே பெருமானை நோக்கிக் கேட்டருளீர் தொழுதே! மிகவும் விசாலமுடையதும், இளைப்பைப் போக்குவதும், மாஞ்சோலை பூஞ்சோலைகள் அடர்ந்ததும், மதுரமான காய் கனி நீர்களையுடையதுமாகிய இந்த ஆசிரமம்ஸப்தஜனரென்னும் மாமோகி களினுடையது; எழுவர்களாதலாலே ஸப்தஜனரென்னப்பட்ட அம்முனி வர்கள் இவ்விடத்திலே தலைகீழாக நின்றும், நீரிலுறைந்தும், ஏழுதினத்திற் கொருதரம் காற்றைப் புசித்தும் தவஞ்செய்துகொண்டிருந்து அநேகமா யிரம் வருஷம் வாழ்ந்து கடையில் சரீரத்துடனே பொன்னுடு சேர்ந்தன ர்கள். இஃது அம்மாதவர்களின் ஆசிரமமாதலின், இந்திரன் முதலிய தேவ ர்களாலும் அழித்தற்கரிது; அதனுள்ளே பறவைகளும், மற்றுள்ள வனத்தி லுறையும் விலங்குகளும் டருகின்றில; யாரேனும் அறியாமல் அதனுள்ளே டருவாராயின், மீண்டு வாரார்கள்; அவ்விடத்திலே இப்போதும் நிருத்த கீத வாத்தியங்களின் தொனியும், மணியணிகளினொலியும் கேட்கப்படுகின்றன; திவ்வியகந்தத்தின் பரிமளமும் வீசுகின்றது; கார்ஹபத்தியம், ஆஹவநீயம், தக்ஷிணம் என்னும் முத்தீகளும் எரிகின்றன; அவற்றின் புகையும் மேலெ ழுகின்றது; அப்புகை மாடப்புறுக்களின் கண்டம்போன்ற நிறமுடை யதாகி மரங்களின் சிகரங்களைச் சூழ்ந்து பற்றுவதுபோலத் திகழ்கின்றது; அப்புகைகளினாலே சூழப்பட்ட இந்த மரங்களும் மஞ்சுலாவும் வைடூரிய மலைகள்போல விளங்குகின்றன; ஆதலின், அந்தப் பஞ்சஜனமாமுனிவர்க ளின்பொருட்டு இளையபெருமாளுடன் விரயம்பூண்டு கைகூப்பித் தலைவ ணங்கி வந்தனஞ்செய்தருள்க; அம்முனிவர்களின்பொருட்டு யார் வந்த னஞ்செய்கின்றனர்களோ, அவர்களுக்குச் சரீரத்திலே ஒரு நோயும் உண்

டாகாது; முன்புள்ள நோய்களும் தீர்ந்துவிடுமென்று கூறினர். பெருமாளும் இளையபெருமாளுடன் அம்மொழியைக்கேட்டு அம்முனிவர்களைக் குறித்துப் பிரணமஞ்செய்தருளினர். பின்பு, மஹாராஜர் முதலிய வாந்தர்களும் பிரணமஞ்செய்தனர்கள். உடனே யாவரும்புறப்பட்டு நெடுந்தூரம் நடந்து வாலியிருலே பாதுகாக்கப்பட்ட கிஷ்கிந்தையைக்கிட்டி சுற்றிலும் பார்த்து ஆயுதங்களைக்கையில் ஏந்திவாலியைக் கொலைசெய்யும்படி நிச்சயம்கொண்டு நின்றனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதின்மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

பதினன்காவது ஸர்க்கம்.

மஹாராஜர் பெருமாளால் ஏவப்பட்டு வாலியைப் போருக்கழைத்தது.

அந்தப் பெருமாள் இளையபெருமாள் வானரர்கள் எல்லாரும் கிஷ்கிந்தையைச்சேர்ந்து அடர்ந்த காட்டில் மறைந்துகொண்டிருக்கையில், மஹாராஜர் எங்கும் சுற்றிப்பார்த்து வாலிமீதுள்ள பகையினாலும், கோபத்தினாலும், ஆகாசம்கூட பிளங்கும்படியாகக் காற்றினால் மோதப்பட்ட காளமேகம் போலக் கர்ஜித்து, பாலசூரியன்போன்ற காந்தியும், மதமேறிய சிங்கம் போன்ற நடையும் கொண்டவராகியும், மனதில் அச்சம்கொண்டு பெருமாளைநோக்கி, தோழரே! வாலி என்னும் வலையினால் சூழப்பட்டும், பொன்னாற்செய்த தோரணகோபுரம் கட்டப்பட்டும், மணிமாடங்களினால் சூழப்பட்டுமுள்ள கிஷ்கிந்தையை வந்து சேர்ந்துவிட்டோம்; இனி வாலியைக் கொலைசெய்வேனென்று தேவரீரால்செய்யப்பட்ட பிரதிஞ்ஞையைப் பயனுள்ளதாகச் செய்தருளுகவென்று வேண்டினர். பெருமாள் அதுகேட்டு மஹாராஜரைநோக்கி, கேளீர் தோழரே! கஜபுஷ்டி என்னும் இந்தக்கொடி லக்ஷ்மணனுலே அடையாளமாக உமது கழுத்தில் கட்டப்பட்டிருக்கின்றமையின், இந்தக் கொடியினால் உற்பாதகாலத்தில் சூரியன் விண்மீன்களினால் சூழப்பட்டு விளங்குவதுபோல நீர் விளங்குகின்றீர்; ஆதலின், இப்பொழுது ஓரே பாணத்தினால் வாலியினிடத்திலுண்டாகிய உம்முடைய அச்சத்தையும், பகையையும் போக்கி விடுவேன்; உமக்கு அண்ணன் என்னப்பட்ட அந்தப் பகையாளியை என் கட்புலனுகச்செயீர்; அவன் என் கண்ணில் படுவானகில், உடனே இறந்து தரையில் விழுந்து துகள்படிந்து துடிப்படாமேயன்றி, மீளவும் பிழைத்துச் செல்லான்; பின்பு, யான் திறமை அற்றவனென்றுவது, கடமுற்றவனென்றுவது நினைக்கமாட்டீர்; ஆதலின், இப்பொழுது இகழற்க; உமக்கெதிராகவே சப்தசாலங்களையும் ஒரு கணையினால் பிளந்தேன்மேரு! அவ்வண்ணமே வாலியையும் இறந்தனனெனவே எண்ணுக:—

అనృతంనోక్తపూర్వమ్మే వీరకృచ్ఛేపితిష్ఠతా।
భగ్నలోభపరీతేన నచవక్ష్యేకథఞ్చన. ॥

அந்ருதம்நோக்தபூர்வம்மே வீரக்ருச்ரேபிதிஷ்டதா
தர்மலோபபரீதேந நசவக்ஷ்யேகதஞ்சந.

நான் எவ்வளவு சங்கடத்தை அடைந்திருக்கையிலும், பொய்மொழி மொழிந்திலேன்; தர்மத்திற்கஞ்சி இனிமேலும் பொய்யுரையேன்; ஆதலின், என் பிரதிஞ்ஞையை நிறைவேற்றுவேனேயன்றி, தவிரேன்; நீர் ஐயமுறற்க; நீர் விரைவாகச்சென்று வாலி உடனே புறப்பட்டுவரும்படியாக வீரவாதம் செய்க; வெற்றியுடையவனும், தோள்வலியிலுல் செருக்குற்றவனும், உம்மிடத்தில் தோல்வி யடையாதவனுமாதலின், உம்முடைய தொனியைக்கேட்டுப் பொறுமைகொண்டு வாலி உடனே எதிர்த்து வருவான்; பகைவர்களின் வீரவாதத்தைச் சூரர்கள் ஒருக்காலும் பொருத்திராரர்கள். அந்த வாலி தன்பலத்தை நன்கு அறிந்தவனுதலின், ஸ்திரீகளின் நடுவிலிருந்து உம்முடைய தொனியைக்கேட்டு உடனே எதிர்த்து வருவானென்று அருளிச்செய்தனர். மஹாராஜர் அதுகேட்டு மகிழ்ந்து ஆகாசம் பிளந்து இறும்படியாகக் கர்ஜனைசெய்கையில், நீதியற்ற இராஜனுடைய தோஷத்திலுல் அஞ்சுகின்ற குலமகளிர்கள்போலப் பசுக்கள் அச்சம்கொண்டு நடுங்கின; போரில் அடிபட்ட குதிரைகள்போல மான்களும் பயந்தோடின; நல்வினை தீர்ந்த விண்மீன்கள்போலப் பறவைகளும் தரையில் வீழ்ந்தன; மஹாராஜர் மறுபடியும் உற்சாகத்திலுல் சௌரியம் வளர்ந்து பெருங்காற்றினல் மேலெழுந்த திரைகளையுடைய பெருங்கடல்போலவும், வானமெங்கும் நிறைந்த நீருண்ட கொண்டல்போலவும் கர்ஜ்ஜனைசெய்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினன்காவது ஸர்க்கம்
முற்றிற்று.

பதினைந்தாவது ஸர்க்கம்.

வாலி மஹாராஜர் தொனியைக்கேட்டு தான் சினங்கொண்டு புறப்படுகையில், தன்னைத் தடுத்துப் பலவிதமாக இதமுரைத்த தாரையை நிராகரித்துப் புறப்பட்டது.

இவ்வண்ணம் மஹாராஜர் செய்த வீரவாதத்தை அந்தப்புரத்தில் தாரை முதலிய பெண்களுடன் கூடியிருந்த வாலிகேட்டு உடனே காமமும் மதமும் தணிந்து பொறுமைகொண்டு சினமூண்டு கேதுவிலுல் பிடிக்கப்பட்ட சூரியன்போல ஒளிகுன்றி, சினத்திலுல் எழுந்தெரிகின்ற தீபோலஜ்வலித்து, யானையிலுல் கலக்கி வேருடன் களைந்த தாமரைபொருந்திய பெருமடுப்போலக் கலங்கி விரைவாக எழுந்து அடிவைப்புக்களிலுல் தரை

யை பிளப்பவன்போலப் புறப்படுகையில், தாரை கண்டு அச்சமும் நடுக்க முங்கொண்டு அன்பினால் தழுவிக்கொண்டு அவனை நோக்கி, கேளீர் என் பிராணநாயகரே! ஆற்றுவெள்ளம்போல மேலெழுந்த இச்சினத்தை அணி ந்த மாலையைப்போலக் காலையில் துயிலுணர்ந்தபின் போக்கி யருள்க; இரவில் போர் செயற்க; இக்கக் சுக்கிரீவனுடன் பொழுது விடிந்த பின்பு போர் செய்க; இதனால் பகையாளிக்கு ஏற்றமும், தேவரீருக்கு ஒரு தாழ்வுமில்லை; இப்பொழுது ஆராயாமல் தேவரீர் விரைவாகச்செல்வது எனக்குத் தகுமெனத்தோற்றுது; இவ்வண்ணம் யான் தடுத்துரைப்பதற்குக் காரணத் தையும் கூறுகின்றேன் கேளீர்; அந்தச் சுக்கிரீவன் இன்றையதினமே வந்து உம்மைப் போருக்கழைத்து உம்முடன் போர்செய்து உம்மால் சிதற அடித்து வெருட்டப்பட்டு ஓடிவிட்டனனல்லனே? அவன் மறுபடியும் இப்பொழுதே வந்து உம்மைப் போருக்கழைப்பதென்பது, சந்தேகிப்பதற்கு இடமாகின்றது; அவனுடைய கர்ஜனையினால் மதமும், செருக்கும், மன உறுதியும், ஆடம்பரமும் மிக விளங்குகின்றன; இதற்குச் சிறந்த காரண மிருக்க வேண்டும்; இவன் இப்பொழுது சிறந்த சகாயத்துடன் வந்தனனென் யன்றி, சகாயமின்றி வந்தானென்று நான் நம்புகின்றிலேன்; அதினால்தான் அவன் இவ்வண்ணம் கர்ஜனைசெய்கின்றான். சுக்கிரீவன் இயல்பாகவே திறமையுடையவனும், புத்தியுடையவனுமாதலின், அவன் நன்கு பரீக்ஷை செய்யாமல் அற்பரைத் துணையாகக்கொண்டு இங்குவரமாட்டான்; அன்றி யிலே குமாரனை அங்கதன் ஒருசங்கதி கேள்வியுற்று என்னுடன் சொல்லி யிருக்கின்றான்; அதை உரைசெய்வேன் கேளீர்; அங்கதன் காடெங்கும் திரிகையில், அன்புள்ள சாரர்கள் அவனைக்கண்டு திரு அயோத்திக்கு அரசாயிருந்த தசரத சக்கரவர்த்தியாருக்குத் திருக்குமாரர்களும், செல்லிய முடையவர்களும், போரில் பிறரால் வெல்லவொண்ணுதவர்களும், இக்ஷ்வாகுகுலத்தில் பிறந்தவர்களும், ஸ்ரீராமலக்ஷ்மணர்களென்னும் திருநாமங்களுடையவர்களுமாகி இரண்டு குமாரர்கள் சிக்கிரீவனுடன் கட்புக்கொண்டு அவனுக்குப்பிரியம் செய்வதன்பொருட்டு வந்திருக்கின்றனர்களென்று உரைத்தனர்களென அங்கதன்வந்து சொன்னான். ஆதலின், உமது தம்பிக்கு துணையாகவந்த அந்த ஸ்ரீராமன் போரில் கொடுமைகொண்டு பிறரை வெல்லுந்திறமையுற்று ஊழிகாலத்தீபோல ஜ்வலிட்பவரும், நல்லோர்களுடைய தாபத்தைத்தீர்க்கத்தக்க தண்மைகொண்ட விருக்ஷம்போன்றவரும், துன்புற்றுத்தஞ்சமென அடைந்தவர்களுக்குச் சிறந்த தஞ்சமாகியவரும், கோருபவர்களுக்கு புகலிடமாகியவரும், புகழுக்குறைவிடமும், ஞானசொரூபியும், ஞானமுடையவரும், பிதிர்வாக்கியபரிபாலனம் செய்பவரும், பற்பல தர்துக்களுக்கு இமயமலைபோலப் பற்பல நற்குணங்களுக்குப் புதையலிடமாகியவரும் ஆகின்றனர்; ஆதலின் மகாத்துமாவும், வெல்லவொண்ணுதவரும், போரில் அளவிடத்தகாத தோள்வலியுற்றவருமாகிய அந்த ஸ்ரீராமனுடன் நீர் பகைகொள்வது தகுதியற்றது; ஆதலின், யான் ஒருவாக்கியம் உரைசெய்கின்றேன்; இகழாமலும், சினமுறாமலும் கேட்டு அவ்வண்ணமே செய்தருள்க;



இப்பொழுது சுக்கிரீவனுடன் போர்செய்யாமல் அன்புடன் அழைப்பித்து இளவரசுப்பட்டம் கட்டுவித்தருள்க; சிறந்த பலமுடைய அவனுடன் போர் செய்வது தகாது; பகையைத் தூரத்தில் துறந்து ஸ்ரீராமனுடன் தோழமை கொண்டு தம்பியிடத்தில் அன்புகூர்ந்திருப்பது இப்பொழுது உமக்குத் தகுமென எண்ணுகின்றேன்; சுக்கிரீவன் உமக்குத் தம்பியாதலால் அன்பு செய்யவேண்டியது தர்மமன்றே? அவன் அங்கிருக்கினும், இங்கிருக்கினும் எவ்விதத்திலும் அவன் தம்பியேயன்றே? சோதரனுக்கு நிகரான பந்து உலகத்தில் ஒருவனுமிலன்; ஆதலால், தானமானதிகளாலே அவனுக்கு மரியாதைசெய்தருளுக; அவனும் பகையைத்துறந்து உம்முடன் சேர்ந்து மகிழ்வான்; ஆதலின், இப்பொழுது சுக்கிரீவனுடன் நேசங்கொள்வதை விட உமக்கு வேறு உய்யும் வகையில்லை; எனக்கு இதம் செய்யவேண்டுமென்று உமக்கு இஷ்டமுள்ளதாயினும், யான் உமக்கு இதமே உரைப்பேனென்று நீர் அறிந்திருப்பீராயினும், என்னுடைய வேண்டுகோளுக்கு இரங்கி இவ்வண்ணம் செய்தருள்க; யான் உரைத்த இம்மொழி இதமெனவே நம்புக; நீர் சென்ற வழியே செல்லற்க; கோபத்தை நீக்குக; தேவேந்திரனுக்கு நிகரான பராக்கிரமத்தையுடைய கோசலராஜன் திருக்குமாரனை ஸ்ரீராமசந்திரனுடன் நட்புக்கொள்வது தகுமல்லது, பகை கொள்வது தகாது; என்று இவ்வகையாகத் தகைந்து வேண்டி இதமுரைத்தனள். வாலி அவ்வாக்கியத்தைக்கேட்டும் மாறுங்காலங் கிட்டினமையின், மதிகெட்டு அவ்வாக்கியத்தை நலமெனவுகந்து உடன்பட்டிலன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினைந்தாவது ஸர்க்கம் மூற்றிற்று.

பதினாறுவது ஸர்க்கம்.

வாலி தாரைக்குச் சமாதானமுரைத்துப் புறத்தில் வந்து மஹாராஜருடன் போர்செய்து பெருமாள் எய்த பாணத்தினால் அடிபட்டுத் தரையில் விழுந்தது.

இவ்வண்ணம்வேண்டி உரைசெய்த முழுமதிபோன்ற முகத்தையுடைய தாரையை வாலி மிதட்டி அவளை நோக்கி, அடி நாயகி! என்னுடன் கடும் பகைகொண்ட இந்த சுக்கிரீவன் வீரவாதம் செய்து என்னைப் போருக்கு அழைக்கையில், யான் அச்சம்கொண்டு அடங்கி அதனை எவ்வண்ணம் பொறுத்திருப்பேன்;—

అధర్షితానాంశూరాణాం సమరేష్వనివర్తినాం।
ధర్షణామర్షణంభీరు మరణాదతిరిచ్యతే॥

அதர்ஷிதானஞ்சூராணம் ஸமரேஷ்வநிவர்த்தினாம்
தர்ஷணமர்ஷணம்பீரு மரணாததிரிச்யதே.

அடி அச்சமுடையவளே! பிறரால் வெல்லப்படாமலும், போர்முகத்தில் பின் செல்லாமலுமிருக்கிற சூரர்களுக்குப் பகைவனுடைய வீரவாதத்தை கேட்டுப் பொறுத்திருப்பதென்பது, மரணமுறுவதிலும் சிறந்ததன்றே? ஆதலின், போர்வதின்பொருட்டுக் கூவுகின்ற சுக்கிரீவனுடைய கூக்குரலைக் கேட்டு யான் ஒருபொழுதும் பொறுத்திரேன்; ஸ்ரீராமர் என் விஷயத்தில் திங்குசெய்வாரென்று நீ துன்புறற்க; தர்மமுணர்ந்தவரும், நன்றி அறிந்தவருமாகிய அவர் என்விஷயத்தில் ஏன் தீமைசெய்வார்; ஆதலின் பெண்களுடன்கூடி நீ திரும்பிச் செல்லுக; என் மீளவும் பின்தொடர்ந்து வருகின்றனை; என்னிடத்தில் உனக்குள்ள அன்பும், ஆசையும் இதினால் நன்கு வெளியிடப்பட்டது; ஆதலின், நீ அச்சம் தீர்ந்து செல்லுக; யான் சுக்கிரீவனுடன் போர்ந்து அவனுடைய கொழுப்பை அடக்கி வருவேன்; அவனை உயிர்மாளக் கொலைசெய்யேன்; போரில் மரங்களாலும், குத்துகளாலும் என்னால் பீடிக்கப்பட்டு அவன் ஓடிவிடுவான்; அவன் என்னுடைய கர்வத்தையும், முயற்சியையும் பொறுத்திரான்; அடி அன்புடைய நாயகி! புத்தியினால் உதவிசெய்ததுபோதும், அன்பும் நன்கு வெளியிடப்பட்டது, என்னுடைய பிராணன்மேல் ஆணையிட்டுத் தடுக்கப்படுகின்றனை; ஆதலின், ஜயத்துடன் மீளுக; யான் போரில் அவனை வெற்றிகொண்டு மீளுவேனென்று உரைசெய்தனன். தாரை அதுகேட்டு மெதுவாக அழுதுகொண்டு வாலியைத்தழுவி வலம்செய்து மந்திரங்களினால் நலங்களை வேண்டி வாழ்த்திப் பெண்களுடன் சோகத்தினால் மயக்கமடைந்து அந்தப்புரம் சேர்ந்தனள்.

பின்பு, வாலியையும் சிறி நச்சரவம் போலப் பெருமூச்சிறிந்து புறத்தில்வந்து நாற்புறங்களிலும் சுற்றிப்பார்த்துப் பொன்னின்வண்ணம் பொருந்திய சுக்கிரீவன் ஓடிவருவதைக்கண்டு ஆடையை இறுக்கிக்கட்டி முஷ்டியை மேல் எடுத்துக்கொண்டு அவனுக்கெதிராக ஓடி அவனை நோக்கி, அடா சுக்கிரீவா! என்னுடைய இந்த குத்தானது உன் பிராணனை உண்டு செல்லப் போகின்றது; என்று உரைத்துக் கையை நோக்கினன். மஹாராஜனும் அதுகேட்டுச் சினம்கொண்டு அடடா! என்னுடைய இந்தக் குத்துதான் உன்னுயிரைப் பருகப்போகின்றது; என்று சொல்லிக்கொண்டிருக்கையிலே வாலியினால் குத்தப்பட்டு அருவியைப்பொருக்குகின்ற மாமலைபோலக் குருதியைப் பெருக்கிச்சினமதிகரித்து, ஆச்சாமரத்தை வேருடன்களைந்து வேகமாகச்சுழற்றி அடித்தனன். வாலியும் அதனால் அடிபட்டு வச்சிராயுதத்தினால் அடிபட்ட மாமலைபோலத்திகைத்து நின்று கடலில் மிகவும் பாரத்தையுடைய ஓடம்போல அழுந்தினன். இவ்வண்ணம் சிறந்த பலமுடையவர்களும், கருடனுக்கு நிகரான வேகமுடையவர்களும், அச்சமுறத்தக்க சரீரமுடையவர்களும், சந்திரசூரியரைப்போலக் காந்தியையுடையவர்களுமாகிய இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் அடித்துக்கொண்டும், சமயம் பார்த்துக்கொண்டும் பொருந்தனர்கள். அப்பொழுது முறையே வாலிபலத்தினால் உயர்ந்தும், மஹாராஜர் தாழ்ந்தும் ஆகுகையில், மஹாராஜர் வாலியினால் அடிபட்டு சினமதிகரித்து மரங்களினாலும், கிளைகளினாலும்,

மலைச்சிகரங்களினுலும், வச்சிரம்போல் கொடிய நகங்களாலும், குத்துகளாலும்; முழங்கால்களாலும், கால்களினுலும், கைகளினுலும் பலமுறை வாலியைச் சிதற அடித்தனர். இவ்வண்ணம் இருவரும் ஓயாமல் விருத்திரவாசவர்கள்போலப் போர்செய்து குருதிதோய்ந்து மேகங்கள்போலக் கர்ச்சனை செய்து அடர்கையில், மஹாராஜர் இளைத்து நாற்றிசைகளையும் அடிக்கடி நோக்கிக்கொண்டு வருந்துவதைப் பெருமாள் கடாகூடித்து வாலியைக்கொலை செய்ய சங்கல்பித்து, நச்சரவம்போன்ற ஓர்கணையைக் கோதண்டத்தில் தொடுத்து காலாந்தகன் காலசக்கிரத்தைப்போல அக்கோதண்டத்தை யிழுத்தருளுகையில், நாணின் ஒலியினுல் சிறந்த பறவைகளும், விலங்குகளும் ஊழிகாலத்தில்போல அச்சமும், மோகமும்கொண்டு ஓடின; உடனே அக்கணை பெருமாளால் எய்யப்பட்டு வச்சிரம்போல ஒலித்துப் பேரிடிபோல ஜ்வலித்து வாலியின் மார்பில் பாய்ந்தது. உடனே மதங்கொண்ட வாலியும், அதனல் அடிபட்டு ஆசுவயுஜமாசத்தில் பூர்ணிமைதிதியில் உயர்த்திக் கட்டப்பட்ட இந்திரதுவஜம்போலச்சாய்ந்து தரையில்விழுந்து மோகமடைந்தனன். இவ்வண்ணம் புருஷோத்தமரான ஸ்ரீராமசந்திரன் ஊழிகால யமன் போன்றதும், பொன்கட்டளைமந்தரும், பகைவரைகொல்வதுமாகிய அந்தச்சிறந்த பாணத்தைச் சிவன் முகத்து நின்றும் புகையுடன் பயின்ற தீயைப்போல விடுத்துத் திகழ்ந்தனர். அந்த இந்திரன் குமாரனை வாலியும் அக்கணையினல் அடிபட்டுக் குருதிபடிந்து மலர்ந்த அசோகமரம் தீயினல் எரிக்கப்பட்டது போலவும், இந்திரதுவசம் சாய்க்கப்பட்டது போலவும் தரையில் விழுந்து மூர்ச்சையடைந்து கிடந்தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினுறுவது ஸர்க்கம்
முற்றிற்று.

பதினேழாவது ஸர்க்கம்.

வாலி பெருமாளை இகழ்ந்தது.

இவ்வண்ணம் பெருமாள் எய்தகணையினல் அடிபட்ட வாலி வேரில் வெட்டுண்டமரம் போலவும், கயிற்றைத்தளர்த்திய இந்திரன் துவஜம்போலவும் தரையில் விழுந்துகிடக்கையில், இரவில் சந்திரனற்ற ஆகாசம்போல அப்பூதலம் திகழ்ந்திலது; அவன் அடிபட்டுத் தரையில் விழுந்திருக்கையிலும், இந்திரனலடிக்கப்பட்ட வயிரமிழைத்த பொன்னணிமாலையின் மகிமையினலே அவனுடைய காந்தியும் அழிந்திலது; பலபராக்கிரமங்களும் குறைந்திலது; உயிரும் மாய்ந்திலது; வீரனான அவ்வாலி அம்மாலையினலே சந்தியின் செம்மையினலே சூழப்பட்ட மேகம்போல விளங்கினமையின், அவனுடைய காந்தி அம்மாலையிலும், மெய்யிலும், ஸ்ரீராமபாணத்திலுமாக மூவகையாகப் பிரிந்து தோன்றிற்று; வாலிமிகக்கொடியனுயினும் ஸ்ரீராம

னல் விடுக்கப்பட்டபாணம் அவனுக்கு நற்கதியை உண்டுபண்ணிற்று; இவ் வண்ணம் அடிபட்டு தரையில் வீழ்ந்து தீ அடங்கிய நெருப்பு போல்வும் நல்வினை தீர்ந்தவுடன் விண்ணுலகினின்றும் நழுவிவிழுந்த யயாதிபோலவும் ஊழிகாலத்தில் தரையில் வீழ்ந்த சூரியன்போலவும் திகழ்பவனும், மிகவும் சூரரான பெருமாளைக்கணிசித்துப் பார்ப்பவனும், மகேந்திர மலைபோல அசைக்கவொண்ணுதவனும், மகேந்திரன்போல வெல்லவொண்ணுதவனும், பொன்மாலை அணிந்தவனும், சிங்கத்திற்கு நிகரான மார்பை உடையவனும், நீண்டிருண்ட புஜங்களை யுடையவனும் ஆகிய அந்த வாலியைப் பெருமாள் இளையபெருமாளுடன் கடாகூடித்து, அருகில் எழுந்தருளினர். வாலியும் மோகந்தெளிந்து பெருமாளையும் இளையபெருமாளையும் பார்த்து இனிய துயம், கொடியதும், தர்மமுற்றதுமாக மொழிந்திகழலுற்றனன். கேட்டரு ளீர் ஸ்ரீராமசந்திரரே! தேவரீர் தசரதச்சக்கிரவர்த்திக்குத் திருக்குமாரரும், தர்மமுடையோரென்று யாவராலும் புகழப்பட்டவரும், இனியருபமுடை யவரும், நற்குலத்தில் பிறந்தவரும், சத்துவகுணமுடையவரும், சிறந்த பல பராக்கிரமங்களை யுடையவருமாகியும் யான் பராங்முகனைத் தம்பியுடன் போர்செய்து கொண்டிருக்கையில், தேவரீர் இவ்வண்ணம் கூரியகணை மார்பில்நாட்டி என்னை வருத்துவது தர்மமா? சூரருக்குக் கருமமா? இதனல் தேவரீருக்கு யாதுபயனுளது? தேவரீர் அருளுடையீரெனவும், உயிர் களுக்கிதஞ் செய்பவரெனவும், பிறரைத் துயருறச்செய்யாப் பண்புடையீ ரெனவும், காலமறிந்தவரெனவும், மேற்கொண்ட விருதத்தைத்தவறுமல் முடிப்பவரெனவும், தேவரீருடைய குணங்களை யாவரும் புகழ்கின்றனர் களே!—

தமஶ்சமஃக்ஷமாதர்மோ த்ருதிஸ்ஸத்யம்பராக்ரமஃ।
பார்த்திவானாம்குணாராஜன் தண்டஶ்சாப்யபராதிஷு ॥

தமச்சமஃக்ஷமாதர்மோ த்ருதிஸ்ஸத்யம்பராக்ரமஃ
பார்த்திவாநாம்குணாராஜன் தண்டச்சாப்யபராதிஷு.

அரசர்களுக்கு உட்புலனை யடக்குவதும், ஐம்புலன்களையும் வெல்லு வதும், அறிவிலர் செய்தபிழையைப் பொறுப்பதும், தருமம் தவறுமலிருப் பதும், சத்தியம் தவறுமையும், எதிர்த்தவர்களைப் போர்செய்து வெல்லுவ தும், பிழைசெய்தவரைத் தண்டிப்பதும், இயல்பாயுள்ள குணங்களல்லவோ? அக்குணங்கள் யாவும் தேவரீரிடத்தில் குடிகொண்டிருப்பதையும் நம்பியே யான் தாரையினல் தடைசெய்யப்பட்டும் அவளை நிராகரித்து வந்து சுக்கி ரீவனுடன் போர்செய்தேன்; தேவரீரை நான் காணுமலிருக்கையிலேயும், பிற ருடன் போர்செய்துகொண்டு ஊக்கமற்றிருக்கையிலேயும், என்மீது தேவரீர் கணையை எய்யீரென்றே எண்ணியிருந்தேனே யல்லது, இவ்வண்ணம் மன தில் கெடுமதிபூண்டும், புறத்தில் தருமவேஷங்கொண்டும், புல்லெழுந்த பாழ்ங்கிணறுபோலவும், நீறுமூடிய நெருப்புபோலவும் இவ்வண்ணம் தீமை செய்வீரென்று நான் நினைத்திலேன்; தேவரீருடைய நாட்டிலாவது நகரத்தி

லாவது ஒருக்காலும் யாருக்கும் தீங்குசெய்திலேன் ; தேவரீரையும் இகழ்ந்திலேன் ; பிழையற்ற என்னைஎன் இவ்வண்ணம் கொலைசெய்தீர் ; காய்கனி கிழங்குகளைப்புசித்துக் காட்டில் திரிந்துகொண்டிருக்கும் வானரனை நான் தேவரீரையும் எதிர்த்திலேன் ; பிறருடனும் போர்ந்துகொண்டிருந்தேன் ; இத்தருணத்தில் என்னைக்கொலைசெய்தல் தகுமோ ? அன்றியில் பற்பல நூல்களையும் கசடறக்கற்று, தர்மவிஷத்தையும் மேற்கொண்டு, இவ்வண்ணம் உம்மைப்போல் எவன்தான் தீச்செயல்புரிவான் ? ஸ்ரீராமா ! நற்குலத்தில் பிறந்து, தர்மமுடையோனெனவும் புகழ்பெற்று, கொடுமைகொண்ட நீசரைன் இனியவேஷங்கொண்டு அலைகின்றீர் ; இனியமொழிமொழிதல், பொருளளித்தல், அருளுடைமை, தருமம், சத்தியம், தீரம், தோள்வலி, பிழைசெய்தவரைத் தண்டித்தல் என்னும் இக்குணங்கள் அரசர்களுக்கு முக்கியமானவை அல்லவோ ? அன்றியிலே யான் காட்டில் அலைபவன், நீர் காட்டில் உறைபவர் ; யான் காய்கனி உண்பவன், நீர் அறுசுவை உண்பவர் ; யான் வானரன், நீர் நரர்கோமான் ; இவ்வண்ணம் தேவரீர்க்கும் எனக்கும் ஏற்றத் தாழ்வு மிகவுமுளது ; உலகத்தில் ஒருவர்க்கொருவர் பகை நேருவதற்கு மண், பொன், பொருள்களுள் ஏதேனும் ஒன்று காரணமாகுமென்பர் ; என்னுடன் நீர் பகைகொள்வதற்கு யாது காரணமுளது ; யான் உம்மனுமம் கனிகளில் உமக்குவிருப்பமுளதோ ? நீதியும் அருளும் நல்லோர்தரின் தருமங்கள் ; நீதியின்மையும் கொடுமையும் அற்பராஜரின் தர்மம் ; இவ்வண்ணம் ராஜதர்மம் ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி, தனித்தனி விளங்குமேயன்றி, அவர்கள் ஒவ்வொருவேளை ஒவ்வொருவிதமாக மனம்போனபடி செய்யார்கள். தேவரீரோவெனில், காமத்தை முதன்மையாகவுடையவரும், சினம்பூண்டவரும், உறுதியற்றவரும், ராஜநீதியற்றவரும், காரணமின்றிக் கணைதொடுப்பவருமாகின்றீர் ; தேவரீர்க்குத் தர்மத்திலும் ஆவலிலது ; நீர் ஸ்ரீராஜ்யமிருந்தும், நிலைகெட்டு ஐம்பூலன்களினால் அலைக்கப்படுகின்றீர் ; காகுத்தா ! நீர் இவ்வண்ணம் நீதி தப்பி என்னை அடித்து விட்டு நாடு சேர்ந்தபின் சூரர்கள் விரைவுகையில், அவர்களுக்கு யாது பதில் உரைசெய்வீர் ;—

राजहा ब्रह्महा गोघ्नः शैलः प्राणिवधे रतः।
नास्तिकः पारिवेत्ताच सर्वेनिरयगामिनः॥
सूचकश्चैकदर्शश्च मित्रघ्नो गुरुतल्पगः।
लोकंपापात्मनाप्नोतेयच्चान्येनात्मसंभवम्॥

ராஜஹாப்ரஹ்மஹாகோக்நச் சைலஃப்ராணிவதேரதஃ।
நாஸ்திகஃபரிவேத்தாச ஸர்வேநிரயகாமிநஃ॥
ஸூசகச்சைகதர்யச்ச மித்ரக்நோகுருதல்பகஃ।
லோகம்பாபாத்மநாமேதே கச்சந்தேநாத்ரஸம்சயஃ॥

வேந்தனைக் கொலைசெய்தவனும், வேதியனைக் கொலைசெய்தவனும், பசுவைக் கொன்றவனும், பிறர் பொருளைப் பறித்தவனும், உயிர்களைக் கொலைசெய்பவனும், வேதத்தையும், தெய்வத்தையும், பெரியோர்களையும் பழிப்

பவனும், தமயன் விவாஹஞ்செய்து கொள்ளாமலிருக்கையில், தான் விவாஹம் செய்துகொள்பவனும், கோரூரைப்பவனும், செல்வமிருந்தும் கொடை செய்யாதலோபியும், மிகக் கொடிய நரகிலழுந்தி நெடுங்காலம் வருந்துவர்கள். அன்றியும், என் தோலும் உடுப்பதற்குரியதன்று; என் எலும்புகளும், மயிர்களும், ஒரு காரியத்திற்கும் உரியனவல்ல; என்னுடைய மாம்ஸமும் உண்ணத்தக்கதன்று;—

పఞ్చపఞ్చనఖాభక్ష్యా బ్రహ్మక్షత్రేణరాఘవ।
శల్యకఃశ్వావిధోగోధా శశఃకూర్మశ్చపఞ్చమః॥

பஞ்சபஞ்சநகாபக்ஷ்யா ப்ரஹ்மக்ஷத்ரேணராகவ।
சல்யகஃச்வாவிதோகோதா சசஃகூர்மச்சபஞ்சமஃ॥

ஐந்து நகங்களையுடைய ஐந்துக்களுள் சல்யகமென்னும் சுவாவித்தென்னும் பன்றிகளும், மூசல், ஆமை, உடும்பு ஆகிய இவ்வைந்து ஐந்துக்களே அரசர்கள் புசிக்கத்தக்கவைகளல்லவோ? தர்மமுணர்ந்தோர் குரங்காகிய என்னுடைய தோல்களையும், எலும்புகளையும், தொடவும் தொடார்கள்; என் மாமிசத்தையும் புசிக்கார்கள்; இவ்வண்ணம் ஒன்றுக்கும் உபயோகமற்ற ஐந்து நகமுடைய என்னை ஏன் அடித்தீர்; தாரை யான் வருகையில் என்னைத்தடுத்துப் பலவாராகவேண்டினள். யான் அறியாமையால் அவளை மீறி இங்கெய்தி உம்மால் அடிக்கப்பட்டேன்; கற்புடைய குலமகளிற்கு தார்த்தனை கணவன்போல மிகச்சிறந்த இப்பார்மகளிற்கு நீர்தக்கவேந்தரல்லீர்; பிறர் அறியாவண்ணம் தீமை செய்பவரும், பிறரை வருத்தியே பிழைப்பவரும், அற்பரும், பொய்யரும், கபடமுடையவருமாகிய நீர் தசரத மஹாராஜாவினிடத்தில் எவ்வண்ணம் தோன்றினீர்; அறுக்கப்பட்ட நற்செயலென்னும் கட்டுத்தறியையுடையதும், தர்மவழியைக் கடந்து நடப்பதும், தர்மமென்னும் அங்குசத்தை மீறியதுமாகிய ராமன் என்னும் மதயானை முனிவினல் அனியாயமாகக் கொலைசெய்யப்பட்டேனே! தீமை தருவதும், கதியற்றதும், இகழப்பட்டதுமாகிய இத்தீச்செயலைப் புரிந்து பெரியோர்களால் இகழப்படீரோ? ஊக்கமுற்றிருந்த என்மீது வெளியிட்ட இத்தோள்வலியைப் பெண்டாட்டியைப் பறித்துக்கொண்டோடிவிட்ட பகைவர்கள்மேல் செல்லவிடக்காணேனே? இராஜகுமாரரே! எனக்கெதிரில் நின்று என்னுடன் போர்செய்வீராயின், இப்பொழுதே நீர் யமதர்மராஜனைக் காணுமாறு செய்துவிட்டு இருப்பேனே? அவ்வண்ணமன்றி, பதுங்கிடந்து மறைந்திருந்ததினலென்றோ, நான் உம்மால் மதத்தினல் மோகங்கொண்டு மயங்கிக்கிடக்குமானிடன் மதயானையினல்போல கொலைசெய்யப்பட்டேன்; நீர் சுக்கிரீவனைத்தேடி வந்த விஷயத்தை முன்னமே எனக்கு அறிவித்திருப்பீராகில், அன்றுதினமே பிராட்டியைத்தேடி எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து அளித்திருப்பேன்; இராவணன் பொருட்டன்றோ, சுக்கிரீவனுடன் தோழமைகொண்டு என்னைக்கொலைசெய்தீர்; அச்செய்தியை என்னுடன் உரைத்திருப்பீராகில், அந்த இராவணன் தலைத்தில் கை

கொடித்து நெட்டிதள்ளிக் கொணர்ந்தாவது, போரில் கொலைசெய்தாவது, உம்மை மகிழ்வித்திருப்பேன்; இவன் பிராட்டியைக் கடலிடையிலாவது, பாதாளத்திலாவது, விண்ணுலகிலாவது மறைத்திருந்தாலும் தேவரீருடைய கட்டளையினால் மதுகைடபாசுரர்களிரால் பாதாளத்தில் தகையப்பட்ட அசுவதரி என்னும் வேதத்தை ஸ்ரீமகாவிஷ்ணு அயகிரீவ அவதாரம்செய்து கொணர்ந்ததுபோல யானும் பிராட்டியாரைக் கொணர்ந்து அளித்திருப் பேன்; சுக்கிரீவன் யான் இறந்தபின் என்னுடைய ராஜியத்தைப் பெறுவ தென்பது தகுதியே? தேவரீர் என்னைத் தருமமின்றி இவ்வண்ணம் கொலை செய்ததென்பது மாத்திரம் மிகவும் தகுதியற்றது; உலகினில் பிறந்தவன் இறப்பதென்பது இயல்பே; நீர் இவ்வண்ணம் மறைந்து அடித்தது தகா தது; இதற்குத்தக்க பதிலுளதாயின் உரைசெய்யீர்; என்று இவ்வண்ணம் உரைசெய்து ஸ்ரீராமபாணம் மார்பில் நன்றுக நாட்டியிருக்கின்றமையின், வருந்தி வாய் உலர்ந்து பெருமானைப் பார்த்துக்கொண்டே பேசாமலிருந் தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினேழாவது ஸர்க்கம்.

முற்றிற்று.

பதினெட்டாவது ஸர்க்கம்.

பெருமாள் வாலிக்கு சமாதானம் அருளிச்செய்ததும், வாலி அபராதக்ஷாபனம் செய்துக்கொண்டதும்.

இவ்வண்ணம் இனிமையாகவும், அறம்பொருளுடையதாகவும், வாலி உரைசெய்த வாக்கியத்தைப் பெருமாள் கேட்டருளியும், ஒளியிழந்த சூரி யன்போலவும், மழைபொழிந்து நீரற்ற மேகம்போலவும், எரிக்தணிந்த அக் கினிபோலவும், தரையில் வீழ்ந்திருக்கின்ற அவ்வாலியை நோக்கி, தர்மார்த் தசகிதமாக அருளிச்செய்யலுற்றனர். அடா வாலி! அறம் பொருள் இன் பங்களையும், லோகாசாரத்தையும், நன்கறியாமல் இளமையினால் நீ நம்மை இவ்வண்ணம் ஏன் இகழ்கின்றனை; புத்தியுடையோர்களும் ஞானத்தி னலும், வயதினாலும், மூத்தோர்களும் ஆகிய ஆசிரர்களுடன் பழகாமலும், அவர்களைக் கேளாமலும், குரங்கின் தன்மையினால் நீ நம்மை நோக்கி, இவ் வண்ணம் உரைசெய்வது தகுமா? காடு கடல் மலைகளுடன் கூடிய இப்பார் முழுதும் இக்ஷ்வாகுகுலத்தில் பிறந்த எமக்குரியதேயாதலின், இதிலுள்ள துஷ்டர்களைச் சிக்ஷிப்பதும், சிஷ்டர்களை ரக்ஷிப்பதும், நமது தொழிலே யன்றே? இப்பொழுது இந்தபூமியை தர்மமுணர்ந்தவனும், சத்தியம் தவ றுதவனும், கபடமற்றவனும், தர்மகாமார்த்தங்களை அறிந்தவனும், நீதி தவ றுதவனுமாகிய பரதன் அரசாக்ஷிசெய்து வருகிறான். நீதியும், துஷ்டநிக் கிரகமும், பொய்யாமையும், தோள்வலியும் எவரிடத்தில் நிலைத்திருக்கின்

றனவோ, எவன் தேசகாலங்களை யறிந்தவனே, அவனை இராஜனைக்கட வன். நாமும் மற்றும் பல இராஜர்களும் அந்த பரதன்பொருட்டு தர்மங் களைப் பாதுகாப்பதற்காகப் பார்முழுதும் திரிந்துகொண்டு தர்மங்களை வளர்த்து வருகிறோம், மிகவும் தர்மமுள்ள அந்த பரதன் பார்முழுதும் பாதுகாத்து வருகையில், எவன்தான் தர்மத்தைத்துறந்து நடப்பான்; அந்த இக்ஷ்வாகுகுலத்தில் பிறந்த நாமும் தர்மத்தை நிலைநிறுத்துவதன் பொருட்டு பரதனுடைய ஆஜ்ஞையை முன்னிட்டு தர்மத்தைத் துறந்தவர் களை விதியின்படி தண்டனைசெய்து வருகிறோம்; நீ தர்மத்தைத்துறந்த வனும், தீச்செயலுடையவனும், காமத்தை முதன்மையாகக்கொண்டவனு மாதலின், நீ இராஜமார்க்கத்திலிருக்கின்றனையா? நீதிதப்பியன்றோ இருக் கின்றனை;—

ஜ்யேஷ்டோ ப்⁴ராதாபிதாசைவ யஶ்சவித்³யாம்ப்ரயச்ச தி।
தஸ்ய ஸ்தேபிதரோஜ்ஞேயா த⁴ர்ம்யேவர்த்மனிஸ்தி²தஃ॥
யவீயானாதமஃபுத்ர ஶிஷ்யஶ்சாபிக்ரமோதி³தஃ।
புத்ரவத்தேத்ரயஶ்சிந்த்யா த⁴ர்மஶ்சேனத³காரணம்॥
ஸூக்ஷ்மஃபரமதுர்ஜ்ஞேயஃ ஸதாந்த⁴ர்மஃப்லவங்கம।
ஹருதிஸ்தஸ்ஸர்வபூதானா மாத்மாவேதஶுபாஶுப⁴ம்॥

ஜ்யேஷ்டோப்ராதாபிதாசைவ யச்சவித்யாம்ப்ரயச்சதி।
த்ரயஸ்தேபிதரோஜ்ஞேயா தர்ம்யேவர்த்மனிஸ்தி²தஃ॥
யவீயானாத்மஃபுத்ரஶ் ஶிஷ்யஶ்சாபிக்ரமோதி³தஃ।
புத்ரவத்தேத்ரயஶ்சிந்த்யா தர்மஶ்சேனத³காரணம்॥
ஸூக்ஷ்மஃபரமதுர்ஜ்ஞேயஃ ஸதாந்தர்மஃப்லவங்கம।
ஹருதிஸ்தஸ்ஸர்வபூதானா மாத்மாவேதஶுபாஶுபம்॥

தமயன், தந்தை, நூல்களைக் கற்பிப்பவன் இவர்கள் மூன்றுபெயர்களும் பிதாவெனப்படுவார்கள்; தம்பி, மகன், சீஷன். இம்மூவரும் புத்திரர்க ளெனப்படுவார்கள். தர்மமென்பது மிகவும் நுட்பமாதலின், அது நன் குணர்ந்த பெரியோர்களுக்கும் அறியற்கரியதாகும்; சர்வபூதங்களுடைய சுபாசுபங்களையும் சர்வாந்தரியாமியான ஸ்ரீமந்நாராயணனே அறிகிறார்; நீ அற்பத்தனமுடையவனுய் அற்பவான்களுடன் கூடிப் பிறவிக் குருடர்க ளுடன் கூடினை பிறவிக்குருடன்போல யாதுசெய்யவல்லை; யான் நீ கேட்ட தற்கு பதில் நன்குரைப்பேன்; நீ சினத்தையே மேற்கொண்டு இவ்வண்ணம் இகழற்க; யான் உன்னைக் கொலைசெய்ததற்குக் காரணமுரைப்பேன் கேளாய்; நீ தர்மத்தைத்துறந்து மகனுக்கு நிகரான தம்பியின் மனையாளான ருமையைச்சேர்ந்து புணர்ந்து மகிழ்வதுமன்றித் தம்பியையும்வெருட்டினை; ஆதலின், தர்மத்தைத்துறந்து காமத்தையே மேற்கொண்டு தம்பி மனையா ளுடன் சேர்ந்த பாவத்திற்காக உனக்கு இந்த சிக்ஷைசெய்யப்பட்டது;

தர்மத்தையும் துறந்து உலகவழக்கத்தையும் மீறி மனதுபோனபடி நடப்பவனுக்குத் தண்டனைசெய்வதைவிட வேறு சிக்ஷையில்லை ; யான் நற்குலத்தில் பிறந்த இராஜனுதலின், நீ செய்த இப்பிழையைப் பொறுத்திரேன் ;—

ఔరసీంభగినీంవాపి భార్యాఞ్చాప్యనుజస్యయః।
ప్రచరేత్తనరఃకామాత్తస్య దణ్డోవధస్సాలతః॥

ஔரஸீம்பகினீம்வாபி பார்யாஞ்சாப்யனுஜஸ்யயஃ।
ப்ரசரேதநரஃகாமாத் தஸ்யதண்டோவதஸ்ஸம்ருதஃ ॥

யாவனொருவன் காம அவஸ்தையினால் பெண்ணையும், தங்கையையும், தம்பி மனையாளையும் சேருவானே, அவனுக்குக் கொலைசெய்வதே சிக்ஷையென்று விதிக்கப்பட்டிருக்கின்றது ; இப்பொழுது பரதன் அரசனுகவும், யாங்கள் அவன் கட்டளையின்படி நடப்பவர்களாகவு மிருக்கையில், தர்மத்தைத் துறந்த உன்னை எவ்வண்ணம் உபேக்ஷைசெய்திருப்போம் ; பரதன் துஷ்டர்களைச் சிக்ஷைசெய்துகொண்டு உலகத்தைப் பாதுகாத்து வருகிறான் ; யாங்களும் அவன் கட்டளையை விதியாகக்கொண்டு உன்னைப் போன்றவர்களைத் தண்டிப்பதன்பொருட்டுத் திரிந்துகொண்டிருக்கின்றோம் ; அன்றியிலே, சுக்கிரீவருக்கும் எமக்கும் லக்ஷ்மணனுக்கும் எமக்கும்போல அழியாத்தோழமை உண்டாயிற்று ; அப்பொழுது உன்னைக் கொலைசெய்து இராஜ்ஜியத்தையும், மனைவியையும், உன்னுடன் சேர்ப்பேனென்று பிரதிஜ்ஞையும் செய்துகொடுத்திருக்கிறேன் ; ஆதலின், யான் செய்த பிரதிஜ்ஞையைத் தவிர்வேனே ? ஒருக்காலும் தவிரேன் ; ஆதலின், இது முதலாயுள்ள சிறந்த தர்மமான பல காரணங்களினால் இப்பொழுது உன்னைக் கொலைசெய்தேன் ; ஆதலின், இதனைக் தருமமெனவே அறிக ; அன்றியிலே, மகாராஜர் எனக்குத் தோழரானமையின், அவருக்குச் சத்துருவான நீ எனக்கும் சத்துருவல்லையோ ? இதனாலும் உன்னைக் கொலைசெய்தது ராஜதர்மமே யாகும் ; மனுவினால் கூறப்பட்ட இரண்டு சுலோகங்களும், நீ கேட்டிலையோ? அதனைக்கேட்டுணர்வாயாகில், யான் செய்தது தர்மமெனவும், உனக்குமது நற்கதி விளைப்பதெனவும், நன்கு அறிவாய் ; பாபம் செய்தவர்கள் ராஜர்களால் செய்யப்பட்ட சிக்ஷையை யடைந்து, அதனால் பாபம் தீர்ந்து, நல்வினை செய்தவர்கள்போலவே நின்மலராகி நற்கதிபெறுவார்கள் ; களவுசெய்தவர்களும் ராஜனால் சிக்ஷைசெய்யப்பட்டாலும், விடுவிக்கப்பட்டாலும், பாவத்தினின்றும் விடுபடுவார்கள் ; பாபத்திற்குத்தக்கபடி ராஜா சிக்ஷைசெய்யாணுகில், அந்தப் பாபத்தை இவனே அடைவான் ; முற்காலையில் ஒரு பௌத்தசன்னியாசி உன்னைப்போலவே கொடிய பாபம் செய்கையில், என் முன்னோர்களாகிய மாந்தாதா இவ்வண்ணமே கொடிய சிக்ஷைசெய்திருக்கிறார் ; மற்றும் பல ராஜர்களும், இதரர்களும், உன்னைப் போல கொடிய பாபம் செய்கையில், அப்போதுள்ள நல்வேந்தர்கள் அதற்கு பிராயச்சித்தமாகக் கொடிய தண்டனை செய்தார்கள். அதனால் அப்பாவங்களும் தீர்ந்தன ; ஆகையால், நீயும் என்னால் சிக்ஷைசெய்யப்பட்ட

வதுகி டாவம் தீர்ந்து நற்கதிபெறுவாய்; ஆதலின், தாபமுற்று வருந்தற்க; அன்றியில், வேறொருகாரணத்தையும் உரைக்கின்றேன் கேளாய்; அதைக் கேட்டபின், சினமும் துயரமும் கொள்ளாய்; நீ அறியாமையினாலும், இளமையினாலும், என்னை இகழ்ந்ததற்கு நான் சிறிதும் சினமுறுகின்றிலேன்;—

వాగురాభిశ్చపాశైశ్చ కూటైశ్చవివిధైర్నరాః।
ప్రతిచ్ఛన్నాశ్చదృశ్యాశ్చ గృహ్ణన్తిమృగయూథపాన్॥
పరిధావన్తఏవాపితిష్ఠన్తఏవ విసృష్టాంశ్చాపినిష్ఠితాన్।
ప్రమత్తానప్రమత్తాంశ్చ నరామాంసార్థినోభృశం॥
విధ్యన్తివిముఖాంశ్చాపి నచదోషోత్రవిద్యతే।
యాన్తిరాజర్షయశ్చాత్ర మృగయాన్తర్మకోవిదాః॥

வாகுராபிச்சபாசைச்ச கூடைச்சவிவிதைர்நராஃ।
ப்ரதிச்சன்னைச்சத்ருச்யாச்ச க்ருஹ்ணந்திஸ-பஹ-மின்ம்ருகான்.॥
ப்ரதாவிதான்வாவித்ரஸ்தான் விஸ்ரப்தாம்ச்சாபிகிஷ்டிதான்।
ப்ரமத்தாநப்ரமத்தான்வா நராமாம்ஸார்த்திநேப்ருசம்.॥
வித்யந்திவிமுகான்ஸாபி நசதோஷாத்ரவித்யதே।
யாந்திராஜர்ஷயச்சாத்ர ம்ருகயாந்தர்மகோவிதாஃ॥

மனிதர்கள் மறைந்தாவது, எதிரிலாவது இருந்து வலைகளினாலும், கயிறுகளினாலும், மற்றும் பற்பல கபடச்செயல்களினாலும், பலவகை விலங்குகளையும் பிடிக்கிறார்கள். அவைகள் ஓடிக்கொண்டிருந்தாலும், அச்சமுற்றிருந்தாலும், நம்பி உட்கார்ந்திருந்தாலும், ஊக்கமுற்றிருந்தாலும், ஊக்கமற்றிருந்தாலும், பாராமல் பராக்காயிருந்தாலும், மாமிசத்திற்காகவாவது, வேடிக்கையாகவாவது, அவைகளைக் கொலைசெய்கிறார்கள். இது இராஜர்களுக்குத் தருமமேயன்றிக் குற்றமாகிறதில்லை; தர்மமுணர்ந்த பழ பல ராஜரிஷிகளும், இவ்வண்ணம் வேட்டையாடி இருக்கிறார்கள். ஆகையால், யான் உன்னைக் கணையினால் அடித்தேன்; நீ என்னுடன் போர்செய்யாவிடினும், பிறருடன் போர்செய்துகொண்டிருந்தாலும், நீ குரங்கேயாதலின், உன்னை எவ்வகையிலும் கொலைசெய்தது குற்றமே ஆகாது; ராஜர்கள் பிறர்க்கரிய தர்மத்தையும், இல்வாழ்க்கையையும், இன்பத்தையும் கொடுப்பவர்களாதலின், அவர்களைப் பீடிப்பதும் இகழ்வதும், அவர் கட்டளையைத் தவிர்ப்பதும், பிரியமல்லாத மொழிகளை மொழிவதும், தகுதியற்றது; தேவர்களே இராஜர்களாகப் பூலோகத்தில் அவதாரம் செய்திருக்கிறார்களல்லரோ? இவ்வண்ணம் யான் தொல்லையாயுள்ள தருமத்தில் ஊக்கங்கொண்டு தருமப்பிரகாரம் செய்த என்னை நீ மாத்திரம் தருமத்தை யறியாமல் சினத்தையே மேற்கொண்டிவ்வண்ணம் இகழ்ந்தனையேயன்றி, வேறில்லை; என்றிவ்வண்ணம் பெருமாள் அருளிச்செய்த வாக்கியங்களை வாலி முற்றுஞ்செவியுற்று நன்காராய்ந்து பெருமாள்மீது சிறிதும் தருமக்குறை

வைக்காணுமல் அறியாமையினால் இவ்வண்ணம் பெருமாளை இகழ்ந்துரை செய்துவிட்டேனேயென்று மனம் வருந்திப் பெருமாளை நோக்கிக் கைகூப்பிக் கேட்டருளீர் புருஷோத்தமரே !—

यत्त्वमात्थनरश्रेष्ठ तत्तथेवनात्रसंशयः।
प्रतिवक्तुंप्रकृष्टोहि नापकृष्टस्तुशक्नुयात्॥

யத்வமாத்தநரச்ரேஷ்ட தத்தேவம்நாத்ரஸம்சயஃ।
ப்ரதிவக்தும்ப்ரக்ருஷ்டோஹி நாபக்ருஷ்டஸ்துசக்னுயாத்.॥

தேவரீர் அருளிச்செய்த வாக்கியங்கள் தேவரீர் அருளிச்செய்தபடி தருமங்களேயாகின்றன ; இவ்விஷயத்தில் சிறிதேனும் ஐயமிலது ; உயர்ந்தவர்களிடத்தில் தாழ்ந்தவன் தகுந்த பதிலுரைசெய்ய வல்லவனுகுவானே ; ஒருபொழுதுமாகான் ; ஆதலின், அடியேன் முன்பு தேவரீர் விஷயத்தில் அறியாமையினுலே அயுக்தமாகவும், தருமமற்றதாகவும், பிரியமல்லாததாகவும், தேவரீரை இகழ்ந்துரைத்தேன் ; அந்த அபராதத்தையும் பொறுத்து உகந்தருள்க ; தேவரீர் தத்துவங்களை புண்ணையாக அறிந்தவரும், உலகங்களுக்கு இதஞ்செய்பவருமாதலின், தேவரீருடைய புத்தி ஒருவன் செய்த பாவங்களை யறிந்து அதற்குத்தக்கபடி சிக்ஷைசெய்வதில் தெளிவுற்றிருக்கின்றது ; அருளாழியம்மானே ! இவ்வண்ணம் நற்செயல்களைத்துறந்தும், தீச்செயல்களைப் புரிந்தும் கெட்டழிந்த அடியேனுடைய அபராதங்களைப் பொறுத்தருளினேனென்று அன்புகூர்ந்து அருளிச்செய்து அடியேனுடைய அச்சத்தைத்தீர்த்து அடியேனைப் பாதுகாத்தருள்க ; சுவாமி தினதயாளு ! நான் இறந்துவிடுகிறேனே என்று என்னைக்குறித்தும், இனிய மனைவியான தாரையைக்குறித்தும், அன்புள்ள பந்துக்களைக்குறித்தும் சோகமுற்றிலேன்; மிக்க நற்குணமுடையவனும், பொன்னுற்செய்த தோள்வளைகளை யுடையவனுமாகிய அங்கதனைக்குறித்தே மிகவும சோகத்தை அடைகிறேன்; அவன் பிறப்புமுதல், அருமையாக வளர்க்கப்பட்டமையின், என்னைக்காணுமல் மிகவும் சோகமடைந்து நீர்வற்றிய தடாகம்போல உலர்ந்து வருந்துவானன்றே? அவன் இளமையுடையவனும், நூல்களைக் கற்காமையின் நிலையுறுத புத்தியுடையோனும், ஒரே புத்திரனுமானுகையால், அவனைத் தேவரீர் பாதுகாத்து அளித்தருளல்வேண்டும் ; சுக்கிரீவனிடத்துப் போலவே அவனிடத்திலும் சரியான அருள்செய்து ரக்ஷித்தல்வேண்டும்; தேவரீரே ஒன்றைச்செய்வதற்கும், தடுப்பதற்கும், தண்டிப்பதற்கும், காப்பதற்கும் வல்லவர் ; ஸ்ரீபாதாழ்வானிடத்திலும், இளையபெருமாளிடத்திலும், சுக்கிரீவனிடத்திலும், தேவரீர்க்கு எவ்வளவு அருளுளதோ, அவ்வளவு அருள் அங்கதனிடத்திலும் வைத்தருள்க ; என்மீதுள்ள பகையினுல் சுக்கிரீவன் தாரையை வருத்தாமலிருக்குமாறு பாதுகாத்தருள்க ; தேவரீருடைய அனுக்கிரகத்திற்குப் பாத்திரமாகித் தேவரீருடைய திருவுள்ளத்திற்கு இசைந்தபடி இருப்பவர்களை அரசாக்கி செய்யத்தக்கவர்களாவார்கள் ; தேவரீரை எதிர்ப்படவர்கள் நெடுங்காலம் வாழார்களென்பதை அடியேன் அறிவேனகிலும், தேவரீர் திருக்கையினுல்

கொலைசெய்யப்பட்டு நற்கதி பெறவேண்டுமென்று நிச்சயங்கொண்டே தானை பலவாறுகத் தடைசெய்யினும் கேளாமல் வந்து சுக்கிரீவனுடன் போர்செய்தேன்; என்று இவ்வண்ணம் வேண்டி உரைசெய்து ஆயுள் மாளுஞ் காலங்கிட்டினமையின், மொழிவதற்குத் திறமையின்றி, பேசாதிருந்தனன். பெருமாளும் அப்பொழுது அவனை நோக்கிக் கேளாய் வானர் கோமானே! நீ அங்கதன் விஷயமாகச் சோகமுறற்க; எம்மையும் தர்மமன்றிக் கொலைசெய்தாமென்று எண்ணற்க; நீயும் இறந்துவிடுகிறேனென்று துஞ்சற்க; உன்னுடைய பாபத்தைப்போக்கி உன்னை நற்கதி அடைவிப்பதன்பொருட்டே நாம் மறுபிறவிருடன் தோழமைகொண்டு பிரதிஜ்ஞை செய்துகொடுத்து அவ்வண்ணம் உன்னைக் கொலைசெய்தோம்; யாவனொருவன் தக்கபடி சிக்ஷைசெய்கிறானே, யாவனொருவன் தக்கபடி சிக்ஷைசெய்யப் படுகின்றனனே, அவ்விருவரும் நற்கதி பெறுவார்களேயன்றி, அழியார்கள்; ஆதலின், நீயும் எம்மால் சிக்ஷைசெய்யப்பட்டவனுகிப் பாவந்தீர்ந்து நல்வழிபெற்று பெருவீடு பெறுவாய்; ஆதலின், துன்பத்தையும், மோகத்தையும், அச்சத்தையும் தீர்ந்து மகிழ்க; தெய்வத்தை மீறி நடப்பதற்கு உன்னால் முடியுமோ? ஆதலின், தெய்வச்செயலினால் நேர்ந்த இவ்விஷயத்தில் சிந்தையுறற்க; அங்கதன் உன்னிடத்தில் போலவே சுக்கிரீவனிடத்திலும், என்னிடத்திலும், அன்பும் பக்தியும் கொண்டு நடப்பானென்பதில் சந்தேகமில்லை; என்று இனிமையாகவும், தர்மமாகவும் அருளிச்செய்து தேற்றியருளினர். வாலியும் பெருமாள் அருளிச்செய்த மதுரமான வாக்கியத்தைக்கேட்டுப் பெருமானை நோக்கி, அடியார்க்கினியராகிய ஸ்ரீராமா! பாணத்தினால் அடிபட்டு மதிமயங்கித் தேவரீரை அடியேன் பலவகையாக இகழ்ந்துரைத்துப் பெரும்பாவி ஆயினேன்; இந்த அபராதத்திற்கு பிராயச்சித்தம் செய்ய வகையின்மையால். இதனைத் தேவரீர் பொறுத்து அடியேனை ரக்ஷித்தருளல் வேண்டுமென்று பலவாறுக வேண்டினன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினெட்டாவது ஸர்க்கம்

முற்றிற்று.

பதினேழாவது ஸர்க்கத்தில் வாலிகேட்ட கேள்விகளுக்கெல்லாம் இந்த ஸர்க்கத்தில் பெருமாள் சமாதானம் அருளிச்செய்து விட்டமையின், நாம் கூறவேண்டுவ தொன்றுமிலது; பெருமாள் வாலியை எதிரில் வந்து என் கொலைசெய்திலரெனின், பெருமானை வாலி காண்பானுகில், பெருமாள் தாடகை ஸுபாகு மாரீசன் விராதன் கபந்தன் கரதூஷணாதி ராக்ஷஸர்கள் முதலானோர்களைக் கொலைசெய்தாரென்பதையும், சிவன் வில்லை முறித்தாரென்பதையும், பரசுராமனையும் வெற்றிகொண்டாரென்பதையுங் கேட்டிருக்கின்றமையின். அவரைக்கண்டவுடன் அவருடைய தோள்வலிக்கு அஞ்சித் தஞ்சமென வந்தடைந்துவிடுவான்; பின்பு, தஞ்சமடைந்தவர்களைக் கொலைசெய்யக்கூடாமையின், வாலியைக் கொலைசெய்வேனென்று நாம் செய்த ப்ரதிஜ்ஞை பொய்படாதிடும்; இவ்வண்ணம் எண்ணங்கொண்டே பெருமாள் மறைந்து வாலியை யடித்தருளினரேயன்றி, வேறில்லை; வாலியுடன் எதிராகநின்று போர்செய்பவர்க

பத்தொன்பதாவது லர்க்கம்.

வாலி இறந்ததைக்கேட்டுத் தாரை அங்கதனுடன் அங்கோடி வந்தது.

அந்த வானரர்கோமானை வாலியும் பெருமாள் அருளிச்செய்த வாக்கியங்களைக்கேட்டுத் தகுமென உணர்ந்து மகாராஜர் எய்த கல்லுகளினாலும், மரங்களினாலும் அடிபட்டு ஸ்ரீராமபாணத்தாலும் வருந்தி உயிர் மாளும் தருணத்தில் மோஹமடைந்தனன். தாரையும் அந்தப்புரத்திலிருந்து பெருமாள்எய்த பாணத்தினால் வாலி இறந்தனனெனக்கேட்டுக் கூவென்று கற்றி மெய்நடுங்கி பிள்ளையுடன் விரைவாக விழுந்து அம்மலைக்குகையினின்றும் ஓடி வந்தனள். அங்குள்ள அங்கதனுடைய பரிவாரங்களும் அங்கே வில்லும் கணையும் கையிலேந்திப் பெருமாள் எழுந்தருளியிருப்பதைக்கண்டு அச்சங்கொண்டு ஓடின; யூகத்தலைவன் இறக்கையில் அச்சங்கொண்டு ஓடுகிற மற்றுள்ள யானைகளைப்போல ஓடி வருகிற அந்த வானரர்களைத் தாரை கண்டு அவர்களை நோக்கி, சூரர்களே! வானரர் கோமானை வாலிக்கு நீங்கள் முன்செல்லத்தக்கவர்களாகியும் என் அச்சம் கொண்டு ஓடுகின்றீர்கள்; மண்ணைசையினால் சுக்கிரீவன் கொடிய ராமனைக் கொண்டு கூரிய பாணங்களை எய்வித்து என்னுயிரனைக் கொன்றனனே? ஆயினும், அதனால் நீங்கள் அஞ்சுவதேதனென்று வினவினள். அவ்வானரர் களும் அவ்வாக்கியத்தைக்கேட்டுத் தாரையை நோக்கி, அம்மா ராணி! நீ மகனுடன் பிழைத்துத் திரும்பிச் செல்லீர்; அருமையான அங்கதனையும் பாதுகாத்தருளீர்; நமனே ராமனுக வந்து வாலியைக் கொலைசெய்தனன். வாலி சுக்கிரீவனால் போடப்பட்ட கல்லுகளையும், மரங்களையும் தடுத்து அடித்தும், வச்சிரம்போன்ற ராமபாணத்தினால் அடிபட்டு விழுந்தனர். இந்திரனுக்கு நிகரான நம் வேந்தர் அடிபட்டு விழுகையில், மற்றுள்ள சேனைகள் யாவும் அச்சங்கொண்டு நாற்றிசைகளிலும் திரிந்தலைகின்றன; ஆதலின், கோபுரவாயல்களைக் காவல்கள்வைத்து அங்கதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தருளீர்; வானரர்கள் எல்லோரும் அங்கதனையே வேந்தனெனப் பணிவார்கள்; உமக்கு இந்த கிஷ்கிந்தையில் இருப்பதற்கு மனமிலதாயினும், வேறு அரணுள்ள இடம் தேடிச்செல்லுவோம்; முன்பு, வாலியினால் துரத்தப்பட்ட சுக்கிரீவாதிகளிடத்து நின்றும் நமக்கு இங்கு மிக

ஞடைய பலத்தில் பாதி முறையே வாலியைச் சேர்ந்து விடுகிறதென்று வாலிக்கு இந்திரன் வரமளித்துப் பொன்மாலை கொடுத்திருக்கின்றமையின், பெருமாளும் வாலிக்கெதிராகப் போர்செய்தால் பல்குறைந்து தோல்வியுறுவாராதலின், மறைந்தடித்தாரென்று சிலர் சொல்லுவார்கள்; அது சரியன்று; நெடுநேரம் போர்செய்தபின்பே பலங்குறையுமே யன்றி, முதன் முதலில் குறையாதாதலின், முதலிலேதானே ஒரு கணையைத்தொடுத்து அவனைக் கொலைசெய்துவிடலாகுமன்றே? மஹாராஜரும் நெடுநேரம் போர்செய்தபின்பே பல்குறைந்து வருந்தினரேயன்றி, முதலில் வருந்தியிலரே? ஆதலின், நாம் உரைசெய்ததே சரியென வுணர்க.

வும் பயமுளது ; என்று உரைத்தனர்கள். தாரை அம்மொழிகளைக்கேட்டு அதற்கு உடன்படாமல் அவர்களை நோக்கி, அன்பர்களே! வானரர்கோமானை மிகச் சிறந்த என் கணவன் இறந்தபின்னர், எனக்கு அங்கதனுலாயினும் ராஜ்ஜியத்தினுலாயினும், என் உயிரினுலாயினும் யாது பயன்? ஸ்ரீராம பாணத்தினுல் அடிபட்டு விழுந்த என் பிராணநாதனுடைய பாதமூலத்தையே போய்ச்சேருவேன் ; என்று உரைத்துவிட்டுத் துன்புற்றுக் கூவி அழுதுகொண்டு தலையிலும், மார்பிலும், கைகளால் அடித்துக்கொண்டு விரைவாக ஓடிவந்து சிறந்த தானவர்களையும் அடிப்பவனும், உயர்ந்த மலை களையும் பேர்ப்பவனும், பெருங்காற்றினுல் மோதப்பட்ட மகாமேகம்போலக் கர்ஜ்ஜிப்பவனும், இந்திரனுக்கு நிகரான பராக்கிரமமுடையவனுமாகிய தன் பர்த்தா ஸ்ரீராமபாணத்தினுல் அடிபட்டு மழைபொழிந்தொழிந்த மேகம் போலவும், புலியினுல் வதைசெய்யப்பட்டு விழுந்த ஆண்சிங்கம்போல வும், யாவராலும் அர்ச்சிக்கப்பட்டும், சூளிகை நாட்டியும், திண்ணை கட்டியு மழகாயுள்ள தோரணவாயில் அடங்கியிருந்த பாம்பைப் பிடிப்பதன்பொரு ட்டுப் பெரிய திருவடியினுல் இடித்துத் தள்ளப்பட்டாப்போலவும், சாய்ந்து படுத்திருக்கக்கண்டு சிறந்த கோதண்டத்தை ஊன்றிக்கொண்டு நின்று கொண்டெழுந்தருளியிருக்கின்ற பெருமாளையும், இளையபெருமாளையும், மகாராஜரையும் தாண்டி வாலியைக்கிட்டிச் சோகத்தினுல் மனங்கலங்கித் தரையில் வீழ்ந்து மோகமடைந்து மீளவும் துயிலுணர்ந்த பெண்போ லெழுந்து பிராணநாதாவென்று கூவி யமபாசத்தினுல் கட்டப்பட்ட பதியை நோக்கிப் புலம்பி அழுதனள். மஹாராஜர் தாரை இவ்வண்ணம் அழுவதையும், அங்கதன் வந்து தயங்கி நிற்பதையுங்கண்டு தாமும் மிகவும் துயரமடைந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பத்தொன்பதாவது ஸர்க்கம்
முற்றிற்று.

இருபதாவது ஸர்க்கம்.

தாரை புலம்பி யழுதது.

இவ்வண்ணம் பெருமாளுடைய கோதண்டத்தினின்றும் புறப்பட்ட தும், ஆயுளை மாய்ப்பதுமாகிய கணையொன்றினுலே அடிபட்டுத் தரையில் வீழ்ந்திருக்கின்ற வாலியை முழுமதிபோன்ற முகத்தையுடைய தாரை கண்ணுற்று விரைவாகக்கிட்டி யவனை யணைந்துகொண்டு மதங்கொண்ட யானை போன்றவனும், மேலுறந்திரமலைக்கு நிகரானவனுமாகிய அந்த வாலி யின் சூணங்களை நினைந்து மிகவுந் துயரங்கொண்டு கூவி யழுது புலம்பலுற்ற னள். என் பிராணநாதரே! போரில் பகைவர்மேல் கொடுமையுடையோரே! மிகச் சிறந்த தோள்வலி யுடையோரே! சிறந்த வீரமுடையோரே! வானரர் கோமானே! மிகவும் சோகக்கடலில் மூழ்கினவளும், தேவரீரிடத்திலுள்ள

நற்குணங்களையே கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தவளுமாகிய என்னுடன் இப்பொழுது ஏன் இனியமொழி மொழிகின்றிலீர்; வலீமுகர் சீமானே! எழுந்திருந்தருள்க; சிறந்த பஞ்சணைமெத்தையில் படுத்தருள்க; தேவரீர்போன்ற சிறந்த வேந்தர்கள் இவ்வண்ணம் தரையில் துகள்படியப் படுத்திருப்பார்களோ? தேவரீர்க்கு என்னை விட இப்பார்மடந்தையே மனத்துக்கினிய மனையாள்போலும், இப்போழ்து உயிர்மாய்ந்தும், என்னைத் துறந்து இப்பார்மகளை யங்கங்களினால் தழுவிக்கொண்டு படுத்திருக்கின்றீரல்லீரோ? மிகவும் வீரராகிய என் பிராணநாதரே! தேவரீர் நல்வினையினாலே விண்ணுலகினில் இந்தக் கிஷ்கிந்தைபோன்ற சிறந்த மற்றொருபட்டணத்தைப் படைத்திருக்கின்றீர் போலும், ஆதலாலேதான் மிகவும் இனிய இந்தக் கிஷ்கிந்தையைத் துறந்து விட்டீர்; எந்தெந்த இடங்களில் தென்பொழியும் பூஞ்சோலைகளில் எங்களுடன் கூடிக் குலாவி இன்புற்றீரோ, அந்தந்த இடங்களுக்கெல்லாம் தேவரீரால் அழிவு நேர்ந்தது; தேவரீர் இவ்வண்ணம் ஆயுள்மாண்டழிந்தமையின், யான் ஆசையும், ஆனந்தமும் குன்றிச் சோகக் கடலில் மூழ்கினேனன்றோ! என்னுடைய இந்த இதயம் கல்லினும் கடினமானதுபோலும், என் பிராணநாதனை தேவரீர் ஆயுள்மாண்டிருக்கையிலும், இந்த இதயம் ஆயிரஞ்சிதறுண்டழிந்திலதன்றே?—

வானரர் கோமானே! தேவரீர் முன்னே மஹாராஜருடைய பத்தினியானருமையையும் அபகரித்துக்கொண்டீர்; அந்த மஹாராஜரையும் வெருட்டினீர்; அந்தத் தீச்செயலின்பலம் இப்போழ்து தேவரீரால் அடையப்பட்டது; தேவரீருக்கு நன்மையையே கோருகின்ற என்னையும் அறியாமையாலும், மோகத்தினாலும் இகழ்ந்து நிராகரித்தீர்; யான் தேவரீருக்கு இதத்தைக் கோரியே இப்போழ்து போர் செயற்க என்று தகைந்தேன், இனியருபயிளவனங்களினாலும், காமநூல் பயிற்சியாலும் செருக்குற்ற தெய்வப் பொதுமடந்தையர்களைச்சேர்ந்து மகிழ்வீர்போலும், இக்காலம் தேவரீருடைய ஆயுளை மாய்க்குங்காலந்தான்போலும், இல்லாவிடின் இந்த லோக்கிரீவனுக்கு வசமாகி இப்படி யழிந்திறப்பீரோ? இதுவரையிலும் யான் தேவரீராலே சிறிதுந் துன்பமின்றி வளர்க்கப்பட்டமையின், இனிகமம் பெண்ணுகி நாதனின்றித் துன்பக்கடலில் மூழ்கி வாழ்நாளை எவ்வண்ணம் போக்குவேன்; இவ்வாறு தேவரீரும் வானேறிச் சிற்றப்பனை சுக்கிரீவனும் பகைகொண்டு சினமுற்றிருக்கையில், துயரமென்பதையே அறியாமல் இதுவரையிலும் வளர்த்துச் சீராட்டப்பட்ட அங்கதன் இனி எப்பாடு படுவானே? அறிகின்றிலேன்; அந்தோ! என்னுடைய பிரியமுள்ள பர்த்தாவே! தேவரீர் மீளாப் பிரயாணம் புறப்பட்டமையின், தேவரீருடைய இந்தப் பெறலரும் புதல்வனைக் கண்குளிரக்கண்டு தழுவியுச்சிமோந்து இதமுரைத்துத் தேற்றியருள்க; இந்த ஸ்ரீராமன் தேவரீரையும் கொலைசெய்தமையின், யாவரும் வியப்புறத்தக்கவனுயினர்; சுக்கிரீவன் பொருட்டுச் செய்த பிழைதிருத்தலையுயுந் தீர்த்துக்கொண்டனர். என்றிவ்வண்ணம் பதியை நோக்கிப் புலம்பி யங்கதனை நோக்கி, அடா என் கண்மணியே! தந்தை

யைக் கண்ணாரக்காணுய்; இனி நீ தந்தையைக்காண்பதரிதாகும்; என்று புலம்பி மஹாராஜனையும் நோக்கி, மைத்துனரே! நீரினி மனங்குளிர்க; நுமையையும் பெற்று மகிழ்க; இனி யச்சந் தீர்ந்தரசாளுகி செய்க; உம் முடைய அண்ணனர் வானேறிவிட்டனரல்லரோ? என்று புலம்பி மறுபடியும் பார்த்தாவை நோக்கி, என்னுயிர்க்காவலரே! யாணிவ்வண்ணம் புலம்பியழுகையிலும் என்னுடன் மாற்ற முரைக்கின்றிலீரேன்; தேவரீருடைய மனைவியர்கள் யாவரும் இங்குவந்து புலம்புகின்றனர்கள் கண்டருள்க; என்றிவ்வண்ணம் தாரை புலம்பிய புலம்பலைக்கேட்டு மற்றுள்ள வாலியின் மனைவியர்களும் அங்கதனைக் தழுவிக்கொண்டு கூவென்றுகூவியழுதனர்கள். மீளவும் தாரை வாலியை நோக்கி, என் பிராணநாதரே! தேவரீருக்கு மிகவும் இனியனை இந்த அங்கதகுமாரனை விட்டு விட்டு இவ்வண்ணம் நெடுந்தூரம் மீளாமல் செல்லல் தகுமோ! யாதையினும், அங்கதனையினும், தேவரீர் விஷயத்தில் யாதேனும் பிழைசெய்தேமோ? ஏன் இவ்வண்ணம் எம்மைத் துறந்து செல்லுகின்றீர்; ஒருக்கால் யான் அறியாமல் பிழைசெய்திருப்பேனையினும், அதனைப் பொறுத்தருள்க; தேவரீர் திருவடியிணையைத் தலைவணங்கித் தொழுவேன்; என்றிவ்வண்ணம் மறுபடியும் சக்களத்திகளுடன் கூடிப் புலம்பி வாலியின் சமீபத்திலேதானே பிராயோபவேசம்பண்ணி இறப்பேனென நிச்சயங்கொண்டனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபதாவது ஸர்க்கம்
முற்றிற்று.

இருபத்தொன்றுவது ஸர்க்கம்.

பிராயோபவேசஞ்செய்த தாரையைச் சிறியதிருவடி
இனியமொழிகளினுலே தேற்றியது.

தாரை இவ்வண்ணம் உறுதிகொண்டு விண்ணினின்றும் தழுவி வீழ்ந்த விண்மீன்போலத் தரையில்வீழ்ந்து படுத்திருக்கையில், சிறிய திருவடி கண்டு அருகில் வந்து அவளை நோக்கிக் கேளீர் அம்மா!—

గుణదోషకృతంజన్తు స్వకీర్తఫలహేతుకం।
అవ్యగ్రస్తదవాప్నోతి సర్వంప్రేత్యశుభాశుభం॥
శోచ్యశోచసికంశోచ్యం దీనందీనానుకంపసే।
కస్యకోవానుశోచ్యోస్తి దేహోస్తిబుద్బుదోపమే॥
గుణదోషక్రుతంజన్తుస్ స్వకర్మఫలహేతుకం।
అవ్యక్రస్తదవాప్నోతి సర్వంప్రేత్యశుభాశుభం॥
శోచ్యాశోచసికంశోచ్యం దీనందీనానుకంపసే।
కస్యకోవానుశోచ్యోస్తి దేహోస్తిబుద్బుదోపమే॥

எல்லா உயிர்களும் அறிந்தாவது அறியாமலாவது செய்த நல்வினை தீவினைகளின்படி இமைமையிலும் வாழ்ந்து இறந்த பின்பும், அக்கருமங்களின்

பலனை மறுமையிலும் அடைகிறார்கள் ; ஆதலின், ஒருவன் இறப்பதும், பிறப்பதும், வாழ்வதும், தத்தம் முன்வினைகளினால் வாய்ப்பதேயன்றி, வேறொருவராலும் ஆவதன்று; ஆதலின், வாலியை ஸுக்கிரீவனே கொலை செய்தனனென எண்ணற்க ; இவர் நிமித்தமாத்திரமேயன்றி, வாலி தன்முன்வினையாலேதானே இறந்தனர். ஆதலின், அவர்பொருட்டு நீர் துன்புறுவதும் சரியன்று ; நாம் எவ்வண்ணம் நற்கெதியடைவோமென்று உம்மை நீரே சோகித்துக்கொள்ளவேண்டுமேயன்றி, மற்றெவனைக்குறித்து நீர் சோகழுறுகின்றீர் ; கடையேறும் வழி யறியாமல் நீரே தீனமடைய வேண்டி யிருக்கையில், திறமையற்ற நீர் மற்றெவரைக்குறித்து அருள்செய்வது ; யார்க்கு எவன் சோகிக்கத்தக்கவனாகின்றனன் ; ஒருவர்க்கும் ஒருவனும் இலன் ; எல்லோர்க்கும் இந்த யாக்கை நீர்ஒழுங்குமிழிபோல் சஞ்சலமே யன்றோ? அன்றியிலே, நீர் மக்கட்பேறு அற்றவராயின், இவ்வண்ணம் துன்புறுவது தகும் ; இந்த அங்கதகுமாரனை நீர் பாதுகாத்தளித்தல் வேண்டுமன்றோ ? இனி இவனுக்கு வாழ்நாள்களில் இதழுறுப்படி ஈன்காராய்ந்து மனந்தேர்ந்தெழுந்திரீர் ; எல்லாவுயிர்களும் பிறப்பதும் இறப்பதும் பிழைப்பதும் நிலையற்றனவென்று நீர் அறிந்திலீரோ ? ஆதலின், அறிந்தவர்கள் இம்மையில் நலம் விளையத்தக்க நற்செயல்களைச் செய்யவேண்டுமேயன்றித் துயருறுவது நலமற்றது ; இந்த வாலியையே அடித்து பதினாயிரம், லக்ஷம், கோடி, நூறுகோடி என்று மேன்மேலுமுயர்ந்த கணக்குடையதும், கணக்கிறந்ததுமாகிய பற்பல பிரிவாயுள்ள வானரசேனைகள் பிழைத்தனர்கள். அத்தன்மையராகிய வாலி தம்முன்வினையின்படி வானேறினராதலின், அவர்பொருட்டு ஏன் துயருறுகின்றீர் ; அன்றியிலே, இவர் நியாயமாகவே அரசாக்ஷி செய்தவரும், ஸாமதானங்களிலும் பொறுமையிலும் ஆவலுடையவருமாதலின், நல்வினையினர் பெறும் பொன்னுடுசேர்ந்து மகிழ்வார் ; ஆதலினால், இவர்பொருட்டுத் துயருறற்க; இங்குள்ள வானரசேனைகளும், இந்த அங்கதகுமாரனும், இந்த கிஷ்கிந்தாராஜ்ஜியமும் உம்முடைய அதீனமேயாகும்; ஆதலின், இந்த சோகத்தையும், ஸந்தாபத்தையும் துறந்து மகிழ்க ; உம்மால் கட்டளையிடப்பட்டு இந்த அங்கதகுமாரரும் அரசாக்ஷிசெய்யக்கடவர் ; உலகினில் யாவரும் மக்கட்பேற்றினைக் கோருவது தாமிறந்தபின்னர், தமக்குத் தருப்பணம் முதலானவை செய்வதன்பொருட்டே யன்றோ ? இப்போது செய்யவேண்டிய காரியமும், உம்முடைய கணவனுக்குச் செய்யவேண்டிய சரமகைங்கரியமே யன்றோ ? ஆதலின், இப்பொழுது வேந்தர்பொருட்டுச்செய்யவேண்டும் கருமங்களை அங்கதகுமாரனைக்கொண்டு செய்விக்கக்கடவீர் ; இக்காலத்திற்கு இதுவேதகுமன்றி, இவ்வண்ணைத் துன்புற்று வருந்துவது தகாது ; வானரர்கோமானை வாலிக்கு தஹனஸம்ஸ்காரஞ் செய்வித்துப்பின்பு, அங்கதகுமாரனுக்கும் அபிஷேகஞ்செய்விக்கக்கடவீர். பின்பு, சிங்காஸனத்தில் வீற்றிருக்கும் குமாரனைக்கண்ணுற்றுச் சோகந்தணிந்து மகிழ்வீர் ; என்றிவ்வண்ணம் இனியமொழிகளை மொழிந்து தாரையைத்தேற்றினர். தாரையதுகேட்டும் பர்த்தாவின் சோகத்தி

ஞலே மிகவும் வருந்தி எதிரில் நிற்கின்ற சிறியதிருவடியை நோக்கிக் கேளீர் மாருதி ! அங்கதன்போன்ற ஆயிரம் பிள்ளைகளைக் காண்பதைவிட வாலிராஜ சீமானனை என்னுயகர் திருமேனியைத் தழுவி மகிழ்ந்திருப்பதே மிகச் சிறந்தது ; அன்றியிலே, இப்பொழுது என் பர்த்தாவுக்கு ஸம்ஸ்காரம் செய்விப்பதற்காவது, அங்கதனுக்கு அபிஷேகஞ் செய்விப்பதற்காவது, யான் உரியளல்லேன் ; அங்கதனுக்குச் சிற்றப்பனுகிய மஹாராஜரே இனி நடக்கவேண்டிய காரியங்களெல்லாவற்றிற்கும் நியாமகர் ; அங்கதனைக்குறித்து நீர் இவ்வண்ணம் எண்ணற்க ; தந்தையற்ற மகனுக்குச் சிறப்பனே பந்துவாகுவானல்லது, தாய் பந்துவாகாள் ; எனக்கு என் கணவரைச்சேர்ந்து செல்வதைவிட இம்மையிலாவது, மறுமையிலாவது, நலந்தருவது வேறொன்றுமிலது ; ஆதலின், பகைவருடன் போர்ந்திறந்த என் பிராணநாதர் படுத்திருக்கின்ற இவ்விடத்திலேதானே படுத்திறப்பது எனக்கு மிகவுந் தகுந்தது ; என்று மொழிந்து வருந்தினள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தொன்றுவது ஸர்க்கம்
முற்றிற்று.

இருபத்திரண்டாவது ஸர்க்கம்.

வாலி மூர்ச்சைதெளிந்து மஹாராஜர் அங்கதன் இவர்களுடன் மேலே நடக்கவேண்டிய விதத்தை யுரைசெய்து அவ்வண்ணமே செய்யும்படி வேண்டியது.

பின்பு, வாலி மூர்ச்சைதெளிந்து அங்கதகுமாரனுக்கெதிராகத் தனக்கெதிரில் நிற்கின்ற மஹாராஜரை முதன் முதல் பார்த்து அவரை நோக்கிக் கேளடா தம்பி ! யான் தீமையை விளைக்கத்தக்க தீவினையிலே மதிமயங்கிச் செருக்குற்று உன்னுடைய பாரியையையும் அபகரித்துக்கொண்டு உன்னையும் வெருட்டினேன் ; ஆதலின், அப்பகையை என்மேல்கொண்டு என்னைத் தீயனென்று எண்ணி இகழற்க ; தலைவிதி யாவரையும் தான் செல்லும் வழியிலேதானே பற்றி இழுக்கின்றதன்றோ ? உனக்கும் எனக்கும் ஒரே காலத்தில் கூடி இன்புறும்படி ஸ்ரீமந்நாராயணன் ஸங்கற்பித்திலனென்னுகிறேன் ; அடா சுக்கிரீவா ! ஆகையாலேதான் எனக்கு அவ்வண்ணம் மதிமயங்கித் தீச்செயல் புரிந்தேன் ; தலைவிதியைத் தவிர்ப்பது ஒருவராலும் முடியாதன்றோ ? இனி நீ தாமஸஞ்செய்யாமல் இப்போழ்தே அபிஷேகம்பூண்டு இந்த வானரர்களெல்லோர்க்கும் ராஜனுகி யரசாளுவிசெய்க ; யான் இப்போழ்தே யமதர்மராஜன் பட்டணம் போகின்றேனென்றறிஞுக ; இப்பொழுதே உயிரையும், வாலி யொருவராலும் கொலைசெய்யப்படாதென்னும் புகழையுந்துறந்து செல்லுகின்றேன் ; இக்காலத்திலே யான் சொன்னவண்ணம் செய்வதொழிப்பது அருமை ; ஆயினும், என்பேது அன்டாவைத்து இவ்வண்ணமே செய்யக்கடவை. என்னருமைக் குழந்தையான

இந்த அங்கதன் இன்புறுவதற்கே உரியவனும், இதுகாறும் துன்பமென் பதை யறியாதவனும், இளமை யுடையோனும், நல்லறிவிலை பெரியோனு மாகியும், இப்போழ்து துன்புற்றுத் தரையில் வீழ்ந்து வருந்துகின்றனன் பாராய்; இந்த என்னுயிரினும் பிரியமுள்ள இம்மகனை இனி என்னை நினை ந்து வருந்தாவண்ணம் உன்மகனை எண்ணிப் பாதுகாத்தளிக்கக்கடவை. இனி நீயே இவனுக்கு வேண்டியவைகளை யளிப்பவனும், பாதுகாப்பவனும்; அச்சம் நேருங்கால் அச்சத்தைத் தீர்ப்பவனுமாகின்றனை; யானிறந்தபின், நீ தவிர வேறெருத்தரும்மிலர் அன்றே? அன்றியிலே, தாராகுமாரனை இந்த அங்கதன் உனக்கு நிகரான பல பராக்கிரமமுடையோனதலின், அரக்கர் களுடன் போர்செய்யுங்காலையில் முன்னின்று போர்செய்வான்; யௌவன முடைய இம்மைந்தன் போர்க்களத்தில் என் மகனென்பதற்குத் தக்க படியே பற்பல செயல்களையும் செய்வான்; இந்த ஸுஷேணன் மகளாகிய தாரையும் மேலே விளையும் நன்மை தீமைகளை யாராய்ந்தறிவதில் மிகவும் நுட்பமான நன்மதி யுடையவளாதலின், இவள் எந்தச்செயலை நன்கென்று மொழிவளோ, அச்செயலை ஐயமுறுமல் விரைவாகச்செய்க; எதனை தீதென்று விலக்குகின்றனளோ, அச்செயலை யொருகாலையிலுஞ்செய்யற்க; இவள் ஆராய்ந்து தேர்ந்த விஷயம் ஒருக்காலும் மாறுபட்டதில்லை; சக் கரவர்த்தித்திருமகனுடைய காரியங்களையும், தடையின்றி விரைவாகச் செய்க; நீ செய்யாயாகில், பாவமும் சேரும்; பெருமானுஞ் சீறி யுனக்குத் தீமை செய்தருள்வார்; யான் கழுத்திலணிந்திருக்கின்ற இந்தப் பொன்மலர் மாலையை யான் இறப்பதன்முன்னமே கழற்றி யுன்கழுத்திலணிந்துகொள்க; யானிறந்தபின்னர், இதிலுள்ள சிறந்த திவ்விய காந்தி யழிந்துவிடுமென்று மொழிந்தனன். மஹாராஜரும் தமையன் இவ்வண்ணமுரைசெய்த வாக்கி யத்தைக்கேட்டு அவன்மீதுள்ள சினந்தணிந்து மகிழ்வுகுன்றிச் சோகம் அதிகரித்து ராகுவிலை பிடிக்கப்பட்ட முழுமதிபோல் ஒளியிழந்து சாந்தி யடைந்து அம்மொழிகளையெல்லாம் நலமெனவே உடன்பட்டு வாலியின் அநுமதியின்படி அந்தப் பொன்மலர் மாலையை வாங்கி யணிந்து கொண்டா னர். வாலியும் மாலையை யளித்தபின்பு, பொன்னாட்டுக்குப் புறப்படச் சித்தமாகி எதிரில் தெங்கி நிற்கின்ற அங்கதனை நோக்கி, அடா என்னருமைப் தல்வா! காலதேசங்களை யறிந்து இன்பமுறின் மகிழாமலும், துன்பமுறின் வருந்தாமலும், இரண்டினையும் பொறுத்து உன் சிற்றப்பனுடைய கட்டளை யின்படி நடந்துகொள்ளக்கடவை. நீ எவ்வண்ணம் இதுவரையில் என் னிலே எப்படியிருக்கினும் நிரந்தரம் பாதுகாத்தளிக்கப்பட்டு இன்புற் றனையோ, அவ்வண்ணம் ஸுக்கிரீவன் நீ எப்படியிருக்கினும் உன்னை நன்கு மதியான்; ஆதலின், இவனுடைய மதப்படியிருந்து இவன் மகிழும்படி நடந்துகொள்வாயாகில், இவனும் உன்மீதன்புசெய்து அளிப்பான்; ஆத லின், இந்த சுக்கிரீவனுடைய பகைவர்களுடனுவது, அவனைச் சேர்ந்தவர் களுடனுவது தோழமை கொள்ளற்க; எப்பொழுதும் இவனுடைய இதத் தையே கோரிக்கொண்டு இவனுக்காட்பட்டிருக்கக்கடவை.

నచాతిప్రణయఃకార్యఃకర్తవ్యోప్రణయశ్చతే।
ఉభయంహిమహాన్దోషస్తస్మాదన్తరదృశ్యవేత్॥

நசாதிப்ரணயஃகார்யஃ கர்தவ்யோப்ரணயச்சதே।
உபயம்ஹிமஹான்தோஷஸ்த ஸ்மாதந்தரதருக்பவேத்.॥

யாருடனும் மிகவும் நெருங்கியு மிணங்கற்க ; இணங்காமலும் தனித்து நில்லற்க ; இவ்விரண்டும் மிக்க தீமைக்கிடமாகும் ; ஆதலின், யாவருடனும் தக்கபடி நட்புக்கொண்டு வாழ்ந்து மகிழ்க ; என்று மொழிந்து கண்களை மெராளவிழித்துக் கணையினல் வேதனையுற்று நன்கு விழித்து பயங்கரமான பார்வைகளினலே பார்த்து மேலெழுந்த உயிரையுடையனகி யிறந்தனன். பின்பு, தாரை முதலிய வானரமாதர்களும், வானர் படைத்தலைவர்களும் கூவென்றுகூவி ஐயையோ இப்பொழுது கிஷ்கிந்தை பாழாயிற்றே? தோட்டங்களும், மலைகளும், காடுகளும் அழிந்தன ; வானர்களும் ஒளியிழந்தவர்களாயினர்கள் ; எந்த மஹாவீரருக்கு அஞ்சிக் காடுகளும் எக்காலையிலும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்தனவோ, அவர்போல் இனி யாவன் இவ்வண்ணம் செய்வான்? எந்த மஹாநுபாவர் கோலனென்னும் கந்தர்வனுடன் பதினைந்துவருஷம் ஓயாமல் போர்செய்து, இரவென்னும் பகலென்னும் வேற்றுமையின்றியே போர்ந்து பதினேழவது வருஷத்தில் அவனை யடித்து வெற்றிகொண்டு நம்மெல்லோரையும் மகிழ்வித்தனரோ? அத்தன்மையரான தனிவீரராகிய இவர் எவ்வண்ணங் கொலைசெய்யப்பட்டனரந்தோ? என்றிவ்வண்ணம் புலம்பி யழுது சிங்கத்தையுடைய பெருங்காட்டில் பெருங்காளை இறந்துவிடுகையில், அவனைச்சேர்ந்த பசுக்கள்போல வருந்தினர்களே யன்றிச் சிறிதும் இன்புற்றிலர்கள் ; அப்பொழுது தாரையும் பதி இவ்வண்ணம் இறந்ததைக்கண்டு வெட்டுண்டு சாய்ந்த மரத்தின்மேல் படர்ந்திருந்த வல்லிபோலச்சாய்ந்து வாயினைத் தழுவிக்கொண்டு சோகஸாரத்தில் மூழ்கி வருந்தினள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்திரண்டாவது ஸர்க்கம்
முற்றிற்று.

இருபத்துமூன்றுவது ஸர்க்கம்.

தாரையின் புலம்பல்.

அநந்தரம் தாரை வானரர் கோமானை வாலியின் முகத்தை மோந்து இந்த அவ்வாலியைக்குறித்துப் புலம்பலுற்றனள். அந்தோ! என்னுருயிர்க்காவலரோ ! என்னுடைய மொழிகளைக்கேளாமல் ஏன் இவ்வண்ணந் தரையில் படுத்திருக்கின்றீர்; இப்பார்மகள் தேவரீர்க்கு என்னினும் பிரியமுளையாள்போலும், என்னுடன் பேசாமல் இவளையே தழுவிப் படுத்திருக்கின்றீ

ரல்லீரோ? அந்தோ! தெய்வம் இப்பொழுது சுக்கிரீவனுக்கு வசமாகியதோ? இப்போது ஸுக்கிரீவனேயல்லனே வீரமுடையனாயினன்; ரிக்ஷவானரத்தலைவர்களெல்லோரும் தேவரீரையே தொழுதுகொண்டிருந்தனரே? அவர்களெல்லோரும் இங்கே கூடி புலம்புகின்றனர்கள்; அங்கதனும் வருந்துகின்றனன்; இவர்களின் புலம்பலையும் என்னுடைய இம்மொழிகளையும் கேட்டும் என் மறுமொழி மொழிகின்றிலீர்; எந்த இடத்தில் பற்பல பகைவீரர்களும் தேவரீரால் கொலைசெய்யப்பட்டுப் படுத்தனர்களோ, அவ்விடத்தில்தானே தேவரீர் இப்பொழுது ஆயுள்மாண்டு படுத்திருக்கின்றீரந்தோ! நற்குலத்திற்பிறந்தவரும், கசடற்ற தோள்வலியுடையவருமாகிய என் பிராணநாதரே! என்னை அநாதையாக விட்டுவிட்டு மீளாமல் சென்றீரய்யோ! உலகினில் ஒருவரும் சூரன்பொருட்டுக் கன்னிகையை விவாஹஞ்செய்து கொடுக்கக்கடவரல்லர்; யான் சூரனுக்கு மாலையிட்டு மணம் புரிந்திவ்வண்ணம் கைம்பெண்ணையினேனல்லனே? எனது மானமும் அழிந்தது; நற்கதியும், இன்பமும் தொலைந்தன; ஆழமுடைய சோகக் கடலில் மூழ்கினேன்; என்னுடைய இந்த இதயமும் கல்லினுங் கடினமாகியது; இது கணவனிறக்கக்கண்டும் சிதறுண்டு பிளந்தழிந்திலதன்றே? பிரிய முடையோரும், பாதுகாப்பவரும், பிரியஞ்செய்பவரும், போர்களத்தில் தோல்வியுறுதவருமாகிய என் பர்த்தா இப்போழ்திறந்தனரே! ஒரு பெண் மக்கட்பேறுடையவளாயினும், பெருஞ்செல்வமுடையாளாயினும், நற்குண நற்செய்கை யுடையவளாயினும் ஆகுக; அவள் எப்படியிருக்கினும் கணவனற்றவளாயின், கைம்பெண்ணெனவே யன்றே யாவரும் இகழ்ந்துரைசெய்வார்கள்; வீரமுடைய வென்றதேரே! தேவரீருடைய திருமேனியினின்றும் பெருகிய குருதி பாய்ந்து செவப்புற்ற இவ்விடத்திலே இந்திரகோபம்போல் செவந்த பட்டினையியற்றிய பஞ்சணைமெத்தைபோலவே படுத்திருக்கின்றீரே? தேவரீருடைய சரீரமும் துகள்படிந்து உதிரம் தோய்ந்திருக்கின்றமையின், கைகளினுலே தழுவிக்கொள்ளத் திறமைகொள்ளுகின்றிலேன்; இந்த சுக்கிரீவனுடைய தீராப்பகையும், அச்சமும், ஸ்ரீராமனெய்தருளிய ஏரே கணையினுலே தீர்க்கப்பட்டமையின், இவன் மனங்குளிர்ந்தனன்; அந்தோ! என் நாயகரே! தேவரீர் இறந்திருக்கையிலும், தேவரீரைத்தழுவிக்கொள்வதற்கு மார்பில் காட்டப்பட்ட இத்தக்கூரிய கணை தடைசெய்கிறது என்று புலம்பினள்.

அப்பொழுது சேனபதியான நீலன் மலைக்குகையினுள் புகுந்திருந்த தக்சரவம்போன்ற அக்கணையை வாலியின் மார்பினின்றும் பேர்த்தெடுத்தனன். அப்பொழுது அக்கணை அஸ்தகிரியில் மாலைப்பொழுதில் கதிரவ

னது கதிர்போலத் திகழ்ந்தது; உடனே வாயினது தேகத்திலுள்ள காயத் தினின்றும் குருதியானது மலையினின்றும் காவிபடிந்த சுனைநீர்போலத் தாரை தாரையாக நாற்புறத்திலும் பெருகிற்று; இவ்வண்ணம் துகள்படிந்து குருதிதோய்ந்த வாலியின் சரீரத்தைத் தாரை கண்ணீர்களினலே துடைத் தலம்புகின்றவள்போலக் கண்ணீரைப்பெருக்கி அங்கத குமாரனை நோக்கி, அடா என் பெறலரும் புதல்வா! உன் தந்தையின் மரணவஸ்தையைக் கண் ணுறுவாய்; தீராப்பகையென்னும் பாவச்செயல் இப்போழ்து முடிவுபெற்றது; பாலஸூரியன்போன்ற மேனியுடையவரும், பொன்னுலகினை நோக்கிப் புறப் படுபவருமாகிய உன்னுடைய தந்தையைத் தலைவணங்கி வந்தனஞ்செய்யடா என்று புலம்பி யுரைசெய்தனள். அங்கதகுமாரனும் தாரை யுரைசெய்த அம்மொழியைக் கேட்டிடழுந்து கைகளைக்கூப்பித் தந்தையைத் திருவடித் தொழுது அபிவாதனம் பண்ணினன். அப்பொழுது தாரையும் வாலியைக் குறித்து என் பிராணநாயகரே! முன்பு அங்கதன் பணிபுங்காலேகளில் தேவ ரீர் மகிழ்ந்து நெடுங்காலம் வாழ்க; என்று மகிழ்ந்து வாழ்த்தி யருள்வீரே இப்போழ்து என் அவ்வண்ணம் ஆசீர்வாதம் செய்கின்றிலீர்; அருளிச் செய்க; காட்டிடையில் சிங்கத்தினலடிபட்ட காளையைச்சேர்ந்து கன்று டன் கூடிய பசு தன்புறுவதுபோல யானும் அங்கதனுடன் தேவரீரைச் சேர்ந்து வருந்துகின்றேன்; என்னன்புள்ள நாயகரே! உலகினில் யாகஞ்செய் பவர் மனைவியுடன் கூடியே அவபிருதஸ்நானஞ்செய்வார்களே யன்றித் தனி த்துச்செய்யார்களல்லரோ? தேவரீர்மாத்திரம் போர்க்களமென்னும் யாக யில் போர்வதென்னும் யாகத்தைச்செய்துமுடித்து ஸ்ரீராமனெய்த கணை யென்னும் தீர்த்தத்தில் தருமபத்தினியான என்னைவிட்டு எவ்வண்ணம் மர ணமென்னும் அவபிருதஸ்நானஞ்செய்தீர்; போர்க்களத்தில் தேவரீருடைய தோள்வலியைக்கண்டு மகிழ்ந்த தேவராஜனை தேவரீர் தந்தையினல் அளிக்கப்பட்ட பொன்மலர் மாலையை இப்போழ்து காண்கின்றிலேனே? சூரியன் மறைந்து விடினும், வெய்யோனெளி மேருமலையைவிட்டகலாதது போலவே தேவரீர் மரணமுற்றிருக்கினும், ராஜலக்ஷ்மி தேவரீருடைய திரு மேனியைவிட்டகலுகின்றிலது; தேவரீர் போர்செய்வதன்பொருட்டுப் புறப் படுகையில், யான் வேண்டியுரைத்த வார்த்தையும் தேவரீருக்கு இதமென்று தோன்றியிலது; ஆதலின், யானும் தேவரீரைத் தடைசெய்யுந் திறமைகொண் டவளாகியிலேன்; தேவரீர் எனது வாக்கியத்தைக்கேளாமல் வந்திறந்தமை யின், தேவரீரால் யானும் மகனுடன் வருந்திக் கைம்பெண்ணெனு மழுகினையும் இழந்தேனன்றோ என்று புலம்பி யழுது வருந்தினள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்துமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

தாரை துன்புருவதுகண்டு மஹாராஜரும் துன்புற்றது. கூஎ

இருபத்துநான்காவதுலக்கம்.

இவ்வண்ணம் தாரை துன்புற்றதைக்கண்டு மஹாராஜர் தாமும் சோகமடைந்து தியில்வீழ்ந்திறப்பேனென்று பெருமாளேவண்டியதும், பெருமாளதுகேட்டருளித் தாரையைத் தேற்றுவதன்பொருட்டுச் செல்லுகையில், தாரை பெருமாளே நோக்கிப் புலப்பியதும், பெருமாளும் அவளை நன்மொழிகளினால் தேற்றியருளியதும்.

இவ்வண்ணம் தாரை தீராத்துயரங்கொண்டு சோகக்கடலில் மூழ்கி வருந்துவதை மகாராஜர் கண்ணுற்றுப் பகை நீங்கித் தமையனை யறியாமையினாலே கொல்வித்தேனேயென்று மிக வருந்திக் கண்களில் சோகநீர்பெருக்கி மகிழ்வுகுன்றிப் பெருமாளெழுந்தருளியிருக்குமிடஞ்சென்று வில்லைக் கையிலேந்தி நச்சரவத்துக்கு நிகரான கணையைக் கையிற்பிடித்து கம்பீரமாய் நிற்கின்ற அந்தப்பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் நலமுள்ள தோழரே! தேவரீர் பிரதிஜ்ஞை செய்தவண்ணம் நிறைவேற்றியருளினீர்; தேவரீருடைய திறமை கைகண்ட மருந்தாயிற்று; அடியேனுக்கிப்பொழுது போகங்களிலும், உயிர் வாழ்தலிலும், மனம் வெறுப்புற்றிருக்கின்றது; இந்தத் தாரை இவ்வண்ணம் வருந்துகையிலும், அங்கதகுமாரன் இவ்வண்ணம் துயருறுகையிலும் எனக்கு அரசாகூடிசெய்யவேண்டுமென்று எவ்வண்ணம் மனமுளதாகும்; மூன்பு, வாலி காரணமின்றி என்னை வெருட்டியோட்டினமையாலும், வன்மொழிகளை மொழிந்தமையாலும், தீராப்பகை கொண்டு மனையாளையும் அபஹரித்துக்கொண்டு மிகவும் வருத்தினமையாலும், அவனைக் கொல்லும் விஷயத்தில் உடன்பட்டுத் தேவரீரை வேண்டினேன்; அவனிப்பொழுதிறந்த பின்னர், மிகவும் பச்சாத்தாபமடைந்து வருந்துகின்றேன்; இப்பொழுது நான் மூன்பு ரிசியமூகமலையில் வாழ்ந்து கொண்டிருந்ததே நலமென்று எண்ணுகிறேன்; இப்போதிந்த வாலி இறந்தபின்பு, பொன்னுட்டிற்காசனுகி வாழ்கைதன்னையும் நன்கு மதிக்கின்றிலேன்; மஹாத்துமாவான என்னண்ணன் என்னுடன் போர்செய்து என்னை வெருட்டுகையிலும், என்னை நோக்கி, அடா சுக்கிரீவா! யான் உன்னை யுயிர்மாயக் கொலைசெய்யேன்; நீ என்னை எதிர்த்தமையின், உனது கொழுப்பைமாத்திரம் அடக்கிவிடுகிறேனென்று என்மீது தம்பியென்னும் அன்பினால் உரைத்தனனே, அவ்வண்ணமுரைசெய்வது பெருந்தகவுடைய அவனுக்கே தகும்; இவ்வண்ணம் அன்பின்றி யவனைக் கொல்விப்பது கொடும்பாவியான எனக்கே தகும்; அண்ணனைக் கொலைசெய்து அரசாகூடி செய்வதினும், பின்பு நேர்ந்த துயரத்தைப் பொறுப்பது மிகவும் கடினமென்பதை யறிந்தாராயாமல் மண்ணாசை பெண்ணாசையையே முக்கியமாகக்கொண்டு கொடும்பாவியான என்னைப்போல மற்றவன்தான் இவ்

வண்ணம் மிகவுந்திறமையுடைய அண்ணனைக் கொலைசெய்விக்கத் துணிவு கொள்ளுவன் ; என் தலைமையன் மஹாமகிமை யுடையோனுதலின், என் னைக் கொலைசெய்ய நினைத்திலன் ; யான் கெடுமதி யுடையோனுதலின், அவனைக் கொலைசெய்விக்க மனம்துணிந்தது ; என்னைக் கிளையிலைடித்து வருத்தி அடா தம்பி ! நீ இனி இவ்வண்ணம் என்னை எதிர்த்துப் போர் செயற்க ; என்று மதிகூறிக் கொலைசெய்யாமல் விட்டுவிட்டமையின், அவனல் தருமமும், உடன்பிறப்பும், பெருந்தகவுடைமையும், நன்கு பாதுகாக்கப்பட்டன. என்னலோவெனில், சினமும், பகையும், காமமும், குரங்கின் தன்மையும் நன்கு விளக்கப்பட்டன. ஸ்ரீராகுநந்தன ! நினைத்தற் கரியதும், துறக்கத்தக்கதும், விருப்புறற்கரியதுமாகிய கடும்பாவத்தை யண்ணனைக் கொலைசெய்வித்தமையின், விசுவரூபனைக் கொலைசெய்த தேவேந்திரன்போல அடைந்து வருந்துகின்றேன் ; இந்திர னுடைய பாவத்தையாயினும், பூமி, ஜலம், மரங்கள், பெண்கள். இந்நால் வரும் ஏற்றுக்கொண்டு, வேழ்மண், நுரை, பிஷின், தூமை என்னும் இந் நான்கு விதங்களாக முறையே தாங்கினர்கள். இந்த என்னுடைய கொடும் பாவத்தை எவன்தான் ஏற்றுக்கொள்வான் ; தருமமின்றிக் குலத்தை யழித் திவ்வண்ணம் வருத்தமுற்ற பிரஜைகள் என்மீது அச்சத்தினலோ அருளினலோ அன்பினலோ செய்யும் மரியாதையையும், விரும்புகின்றி லேன் ; இளவரசனுகுவதையும் விரும்பேன் ; அரசனுகுவதையும், வேண் டேன் ; கொடும்பாவஞ்செய்து உலகினில் பெரும்பழியையும், இகழ்வை யுமடைந்து வருந்துகின்றமையின், பெருமழையில் நீர்வெள்ளம் பள்ளத் தாக்கில் பெருகி வளர்வதுபோலச் சோகமென்னும் பெருவெள்ளம் உல கினில் தாழ்ந்த என்மேல் பெருகி வளர்கின்றது. அண்ணன் கொலை யென்னும் பின்புறமும் வாலுமுடையதும், ஸந்தாபமென்னும் துதிக்கை, கண், தலை, தந்தங்களை யுடையதுமாகிய பாவமென்னும் மதயானை நதி யின் கரையைத்தாக்கி இடித்துச் சாய்ப்பதுபோல என்னையும் மோதி இடித்துச் சாய்க்கின்றது ; ஸ்ரீராகுலதுரந்தரா ! நெருப்பில் காய்ச்சின தங்கம் அழுக்குச்சிட்டத்தைவிட்டகலுவதுபோல என் மனதில் விவேகம் பாவத்தைச்சேராமல் அகலுகின்றது. ஸ்ரீராகவா ! இந்த அங்கதகுமான் இவ்வண்ணம் சோகமடைந்து தவிக்கின்றமையின், இவ்வானரர்களெல் லோரும் மரணமுறுபவர்போலத் தவிக்கின்றனர்கள். உலகினில் நற்குண நற்செய்கையுடைய மகன் பெரும்பாலுமுளனுயினும், இந்த அங்கத னுக்கு நிகரான குமாரன்மாத்திரம் எங்குமிலன் ; என்னண்ணனைப் போன்ற சோதரர்களரும் எங்குமிலர் ; இனி அத்தன்மையனை அண்ணனுடன் வாழ்வதேது ; ஸ்ரீராமசந்திரா ! இந்த அங்கதன் சோகத்தினுல்மடிவாமல் பிழைப்பானுயின், தாரையும் பிழைப்பாள். அங்கதனின்றி தாரை மாத் திரமொருக்காலும் உய்யாளென்று நம்புகின்றேன் ; ஆதலின், யான் அண்ணனுடனும், அங்கதகுமாரனுடனும், மறுபிறவியிலாவது நட்பினைக் கோரித் தீயில் விழுந்திறப்பேன் ; இவ்வானரர் தலைவர்கள் தேவரீருடைய

கட்டளையின்படி நீராட்டியாரைத் தேடி யளிப்பார்கள். யானிறந்துவிடினும் தேவரீர் எல்லாக்காரியங்களையும் நிறைவேற்றிக் கொள்ளவல்லீர்; ஆதலின், அண்ணனைக் கொல்வித்த கொடும்பாவியான யான் இறப்பதன்பொருட்டனுமதி கேட்கின்றேன்; என் வேண்டுகோளுக்கிறங்கி யனுமதி கொடுத்தருள்க; என்றிவ்வண்ணம் புலம்பி வேண்டினர்.

பெருமாள் அம்மொழிகளைக் கேட்டருளித் தாமும் கண்ணீர்பெருக்கி வருந்தி முகூர்த்தகாலம் சிந்தையுற்றிருந்து யாவராலும் யாது பதிலருளிச் செய்வாரென்று பார்க்கப்பட்டுப் பார்மடந்தைபோல மிகப் பொறுமையுடையவராதலினாலும், அனைத்துலகங்களையும் பாதுகாத்தளிப்பவராகலாலும், இவ்வண்ணம் இவர்கள் துயருறுவதைப்பொறுமல் இவர்களைத்தேற்றி மகிழ்விப்பதன் பொருட்டுத் திருவுளங்கொண்டு சோகக்கடலில் மூழ்கி வருந்துகின்ற தாரையைக்கடாக்ஷித்து அவளருகிலெழுந்தருளினர். உடனே அங்குள்ள வானரத்தலைவர்கள் கணவனைத்தழுவிக்கொண்டு புலம்புகின்ற அந்தத் தாரையைப் பெண்களைக்கொண்டு எழுந்திருக்கச் செய்கையில், தாரையும் பதியைவிட்டுத் திரும்பி வில்லும் கணையுங் கையிலேந்திக் கதிரவன்போலக் காந்திகொண்டு விளங்குகின்ற ஸ்ரீராமபத்திரனைக் கண்டு இவருடைய திவ்விய தேஜஸ்வினாலும், ராஜலக்ஷணங்களினாலும், இவரே ஸ்ரீராமபத்திரனென்றறிந்து துன்புற்றுக் கொண்டே பெருமானுடைய சமீபத்தையடைந்து சோகத்தினால் மெய் நடுங்கி வருந்திப் பெருமானை நோக்கிக் கேட்டருளீர் சக்கரவர்த்தித் திருக்குமாரரே!

த்வம் ஸமே யஶ்சயுராதஶ்ச ஜிதேந்த்ரியஶ்சோத்தமதார்மிகஶ்ச।
அக்ருத்யகீர்திஶ்சவிசக்ஷணஶ்ச க்ஷிதேர்மஹாவானிதி ஜோபமாகஃ॥

த்வமப்ரமேயச்சதுராஸனச்ச ஜிதேந்த்ரியச்சோத்தமதார்மிகச்ச
அக்ஷய்யகீர்திச்சவிசக்ஷணச்ச க்ஷிதேர்மஹாவானிதி ஜோபமாகஃ.

தேவரீர் அளவிடத்தகாதவரும், தீவினையோர்கள் அடைவதற்கரியவரும், புலன்களுக்கு வசப்படாமல் புலன்களையே தன் வசமாக்கியருளியவரும, தருமமுணர்ந்தோர்களுள்ளும் தருமமுடையோர்களுள்ளும் சிறப்புற்றுயர்ந்தவரும், ஒருக்காலையிலும் குறைவும் அழிவுமுறுத பெரும்புகழுடையவரும், உபய விபூதிகளையும் தக்கபடி நடாத்துவதில் மிகத் திறமையும் வலிமையுமுடையவரும், பார்மகட்குநிகரான பொறுமையுற்றுத் தஞ்சமடைந்தவர்களின் பிழைகளைப் பொறுத்துப் பாதுகாத்தளித்தருள்பவரும், உதிரம்போலச் சிவப்புற்றும் செந்தாமரைமலர்போல வியன்றகன்றுமுள்ள திருக்கண்களையுடையவருமாகிய ஸ்ரீமந்நாராயணனே ஆகின்றீர்; தேவரீர் அப்பிராகிருதமான சுத்தஸத்துமயமான திவ்விய சரீராவயவங்களையுடையவராகியும், தீயோர்களை வென்று நல்லோர்களைப் பாதுகாப்பதன்பொருட்டு லீலாமானுஷ திவ்வியமங்கள விக்கிரஹத்தையுடையராக அவதரித்துக் கோதண்டத்தையும் பாணத்தையும் திருக்கைகளிலேந்தி அதிமானுஷ பலபராக்கிரமங்களையுடையராய் அவிகளும், ஆண்பிள்ளைகளுங் கூடக்கண்டு

மயங்கிப் பெண்ணுருக்கொண்டு புணர விரும்பத்தக்க திவ்வியாவயவ ளெனந்தரிய முடையவருமாகியும், பின் பிவ்வுருவை விட்டு முன்போலவே அப்பிராகிருத திவ்வியமங்களவிக்கிறஹமுடையராகுவீர் ; என்று பெருமா னுடைய திவ்வியமங்களவிக்கிறஹத்திலீடுபட்டுப் புகழ்ந்து மீளவும் வானர ஜாதியாகையால், மதிகலங்கிப் பெருமாளை நோக்கி, ஸ்வாமி ! தேவரீர் எந்த பாணத்தினல் என் பர்த்தாவை யடித்தருளினீரோ அந்தக் கணையினலே தாமென என்னையும் அடித்தருள்க ; என் பர்த்தா என்மீது மிகப் பிரிய முடையவாரதலின், பொன்னுலகிலும் என்னைப் பிரிந்து மகிழ்வுறார் ; இவர் பெண்ணுலகை யடைந்தும் முற்றும் சுற்றிப்பார்த்து என்னைக் காணு ராயின், சிறந்த ஆடையாபரணங்களையுடைய தெய்வப்பொதுமகளிர்களைக் கண்ணுறினும், மகிழ்ந் தவர்களுடன் சேர்ந்தின்புறார் ; மிகவும் அழகிய இந்த மலையருகில் தேவரீர் எழுந்தருளியிருந்தும் பிராட்டியாரைப் பிரிந் திருக்கின்றமையின், எவ்வண்ணந் துன்புற்று வருந்துகின்றீரோ, அவ் வண்ணமே விண்ணுலகிலும் என் பதி என்னைப் பிரிந்து, மகிழ்வுகுன்றி யொளியிழந்து, மெய்வாடி, வருந்துவாரய்யோ தேவரீர் பெண்டாட்டியைப் பிரிந்தவர்களுலுந் துன்பம் மிகவும் பொறுத்தற்கரியதென்பதை நன் கறிந்தருள்வீரல்லீரோ ? ஆதலின், என் பிராணநாதன் என்னைப் பிரிந்து வருந்தாவண்ணம் என்னைக் கொலை செய்து என் பர்த்தாவிடம் என்னைச் சேர்த்து மகிழ்வித்தருள்க. தேவரீர் என்னைக் கொலைசெய்யும் விஷயத்தில் பெண்கொலைசெய்வது தருமமன்றே என்று எண்ணற்க ; என்னை வாலியின் ஆத்துமாவாகவே யெண்ணிக் கொலைசெய்தருள்வீராகில், பெண்கொலைத் தேவரீரை யணுகாது; பதிக்குப் பாரியை பாதி யாத்துமாவென்றும், பத்தினி பதிக்கு வேறல்லளென்றும், முதனூல்களில் குறிக்கப்படுகின்றதன்றே ? பாரியையைப் பதிக்களித்து மகிழ்விப்பதை விடச் சிறந்த தருமம் வேறு ன்றுமில்லையென்று தருமமுணர்ந்தோர்கள் உரைக்கின்றனர்களே; ஆதலின், என்னைப் பதியுடன் சேர்த்துச் சிறந்த தருமத்தை யடைந்தருள்க ; இவ் வண்ணம் என்னைப் பதியுடன் சேர்ப்பீராகில், இது நல்வினையே யாகு மல்லது, தீவினை யாகாது ; கொலைசெய்த பாவமும் சேராது ; இவ்வண் ணம் நாதனின்றித் துயருற்று வருந்துகின்ற என்னைக் கொலைசெய்து பதி யுடன் சேர்த்து இன்புற்று வாழுமாறு செய்தருள்க ; மதயானைபோலுலா வுகின்றவரும், வானரப்படைகளனைத்துக்கும் இறையவரும், மிகவும் புத்தி யுடையோரும், சிறந்த பொன்மணி மாலை யணிந்தவருமாகிய என்கண வனை விட்டுப் பிரிந்து வருந்தி நெடுங்காலம் வாழ்வுற யான் விருப்பங் கொள்ளுகின்றிலேன் ; என்றிவ்வண்ணமுரைத்துப் புலம்பினள். பெருமா னும் தாரை யுரைசெய்த வாக்கியங்களை யெல்லாங் கேட்டருளி யவளைத் தேற்றி யவளை நோக்கிக் கேளாய் வீரபத்தினியாகிய தாரையே ! நீ யுலக வழக்கத்திற்கு விருத்தமாக எண்ணமுறற்க ; எல்லாவுலகங்களும் தெய்வத் தினையிற்றப்பட்டு அதன் சங்கற்பபடி நடப்பன வல்லவோ ? ஒருவர்க்குந் துன்பம் நேர்வதும், இன்பம் நேர்வதும், தெய்வச்செய்கையேயன்று

யாவரும் உரைக்கின்றனர்களல்லரோ? மூவுலகத்தவர் தெய்வத்தினுலளிக்கப்பட்ட துன்பத்தையோ இன்பத்தையோபெற்று அதற்கு வசப்பட்டிருக்கின்றனர்களே யன்றித் தெய்வத்தை மீறி நடப்பவர் ஒருவருமிலர்; ஆதலின், தெய்வத்தினுல் அளிக்கப்பட்ட முன்போன்ற இன்பங்களையும் அடைந்து மகிழ்வாய்; உனது புதனும் யுவராஜனுகி மகிழ்வான்; இவ்வண்ணமே தெய்வத்தினுல் ஸங்கற்பிக்கப்பட்டுளது; ஆதலின், நீ துன்புறற்க; ரனசூரன் மனைவியர்கள் இவ்வண்ணம் வருந்திப் புலம்பார்களே என்று அருளிச்செய்து தேற்றியருளினர். தாரையும் இவ்வண்ணம் பெருமாளாலே தேற்றப்பட்டவளாகிச் சோகத்தை யுள்ளடக்கி மனந்தேர்ந்து மௌனமடைந்தனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்துநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

தனிஸ்லோகி—புஜயுத்தத்தாலும், வாக்யுத்தத்தாலும், வாலியைச்சென்று கொன்று வெற்றிகொண்டு பெருமாள் நிற்கிறவளவிலே பர்த்ருவதஜனிதமான சோகக்குரோதங்களாலே விக்ருதையாய் என்னுண்மகனைக்கொன்றவனை வாயாற வெய்யவேணுமென்று கட்டியுதித்து வந்த தாரையானவள் பெருமாளைக்கண்டு அவருடைய மகிமையினுலே கோபந்தணிந்து ஸத்துவகுணந்தலையெடுத்து அதன்காரியமான ஜ்ஞானம்பிறந்து தெளிவுற்ற சித்தையளாகையாலும், அவ்வஸ்துவை யொரு போகியாக ஸாக்ஷாத்கரித்து நிர்ணயம்பண்ணி, வெய்யப்புக்க வாயாலே வாழ்த்துகிறுள். பகவதஸாக்ஷாத்காரம்பிறந்தால் பிரதிபந்தகம்போய் தத்துவாநுபவம்பண்ணைக் குறைவில்லையிறே? ஸ்ரீவால்மீகிபகவான், அல்லாத நிஷிகளையும், வேதங்களையும்போலே காந்தாம் பகவானுடைய பரத்வோபபாதனம் பண்ணத்துடங்கி வசனந்தரங்களாலே ஸாம்ய சங்கை பண்ணும்படியாவது, தேவதாந்தரங்களினுடைய ஆதிக்கியசங்கை பண்ணும்படியாவது, பூர்வாபரவாக்கியங்களும் தர்மிக்ராஹக ப்ரமாணங்கொண்டு ஸாமாநாதிகரண்ய வாக்யங்களுக்கும, அந்தர்யாமி பர்யந்தாநுஸந்தானத்தாலே என்றும், அவ்வோதேவதைகளைச்சொல்லுகிற ப்ரதேசங்கள் தானும் தத்வபரமன்று; ப்ரசம்ஸாபரமென்றும், ஆகாச, ப்ராண, வாமதேவேந்த்ர ப்ரஹ்லாதாதிகளுக்குப் ப்ரத்வம்வரிலாயித்து; ருதராதிகளுக்குப் ப்ரத்வம் வருவதென்கிற துல்யந்யாயத்தாலும் உபபாதிக்கவேண்டி க்லேசபகுளமாயிராதபடி ஆண்பெண்ணடங்களும் பிரசித்த வைபவமுடையவரைப் பெருமாளென்று அறிவிக்கைக்காக தாராங்கதாதிகளை யிட்டுத் ததுவநிர்ணயம் பண்ணுகிறுன்—இதில் இத்தைக்கு முன்பு சண்டறியாதிருக்கச்செய்தேயும், திருமேனியில் ஸ்வயம்வரித்துக்கிடக்கிற ராஜலக்ஷணங்களாலும், பெருமாளுக்கு அஸாதாரணமான கண்ணழகாலும், என்னுடைய பர்த்தாவைக்கொன்ற பெருமான் இவர்தானென்று அறிந்தாளென்று ஸௌலப்யத்தில் ஒரு யோஜனையும், ஸௌலப்ய சிந்ஹங்களாலே மறைத்திருக்கச்செய்தேயும், ஊஷக்கத்தக்க பரத்வகுணங்களாலும், பரத்வ ஸூசகமான திருக்கண்களாலும், கண்டவாத்தாற்றனதே யுலகே கின்றுனென்றும், கிழலெழுகிற புருஷகார ப்ராதான்யத்தாலும், இச்சக்கரவர்த்தித்திருமகளுர் அப்பரவஸ்துதானென்று அறிந்தாளென்று பரத்வத்திலே ஒரு யோஜனையுமிறே? அவ்விரண்டையும் சேர்த்து யோஜிக்கிறது; (த்வம்) இவளுடைய பர்த்ருபக்தியிருக்கிறபடி, ராஜாக்கனையும் கீயென்கிறுள். (த்வம்) மேலே

அப்ரமேயக்ச என்று துடங்கி ஏறப்புகுகிற குணபாரத்துக்கு அநிஷ்டானமுண்டாம் படி ஆச்ரயந்தன்னைப் பாரிக்கிறாள் (த்வம்) அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணங்களையுடைய ஒரு சிராங்ஙகையாம்படியான ஸ்வரூபத்தின் கன மிருந்தபடியேன்; (த்வம்) ராவண துர்த்துபி முதலாளோர்களை யகப்பட தலையழித்த வாலியைக்கொன்று வெற்றிகொண்டு ஒன்றுஞ்செய்யாதாரைப்போலே நின்ற ஸ்வ யென்னென்றாள். (த்வம்) வாலிக்கஞ்சிக் கிடங்கடைந்து கிடந்த மஹாராஜாநக் ககப்பட வெற்றிகொ கந்து சரணாகதவத்சலரான நீர் த்வம்) டெண்களும், இளையோர்களுமான தாக்களும் அகப்பட மதியாதே வந்து கிட்டும்படியான நீர் (த்வம்) ஒரு வஸ்துவை மீவது வஸ்துவாக்குமாபோலே வாயாற வெய்யவந்த என்னை வாழ்த்தும்படி பண்ணிவைத்த நீர் நீ வாழ்த்துகைக்கு உருப்படாயாகில், அது தன்னைத் துடங்காகாதோ வென்ன? (அப்ரமேயஃ) உம்மையுமறியாதே என்னையுமறியாதே முகங்கொள்ளலாமோ வென்று பார்த்தேன்; அது முகங்கொள்ளவொண்ணாதாயிருந்தது; அப்ரமேயஃ; நானே யன்று வேதமும் அகப்பட்ட மீளும்படியன்றோ? தேவரை அளவிடக்கூடாமையிருப்பது (அப்ரமேயஃ ப்ரமைக்கு விஷயமாவது, பிரமேயமிறே பிரமையாகிறதுதான் நன்று அனுபவித்தலிறே? அதாவது, ப்ரத்யக்ஷாதுமானுகமானுன்யஜ்ஞாநமிறே? அம்மூன்றுக்கும் விஷயமல்லீராயிருந்தீர்; (அப்ரமேயஃ) பிரமாணங்களுக்கு விஷயமல்லீரென்னுமிடந்சொல்லவேண்டுமோ? தேவர் மகிமையை யளவிட ஸர்வஜ்ஞரான தேவராலுதான் முடியுமோ? சித்தியமாகையால், காலத்தினால் அளவில்லை; விபுவாதலின், தேசத்தினாலும் அளவில்லை; எல்லாவுயிர்களும் தேவரீர்க்கு சரீரபூதங்களாகையாலே வேறே சேஷியில்லாமையால், வஸ்துவினாலும் அளவில்லை; (த்வமப்ரமேயச்ச) என் கண் முகப்பே கிற்கச்செய்தேயும் எட்டப்போகிறதில்லை; இவன் என்று சொல்லும் படி கிட்ட இருக்கையிலும், அவனென்று சொல்லும்படி அளவிடவரியராகின்றீர்; கண்ணிட்டுப்பார்த்தவாறே எளியீராயிருந்தீர்; நெஞ்சிட்டுப்பார்த்தவாறே அறியீரா யிருந்தீர்; கையும் வில்லுமாய் எளியீராயிருக்கிற நீர் கையும் சங்குசக்கரங்களுமான பரவஸ்துவாயிருந்தீர்; பரத்வம் எட்ட ஒண்ணுதென்றிருந்தோம்; ஸௌலப்யந் தானும் எட்டப்போகிறதில்லை; ஒரு பரிகரமன்றிக்கே தனிமைப்பட்டாப்போலே யிருக்கிற நீர் அபரிமித பரிகரரைப்போலே உள்கொள்ள வொண்ணுதபடியாயிருந்தீர்; பிதாவின் நியோகத்தாலே தாபஸராய் வனவாஸம்பண்ணப்போந்தீர்; விராத கர கபந்த வாலிகளைக்கொன்று திரியாநின்றீர்; உம்முடைய நினைவும் செயலும் அறி யிடப்போகிறதில்லை; அந்தஃகரணத்துக் கெட்டவொண்ணுதென்றழிந்தால் பாவ்ய கரணந் தனக்கெட்டலாமோவென்றிருந்தோம்; (ஜராஸதச்ச) அதுவும் செய்ய வொண்ணுதபடியாயிருந்தது; மனஸ்ஸால் கிட்டவொண்ணுத்தையோ? சரீரத்தால் கிட்டலாகிறது; நல்வழியே போவார்க்குக் கிட்டலாமத்தனைபோக்கி, வழிகெட்டு நின்றவர்களுக்கு ஒருக்காலும் கிட்டவொண்ணுதாயிராநின்றது; (ஜராஸதஃ) ஆதல் விசரணகத்யவஸாதநேஷ்வ. இறே - அப்படிக்கு விசரணைத்தமாய் பொடியாக்க வென்று பார்த்தால் ஸுஸூக்ஷ்மம் என்று ஸுக்ஷ்மவஸ்துவாகையாலே பொடியாக்க வொண்ணுது; கதியாய் நின்ற விடத்திலும், கடக்க வடிக்க வென்று பார்த்தால் எங் குப் பரந்துளனுகையாலே கடக்க வடிக்கப்போகாது: அவஸாதநமாய் முடிக்க வென்று பார்த்தால் நித்தியமாகையாலே நாசம்பண்ணவொண்ணுது; வாலி வதகுபித ரானவர்களும் வந்து அடர்த்து பிரதி பண்ணலாமோவென்றிருந்தோம்; அப்படி வருவார்க்கு அணுகவுங்கூடவொண்ணுதபடியிருந்தீர்; இப்படி கர்விதராய் பரதார ராஜ்ஜியங்களைப் பறித்தாருவதாகச் சொன்றீரென்றிருந்தோம; (ஜிதேந்த்ரியச்ச) அப்படியன்றியிலே, மஹாராஜர்க்குக் கொடுத்தபடியாலே விஷயசபலரன்றியிலே யிருந்தீர்; புலன்களும் அடங்காதே கண்ட விஷயங்களிலே சபலக்களாகையான்

பெருமாள் தாரைமுதலியோரைத் தேற்றியது, எஉ

இருபத்தைந்தாவது லர்க்கம்.

மஹாராஜர் பெருமாளுடைய கட்டளையின்படி அங்கதகுமாரன் முதலான வர்களுடன் வாலிக்கு ஸம்ஸ்காரஞ்செய்வித்து நீர்க்கடனையும் முடித்துவிட்டுப் பெருமாளருகில் வந்து சேர்ந்தது.

அநந்தரம் பெருமாள் இளையபெருமாளுடன் கூடி மஹாராஜர் முதலானோர்களுடைய சோகத்தினால் மிகச் சோகமடைந்து மஹாராஜர் தாரை அங்கதகுமாரன் முதலானோர்களை நோக்கிக் கேளீர் அன்பர்களே! சோகமுற்றுப் பரிதாபமுறுவதினாலே பொன்னுடுசேர்ந்த வாலிக்குநலம் விளைவதில்லது; ஆதலின், சோகத்தையடக்கி மேல் நடக்கவேண்டியகாரியம் யாதுளதோ, அதனைச்செய்து வாலி நற்கதியடையுமாறுசெய்க; எக்காலத்திலும் உலகவழக்கம் யாதுளதோ, அதனை யாவரும் செயல்வேண்டும்; ஒருவன் இறந்துவிடுகையில், கண்ணீர்விட்டழல்வழக்கமும் செய்யப்பட்டது; ஸர்வலோகநியாமகனை ஸ்ரீமந்நாராயணனைமீறி யொருசெயலும் எவராலும் செய்து முடிப்பதருமை; உலகத்தில் யாவும் உண்டாவதற்குத் தெய்வமே காரணம்; தெய்வமே எல்லாச்செயல்களுக்குந் துணையாகும்; எல்லாவுயிர்களையும் ஒரு செயலைச்செய்யும்படி யேவுதற்கும் தெய்வமே காரணம்; ஒருவனும் எச்செயல் செய்வதற்கும் கர்த்தாவல்லன்; ஒருவனை ஒருசெயல் செய்யும்படி யேவுதற்கும் திறமைகொண்டவனுமல்லன்; எல்லோரும் ஈச்வரனுக்கு வசப்பட்டே யிருக்கின்றனர்கள்; எல்லாவற்றிற்கும் தெய்வமே தஞ்சம்; தெய்வமும் ஒருவர் நல்வினையுறுவதற்கும், தீவினையுறுவதற்கும்,

---

நிக்கே அவை உம்முடைய கீழே யடங்கும்படி அமுக்கியாள வல்லீராயிருந்தீர்; ஆரேனும் ஒரு புருஷனும், எதேனும் ஒரு ஸ்திரீயைக்கிட்டினால் எறிட்டுப்பார்க்கக் கடவதாய் வாய்த்திருப்பது; அப்படியிருக்க, நான் இத்தனைபோது கிற்கிறவிடத்தில் மூகமெடுத்துப்பாராதே நிற்பதே என்ன விரக்தரோ இவர் என்கிறாள். நாட்டோ பதிக்கிவை படைத்தீரத்தினோடோக்கி நாட்டானைப்போலே புலன்களுக்கு ஆள்பட்டு இருந்தீரல்லீர்; இப்படி விரக்தராயிருக்கிறவர் நம்மை நலிவானேன்; அதார்மிகரோ வென்றிருந்தோம்; (உத்தமதார்மிகஃ) இந்த வியாபாரமெல்லாம் பரமார்த்தமாக உபகரிக்கையாயிருந்தது; தனக்கென்று செய்யுமவன் அதமதார்மிகன்; தனக்கும் பிறருக்குமென்று செய்யுமவன் மத்யமதார்மிகன்; பிறர்க்கென்று செய்யுமவன் உத்தமதார்மிகன்; அன்றிக்கே, தார்மிகன், உத்தார்மிகன், உத்தரதார்மிகன், உத்தமதார்மிகன், என்று தார்மிகர்களும் நால்வர்; வர்ணாச்ரமோசிததர்மமுடையவர்கள், உத்தார்மிகராகிறார்; பக்திமார்க்கமுடையவர், உத்தர தார்மிகராகிறார்; எல்லாவுயிர்களுக்குந் தஞ்சமாயிருப்பவர், உத்தமதார்மிகராகிறார்; புருஷகார வசிகார்யர், இப்படி உத்தமதார்மிகராயிருந்தீர்;—ஒரு நோயஸ்ஸாதனமான தர்மமேயாய் பல பர்யந்தமன்றோவென்றிருந்தோம்; (அகாய்யதீர்த்திச்ச) மன்னும் பெரும் புகழாயிருந்தீர்; ஒருவராலும் மதிக்கவொண்ணாத புகழுடையீராயிருந்தீர்; அதாவது, தனி வீரனை வாலியைக்கொன்று தேடிப்படைத்த புகழ்க்கு;மறைந்து கொன்றீரென்றும், பிழையின்றிக் கொன்றீரென்றும், பயனின்றிக்கொன்றீரென்றும்,

உரியகாலத்தைக் கடந்து நடக்கின்றிலது ; தெய்வம் ஒருக்காலும் அழிகின்றிலது ; ஆதலின், தத்தம் முன் வினையை யனுபவித்து ஒருவனும் தெய்வத்தை மீறி நடவான் ; தெய்வமான ஸ்ரீமந்நாராயணனுக்கு இவர் இனையதாரென்றுவது, இவர் வீரமுடையோரென்றுவது, இவர் தோழரென்றுவது, இவர் சுற்றத்தாரென்றுவது பக்ஷபாதஞ்செய்து தனது சங்கற்பத்துக்கு வேறுக ஒன்றுஞ்செய்தருளார். ஆதலின், பெருமாள் ஒருவர்க்குப் வயப்படார் ; ஆகையால், எவரெவருடைய காலம் எப்படி யெப்படி முடிகிறதோ, அது தெய்வச்செயலெனவே யறிந்து வருந்தாதிருத்தல்வேண்டும்; அறம்பொருளின்பம் வீடு என்னும் நால்வகைச்சித்திகளும் ஸ்ரீமந்நாராயணனாலேதான் கிடைக்கும் ; ஆதலின், வாலியும் இப்போது தன் முன் வினையின்பயனை யனுபவித்தனன்; அன்றியிலே, அவன் அறம்பொருளின்பங்களையும் சேர்ந்தமையின், நற்கதியையே யடைந்தனன் ; தருமத்தையே மேற்கொண்டு போரில் பின்செல்லாது வெற்றிகொண்டு உயிரைத் துரும்பாக நினைத்து மடிந்தமையின், அவன் பொன்னுடி பெறுவதிலும் ஐயமுளதோ ? இப்போழ்து வாலி எந்தக்கதியையடைந்தனனோ, அக்கதிமிகச் சிறந்தது; ஆதலின், வருந்தியதுபோதும்; இனிச் செய்யவேண்டிய கருமங்களைச்செய்க ; என்று தேற்றி யருளிச்செய்தனர். அப்பொழுதிலையபெருமானும் சோகமுற்று வருந்துகின்ற மஹாராஜரை நோக்கி, மஹாராஜரே ! பெருமாளிவ்வண்ணம் அருளிச்செய்கையிலும், ஏன் துன்புற்று வருந்துகின்றீர் ; உன் தமையனுக்குச் சரமகைங்கரியங்களை விரைவாகச் செய்விக்கக்கடவீர்; தாரையையும், அங்கதனையும் தேற்றி யவர்களுடன் சேர்ந்து வாலிக்கு ஸம்ஸ்காரஞ் செய்வதற்குப் போதுமான உலர்ந்த காஷ்டங்களை

அநேகம். கண்ணழிவுஞ்சொல்லி யழிக்கலாமோ வென்று பார்த்தோம் ; தேவரீர் என் பர்த்தாவுக்கு அருளிச்செய்த உத்தரங்களிலில் அப்படி யழிக்கவொண்ணாத புகழுடையீராயிருந்தீர் ; இப்படி மாறாத புகழ்படைக்கைக்கடியென்னென்றிருந்தோம் ; (விசகூஷச்ச) ஸர்வசக்தியுமுடைய தேவரீருக்கிதுவும் ஒரு எற்றமோ ? மேன்மேலும் பதிலுரைத்து எங்கள் வாதத்தையடக்கவல்ல பொறிவாளராயிருந்தீர் ; வாலியைக் கொன்று மஹாராஜரைக் கூட்டினீராகையாலே, நல்லாறறிவீர், தீயாறறிவீர், இவ்வுலகத்தெல்லாமறிவீராயிருந்தீர் ; இப்படி விசக்ஷணராகையாலே சத்துருசேஷங் கூடாதென்று அங்கதனையும் முடிப்பிப்பீரோ வென்றிருந்தோம்; (க்ஷிதிக்ஷமாவான்) பொறுமையிலும் பூமியாயிருந்தீர் ; வாலிமேலுற்ற கோபத்திலில் அங்கதனையும் என்னையுந் தொலையாதிது கிற்றற்கென்னென்றிருந்தோம் ; (க்ஷதஜோபமாக்ஷ:) உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணனென்றும், ஸர்வரக்ஷகத்வ ஸௌசகமான இக்கண்ணின்வைலக்ஷண்ய மிருந்தபடியென்கிறாள். வாலிமேலுற்ற சிற்றத்தால் தோற்றிய கண் சிவப்புமாறுதிருக்கினும் என்னைக்கண்டு கொலைசெய்யாதிருந்ததேன் ; இக்கண் சிவப்பு பிராட்டியின் பிரிவினாலோ ! வாலிமேலுற்ற சிற்றத்தினாலோ ! மஹாராஜர்மீதுள்ள அன்பினாலோ ! தெரிகிறதில்லை ; இங்குற்ற சகாரங்கள் இங்கு கூறுத கிவ்விய கல்யாண குணங்களையும் சேர்க்கின்றன ; அபஹதபாப்மத்து வாதிகளுக்கு எதிர்த்தட்டாக வேறுறு எண்குணங்களையுங் காட்டினர். தனிசுலோகியிலை இது மிக விரிந்துளதாகையின், விரிவினிற்கஞ்சித் தொகுத்துரைத்தனம்.

மிகுதியாகக் கொணருமபடி கட்டளை செய்தனுப்பிக்கக்கடவீர். அக்கட்டைகளும் சிறந்த சந்தனக்கட்டைகளாகவே யிருப்பது நன்று; மிகவருந்திப்புலம்புகின்ற இவ்வங்கதனையும் தேற்றுக; இனி இக்காரமெல்லாம் உன்னதினமாயினமையின், புன்மதிகொள்ளாமல் பெருமதிபூண்டு தக்கபடி கட்டளைசெய்க; அங்கதன்சிறந்த மாலைகளையும், பலவகை யாடைகளையும், கந்தங்களையும், எண்ணெய் நெய் முதலிய மற்றும் வேண்டிய திரவியங்களையும் கொணர்வான்; வாரீர் தாரயே! நீர் வாலியை முதுகாட்டிற்குக் கொண்டுபோவதற்காகச் சிவிகையை விரைவாகக் கொணர்க; எச்செயலும் விரைந்து செய்வதே தகுதியானது; இப்படிப்பட்ட தருணத்திலே மிகவுந் துரையுடன் செயல்களைச்செய்து முடித்தல்வேண்டும்; அச்சிவிகைக்கு வாஹகர்களும் ஸந்தத்தராகக்கடவார்கள். வாஹகர்கள் மிகவும் பலமுடையோர்களாகவேண்டும்; என்று அருளிச்செய்துவிட்டுப் பெருமானுடைய அருகில் வந்து நின்றருளினர். தாரனென்னும் ஸேநாபதியும் விரைவுடன் கூடிக் கிஷ்கிந்தாகுகைக்குள் புகுந்து சிவிகையை எடுப்பித்துக்கொண்டு புறத்திலே வந்து சிறந்த தோள்வலிகளுடையவர்களின்மேல் தாங்கிக்கொள்ளப்பட்டதும், சிறந்த பக்ஷிவகைகளாகவும், செடி கொடிவகைகளாகவுஞ்சித்திரமெழுதி யலங்கரிக்கப்பட்டதும், சிறந்த இனியபீடங்களையுடையதும், சிறந்த தேர்க்கு நிகராகியதும், சித்திரங்களின் வரிசைகளினுலே அடர்ந்ததும், தேவவிமானம் போன்றதும், சாளரங்களையுடையதும், அகலமாகவும், நீண்டதாகவும் விசுவகர்மனுலே இயற்றப்பட்டதும், வியோமக்குரியமலைபோன்ற சிகரத்தையுடையதும், நன்முகத்துவைத்தூண்களால் செய்யப்பட்டதும், சிறந்த மணியணிகளினுலும், முத்துவடங்களினுலும், சிறந்தமாலைகளினுலும் சிங்காரிக்கப்பட்டதும், குகைகளாகவும், காடுகளாகவும் செய்து இயற்றப்பட்டதும், செஞ்சாந்தப்பட்டதும், கறுட்டலர்கள் தூவப்பட்டதும், தாமரை மலர்மாலைத் தோரணங்கட்டியதும் ஆகியப் பாலசூரியன்போல வொளிவிடுகின்ற தங்கச்சிவிகையைப் பெருமானுக்கெதிரில் கொணர்ந்து சேர்த்தனன். இத்தன்மையதான சிவிகையைப் பெருமானும் கண்டுமகிழ்ந்து இஃயபெருமாளை நோக்கி, அடாதம்பி! விரைவாக வாலியை இச்சிவிகையிலேற்றி முதுகாட்டிற்குச் சேர்க்கும்படியும், தகனதி ஸம்ஸ்காரங்களைச் செய்யும்படியும் செய்யடா என்று நியமித்தருளினர். உடனே மகாராஜர் வாலியையெடுப்பித்து அங்கதனுடன் அழுதுகொண்டே அச்சிவிகையிலேற்றி வித்து, உடனே அருகிலுள்ள தலைமையானவர்களை நோக்கிக்கேளீர் அன்பர்களே! என் தமையனுக்குக் கந்தபுஷ்பாதிகளாபுள்ள அலங்காரங்களினுலே அலங்காரம்செய்து அவருக்குத் தக்கபடி எல்லாச்சடங்குகளையும் குறைவறச் செய்விக்கக்கடவீர்கள். சிறந்த பலவகை மணிகளையும் மிகுதியாகக் கொடை யளிக்கக்கடவீர்கள். வானரர்களெல்லோரும் ஆசந்திக்குச் சமீபத்திலே முன்னே செல்லக்கடவர்களென்று கட்டளை செய்தனர். உடனே அவர்களும் மிகச் செல்வமுடைய வேந்தர்களுக்கு எவ்வண்ணம் செய்வார்களோ, அவ்வண்ணமே சடங்குகளையெல்லாஞ்

செய்வித்தனர்கள். தாரன் முதலிய வானரர்களெல்லோரும் அங்கதனைப் பிடித்துக்கொண்டு துன்புற்றுக்கொண்டே சென்றனர்கள். தாரை முதலிய வாலியின் மனைவியர்களும், பலாக்கணம்பாடி யழுதுகொண்டே வாலியைப் பின்தொடர்ந்து சென்றனர்கள். அந்த வானரப்பெண்கள் அப்போழ்து அழுகையில், அவர்களினுடைய அழுகுரலினாலே அங்குள்ள காடு மலையாறுகளடங்கலும் கூவி யழுதனபோலொலித்தன; உடனே மலையினின்றும் பெருகி வருகின்ற மலையாற்றினது மணற்குன்றிலே இவ்விடம் மிகவும் தூயதும், எகாந்தமுடையதுமாகின்றதென்று அநேகம் வானரர்கள் வாலிக்குச் சிதை யடுக்கினர்கள். வாலகர்களும் சிவிகையை யவ்விடத்தி லிறக்கி வருந்தி நின்றனர்கள். அப்பொழுது தாரை தன் பர்த்தா சிவிகையிலே படுத்திருக்கக்கண்டு அவன் தலையைத் தனது மடிமேலெடுத்து வைத்துக்கொண்டு கடுந்துயரங்கொண்டு ஐயையோ! வானரர்களெல்லோர்க்கும் நல்வேந்தரே! அந்தோ, என் பிராணநாதரே! அய்யோ! என்மேல் ஆவலும், அன்புடைய இனியரோ! அந்தோ, மிகச் சிறந்தவரே! நீண்டருண்ட திருத்தோள்களையுடையவரே! அய்யோ! என்னுயிர்க்காவலரே! நான் இவ்வண்ணம் வருந்திப் புலம்பி யழுதுவரக் காணீரோ! இங்கெல்லோரும் துயர்கொண்டு வருந்துவதைக்கண்டு ஏன் இனியமொழிகளை மொழிந்து தேற்றுகின்றீலீர். அந்தோ! எந்நாயகரே! தேவரீர் உயிர்மாண்டிருக்கையிலும், தேவரீருடைய திருமுகம் மகிழ்வுற்றதுபோல மலர்ந்து விளங்கி அத்தகிரியை யடைந்த கதிரவனுக்கு நிகரானவண்ணமுடையதாகிக் காணப்படுகின்றது; அந்தோ! எந்நாயகரே! இந்த ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமசந்திரருருவங்கொண்டு தேவரீரைப்பற்றி யிழுக்கின்றனர்; இந்த ஸ்ரீராமனிருவராலேதானே ஒரு கணையினால் யாங்களெல்லோரும் கைம்பெண்களாயினமே மல்லோமோ? அந்தோ எந்நாயகரே! தேவரீருக்கு மிகவும் பிரியமுள்ள இம்மனைவிமார்களெல்லோரும் தேவரீரைத் தொடர்ந்து நெடுந்தூரம் நடந்து வருந்திப் புலம்புகின்றனர்களே! தேவரீர் ஏன் அறிகின்றிலீர்? இப்போழ்து மஹாராஜர் வானர்களெல்லோர்க்குந் தலைவராகி எதிரிலிருக்கின்றாரே, ஏன் காணுகின்றிலீர்? தாரன் முதலிய சேனாதிபதிகளெல்லோரும் நகரத்தார்களுடன் வந்து உம்மைச் சூழ்ந்து வருந்துகின்றனர்களே! இவர்களுக்குத்தக்கபடி மரியாதை செய்து விடைகொடுத்தனுப்புக; பின்பு, நாமிருவரும் மற்றுள்ள தேவரீர் மனைவியர்களுடனும் கூடித் தேன்பொழியுந் சோலைகளிலே இன்புற்று மகிழ்வோம்; என்று புலம்பினள். இவ்வண்ணஞ் சோகத்திலுல் புலம்புகின்ற தாரையை மற்றுள்ள வானரர்கள் பற்றியெடுத்து எழுந்திருக்கச்செய்து வருந்தி நின்றனர்கள்; அங்கதனும் மஹாராஜருடன் அழுதுகொண்டே வாலியைச் சிதையிலேற்றி விதியின்படி. அக்கினி ப்ரதானஞ்செய்து சடங்குகளை முடித்து நீரிலாடி நீர்க்கடனை முடிப்பதன்பொருட்டு நன்னீரையுடைய நதியை யடைந்தனன். உடனே மஹாராஜர் தாரை முதலிய யாவரும் அங்கதனுடன்

சுக்ரீவபட்டாபிஷேகத்திற்கு அனுமதி அளித்தது. என.

னிட்டுக்கொண்டு நீரிலாடி வாலியின்பொருட்டுத் தருப்பணஞ்செய்தனர் கள். மஹாராஜர் துன்புற்றிருந்தமையின், பெருமாளும் துன்புற்று வாலிக்குச் செய்யவேண்டிய சரமகைங்கரியங்களேயெல்லாம் விதியின்படி செய்வித்தருளினர். மஹாராஜரும் வாலிக்குச்செய்யவேண்டிய சடங்கு களேயெலலாம் முடித்துவிட்டுப் பெருமாளுடைய அருகில் வந்து சேர்ந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தைந்தாவது ஸர்க்கம்.

முற்றிற்று.

இருபத்தாறுவது ஸர்க்கம்.

மழைகாலம் நேர்ந்தமையின், அது முடியுமளவும் சீதையைத்தேட முடியா தாதலின், இப்போழ்து நீர் பட்டாபிஷேகஞ் செய்துகொள்க வென்று பெருமாள் மகாராஜருக்கு அருளிச்செய்து பட்டமும் கட்டுவித்து, அங்கதகுமாரனுக்கும் இளவரசுபட்டங் கட்டு வித்தருளியது.

அநந்தரம் மஹாராஜர் வாலிக்குச் செய்யவேண்டிய கிரியைகளை முடித்துவிட்டு ஈரவாடையுடன் வானரர்களெல்லோர்களாலும் சூழப் பட்டுச் சோகத்தினால் வருந்திப் பெருமாளுடைய அருகில் வந்து கைகு வித்து நிற்கையில், மேருமலைபோலப் பருத்துயர்ந்தவரும், பாலஸூரியன் போன்ற முகமுடையவருமாகிய சிறிய திருவடி பெருமாளுக்குத் தண்டம் ஸமர்ப்பித்து அவனை நோக்கி ஸ்வாமி! தேவரீருடைய அனுகிரஹத் தினால் மஹாராஜர் தாதை பூதாதைமுதலிய குலமுறையாக வந்த வானர ராஜ்ஜியத்தைப் பெறற்கரியதாயினும் பெற்றனர். ஆதலின், தேவரீர் இப் போழ்து அனுமதிசெய்தருளுமாயின், மஹாராஜர் கிஷ்கிந்தைக்குள் சென்று ராஜகாரியங்களேயெல்லாம் திட்டஞ்செய்து குறைவற நடப்பித்து இனத்தார் சுற்றத்தார் தோழர் முதலானோர்களுடன் கூடி விதியின்படி அபிஷேகம்பூண்டு நவமணி யணிகளாலும், நறுமலர் மாலைகளாலும், தேவரீருக்குப்பூஜைசெய்து மகிழ்வார்; ஆதலின், தேவரீர் மஹாராஜருடைய தோழமையைப் பாராட்டியருளித் தேவரீரும் கிஷ்கிந்தைக்குள்ளே எழுந் தருளி வானரர்களெல்லோரையும் மகிழ்வித்தருள்க; என்று விஜ்ஞா பனஞ்செய்தனர். பெருமாளும் அதைத் திருச்செவிசார்த்தித் திரு வடியை நோக்கிக் கேளீர் அன்புள்ள மாருதி! பதினான்குவருஷங்கள் கழியுமளவும் யான் நகரிக்குள்ளாவது, ஊருக்குள்ளாவது புகேன்; இவ் வண்ணம் எம்தந்தையின் கட்டளையாதலின், அதனை யொருக்காலும் தவிரேன்; ஆதலின், மஹாராஜர் மிகச் செல்வமுடைய கிஷ்கிந்தைக்குட் புகுந்து விதியின்படி விரைவாகப் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளக் கடவர். அவ்வண்ணம் நீவிரெல்லீரும் சேர்ந்து நடப்பிக்கக்கடவீர்கள்

என்று அருளிச்செய்து மஹாராஜரையும் நோக்கிக் கேளீர் தோழரே உம்முடைய தமையனர் குமாரனும், தோள்வலியிலல் உமக்கு நிகரானவனும், பெருந்தன்மையுடையவனும், இளவரசுப்பட்டத்துக்கு உரியோனுமாகிய இந்த அங்கதனுக்கும் இளவரசுப்பட்டங் கட்டுவிக்கக் கடவீர். இப்போது கார்காலமாதங்கள் நான்கில் முதலாவதான ஆடிமாதம் இப்போது நேர்ந்துளது; இது முதல் நான்குமாதங்களும் மழைபொழிவதிலல் போர்செய்வதற் குரியனவல்ல; ஆதலின், யான் இந்நான்குமாதங்களையும் லக்ஷ்மணனுடன் கூடி இம்மலையிலேதானே வாழ்ந்து போக்கிக்கொண்டிருப்பேன்; கார்த்திகைமாதம் பிறப்பதன் முன் நீர் ராவணனைக் கொலைசெய்ய முயற்சி செய்க; நம்மிருவர்க்கும் இதுதான் ஏற்பாடு, இப்போது நீர் கிஷ்கிந்தைக்குட்சென்று அபிஷேகஞ் செய்து கொள்க; தோழர்களையும் மகிழச்செய்க; என்று அனுமதி செய்தருளினர். மஹாராஜரும் உடனே பெருமானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அநேகமாயிரம் வானரர்களிலல் பணிந்து சூழப்பட்டுக் கிஷ்கிந்தைக்குள் புகுந்து தம்மைக்கண்டு தலைவணங்கித்தொழுத நகரத்தாரெல்லோரையும் தக்கபடி மரியாதைசெய்து ஆதரித்து வாலியின் அந்தப்புரஞ்சேர்ந்து முற்றம்பார்த்து ஏற்பாடுசெய்து புரத்தில் வருகையில், வானரர்களெல்லோரும் தேவர்கள் தேவேந்திரனுக் கொப்பாக அபிஷேகஞ் செய்யவேண்டுமென்று நிச்சயஞ்செய்து வெண்குடையினையும், வெண்சாமரங்களையும், பற்பல சிறந்த மணிகளையும், நவதான்னியங்களையும், பற்பல ஔஷதிரசங்களையும், பாலுள்ள மரங்களின் மூலைகளையும், மலர்களையும், வெண்பட்டுகளையும், வெண்சந்தனத்தையும், நன்மலர்மாலைகளையும், நிலத்தாமரை மலர்களையும், திவ்விய சந்தனங்களையும், பலவகை கந்தங்களையும், அக்ஷதங்களையும் தங்கத்தையும், யவதானியங்களையும், தேன் நெய்களையும், தயிரையும், புலித்தோல்களையும், பன்னித்தோலிலல் செய்த பாதரக்ஷைகளையும், தூசிக்கொள்ளுந் திரவியத்தையும், கோரோசனத்தையும், மனச்சிலையையும் கொணர்ந்தனர்கள். சிறந்த மகிழ்ந்த பதினாறு கன்னிப்பெண்களும் வந்து சேர்ந்தனர்கள். அநந்தரம் வானரர்களெல்லோரும் ஆடையாபரணங்களாலும், பலவகை யுண்டிகளாலும் வேதியர்களை மகிழ்ச்செய்து, தீயை வளர்த்துத் தருப்பங்களைப் பரப்பி விதியின்படி. மந்திரத்திலல் ஹவிஸ்யை ஹோமஞ்செய்து, தங்கமயமான கால்களையுடையதும், சிறந்த சித்திராஸன முடையதும், பலவகை மாலைகளிலல் அலங்காரஞ்செய்யப்பட்டதும், மிக வழகியதுமாகிய மேல் மானிகையிலே சிறந்த சிங்காஸநத்தைப்போட்டு கடல்களினின்றும், பலவகை நதிகளினின்றும், மற்றுள்ள புண்ணிய தீர்த்தங்களினின்றும், தீர்த்தங்களை யழைப்பித்து தங்கக்குடங்களில்வைத்து மந்திரித்து மஹாராஜரை யந்தச் சிங்காஸநத்திலுட்காரச்செய்தனர்கள். அப்போது கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், மைந்தன், துவிவிதன், அனுமான், ஜாம்பவான், நளன் என்னும்,

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

மஹாராஜர் பட்டாபிஷேகம்.

అభ్యషిఞ్చన్తసుగ్రీవం ప్రసన్నేనసుగన్ధినా।
సలిలేనసహస్రాక్షం వసవోవాసవంయథా॥

அப்யஷிஞ்சந்தஸுக்ரீவம் ப்ரஸந்நேநஸுகந்திநா
ஸலிலேநஸஹஸ்ராக்ஷம் வஸவோவாஸவம்யதா.

மந்திரிகள் பத்துப்பேர்களும், நன்மணமுள்ள தெளிந்த புண்ணிய தீர்த்தத்தினால் வஸுதேவதைகள் தேவேந்திரனுக்குப்போல மஹாராஜருக்கு ஆயிரம் கண்களையுடைய ஸஹஸ்காரம் என்கிற தட்டினால் அபிஷேகஞ் செய்தனர்கள். அதனைக் கண்ணுற்று வானரர்களெல்லோரும் மகிழ்ந்து புகழ்ந்து களித்தனர்கள். பின்பு, மஹாராஜரும் பெருமாளுடைய வாக்கியத்தின்படி அங்கதகுமாரனை மகிழ்ந்து தழுவிக்கொண்டு இளவரசுப்பட்டங்கட்டுவித்து அன்பு செய்தனர். அதைக்கண்டு வானரர்கள் நன்குநன்கென்று புகழ்ந்து, பெருமாளையும் இளையபெருமாளையும் சிலாகித்துத் துதி செய்தனர்கள். அப்பொழுது மலைக்குகையிலுள்ள அந்தக் கிஷ்கிந்தாபுரியானது மனக்களிப்பும், மேனியழகுமுற்ற ஜனங்களையுடையதாகியும், தோரணங்கட்டிச் சூளிகைகாட்டப்பட்டதாகியும், மிக வழகியதுமாகித் திகழ்ந்தது; மஹாராஜரும் இங்கே நிகழ்ந்த செய்திகளை யெல்லாவற்றையும் பெருமாள் எழுந்தருளியிருக்குமிடஞ் சென்று அறிவித்துவிட்டு • அவரிடத்தில் விடைபெற்று மீளவும் அந்தப்புரம் சேர்ந்து ராஜ்ஜியத்தையும், மனையாளான ருமையையும் பெற்று விண்ணுலகினில் தேவராஜன்போல மகிழ்ந்தின்புற்று வாழ்ந்துகொண்டிருந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தாறுவது ஸர்க்கம்
முற்றிற்று.

கார்காலம் ஆவணி புரட்டாசி இரண்டுமாதங்களை யாதலின், நான்கென்பது எப்படி சரியாகுமெனின், மழைகாலத்துக்கு முன்னொருமாதமும், பின்னொருமாதமும் மழையிருக்குமாதலின், ஆடி ஐப்பசியையும் கூட்டிக் கார்காலமென்றனர்; என்று சிலர்கூறினர்கள். பதினைந்து தினமான ஒருபக்கத்துக்கே மாதமென்று வேத

இருபத்தேழாவது லர்க்கம்.

பெருமாள் இளையபெருமாளுடன் மழைகாலத்தை மலைக்குகையில் போக்கிப் பிராட்டியாரை நினைந்து வருந்துகையில், இளைய பெருமாள் சோகந்தணியத் தேற்றி யருளியது.

இப்படி மஹாராஜர் பட்டாபிஷேகம்பூண்டு பெருமாளிடத்தில் அனுமதிபெற்றுப் பரிஜன பரிவாரங்களுடன் கிஷ்கிந்தாகுகையை நோக்கிச் சென்ற பின்னர், பெருமாளும் இளையபெருமாளுடன் புறப்பட்டு மான், புலி, காடி, சிங்கம், குரங்கு, கோலாங்கூலம், பூனை முதலிய விலங்குகளினால் கூவப்பட்டும், காடு, மரம், செடி, புதர்கள் அடர்ந்தும், எங்காளும் குளிர்ந்தும், மணங்கமழ்ந்தும், தெளிந்தும், தூய்மை கொண்டுமுள்ள நன்னீருடைய குளங்களையுடையதும், நீருண்டகொண்டல் போல நீண்டிருண்டுயர்ந்ததுமாகிய பிரஸ்ரவணமென்னும் மலையை யடைந்து அதன் சிகரத்தில் வியன்றகன்றதோர் குகையைக் கண்டு இக்கார் காலத்தைக் கழித்து வாழ்வதற்கு இஃது தக்க இடமென்று தேர்ந்து, இளையபெருமாளை நோக்கிப் பாரடா தம்பி! இந்த மலைக்குகையானது

த்தில் பெயர் கூறப்பட்டுளதாயின், ஆவணி புரட்டாசி இரண்டுமாதங்களும் நான்கு மாதங்களென்னப்பட்டன; என்று சிலர் கூறினர்கள்.

ஐப்பசி மாசத்திலேதானே சீதையைத்தேட முயற்சிசெய்யும்படி பெருமாள் கட்டளைசெய்தனர்; அப்போது வானரர்களைச் சேர்ப்பதற்காகவே கட்டளையிட்டருளினர். சுயம்ப்ரபாபிலத்தினின்றும் அனுமான் அங்கதன் முதலிய வானரர்களெல்லோரும் புறப்பட்டவுடன் இளவேனிற்பருவம் ஸமீபித்ததாகக் கூறுகின்றமையின், இக்காலங்களின் விவரம் முறையே கூறப்படுகின்றது. ஒருபக்ஷத்தில் இளவேனிற்பருவம் பங்குனி சித்திரை இரண்டும் என்று உரைக்கப்பட்டன. பெருமாள் சித்திரைமாஸத்தில் அயோத்தியினின்றும் புறப்பட்டருளியது; அகஸ்தியாசிரமத்திற் கெழுந்தருளுகையில் பத்துவருஷங்களாயினவென்று கூறப்பட்டன. பஞ்சவடியில் மூன்றுவருஷம், பதினொன்காவது வருஷம் சித்திரைமாதத்தில் சூர்ப்பனகையின் நாசியை யருத்ததும், கராதிகளைக் கொலைசெய்ததும், அம்மாசத்திலேதானே ராவணன் பிராட்டியாரைப் பறித்தது. ஆடிமாசத்தில் வாலியைக்கொலைசெய்தது. முன்பனிப்பருவத்தில் சேனைகளைச்சேர்த்தது. மார்கழி மாசத்தில் வானரர்களை யனுப்பியது. பங்குனிமாசத்தில் சுக்லபக்ஷத்ரயோதசியில் சிறியதிருவடி கடலைத் தாண்டியது. மருநாள் மீண்டு வந்தது. பூர்ணிமையில் பெருமாள் சேனைகளுடன் புறப்பட்டருளியது. என்று முறையுனர்க. இனிமேல் யுத்தகாண்டத்தில் கூறப்படுகின்றன.

மூற்காலையில் வானரர்களும் நரர்கள்போலவே இரண்டுகால்களினால் நடந்து கொண்டிருந்தனரென்று தோற்றுகின்றது. பாஷையும் வடமொழியே? அன்றியில், இவர்கள் தேவாம்சமாகையால், இவர்கள் மாத்திரம் மனிதர்போலிருந்தனர்களெனினும் ஒக்கும்; வானரர்களுள்ளும் பிராஹ்மணாதி ஜாதிகளுளவாகும்; அன்றியில், அங்குள்ள வேதியர்களை யழைப்பித்து அபிஷேகத்திற்கு ததீயாராதனஞ் செய்வித்தனர்களெனினும் ஒக்கும்.

பெருமான் ப்ரவ்ரவணமலையில்வசிக்கலா்மெனறுகூறியது.அ்க்

மிக வழகியதும், விசாலமாகியதும், மந்தமாருதமுடையது மாகின்றது ; இக்கார்காலங்களே இங்குனைறந்து போக்குதேவாம் ; இம்மலைச்சிகரமும் மிக வுயர்ந்தும், கறுத்தும்; வெளுத்துமிருக்கின்ற பலவகைச் சிலைகள் பொருந்தியும், பற்பலதாதுக்கள் நிறைந்தும், குகை புகர் முதலியனவகளுற்றும், பற்பல மரஞ் செடி கொடிகளடர்ந்தும், பற்பல பறவைகளொலித்தும், குந்த திந்துக சிந்துவார மல்லிகா மாலத் குரண்ட கதம்பார்ஜு நலார்ஜு காதிகளான் செடி கொடிகள் மலர்ந்தும் திகழ்கின்றது; இந்தத் தாமரை யோடையும் மலர்ந்த தாமரைமலர்கள் நிறைந்து இக்குகைக்கு அருகிலே விளங்குகின்றது ; இக்குகை இம்மலையின் மேற்குத்திசையில் தென் மேற்குமுகமாக வாயிலை யுடையதாய் பின்புறத்திலுயர்ந்திருக்கின்றமை யின், கீழ்காற்றடிக்காமல் கம்மென்றிருக்கும் ; இக்குகையின் வாயிலில் வியன்றகன்ற கல்லும், ஏற்றத்தாழ்வின்றி மழமழவென்று வழுமுண்டு பொடிசெய்திழைத்த மெய்யின் குவைபோல மின் மின் என்று திகழ்கின்றது; அடா லக்ஷ்மணு ! இம்மலைச்சிகரத்தின் வடபுறத்தைப் பாராய் ; அது அஞ்சனத்திரள்போலவும், நீர்கொண்ட கொண்டல்போலவும் உயர்ந்து விளங்குகின்றது ; தென்புறத்திலோவெனில், வெள்ளைக்கல்லொன்று கயிலைமலைச் சிகரம்போல உயர்ந்திருக்கின்றது ; இக்குகையின் கீழ்புறத்தில் கீழ்த்திசையை நோக்கிப் பெருகி விழுகின்ற இந்நதி மூன்று சிகரங்களையுடைய திரிகூடமலையில் பெருகி விழுகின்ற கங்கைபோல விளங்குகின்றது ; சம்பக சாம்பேய திலக்க மலக் தாலத மால ஸரள வகுளாதி முக்த பத்ம கேதக தவ வார்நீர திமிச திரிட நீப வேத்ர க்ருத மாலஹிந்தாலாதியாயுள்ள பலவகை மரங்களும் அந்நதியின் இருகரைகளிலும் செழித்துத் தழைத்து விளங்குகின்றன் ; இவைகளிலல் இந்நதி தளிர் மலர்களேயே வஸந்தகாலத்தில் அணியாக அணிந்துகொண்டுலாவுகின்றதருணிபோலத்திகழ்கின்றது ; பலவகைப் பற்வைகளும், தனித்தனி காந்தைகளுடன்கூடி மகிழ்ந்து கூவுகின்றன ; மணற்குன்றுகளும், அன்னப்புள், சக்ரவாகம் முதலிய நீர்ப்பறவைகள் நிறைந்தொவிக்கின்றன ; ஆதலின் ; இந்நதி மதமுற்ற மானினி மனமகிழ்ந்து நகைக்கின்றுப்போல விளங்குகின்றது ; இஃது சிலவிடத்தில் கருங்கெய்தல்களினலும், சிலவிடத்தில் செந்தாமரை செங்கழுநீர்களினலும்; சிலவிடத்தில் வெண்டாமரை குமுதங்களாலும் நிறைந்து மறைக்கப்பட்டு விளங்குகின்றமையின், பலகலனுமணிந்த காந்தைபோல வொளிக்கின்றது; இது பல வகைப்பறவைகளாலும் ஒலிக்கப்பட்டும், மர்முனிவர்களினலடையப்பட்டும், மிக வழகுற்றிருகின்றது காணுய்; கடம்பமரங்களும், சந்தனமரங்களும்; தொடுக்கப்பட்டனபோல அடர்ந்து விளங்குகின்றன ; அடீயோ ! இவ்விடம் மிகவும் மனமகிழத்தக்கதாகின்றது ; ஆதலின், நாம் இவ்விடத்திலேதானே நன்கின்புற்று வாழ்வோம்; இவ்விடத்திற்கு மஹாராஜர் வழும் கிஷ்கிந்தாபுரியும் நெடுந்தூரமன்று ; அவ்விடத்தில் கூவுகின்ற வானரர்களின் சிங்கநாதமும் கேதவாத்தியகோஷமும் கேட்கப்படுகின்றன்

வல்லவோ ? மஹாராஜர் சிறந்த வாநரராஜ்ஜியத்தையும், மிகுந்த செல்வத்தையும், மனத்துக்கினிய மனையாளையும் பெற்று நன்கு மகிழ்வுற்று வாழ்வார் ; என்றிவ்வண்ணம் அருளிச்செய்து இளையபெருமாளுடன் அம்மலையெங்குஞ்சுற்றிப் பற்பல விநோதங்களையுங் கண்டு அவ்விடத்திலேதானே வாழ்ந்தருளினர். இவ்வண்ணம் அவ்விடம் பற்பல விநோதங்களையுடையதாகியும், பெருமானுக்குக் கிஞ்சித்தாயினும் இன்பந்தந்திலது ; தம்முயிரினும் பிரியமுள்ள பிராட்டியாரைப் பறிகொடுத்து நினைந்து வருந்துகையில், இன்பமென்பது எங்குளதாகும் ; பெருமாள் இரவுகளில் இனிய சயநத்தில் படுத்திருக்கினும், கீழ்த்திசையில் உதிக்கின்ற சந்திரனைக் கண்டு விரஹத்தீபற்றி யெரித்தமையின், இன்புற்றுத் துயில்கொண்டிலர் ; இவ்வாறு நாடோறும் பெருமாள் துயிலின்றிச் சோகமுற்று வருந்துகையில், இளையபெருமானும் மிக வருந்தி அய்யனை நோக்கிக் கேட்டருளீர் தனிவீரோ ! தேவரீர் இதுகாறும் துன்புற்றது போதும், தேவரீரும் இவ்வண்ணம் சோதிப்பது தகுமோ ?—

శోచత్యేవ్యవసీదన్తి సర్వార్థావిదితంహితే।
భవాన్క్రియాపథేలోకే భవాన్దైవపరాయణః।
ఆస్తికోధర్మశీలశ్చ వ్యవసాయాచరాఘవ॥
సోచతేదావ్యవస్తీదన్తి ఎర్వార్తావిదితంహితే
పవాన్క్రీయాపదేరాలోకే పవాన్దైవపరాయణః।
ఎస్తికోధర్మశీలచ్చ వ్యవసాయీచరాఘవ॥

சோகமுற்று வருந்துபவர்களுக்கு எல்லாப்பயன்களும் அழிந்துவிடுகின்றன ; இவ்விஷயம் தேவரீர் திருவுளமறிந்ததேயன்றி, வேறில்லையே ? அன்றியிலே, தேவரீர் இவ்வுலகினில் புருஷகாரத்தை முதன்மையாகவுடையவரும், தெய்வஸங்கற்பமும் அதற்குத் துணையென வறிந்தவரும், மறுமையுளதென்னும் உண்மையை யறிந்தவரும், தருமத்தையே இயல்பாகவுடையவரும், முயற்சியுடையவருமாகின்றீரல்லீரோ ? முயற்சியிலாதோர் பகைவரை வெல்வதெவ்வண்ணம், மேலும்கடமுடையகொடிய அரக்கர்களைத் தேவரீர் மிக முயற்சிசெய்தே கொலைசெயல்வேண்டும் ; தேவரீர் தான் அவர்களைக் கொலைசெய்யுவல்ல தோள்வலியுற்றவர் ; ஆதலின், தேவரீர் இந்தச் சோகத்தை வேருடன் களைந்தழித்து அழியாமுயற்சியை மேற்கொண்டருள்க ; பின்பு, ராவணனைப் புத்திரமித்திரகளத்திராதிகளுடன் கொலைசெய்தருள்க ; தேவரீர் திருவுளஞ்சீரியருளுவீராயின், காடு கடல் மலைகளுடன் கூடிய இப்பார்முழுதையும் வேறுபடுத்தவல்லீர் எனின் இவ்வரக்கர்களைக் கொலைசெய்தலரிதாகுமோ ; இப்போழ்து கார்காலம் நிகழ்கின்றமையின், இக்காலங்கழிந்து கூதிர்காலம் வருமளவும் எதிர்பார்த்திருந்தருள்க ; அநந்தரம், ராவணனாடு நகரத்தவர்களுடன் கொலைசெய்தருள்வீர் ; நீறுபூத்த நெருப்பை நெய்யாகுதிகளினால் ஜ்வலிக்கும்படி செய்வதுபோல மானிடபாவனையினால் உள்ளடங்கிய தேவரீருடைய இயல்பான பராக்கரமமென்னும் பெருந்தீயைத்

தக்க காலங்களில் நினைவூட்டி. மேலுழுந்தெரியச்செய்வேன் ; என்றிவ்வகை யாக விண்ணப்பஞ்செய்து பெருமாள் சோகந்தணியுமாறு தேற்றியருளினர். பெருமாளும் அன்பும் பக்தியும் ஆவலும் பூண்டு தேற்றிய இளயபெருமாளுடைய இவ்வாச்சியங்களைக்கேட்டருளி மகிழ்ந்து புகழ்ந்து அவரைநோக்கி, அடா என்னண்டுள்ள ஸ்ரேஷ்டரா ! அன்பும் நேசமும் பிரியமும் இதமும் சத்தியமும் பராக்கரமமும் உடையய் தோழன் சோகமுறுங்கால் எவ்வண்ணமுரைசெய்து தேற்றுவனோ, நீயும் அவ்வண்ணமே யுரைசெய்தாய் ; எல்லாக்காரியங்களையும் அழிக்கவல்ல சோகத்தையான்துறந்துவிட்டேன்; விக்கரமங்களில் தடையின்றிச் செல்லுகின்ற தேஜஸ்ஸைமேற்கொண்டேன்; கூதிர்காலத்தைஎதிர்பார்க்கின்றேன் ; உன்னுடைய வாக்கியத்தின்படியே தீரமுறநிருக்கின்றேன் ; மஹாராஜருடையவும், நதிகளினுடையவும் பிரஸாதத்தை (அனுக்கிரஹத்தை—தெளிவை)க்கோரியிருக்கின்றேன்;மஹாராஜர் நம்மிடத்தில் உபகாரத்தை யடைந்திருக்கின்றமையின், நமக்கும் அவர் பிரதியுபகாரஞ்செய்வார் ; உபகாரத்தை யடைந்தவன் நன்றியை மறந்து பிரதியுபகாரஞ்செய்யாஞகில், எல்லாருக்கும் பகையாகி எல்லோராலும் மனம் நொந்து பழிக்கப்படுவான் என்றருளிச்செய்தனர். இளயபெருமாளும் இவ்வருளிச்செயல்களைக்கேட்டு மகிழ்ந்து புகழ்ந்து ஞானக்கண்ணினால் முன்வருவதையெல்லாமறிந்து அதனைப்பெருமாளிடத்திலும் விஞ்ஞாபனஞ்செய்து டீளவும் அவரை நோக்கி, எம்மையரே! தேவரீர் அருளிச்செய்தபடியே மஹாராஜர் தேவரீர்திருவுள்ளத்தையெல்லாம் நிறைவேற்றுவர் ; கூதிர்காலத்தை எதிர்நோக்கி, இக்கார்காலங்கழியுமளவும் சோகத்தையும் கோபத்தையும் உள்ளடக்கி ஆடி ஆவணிபுரட்டாசிஐப்பசியென்னும் இந்நான்குமாசங்களையும் என்னுடன்கூடி. இம்மலையிலேதானே கழித்துப்பின்பு பகைவரைக்கொலை செய்வதில் முயற்சிசெய்தருள்க ; என்றுவிண்ணப்பஞ்செய்து தேற்றிப் பெருமாளையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்து வாழ்ந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தேழாவது ஸர்க்கம்
முற்றிற்று.

இருபத்தெட்டாவது ஸர்க்கம்.

பெருமாள் இளயபெருமாளுடன் கார்காலத்தை
வர்ணனைசெய்தருளியது.

அந்தப்பெருமாள் அவ்வண்ணம் வாலியைக்கொன்று மஹாராஜர்க்கு அபிஷேகமும் செய்வித்தருளி மாலியவந்தமென்னும், ப்ரஸ்ரவணமென்னுங் கூறப்பட்ட மலையின் சிகரத்தில் வாழ்கையில், இளயபெருமாளை நோக்கி, அடா தம்பி லக்ஷ்மண ! இப்போழ்து கார்காலம் நன்முகத்தோன்றிற்று ; மலைபோலப்பருத்துயர்ந்த நீருண்ட கொண்டல்களினால் விண்டலை

மெங்கும் மண்டி.தமாய் இருண்டிருந்கின்றது ; வீண்ணென்னும் ஓண் டொடியாள் கதிரவன் கிரணங்களினுல் கடவினின்றும் ஆகர்ஷிக்கப்பட்ட உப்புநீரைக் கார்த்திகைமாதம் முதல் ஆடிமாதமளவாக ஓன்பதுமாதம் கர்ப்பந்தரித்து உருசியுள்ளதாகிப் பெறுகின்றது ; உலகிலுள்ள வநிதை யர்களும் தத்தம் நாயகனுடன் புணர்ந்திவ்வாறே கர்ப்பந்தரித்து நன்மக்க ளைப் பெறுகின்றனர்களல்லரோ ? பிராட்டியும் பிரிந்திலளாயின், இவ்வண் ணமே மக்கட்பேறுடையாளாகுவாளன்தோ ! மேகங்களென்னும் படிவழி யாய் வின்னின்மிசையேறி கிரிமல்லி முதலிய நறுமலர்களினுல் ஸுரிய மண்டலமத்தியிலெழுந்தருளியிருக்கின்ற நங்குலதெய்வமான ஸ்ரீமந்நாரா யணனைப் பூஜிப்பது தகும் ; சந்தியின் செம்மைபடர்ந்து இடையிடையில் வெண்மையையும் பொருந்திக் கண்டங்கண்டமாயுள்ள மேகங்களினுல் ஆகாசம் மெய்முழுதும் காயமுற்று அதனை யாற்றுவதன்பொருட்டு மருத் துச்சீலை (ப்ளாஸ்திரி) யுற்றிருப்பதுபோலக் காணப்படுகின்றது ; விண்ட லம் மந்தமாருதமென்னும் பெருமூச்சுற்றதும், சந்திச்செவ்வியென்னும் செஞ்சாந்தமப்பியதும், வெண்மேகங்களினுல் மெய்வெளுத்ததுமாகிக் காமா துரன் போலக் காணப்படுகின்றது ; இப்பார்மகளும் தன் மகளான சீதை போலவே தாபத்தினுல் பீடிக்கப்பட்டும், தாரைதாரையாய்ப் பெருகிவரும் தெளிநீரில் நனைந்தும், பாஷ்பத்தை (கண்ணீரை—ஜலதூமத்தை) விடுகின்ற னள் ; மேகத்திடையில் தோன்றி செங்கழுநீர் மலர்களில்படிந்து தண்மை யுற்று, தாழைமடல்களையுஞ் சேர்ந்து மணமுற்று வீசுகின்ற இக்காற்றுகளும் கைகளினுல் வாரியணைந்துதெடுத்துப் பருகத்தக்கனவாகின்றன ; இந்த மா மலை மஹாராஜர்போல மலர்ந்த மலைமல்லி கடம்புகளையுடையதாகித் தாழை மடல்களினுல் மணமுற்றுத் தீர்த்த தாரைகளினுல் அபிஷேகஞ்செய்யப் படுகின்றது ; இம்மலைகளும் கருமுகிலென்னும் கிருஷ்ணஜிநத்தையுடுத்து, வர்ஷதாரையென்னும் யஜ்ஞோபவீதம் பூண்டு, காற்றினுல் பூரிக்கப்பட்ட சுரைகளையுடையதாகிப் தானியுற்றிருக்கின்றமையின், வேதகோஷம் மாணாக் கர்கள்போலக் காணப்படுகின்றன ; ஆகாசமும் மின்னற்கொடிகளென்னும் பொன்னாற்செய்த கசைகளினுலடிக்கப்பட்டு முழங்கும் மேகங்களினுல் வேதனையுற்றழுகின்றதுபோலும், கருமுகிலிடையில் துடிக்கின்ற மின் கொடியைக்கண்டபின்ன ரென்மனத்தினுடையில் குடிகொண்ட துடியிடை யாளும், கொடிய ராவணனுடைய மடியில் இவ்வண்ணந் துடித்துக் கொண்டே சென்றிருப்பளெனத் தோற்றுகின்றது ; மேகங்களினுல் பூசப் பட்டனபோன்ற இப்பத்துத்திசைகளும் காமித்துக் காமினியர்களைப் புணருங் காமுகர்களுக்கு மிகவும் இனியன ; சிலவிடத்தில் கிரிமல்லிகள் ஜல தூமங்களினுல் சூழப்பட்டுக் கார்காலத்தை எதிர் நோக்கி மலர்ந் திருக்கின்றமையின், கணவனைப்பிரிந்து கண்ணீர்பெருக்கிக் கார்காலம் நேர்ந்தமையின், கணவன் வருவானென்று மகிழ்ந்து நகை கொண்ட நாணுதலாள்போலிருக்கின்றன ; இவைகள் விரகமடைந்த எனக்குத் துன் பந்தருகின்றன

రజఃప్రశాన్తంసహిమోద్యవాయుఃన దాఘుదోషప్రసరాశ్చశాన్తాః।
స్థితాహీయాత్రావసుధాధిపానాం ప్రవాసినోయాన్తినరాస్వదేశాన్ ॥

ரஜஃப்ரசாந்தம்ஸஹிமோத்யவாயுர் ந்ருதாகதோஷப்ரஸராச்சசாந்தாஃ।
ஸ்திதாஹியாத்ராவஸுதாதிபானாம் ப்ரவாஸினோயான்திநராஸ்வதேசான்.॥

வானம் மழைபொழிகின்றமையின், தூளிகளடங்கின ; காற்று குளிர்ந்து வீசுகின்றது ; முதுவேனிற்காலத்திலுண்டாகிய வெம்மை வேர்வை முதலிய தோஷங்களெல்லாம் அழிந்தன ; வெற்றித்தார்வேந்தர்கள் பகைவர்மேல் படையெடுத்துச் செல்லும் முயற்சிகள் நின்றன ; தூரதேசஞ் சென்றவர்களெல்லோரும் மீண்டு தத்தமிருப்பிடம்போய்ச் சேர்கின்றனர்கள். அன்னப்பறவைகள் மானஸதோவரத்தை நோக்கிப் புறப்பட்டுச் செல்லுகின்றன ; சக்கரவாகங்களும் காமவேட்கையினல் பேடுகளுடன் சேர்ந்திருக்கின்றன ; வழிகளெங்கும் நிரந்தரம் மழைபொழிந்தழிந்திருப்பதினல் வண்டி முதலிய வாகனங்கள் செல்லுகின்றில ; ஆகாயம் மேகங்களினல் பரவப்பட்டு சில விடங்களில் பிரகாசமாகவும், சில விடங்களில் பிரகாசமின்றியும், சில விடங்களில் மலைகளினல் தகையப்பட்டு அலைகளின்றித் தேங்கிய கடல்போலும் விளங்குகின்றது ; வேங்கை கடம்பைகளின் பூவினல் நன்மணமுற்றும், மலைத்தாழ்வரைகளிலுள்ள தாதுக்களினல் பற்பலவண்ணமுற்றமுள்ள புதிய மழைநீர் மயில்களின் கேகா என்னு மொழியினல் வளர்ந்த பேரொலிகொண்டு மலை யருவிகளில் வீழ்ந்து பெருகுகின்றது ; வண்டுகள்போல் கறுத்த மதுரமுள்ள நாவல் பழத்தை யாவரும் மிகவும் புசிக்கின்றனர்கள் ; பற்பல வண்ணமுள்ள மாம்பழங்களும் தரையிலுதிர்ந்து வீழ்கின்றன ; போர்களத்தில் நிற்கின்ற யானைகள்போல மேகங்கள் மின்னலாகிற பதாகைகளை யுடையனவும், நாரைப் பறவைகளின் நிறையாகிய மலையையுடையனவும், மலைச்சிகரங்கள்போன்ற மேனி யுடையனவுமாகிக் கர்ஜனை செய்கின்றன ; பாரடா தம்பி! இந்த வனங்கள் மழைநீரினல் செழிப்புற்ற இளம்புல்லுகளை யுடையனவும், எங்கும் பொன்சிறகை விரித்தாடுகின்ற மயிலினமுடையனவும், பொழிகின்ற மேகங்களையுடையனவுமாகி இப்போழ்து மாலைப்பொழுதில் நன்கு விளங்குகின்றனை ; மேகங்கள் நீர்சூலுற்றுக் கர்ஜனை செய்துகொண்டு கருவுடைய பெண்கள்போல மலைச்சிகரங்களில் இறங்கி யிறங்கி இளைப்பாறிச் செல்லுகின்றன ; கற்பத்தை தரிப்பதன்பொருட்டு மேகத்திற் கெதிராக எங்கும் பறக்கின்ற நாரைகளின் நிரையானது வானிடையில் கட்டிய காற்றினலைசாக்கப்பட்ட சிறந்த வெண்டாமரை மலர் மாலைபோல விளங்குகின்றது ; இந்திரகோபங்களுடன் கூடிய இளம்புற்களினலே கினிபோன்ற காந்தியுள்ள செம்பள்ளிகளையுடைய பட்டுடுத்த பான்மொழியாள்போலப் பார்மகள் விளங்குகின்றனள். துயில் மெல்ல மெல்ல முகில்வண்ணனை கண்ணனைச் சேர்கின்றது : ஆறுகள் விரைவாகச் சாகரத்தைச் சேர்கின்றன ; நாரை நீருண்ட கொண்டலை மகிழ்ந்து தாவிச் சேர்கின்றது ; காமினியர்கள்

காமவேட்கை மிகுந்து காந்தனைச் சேர்கின்றனர்கள். காடெங்கும் மயிலினமாடுகின்றது; கடம்பமரங்களெங்கும் முகிழ்த்தன; சாலைகள் ஆவல் கொண்ட ஆனிரைகளுடன் கூடி வேட்கையுறுகின்றன; பாரெங்கும் பயிர்களினுல் செழித்துத் திகழ்கின்றது; நதி பெருகுகின்றது; மேகம் மழை பொழிகின்றது; மதவேழம் பிளிறுகின்றது; வனிதையைப் பிரிந்தவர் சிந்தை யுறுகின்றனர்கள்; வனம் செழிட்டிற்று விளங்குகின்றது; மயில் ஆடுகின்றது; குரங்கு இளைப்பாறுகின்றது; மதயானைகள் தாழை மடலின் மணத்தை மோந்து மலையருவிகள் மலைத்தாழ்வரைகளில் வீழ்கின்ற தொனியையச் செவியுற்று வெருண்டோடி மயில்களுடன் கூடிக் கூவுகின்றன; மழைவேகத்தினுலடிபட்டு வணங்கிய கடம்பமரங்களின கிளைகள் தாழ்ந்தசைகின்றன; அதிலிருந்த வண்டுகளும் மழையினுலடிபட்டு அந்த மரத்தின் மலர்களிலுள்ள மதுவைப் பானஞ்செய்ததனலுண்டான மதமுமிழந்து ஆலிகின்றன; கரிகள்போலத் கறுத்த பழங்கள் நிறைந்த நாவல்மரங்கள் வண்டுகளினல் சூழப்பட்டனபோல் விளங்குகின்றன; மேகங்கள் முன்னே கூறியபடி போர்க்களத்தில் நிற்கின்ற யானைகள்போலவே விளங்குகின்றன; சிறந்த யானையானது தன் வதிபற்றிச் செல்லுகையில், மேக கர்ஜனத்தைக் கேட்டுப் பகை யானபென்றெண்ணி எதிர்த்துச் செல்லுகின்றது; காடுகள் கூவுகின்ற வண்டுகளினலே சிலவிடத்தில் பாடுகின்றனபோலும், மயில்களினல் ஆடுகின்றனபோலும், யானைகளினல் மதமுற்றனபோலும் காணப்படுகின்றன; காடெங்கும் கதம்பார்ஜுன ஸர்ஜகந்தளிகளினலே நிறைந்து, மழைநீர் தேங்கி, மயில்கள் மதமேறிக் கூவியாடியுமிருக்கின்றமையின், சாராயக்கடைபோல விளங்குகின்றது; மழைநீர் இலைகளினிடையில் வீழ்ந்து முத்துபோல விளங்குகின்றது; பற்பலவண்ணமுற்ற சாதகப்பறவைகள் மழைநீரை வானிடையிலேயே பானஞ்செய்கின்றன; வண்டுகளாகிற வீணையின் தொனியோங்கியும், தலைகளின் கண்ட மெவியினல் தாளமுயர்ந்தும், மேகத்தின் தொனியினல் மார்தளம் முழங்கியும் விளங்குகின்றமையின், அவ்வனம் பாடுகின்றதுபோலும், மயில்கள் சில விடங்களில் ஆடிக்கொண்டும், சில விடங்களில் கூவிக்கொண்டும் சில விடங்களில் மரங்களின் நனிகளிலுட்கார்ந்து சிறகை விரித்துத் தாழ்த்திக்கொண்டு மிருக்கின்றன; மேகங்களினுடைய தொனியைக் கேட்டும், மழை தாரையினலடிக்கப்பட்டும், தவளைகள் கூவுகின்றன; நதிகளும் நீரில் நீந்துகின்ற சக்கரவாகப் பறவைகளென்னும் கொங்கைகளையுடையனவும், ஆடை கழுவியதுபோல இடிந்து வீழ்ந்த கரைகளை மோதிக்கொண்டும், பற்பல மலர்த்துளிகளினல் மதங்கொண்டும், நீரில் வீழ்ந்த புதிய பூகனி முதலியனவென்னும் உபகாரங்களை யுலகளென்னும் கைகளினலேந்திக்கொண்டும், காமவேட்கைகொண்ட காந்தையர்கள் விரைவாக நாயகனிடஞ் செல்வதுபோலத் தம் நாயகனை லுழுத்திராஜனை நோக்கி, விரைவாகச் செல்லுகின்றன; நீரைப் பருகிக் கறுத்த மேகங்கள் தம்போன்ற மேகங்களின்மேலே சென்று காட்டுத் தீயினலெரிக்கப்பட்ட இந்திரநீல மலையின்மேலே வளர்ந்த மலைகள்போல

விளங்கின ; மதயானைகள் மகிழ்ந்து கூவுகின்ற மயில்களையுடையனவும், பட்டுப்பூச்சிகளுடன் கூடிய இளம்புல்லுடையனவும், கடம்பப்பூ முதலியவற்றால் மணமுற்றனவுமாகி யழகிய கானகங்களிலே மகிழ்ந்து திரிகின்றன ; வண்டுகள் புதிய மழையினால் மடக்கப்பட்ட தாதுகளையுடைய தாமரை மலர்களை விட்டு விட்டு அன்று மலர்ந்த கடம்பமலர்களைச் சேர்கின்றன ; காடுகளில் யானைகளும் மதங்கொண்டன, காளைகளும் மகிழ்ந்தன ; சிங்கங்களும் இளைப்பாறின ; மலைகளும் அழகுற்றன ; வேந்தர்களும் போர் முயற்சியை விட்டடங்கினர்கள் ; இந்திரனும் மேகங்களுடன் விளையாடுகின்றனன் ; மேகங்கள் ஊழிகாலத்திய பொய்கோதம்போல வொளிக்கின்றனவாகி மழையினால் ஆறு ஏரி குளம் நடவாபி கிணறுகளை நிரப்பிப் பாரெங்கும் பெருகச் செய்கின்றன ; மழைநீர் வேகமாகப் பருந்து வீழ்கின்றது ; காற்று மொலியுற்று வீசுகின்றது ; ஆறுகளும் கரைகளை யுடைத்துக்கொண்டு வழி கடந்து வேகமாகப் பெருகுகின்றன ; தார்வேந்தர்கள் மனிதர்களினுலே போலச் சிறந்த மலைகள் மேகங்களினுலே அபிஷேகஞ் செய்யப்பட்டனவாகி யழகிய தம்மழகினைக் காட்டுகின்றனபோலும், ஆகாயமெங்கும் அம்புதத்தினால் மறைக்கப்பட்டது ; லக்ஷ்மியன்கண்ணுக்குக் காணப்படுகின்றிலன் ; பாரெங்கும் நீர் பாய்ந்து நனைந்தது ; திசைகளெல்லா மிருள்மூடி விளங்குகின்றில ; பருத்துயர்ந்த மலைச்சிகரங்கள் அருவிநீர்களினுலே முத்துமாலை பூண்டனபோலத் திகழ்கின்றன ; அந்த அருவிகளை கற்களில் சிதருற்று மயில்கள் கூவுகின்ற குகைகளில் தேங்கி அறுபட்டுதிர்ந்த மணிவடம் போலக்காணப்படுகின்றன ; நாற்புறங்களிலும் மழை தாரைகளும் புனருங் காலையி லறுந்துவீழ்ந்த விண்ணுலகிலுள்ள பெண்களின் முத்துவடங்கள் போலவே விளங்குகின்றன ; பறவைகள் கூடுகளிலடங்குகின்றமையினாலும், தாமரைமலர்கள் குவிகின்றமையினாலும், ஜாதிமலர்கள் மலர்கின்றமையினாலும், கதிரவன் அத்தகிரியை யடைந்தனனென்றறிகின்றேன் ; ராஜர்களின் யுத்த யாத்திரை தீர்ந்தமையின், சேனைகள் மீண்டு வருகின்றன ; பகை யடங்கிற்று ; வழி மழை நீரினால் நிரப்பப்பட்டது ; ஸாமவேதிகளுக்கு அத்தியயனாரம்பகாலமான புரட்டாசிமாதம் வந்தது ; பரதன் இப்போது எல்லாச் செயல்களையும் நிறுத்திவிட்டு வேண்டும் பொருள்களையெல்லாம் ஸம்பாதித்துச் சித்தஞ்செய்துகொண்டு கோஸலநாட்டிலே சாதுர்மாஸ்ய ஸங்கல்பஞ் செய்துகொண்டு விரதம் பூண்டிருப்பன் ; நான் வனவாஸம் புறப்படுகையில், அயோத்தியிலே எவ்வண்ணந் தோன்றினவுண்டாயிற்றோ, அவ்வண்ணமே இப்போழ்து ஸரயூ நதியிலே மேல் வெள்ளத்தினாலே பேரொலி யெழுந்திருக்கும் ; இந்த மழை காலங்களில் மஹாராஜரும் பகையின்றி யரசு பெற்று மனைவியுடன் சேர்ந்தின்புற்று மகிழ்கின்றனர் ; யாளைருவனே இப்பொழுது பாரிழந்து, பத்தினியையும் பறிகொடுத்து, நதியின் கரைபோலக் கரைந்து நைந்து வருந்துகின்றேன் ; அடா லக்ஷ்மண! என் சோகமும் மிக வளர்ந்தது ; கார்ப்பருவமும் கழிகின்றிலது ; பகைவனே கொடிய அரக்கர் கோனை ராவணன் ; ஆதலின், இம்மூன்றும் முடிவற்றனைத் தோற்று

கின்றது ; இப்போழ்து யுத்த யாத்திரைக்குத்தக்க காலமன்றென்பதையும் வழியெங்கும் சேறுகி யாறுகளினல் தடுக்கப்பட்டுளதென்பதையும் கண்டே மஹாராஜர் இப்போழ்தே பிராட்டியைத்தேட முயற்சிசெய்யக் கட்டளை செய்தருள்கவென்று வணங்கி வேண்டினையிலும் உடன்படாமலிருந்து விட் டேன் ; அன்றியும், நெடுநாளாய் மிகவுந் துன்புற்று இப்போழ்தே இல்லா ளுடன் கூடிய மஹாராஜரைச் சிறிதுகால்மாவதின்புறச்செய்யாமல் என் காரியத்தையே பெரிதாக நினைந்து வருத்தமுறுவிக்க மனங்கொண்டிலேன் ; அவன் இப்போழ்தின்புற்று இளைப்புத்தீர்ந்து சரத்காலம் வருகையில் தாமே யறிந்து நன்றியுடையனகி என் காரியத்தைச் செய்வனென்பதில் ஸந்தேஹ மில்லை ; ஆதலின் ; யான் அந்தக் காலத்தையே எதிர்பார்த்திருக்கின்றேன் ; மஹாராஜரும் நதிகளும் எப்போழ்து தெளிவுறுவார்களோ ?—

ఉపకారేణవీరోహా ప్రతికారేణయుజ్యతే।
అకృతజ్ఞోప్రతికృతో హన్తిసత్వవతామ్మనః॥

உபகாரேணவீரோஹி ப்ரதிகாரேணயுஜ்யதே।
அக்ருதஜ்ஞோப்ரதிக்ருதோ ஹந்திஸத்வவதாம்மன: ॥

ரூரனை அவனை நாம் செய்த உபகாரமேப்ரதியுபகாரஞ் செய்யும்படி செய்யும்; நன்மையை மறந்து பிரதியுபகாரம் செய்யாதான் பெரியோர் களி னுடைய மனத்தை வருத்தமுறச் செய்வானல்லனே ? என்றிவ்வண்ண மருளிச்செய்கையில், இளையபெருமாளைச்செவியுற்று மகிழ்ந்து பெருமாளை நோக்கி; எம்மைய்யரே ! தேவரீரருளிச்செய்தது உண்மையே ; மஹாராஜர் இம்மழைகாலங் கழிந்ததும் பிராட்டியைத்தேட முயற்சிசெய்வதில் தடை யில்லை; ஆதலின், தேவரீர் சரத்காலத்தையே யெதிர்நோக்கி இக்காலத்தைத் துன்புறுமல் கழித்தருள்க ; என்று வேண்டி விண்ணப்பஞ்செய்தனர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தெட்டாவது ஸர்க்கம்
முற்றிற்று.

இருபத்தொன்பதாவது ஸர்க்கம்.

சிறியதிருவடி மஹாராஜர்க்குணர்வுட்டிச் சேனைகளை யழைப்பிக்கும்படி. கட்டளை செய்வித்தது.

அங்கே மஹாராஜர் கார்காலம் நீங்கி யர்காசம் மேகமின்றி நின்மல மாகி அன்னப்பறவைகளி னெலிகொண்டு சந்தனம்போலக் குளிர்ந்தும் வெண்மைநிறமுற்றுமுள்ள நிலவினல் திகழ்ந்திருக்கையிலும்; காமமயக்கினை ல்றியாமல் தர்மார்த்தங்களையுந்துறந்து நல்வ்ழிதப்பி யெப்பொழுதும் அந்

---

* இந்த ஸர்க்கத்தில் பெருமாள் அடைக்கலமாக அடைந்தவர்களைப் பிரிவதில் தமக்குள்ள துன்பத்தை அன்யாபதேசமாய் சுலோகத்தோறும் அருளிச்செய்திருக்கின் றனர் ; அதனை முறையே சுருக்கமாகக் காட்டுகின்றேன்; சில சேதனர்களுக்கு புரா

சிறியதிருவடி மஹாராஜருக்கு நன்மதியுரைத்தது. அக

தப்புரத்திலேயேயிருந்து மதுபானஞ்செய்து மதங்கொண்டு தன் கோரிகை யெல்லாமீடேறித் தன் மஹாவியான ருமையையும், மனத்துக்கினிய தாரை யையும் அடைந்து அச்சம்தீர்ந்து அல்லும் பகலும் இடை விடாமல் விஹா ரஞ்செய்துகொண்டு நந்தனவனத்தில் தெய்வப்பொதுமகளிர்களுடன் கூடி விளையாடுகின்ற வீண்ணவர் வேந்தன்போலே மகிழ்ந்து ராஜ்ஜிய காரியங் களை மந்திரிகளாதினஞ்செய்து அவர்கள் யாது செய்ததையும் ஆராயாமல் காமமோகிதனாகியிருப்பதைச் சிறியதிருவடி கண்டு மிகவும் ராஜபத்தியுடை யவரும், காலதேசவிசேஷங்களையறிந்தவரும், மிகவும் நுண்ணறிவுடைய வருமாதலால் இவர் இப்போது பெருமாளுடைய காரியத்தில் முயற்சியில் லாமலிருப்பது தகுதியற்றதென்று ஸமயம்பார்த்து மதுரவாக்கியங்களினு லே மஹாராஜரைமகிழ்வித்து தற்காலத்திலும் எதிர்காலத்திலும் மறுமையி லும் நன்மை விளையுமாறு பிரீதி விசுவாஸ பூர்வமாக மஹாராஜரைக்கிட்டி மொழியலுற்றனர். கேளீர் மஹாராஜரே! தாங்கள் கிஷ்கிந்தாராஜ்ஜியத்தைப் பெற்று கீர்த்தியுற்று குலமுறையாகவந்த செல்வத்தையும் அடைந்து மகிழ்ந் தீர்; ஆயினும், மித்திரர்களைச் சேர்த்துக்கொண்டு மகிழ்விக்கவேண்டும்; தங்களுக்கு அந்த காரியமொன்றே மிகுந்துளது; யாவன் மித்திரர்களிடத் தில் காலத்தை யறிந்து நடந்து கொள்ளுகின்றானே, அவனுக்கே இராஜ் ஜியம் கீர்த்தி பராக்கரமங்கள் வளரும்; யாவனுக்கு பொருள் சேனா தோழர் செங்கோலினை சேர்ந்திருக்கின்றனவோ, அவனே நெடுங்காலம் பாராள்வான்; ஆதலின், தாங்களும் நற்குண நற்செயலுடையீரும் நல்வழி துறந்திலீரும், ஆகின்றீர்கள்; ஆகையால், முன்னமே யுதவிசெய்த தோழ ருடைய காரியத்தை முயற்சிசெய்து முடிக்கக்கடவீர்கள். யாவனொருவன் எல்லாக்காரியங்களையும் விட்டுவிட்டாவது மித்திரகாரியத்தையே மேற் கொண்டு செய்து முடிக்கின்றானே, அவனுக்கு ஒருக்காலும் தீமைகள் நேரா; இப்போது நமக்கு மித்திரகாரியம் ஸீதாபிராட்டி யெழுந்தருளி யிருக்குமிடத்தைத் தேடுவதே யாகின்றது; அந்தக் காரியம் செய்யுங் கால மும் நேர்ந்துளது; செயற்குரிய காலங் கடந்தபின்பு, யாவனொருவன் மித்திரகாரியங்களில் முயற்சியுறுவானே, அவன் அக்காரியத்தைச் செய்து முடித்துத்தரினும் உதவி செய்தவனாகான்; பெருமாளுக்கு உடனே பிராட் டியாரைத் தேடுவிக்கவேண்டுமென்று திருவுளமிருக்கினும் தாங்களேற் படுத்திய காலங்கழிவதன் முன்னம் அவஸரப்பட்டுத் தங்களுக் கறிவித் தருளார்; தங்களுடைய குலஞ் செழிப்பதற்குக் காரணமும், நீங்கா நட் புடையவரும், அளவிடற்கரிய பிரபாவமுடையவருமாகிய அந்த ஸ்ரீராம சந்திரருக்குத் தாங்களும் நிகரான தோழராகின்றீர்கள்; அவர் தங்க ளுக்கு முன்னமே யுதவிசெய்திருக்கின்றமையின், அவர் காரியத்தைத் தாங் கள் ஆவலுடன் செய்க; வாநரசேனைகளைச் சேர்ப்பதற்காகத் தூதர்களுக்

தன கர்மபரிணமத்தாலே மடமையைத்தருகின்ற காலம் நேர்ந்தது; மனம் இருளாலே மூடப்பட்டது; சிலர் நல்வினையிலேலே என்னத்தொழுகின்றனர்; சிலர் காமக் குரோதாதிகளாலே பீடிக்கப்படுகின்றனர்கள்; என்றிவ்வகையாகவே நுண்ணறிவி னல் உணர்ந்துகொள்க,

குக் கட்டளைசெய்தருள்க ; பெருமாள் தங்களை எவ்மளவும் மித்திர காரியஞ் செய்யவேண்டிய காலங்கழிந்திலதென்றே யெண்ணவேண்டும் ; ஏவினபின்பு, அந்தக்காலங்கழிந்து விட்டதாகவே யாகும் ; முன்னம் உபகாரஞ் செய்யாதவர்களுக்கும் தாங்கள் உபகாரஞ் செய்தவர்களாகின்றீர்கள் ; ராஜ்ஜியத்திலும், தனத்திலும் உபகாரஞ்செய்த பெருமாள் விஷயத்தில் கேட்கவேண்டுமா ? அநேகமாயிரம் ருக்ஷவாநர கோலாங்கூலாதிகளுக்கு இறையாகிய தாங்கள் அந்த காரியத்தைச் செய்யும் திறமையுடையீராகியும், கட்டளையிட ஏன் தாமஸஞ் செய்கின்றீர்கள் ; பெருமாளும்முடைய உதவியின்றியே ஸுரா ஸுர மஹாரகராக்ஷஸஜாதிகளையும்கொன்று வெற்றிக்கொள்ளத்திறமை யுடையவராகியும், தாங்கள் பிராட்டியிருப்பிடத்தை யாமே வாநரர்களைக்கொண்டு தேடுகின்றேனென்று பிரதிஜ்ஞைசெய்திருக்கின்றமையின், அந்தப் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவதன்பொருட்டு எதிர்பார்த்திருந்தருள்கின்றனர் ; பெருமாள் தங்களுக்குத் தம்முயிரை விடுவதிலும் அச்சமின்றி மஹாபகாரஞ்செய்தருளினர் ; ஆதலின், பிராட்டி மண்ணுலகிலோ, விண்ணுலகிலோ, எங்கிருக்கினும் தேடி வருவோம் ; தேவாஸுர கந்தர்வயக்ஷகின்னரோரகாதியர்களும் பெருமாளுக்குத் தீமை செய்யத்திறமை கொள்ளார்களாயின், அரக்கர்கள் எவ்வண்ணந் தீமை செய்யவல்லவராவார்கள். ஆதலின், அத்தன்மையரான பெருமாளுக்கு உதவி செய்ய முயற்சி செய்க ; தங்களுடைய கட்டளையிலேயாங்கள் செல்வோமாயின், பாதாளத்திலாயினும், பூமியிலாயினும், ஜலத்திலாயினும், வானிடையிலாயினும், விண்ணுலகிலாயினும் தடையிலது ; ஆதலின், கட்டளை செய்தருள்க ; யாவன் எவ்விடத்தில் யாது செயல் செய்யக்கடவன். அநேகங் கோடி வாநரர்கள் தங்கள் கட்டளையை எதிர்பார்த்திருக்கின்றனர்களல்லரோ ? என்றிவ்வண்ணமுரைசெய்த சிறியதிருவடி வாக்கியத்தை மஹாராஜர்கேட்டு மனந்தெளிந்து ஸேநாபதியான நீலனை யழைத்து நாற்றிசைகளிலுமுள்ள வாநரசேனைகளையெல்லாம் அழைப்பிக்கும்படி நிச்சயித்து அவனை நோக்கிக் கட்டளைசெய்யலுற்றனர். கேளாடா நீலா ! அங்குள்ள சேனைகள் கட்டளையைக் கேட்டவுடனே சிறிதுந் தாமஸமின்றி ஏவ்வண்ணம் புறப்பட்டு வருமோ, அவ்வண்ணம் வேகமுள்ள வ்வாநரஸைந்த பாலர்கள் விரைவாகச் சென்று அழைத்துவரக் கடவர்கள். நீயுமருகிலுள்ள சேனைகளை யழைத்து வருக ; பதினைந்து நாளைக்குள்ளே எல்லோரும் இங்கே வந்து சேர்ந்து விடவேண்டும் ; அந்நாள் கடந்து யாவன் வருவானே அவனுக்குடனே விசாரணையின்றி உயிர் வாங்குந் தண்டனை விதிக்கப்படும். ஆதலின், நீயிப்பொழுதே அங்கதகுமாரனுடன் சேர்ந்து ஜாம்பவான் முதலிய பெரியோர்களைக்கண்டு என் கட்டளையை நன்காராய்ந்து தடையின்றிச் செய்க ; என்றிவ்வண்ணம் மஹாராஜர் கட்டளைசெய்து விட்டந்தப்புரத்தினுள்ளே சென்று மகிழ்ந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தொன்பதாவது ஸர்க்கம்
முற்றிற்று.

மூப்பதாவது லர்க்கம்.

காற்காலம் கழிந்தும் மஹாராஜர் முயற்சியின்றி யிருப்பதறிந்து பெருமாள் திருவுள்ளஞ் சீறி யருளியது.

அங்கே பெருமாளும் காற்காலம் நீங்கி, மேகங்களின் தடையின்றி யாகாயம் நின்மலமாக விளங்குகையில், காற்காலம் நான்கு மாதங்களையும் காமசோகமோக பீடையிலுல் வாடி வருந்திக் கழித்து ஆகாயம் வெண்மை யுற்றிருப்பதையும், சந்திரன் நின்மலமாக விளங்குவதையும், சரத்கால ராத் திரியும் நிலவென்னும் வெண்சாந்தம்பூசி யொளிப்பதையுங்கண்டு மஹா ராஜர் முயற்சியின்றிக் காமவேட்கை கொண்டிருப்பதையும், சீதாதேவி பிரிந்து வருந்துவதையும் நினைந்து மிக வருந்தி மோகமடைந்து பின்பு தெளிந்து பிராட்டியையே நினைந்து கொண்டு திரிந்து காகாவித தாது ராகமுற்ற அம்மலையின்மிசை யுட்கார்ந்து நின்மலமான வானை நோக்கி, யன்னப்புள்ளின் ஒலியையும் கேட்டு காயகியை நினைந்து வருந்தி யழத் தொடங்கினர். அந்தோ! முன்பு ஸாரஸப்பறவைகளின் தொனிகளை என் னுடன் சேர்ந்து செவியுற்று மகிழ்ந்த பான்மொழியளான என்னுயகி இப் பொழுது அவைகளின் தொனியைக்கேட்டு எவ்வண்ணம் மகிழ்வுறுவாள்; மலர்ந்த பொன்போன்ற பந்தூகமலர்களைக்கண்டும் என்னைக்காணுமல் எவ் வண்ணம் மகிழ்வாள்; முன்பு யாவள் களஹம்ஸங்களின் கலநாதத்திலுல் துயிலுணர்ந்து மகிழ்ந்தனளோ, அவள் இப்போது எவ்வாறு மகிழ்வாள்; மகிழ்ந்தொலிக்கின்ற சக்கரவாகப்புள்ளின் தொனியைக் கேட்டும் எவ்வண் ணம் என்னைப்பிரிந்து உய்வள்; அந்த மனத்துக்கினிய மனையாளின்றி, வாபீகூபதடாக, கிரிகானனங்களைக் காணினும் மகிழ்வுறுகின்றிலேன்; என் னைப்பிரிந்து வருந்துகின்ற என் மனையாளை சரத்கால குணங்களிலுல் நிறை ந்த காமன் நன்கு வருத்தாது அருள்செய்வன் கொலோ? என்றிவ்வண்ணம் பெருமாள் நீரின்றிச் சாதகம் புலம்புவதுபோலப் புலம்பி வருந்திக்கொண்டி ருந்தனர். அப்பொழுது கூப்கனிகள் கொணர்வதன்பொருட்டுப் புறத்தில் சென்றிருந்த இளையபெருமாள் எழுந்தருளிப் பெருமாளிவ்வண்ணம் சோக முற்று வருந்துவதைக்கண்டு பெருமாளை நோக்கி, எம்மையரே! தேவரீர் இப்பொழுது காமனுக்குக்குறியாகி வருந்துவதிலுலாயினும், இயல்பாயுள்ள பௌருஷத்தை யிகழ்வதிலுலாயினும், பிராட்டியைத்தேடுவதில் முயற்சி செய்யவேண்டுவதைத் துறப்பதிலுலாயினும், யாது பயன்; மனந்தேறி யுகந்தருள்க; காரியத்தில் முயற்சியையும், மனந்தெளிவுற்றிருப்பதையும், தைரியம் உபாயங்களை மேற்கொள்ளத்தக்க காலம் நேர்ந்ததையும், மஹா ராஜர் முதலாரேர்களின் உதவி செய்யுந் திறமையையும், தேவபூஜை முதலியவைகளால் வாய்த்த நல்வினையையும் கண்டு மகிழ்ந்தருள்க; தேவ ரீருடன் கூடிய பிராட்டியை மனத்திலுல் விரும்புவதற்கும் வேறே யொருத் தனும் திறமைகொள்ளான்; தீயின் ஜ்வாலையைக் கிட்டிய எவன்தான்

னரிந்தழியான் ; என்றிவ்வண்ணம் இதமாகவும், உண்மையாகவும், இனிதாக வும் மொழிந்து தேற்றினர். பெருமானும் அதுகேட்டு மனந்தேறி யவரை நோக்கி, அடா தம்பி லக்ஷ்மண! நீ மொழிந்தவாறு சீதாதேவியைத் தேடு வதில் முயற்சிசெயல்வேண்டுமே? போர்செய்வதற்குரிய உற்சாஹாதிகளை யும் மேற்கொளல்வேண்டும்; சீதையைப்பெறும் உபாயம் நன்றாக ஆலோ சனை செயல்வேண்டுமே; இவ்விஷயத்தில் சிறிதும் ஐயமிலது; என்று அருளிச்செய்து பிராட்டியை நினைந்து முகம் முகிழ்த்து வருந்தி மீளவும் இளையபெருமானை நோக்கி, அடா தம்பி! பர்ஜன்யதேவனும் மழைபொழிந் துலகங்களை மகிழ்வித்து மீண்டுச் சென்றனன்; மேகங்களும் நாடுநகர் காடு மலை முழுதிலும் பரவி முழங்கி மழை பொழிந்திளைத்து மால்யானைகள் மத மேறி யெங்குமலைந்து மதம் நீங்கி யிளைப்புற்றனபோலாயின; மழைக்காற்று களும் குளிர்ந்தும், குடஜம், அர்ஜுனம், கேதகிகளின் மணங்கொண்டு வீசி யிளைத்தொழிந்தன; மேகங்களினுடையவும், மதவேழங்களினுடையவும், மயில்களினுடையவும், மலைபருவிகளினுடையவும், மிக்க வொலிகள் குலைந்தன; மலைகளும் மழையினல் நின்மலமாகிப்பற்பல தாதுக்களின் காந்திகொண்டு நற்சாந்தமப்பினைபோல விளங்குகின்றன; இக்காலத்திலாறுகள் முதன் முதல் நாயகருடன் புணர்கின்ற குலமகளிர்கள் வெட்கத்தினல் மெல்ல மெல்ல ஜகனத்தைக் கட்புலனுக்குவதுபோல மணற்குன்றுகளை வடிவினல் மெல்ல மெல்லக் கட்புலனுக்குகின்றன; இப்பொழுது இந்த சரத்காலம் தன்னுடைய செல்வத்தை யேழிலை வாழைமரங்களின் கிளைகளிலும், ஸூரி யன் சந்திரன் விண்மீன்களின் ஒளிகளிலும், சிறந்த யானைகளின் லீலை களிலும், பகிர்ந்துக்கொண்டு விளங்குகின்றது; இவ்வண்ணம்பற்பல இடங் களில் பலவகைப்பட்ட சரத்காலத்தின் செல்வமானது இப்பொழுது கரு வன்கிரணைத்தினல் வளர்க்கப்பட்ட தாமரைமலர்களின்மேலே மிகவும் அதி கமாக விளங்குகின்றது; எழிலட்டபாலை மலர்களின் மணங்கொண்டு களி வண்டுகளின் ஒளி மிகுந்து வீசுகின்ற காற்றும் மதவேழங்களினுடைய நிரளை மனம் வெகுண்டு மதம்மிகுந் துலாவச்செய்கின்றது; மழைகாலத்தில் புறத்தில்போய் வந்து அழகிய சிறகுகளையுடைய கமலமலர்களின் தாளிகள் படிந்து நீரிலுலாவி மஹாநதிகளின் மணற்குன்றுகளிற்கூடிய சக்கரவாகங் களுடன் சேர்ந்து அன்னப்பறவைகள் விளையாடுகின்றன; மதங்கொண்டு பிளிறுகின்ற களிறுகளும், இறுமாப்புற்ற காளைகளும் கலக்கமின்றித் தெளி வுற்ற ஆறுகளும் மிகவும் ஒளிகொண்டு விளங்குகின்றன; மயில்களும் கரு முகிலினல் விடப்பட்டு நின்மலமான வின் தலத்தைக்கண்டு, தோகைகளையு மூர்த்தது ஒளிகுன்றி பேடுகளினிடத்திலாவலழிந்து சிந்தைகொண்டிருக் கின்றன; இனியகந்தங்கள் பொருந்தி மலர்களின் பாரத்தினல் மூனையில் வணங்கிப் பொன்னிறமூற்றுக் காணற்கினிய பந்தாகமரங்களினல் காடெங் கும் மிகவும் ஒளிகொண்டு விளங்குகின்றது; வனைகளுடன் கூடினவும், தா மரைகளின் மேல் ஆசையுடையனவும், காடெங்குமலைந்து ஏழிலம்பாலை மலர்களின் பரிமளத்தை மோந்து மதங்கொண்டனவுமாகிய யானைகள் இப்

போது மெல்ல மெல்ல நடக்கின்றன ; ஆகாசம் மேகங்களின்றித் தீட்டிய சஸ்திரம்போன்ற வண்ணமுற்று விளங்குகின்றது ; ஆறுகளும் நீர்வற்றி மெதுவாகப் பெருகுகின்றன ; காற்றும் செங்கழுநீர் மணம்பொருந்திக் குளிர்ந்து வீசுகின்றது ; திசைகளும் இருளின்றி விளங்குகின்றன ; பூமியும் கதிரவன் கிரணங் காய்வதினால் சேறுலர்ந்து துகளெழுகின்றது ; ஆதலின், ஒருவர்க்கொருவர் பகையும் பொறுமையுங்கொண்ட அரசர்களுக்கு இது போர் முயற்சி செய்யுங்காலம் நேர்ந்தது ; சரத்காலகுணங்களினால் வளர்ந்த தேஹகாந்திபுற்று மகிழ்ந்து தூளிபடிந்து மதங்கொண்டு போருகின்ற காளைகள் தம்மினத்திடையில் ஒலிக்கின்றன ; காமவேட்கைகாண்டு காட்டிடையில் மெல்லமெல்ல உலாவுகின்ற மதயானையை யாசையுடன் வசகளும் சூழ்ந்து செல்லுகின்றன ; மயில்களும் தமக்கணிகள்போன்ற தோகையை யுதிர்த்துவிட்டு அன்னங்களின் ஒலியினால் மிதட்டப்பட்டனபோலத் தீனங் கொண்டு நதிகளின் கரையில் மதங்குன்றியிருக்கின்றன ; மயக்குற்ற யானைகள் பிளிறல்களினாலே காரண்டவம் முதலிய நீர்ப்பறவைகளை யச்சமுற் றோடச்செய்து தாமரைமலர்கள்மலர்ந்தழகாய் குளங்களிலிறங்கிக் கலக்கிக் கலக்கி நீர் குடிக்கின்றன ; கலக்கந்தெளிந்து மணற்குன்றுகள் தோன்றி உருசியுற்ற நீர் பொருந்திக் கோகுலங்களுடன் கூடி. ஸாரஸப்புள்ளின் தொனியும் பொருந்தி விளங்குகின்ற நதிகளில் அன்னப்பறவைகள் மகிழ்ந்து வந்தடைகின்றன ; இப்போது நதிகளினிடையவும், மேகங்களினிடையவும், மலையருவிகளினிடையவும், பெருங்காற்றினிடையவும், மயில்களினிடையவும், மண்டூகங்களினிடையவும் ஒலிகள் அழிந்தன ; பற்பலவண்ணமுடைய கார்ப்பருவத்தில் புற்றிலடங்கியிளைத்திருந்த நாகங்களும் பசியினஞ் சினங்கொண்டு விடம் மிகுந்து இரைதேடித் திரிகின்றன ; சந்திரனென்னும் காந்தனுடைய கிரணகளென்னும் கைகளின் ஸம்பந்தத்தினால் மகிழ்ந்து மலர்ந்த தாரகை (விண்மீன்—கருவழி) யுடைய சந்தியென்னும் காந்தை ராக (சம்மை—ஆசை) முற்றுத் தாழ்கவே அம்பரத்தை (ஆகாயத்தை—ஆடையை) விட்டுவிடுகின்றனள்..அந்தோ ! இரவென்னும் வனிதையும் சந்திரனென்னும் மூக்தையும், விண்மீன்களென்னுஞ் சுண்ணமும் நிலவென்னும் வெண்பட்டும் உடையளாகி விளங்குகின்றனள். பக்குவமான செம்பாக்கதிர்களைத்தின்று மகிழ்ந்த ஸாரஸப்பறவைகளின் நிரையானது விரைவாக ஆகாயத்தில் பறந்து செல்லுகையில், காற்றினலசைக்கப்பட்ட தோரணமாலைபோல விளங்குகின்றது ; நீரன்னப்பறவை யுறங்குகின்ற குமுதங்கள் மலர்ந்த இக்குளமானது மேகங்களின்றி, விண்மீன்கள் நிறைந்து சந்திரனையுமுடைய விண்ணிடைபோல விளங்குகின்றது ; கும்பலாகக் கூவுகின்ற அன்னங்கள்பொருந்தி மலர்ந்த கமல குமுத கல்ஹார மலர்களுற்ற சிறந்த வாபிகளின் காந்தி பலகலஞ்மணிந்த காமினிகளின் காந்திபோல விளங்குகின்றது ; கடைகின்ற தயிர்ப்பானைகளினோசையும், கன்றை வேண்டிக்கூவும் கோக்களின் கதறலும், கொழுத்தகாளைகளின் முக்காரமுமாகிய பலகத்தங்கள், இடையர்கள் வாசிக்கும் புல்லாங்குழலோசையாகிய தூரிய

வாத்தியத்துடனே கூடிக் காலைவேளையில் வீசுகின்றகாற்றினால் அதிகமா யெழுப்பப்பட்டனவாகி ஒன்றுக்கொன்று விசேஷமாக மிருத்தியடைகின் றன போலும், மந்தமாருதத்தினால் சலிக்கின்ற நிர்மலமான வெண்பட் டாடைபோல விளங்கும் நூதனமான பூக்களுடனே கூடிய நாணல்களினால் நதிகளின்கரைகள் அழகாகச் சோபிக்கின்றன. காடுகளில் வேகமுற்று மது வுண்டு மதமேறிய வண்டுகள் மகிழ்ந்து காற்றைப் பின்தொடர்ந்து கமல தூளிகள் படிந்து செல்லுகின்றன ; நீர் தெளிவுற்றது ; ஆம்பல் மலர் ந்தது ; அன்ன மொலிக்கின்றது ; செம்பாப்பயிர் கதிர் பழுத்துப் பொன்னிறமுற்றிருக்கின்றது ; மந்தமாருதம் வீசுகின்றது ; சந்திரனும் நிலவுகின்றனன் ; ஆதலின், கார்காலங் கழிந்ததென்று நன்கு விளங்குகின் றது ; மீன்களுலாவுகின்ற நதிகளின் வேகமும் மந்தமாயிற்று ; அது உதய காலத்தில் காந்தஸ்ரீப் புணர்ந்தெழுந்து சோம்பலுற்றுச் செல்லுகின்ற காந்தையர்களின் கமனம்போல விளங்குகின்றது ; நதிகளின் முகங்கள் சக்கர வாகம் வேலம்பாசி நாணல் மலர்களுடன் கூடியிருக்கின்றமையின், கோரோ சனைதிலகம் மகா காடபத்திரம் வெண்பட்டு இவைகளையுடைய காமினி முகம்போல விளங்குகின்றது ; மலர்ந்த பர்ணம் அஸநம் இவைகளின் மலர்களினுமேல பலவண்ணம் பொருந்தியும், மதமேறிய வண்டுகளாலித்து மூள்ள வனங்களில் காமன் பாணர்ஸநமுடையனுகிக் கொடுமை கொண்டி ருக்கின்றனன் ; மேகங்களும் மழையினாலுலகங்களை மகிழ்வித்தும், ஆறு குளங்களை நிறைத்தும், பயிர்களைச் செழிப்பித்தும் மறைந்துவிட்டன ; மந் தக்களும் குரரி சக்கரவாகம் முதலிய பறவைகளினாலொலிக்கப்பட்டு தெளி ந்து விளங்குகின்றன ; மலைத்தாழ்வரைகளிலே அஸநம் கோவிதாரம் ஸப்த பர்ணம் பந்துஜீவம் என்னும் இவைகள் மலர்ந்து விளங்குகின்றன ; பார டா லக்ஷ்மண ! ஹம்ஸஸாரஸ சக்கரவாககுரரங்களினாலே நதிகளின் மணற் குன்றுகள் விளங்குகின்றன ; ஆதலின், பகைகொண்ட வேந்தர்கள் படை யெடுத்துப் பகைவர்மேல் செல்லும் வேளை நேர்ந்துளது ; ஆதலின் இப் போழ்தே மஹாராஜரும் முயற்சிசெயல் வேண்டுமன்றே ? அவரையும் காண்கின்றிலேன் ; அவ்வண்ணமான முயற்சியையும் அறிகின்றிலேன் ; கார்காலமான நான்கு மாதங்களும் எனக்கு அநேகமாயிரம் வருஷங்கள் போலக் கழிந்தன ; சக்கரவாகப்பெண் தன் பர்த்தாவை விட்டுப் பிரியா மல் கூடவே செல்வதுபோல என்னையகியும் கோரமான தண்டகாரணியத் தையும் உத்தியானவனமாக எண்ணி என்னுடன்தொடர்ந்து வந்தனளல் லளோ ? அடா தம்பி ! யான் அத்தன்மையளான மனைவியையுமிழந்து ராஜ்ஜியத்தையுந்துறந்து துன்புற்றிருக்கையிலும், மஹாராஜர் என்மீதருள் செய்கின்றிலரந்தோ ! யான் அநாதனென்றும், ராஜ்ஜியத்தை யிழந்தவ னென்றும், பத்தினியைப் பறிகொடுத்தவனென்றும், தீனமடைந்தவனென் றும், பரதேசியென்றும், காமுகனென்றும், தன்னையே தஞ்சமடைந்தவ னென்றும், இக்காரணங்களினாலேயோ ஸுக்ரீவன் துர்ப்புத்தியுற்று என்னை மதிக்காமல் இகழ்கின்றனன் ; சீதையைத்தேடும் விஷயத்தில்

அவன் எனக்குப் பிரதிஜ்ஞை செய்துகொடுத்து அக்காலம் நேர்ந்ததை யறியாமல் மதிகெட்டிருக்கின்றனன்; ஆதலின், நீ இப்பொழுது கிஷ்கிந்தைக் குள்ளே சென்று வாநரர்களுட் சிறந்தவனும், மூர்க்கனும், சிற்றின்பங்களில் மயக்குற்றுழல்பவனுமாகிய சுக்ரீவனை நோக்கி, யானுரைத்ததாக வுரை செய்க.—

అర్థినాముపసన్నానాం పూర్వంచప్యుపకారిణాం।
ఆశాంసంశ్రుత్యమోహాన్ని సలోకేపురుషాధమః॥

அர்த்தினாமுபஸந்நாநாம் பூர்வஞ்சாப்யுபகாரிணாம்।
ஆசாம்ஸம்ச்ருத்யயோ ஹந்திஸலோகேபுருஷாதமஃ॥

முன்னம் உபகாரஞ்செய்தவர்கள் ஆபத்தை யடைந்து தனக்குதவி செய்யும்படி யாசனைசெய்கையில், அப்படியே செய்வேனென்று அவர்களுக் காசை காட்டிப் பின்பு, உதவி செய்யாமல் எவன் வருத்துகின்றானோ, அவன் உலகினில் எல்லோரிலுங் கடையானவன்; பாவமோ புண்ணியமோ யாவனொருவன் தான் சொல்லியபடி தவறாமல் செய்வானோ, அவனே மிகவும் சூரன்; யாவரிலுமுயர்ந்தவன்; ஒருவரால் உபகாரத்தை யடைந்தபின் அவர்களுக்கு ஸமயத்தில் யாவனொருவன் பிரதி யுபகாரம் செய்கின்றிலனோ, அந்த நன்றி மறந்தவனை இவ்வுலகினில் யாவரும் பழிப்பதுமன்றி, இறந்த பின்னும் அவனுடலைக் கழுகு முதலிய ஜந்துக்களும் தின்டா; அந்த ஸுக்ரீவன் இப்போது என் காரியத்தில் முயற்சியின்றி யிருக்கின்றமையின், போர்க்களத்தில் பொன்னணியமைந்த என்னுடைய கோதண்டத்தின் கோரமான மின்போன்ற ரூபத்தைக்காண விரும்புகின்றனன்போலும், சிற்றங்கொண்டு கோதண்டத்தில் யான் கணையைத் தொடுக்கையில், அதன் ஞாணின் தொனியைச் செவியுறக் கோறுகின்றனன்போலும், உன்னையே துணையாகவுடைய என்னுடைய தோள்வலியை நன்கறிந்திருந்தும், அதனை இலக்ஷியம் செய்யாமலிருப்பானோ? யாம் எந்தப்பயனைக் கோரியே இவ்வண்ணம் அவனுடன் தோழமைசெய்துகொண்டு வாலியையும் கொன்று முடிசூட்டிவித்தனமோ, அந்தப்பயன் விளையும் முயற்சிக்குரிய காலம் நேர்ந்திருக்கினும், தன்னுடைய காரியம் ஆகிவிட்டதென்று இறுமாந்திருக்கின்றனன். மழைகாலம் நான்கு மாதம் மாத்திரம் பொறுத்திருள்க; பின்புடனே முயற்சிசெய்கிறேனென்று பிரதிஜ்ஞைசெய்தும் அக்காலம் கழிந்துவிட்டதை யுணராமல் மயக்குற்றிருக்கின்றனன். அவன் இன்னும் இனத்தார் சுற்றத்தார்களுடன் கூடி மதுபானஞ்செய்து மயங்கியிருக்கின்றனனேயன்றி, எம்மேல் சிறிதும் தயைசெய்கின்றிலன்; ஆதலின், நீ சென்று யான் தினமுறுவேனுகி லெவ்வண்ணமிருப்பேனோ, அந்த கோர ரூபத்தையும் அவனுக்கறிவித்து யானுரைத்ததாக மீளவுமிவ்வாறுரை செயாய்;—

నచసంకుచితఃపంథా యేనవాలీహతోగతః।
సమయేతిష్ఠసుగ్రీవ మావాలిపథమన్వగాఃll

நசஸங்குசிதஃபந்தாயேந வாலீஹதோகதஃ।
ஸமயேதிஷ்டஸுக்ரீவ மாவாலிபதமன்வகாஃ॥

கேளாய் ஸுக்கிரீவ! வாலி யென்னுலடிபட்டு எந்தவழியிலே சென்றானே, அந்த வழி யின்னும் புல்லெழுந்து மறைந்து குறுகியிலது; ஆகையால், ஸத்தியத்திலே உறுதிபாய் நின்று வாழ்க; வாலிசென்ற வழிபற்றிச் செல்ல விருப்பமுறற்க; முன்பு யான் வாலி யொருவனையே கொன்றேன்; இப்போது நீ சத்தியம் தவறுவாயாகில், உன்னை இனத்தார் சுற்றத்தாருடன் கொலை செய்வேனென்றித் தனியே கொல்லேன்; ஆகையால், காரியம் இவ்வண்ணமிருக்கையில் யாது செயின் நலமோ, அதனைச்செய்க; என்றுரைத்து மேலும் யாது யாது உரைசெயின் தகுமோ, அவ்வாறு மொழிக; காலம் கழிகின்றமையின், துரை செய்க; மஹாராஜனே! ஸத்தியம்செய்தபடி செய்க; வாலியின் வழியைச் சேரற்க; என்று மேன்மேலும் உரைசெய்க; என்றிவ்வண்ணம் கட்டளைசெய்தருளிப் பெருமாள் சினமும் சோகமும்கொண்டு மனம் வருந்துவதை இளையபெருமாள் கண்டு ஸுக்கிரீவன்மேல் கடுஞ்சினங்கொண்டு அவன் விஷயத்தில் கெடுமதிகொண்டு ஜ்வலித்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் மூப்பதாவது ஸர்க்கம்
முற்றிற்று.

மூப்பத்தோராவது ஸர்க்கம்.

இளையபெருமாள் சினங்கொண்டு கிஷ்கிந்தைக் கெழுந்தருளுகையில் அங்கதன் அதுகண்டு மஹாராஜருக் கறிவித்தது.

பெருமானிவ்வண்ணம் காமசோக பீடிதராய்ச் சினங்கொண்டதைக் கண்டு இளையபெருமாள் அவரை நோக்கிக் கேட்டருளீர் எம்மையரே! அந்த ஸுக்கிரீவன் நன்னடக்கைகொண்டு ஸத்தியத்தில் நிலையுறுன்; இது செயின் நன்று, இது செயின் தீது என்பதையும் அறியான்; ஆதலின் இந்த வாநரராஜ்ஜியத்தையும் நெடுங்காலம் ஆட்சிசெய்து இன்புறுன்; அவன் புத்தி இப்போதும் நங்காரியத்தில் ஊக்கங்கொண்டிலதன்றே? அவனைக்கொன்று வாலியுடன் சேர்த்தல்வேண்டும்; தீக்குணமுடைய இவனுக்கு ராஜ்ஜியமளிப்பதுந் தகுதியுடையதன்று; மிகவும் பெருகி வளருங் கோபத்தைப் பொறுக்கவுந் திறனுமகொள்ளுகின்றிலேன் யான்; ஆதலின், ஸத்தியம் தவறின அவனை இப்போதே கொலைசெய்துவருவேன்; வாலி புத்திரனை அங்கதகுமாரனை அபிஷேகம்பூண்டு வானரசேனைகளுடன் கூடிப் பிராட்டியாரைத் தேடக்கடவன். ஆதலின், இவ்வண்ணம் அனுமதி செய்தருள்க; என்று விண்ணப்பஞ்செய்து வில்லுங்கணையுங் கையிலேந்திச் சினத்தினல் பதைத்தனர். பெருமாள் அவர் மிகவும் சினமுற்றிருப்பதைக் கடாக்ஷித்து அவரை நோக்கி, அடா தம்பி லக்ஷ்மண! உன்னைப்போன்றவர் உலகத்தில் இவ்வண்ணம் பாவச்செயலை யொருவரும் செய்யார்; நல்லிவை

கத்திலேலே இவ்வகையான கெடுமதியை யாவன் போக்கி நற்செயல் செய்வாமே, அவனே யன்றோ சிறந்தவன் ; அடா ! இவ்வண்ணம் கொலைசெய்வதை நற்செயலென்று எண்ணற்க ; முன்பவன்மீதுள்ள அன்பினையும், நட்பினையும், ஆராய்ந்தறிந்து செய்க ; அவன் காலந்தப்பி யிருக்கினும், வன்மொழி மொழியாமல் நன்மொழியாலேயே செய்தியை யறிவிக்கக்கடவை என்று இதமுரைத்துத் தேற்றிச் சினத்தைத் தணித்தருளினர். இளய பெருமாளும் இவ்வண்ணம் பெருமாள் மொழிந்ததைக் கேட்டுத்தேர்ந்து விடைபெற்றுக்கொண்டு விரைவாகச்சென்று கிஷ்கிந்தையைக்கிட்டிப் பட்டணத்தினுள்ளே புகுந்து இந்திரன் வில் மலைமுடிகள்போன்ற கோதண்டத்தைக் கையிலேந்திக் காலாந்தகன்போல ஜொலித்து மந்தரமலைபோலைசைந்து தேவகுருவுக்கு நிகரான புத்தியுடையாதலின், தான் சுக்கிரீவனுக்குரைக்கவேண்டிய வசனங்களையும், அதற்கு அவன் இது பதிலுரைப்பான் என்பதையும், அதற்கு பதிலிது உரைக்கவேண்டுமென்பதையும் நன்காராய்ந்துகொண்டு பெருமானுடைய காமசோக கோடங்களினூலே தாமும் மிகச் சினங்கொண்டு பெருங்காற்றுப்போல எழுந்தருளி ஸால தால தமால அசுவகர்ணம் முதலிய பற்பல மரங்களை வேகத்தினால் முறித்தும், மலைச்சிகரங்களை யுருட்டியும், கால்களினூலே சிலைகளைப் பொடிசெய்துகொண்டும் நெடுந்தூரமாயினும் ஓரடியைப்போல வேகமாக மதயானைபோல நடந்து மலைகளினிடையிலிருக்கின்ற பற்பல வானரசேனைகள் நிறைந்த அந்தக் கிஷ்கிந்தையைக் கண்டு சுக்கிரீவன்மேலுள்ள கோபத்தினூலே உதடுகள் துடித்து அந்தக் கிஷ்கிந்தைக்குப் புறத்திலே திரிகின்ற வானரர்களைக்கண்டு கிட்டிச் சென்றனர். அந்த வானரர்கள் இவர் இவ்வண்ணம் சினங்கொண்டு வருவதைக் கண்டு போர்செய்ய வருவதாக நினைத்து அவர்களும் மரங்களையும், சிலைகளையும் கையிலெடுத்துக்கொண்டு போர்செய்யச் சித்தங்கொண்டு நின்றனர்கள். இளயபெருமாளும் அவர்கள் இவ்வண்ணம் நிற்பதைக்கண்டவுடனே மிகுதியாக விறகுகளையுடைய தீபோல இருமடங்கு சினங்கொண்டு ஜொலித்து விளங்கினர். அந்த வானரர்களும். இவர் இவ்வாறு மிகச் சினமுற்றதைக் கண்டு அச்சங்கொண்டு. பிரளயகால ருத்தியுவாகவெண்ணிப் பத்துத் திசைகளிலுமோடி மஹாராஜர் மனை சேர்ந்து இளயபெருமாளிப்படி சினங்கொண்டு வந்திருப்பதை யுரைத்தனர்கள். ஆயினும், சுக்கிரீவன் தாரை முதலிய வனிதையர்களுடன் கூடி. மதுவுண்டு மதிமயங்கி யிருக்கின்றமையின், அவர்கள் இவ்வண்ணங் கூவி யுரைத்தனைச் செவியுறாமல் அந்தப்புரத்தினுள்ளே யிருந்தனன். பின்பு, மந்திரிகள் எல்லோரும் யோசனை செய்து யானை மலை மேகங்களுக்கு நிகரான வானரர்களை யேவினர்கள் ; அவர்கள் எல்லோருங் கோரரூபமுடையவர்களும், சிங்கம் புலிகள்போன்ற வீரமுடையவர்களும், சிலர் பத்துயானை பலமுடையவர்களும், சிலர் நூறு, சிலர் ஆயிரம், சிலர் பதினாயிரம், சிலர் லக்ஷம் என்றிவ்வண்ணம் மேன்மேலுயர்ந்த யானைகளின் பலமுடையவர்களுமாதலின், யாவரும் கோட்டை வாயில் வந்து தடுப்பவர்களாக நின்றனர்கள். அவர்களிவ்வண்ணஞ் சுற்

கனையும், கிளைகளையும், மரங்களையும் கையிலேந்தி யெதிர்த்து நிற்பதை இளையபெருமாள்கண்டு சினம்மூண்டு வாநரர்கள் இவ்வண்ணம் உள்ளும் புறமும் நிறைந்திருப்பதையும், சுக்கிரீவன் மதிமயங்கி யூக்கமற்றிருப்பதை யும், பெருமாள் காமமும் சோகமுமுற்று வருந்துவதையும் ஆராய்ந்து வெம்மைகொண்டு நெட்டுயிர்த்துக் கண்சிவந்து புகையுடைய பாவகம்போல மூண்டெரிந்து பாணங்களின் மூனைகளென்னும் நாவினையும், கோதண்ட மென்னும் உடலையும், தேஜஸ்ஸென்னும் விஷத்தையுமுடைய ஐந்தலை நாகம்போலச் சீறி எரிகின்ற ஊழிகாலத்தீபோலவும், தூண்டப்பட்ட நச்ச ரவம்போலவும் திகழ்ந்தனர். இவர் இவ்வண்ணம் இருப்பதை யங்கத குமாரன் கண்டு துன்புற்றுநின்றனன்; இளையபெருமாள் அந்த அங்கதனை யழைத்து அடா குமாரா! யான் உரைத்ததாக மஹாராஜரிடம் சென்று லக்ஷ்மணன் தங்களைக் காண்பதன்பொருட்டு வந்திருக்கின்றனன்; அவன் தம்மைபிரிந்ததுயரத்தினல் மிகத்துயரங்கொண்டு வாயிலில் நிற்கின்றனன்; அவருடைய வாக்கியத்தில் தங்களுக்கு ஆவலுளதாயின், தாங்களை யங்கே செல்வதோ? அவரையே இங்கேயழைப்பிப்பதோ? இரண்டிலொன்று செய்க; என்றுரைசெய்து அவர் அதற்குபதில் யாதுமொழிவதையுங் கேட் டுணர்ந்து விரைவாகவந்து செய்திசொல்லாய்;என்று உரைசெய்தனுப்பியரு ளினர். அங்கதகுமாரன் அந்த வாக்கியத்தைக் கேட்டு விரைவாக வோடி வந்து மஹாராஜர் தாரை குமையிவர்களைத்தொழுதுபின்பு நிகழ்ந்தவண்ணை முரைசெய்தனன். ஸுக்கிரீவன் தூக்கத்திலும், மதத்திலும் மயக்குற்றி ருக்கின்றமையின், அதனை யுணராமல் காமமோஹிதனையிருந்தனன்; பின்பு, அங்கதன் விரைவாக வராமையினலே இளையபெருமாள் சினங்கொண்டு வரு வதை யங்குள்ள வாநரர்கள் கண்டு அவரை நல்வார்த்தைகளினல் ஸமா தானஞ்செய்து யாது செய்வரோவென்று கில்கிலென்று கூவினர்கள். சிலர் பெருவெள்ளம்போல் வேகங்கொண்டு வச்சிராசனிபோல் தொனிபுற்று வருகின்ற இவரைக்கண்டு சிங்கநாதம் செய்தனர்கள். இவ்வகையாகப் பேரொலியெழுந்து பட்டணமெங்கும் ஒலிக்கையில் சுக்கிரீவன் அது கேட் டுத் திடுக்கிட்டு மலர் மாலை மணிவடங்களெல்லாமசைந்து எழுந்தனன். அத்தருணத்தில் அங்கதன் ஓடி யழைக்க சுக்கிரீவனுக்கு மிகவும் இனியர் களும், அந்தப்புரத்திற் சென்று இராணிகளைப் பார்க்கத்தக்கவர்களுமாகிய இரண்டு மந்திரிகளான ப்லகூகன் ப்ரபாவன் என்னும் இரண்டுபேர்களும் உள்ளேசென்று இளையபெருமாளிவ்வண்ணம் வந்திருக்கின்றனரென்பதை யறிவித்தனர்கள். தேவேந்திரனைப்போல் போகமுடைய அந்த ஸுக்கிரீ வனை யவர்கள் நல்வாக்கியங்களினல் புகழ்ந்து தேற்றிக் கேளீர் மஹா ராஜரே! ஸத்தியந்தவறுதலவர்களும், மஹாபாக்கியமுடையவர்களும், பரா ளத்தக்கவர்களுமாகிய ராமலக்ஷ்மணரென்னுமிருவர் தங்களுடன் நட்புச் செய்துகொண்டு வாலியையும் கொலைசெய்து கிஷ்கிந்தாராஜ்ஜியத்தையும் தங்களுக்களித்து உபகாரஞ்செய்தனர்களே, அவர்களுள் ஒருவரான இளை யபெருமாள் வில்லுங்கணையுமாக நங்கோட்டைவாயிலில் வந்து நிற்கின்ற

னர்; அவரைக்கண்டு அச்சங்கொண்டே வாநரர்களெல்லோரும் கூவுகின்றனர்கள். அந்த லக்ஷ்மணர் பெருமாளுடைய கட்டளையைத் தங்களுக் கறிவிப்பதன்பொருட்டே வந்திருக்கின்றனர்; இந்த அங்கதனும் அவரால் தங்களிடம் அனுப்பப்பட்டிருக்கின்றனன்; இவரே கண்களாலே வாநரர்களை யெரிப்பவர்போலச் சினங்கொண்டு வாயிலில் காத்திருக்கின்றனர்; ஆதலின், தாங்களை இனத்தார் சுற்றத்தார்களுடன் கூடி யங்குச்சென்று அவரைத் தலைவணங்கி வேண்டிச் சினத்தைத்தணித்தருள்க; பெருமாள் யாது கட்டளைசெய்தனுப்பியிருக்கின்றனரோ, அதனை யவ்வண்ணமே செய்க; நல்லொழுக்கங்கொண்டு ஸத்தியத்தைப் பாதுகாத்து மகிழ்க; என்று அங்கதனுடன் கூடி யுரைத்து மனந்தெளிவித்தனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் மூப்பத்தேராவது ஸர்க்கம்
முற்றிற்று.

மூப்பத்திரண்டாவது ஸர்க்கம்.

சிறியதிருவடி மஹாராஜர்க்கு இதமுரை செய்தது.

பின்பு ஸுக்ரீவன் இவ்வண்ணம் அங்கதனும் மந்திரிகளும் உரைசெய்த வாக்கியத்தைக் கேட்டு அறிவுற்று அச்சங்கொண்டு சினமுற்ற இளையபெருமாளை யெவ்வண்ணம் ஸமாதானஞ்செய்வேனென்று சிந்தைகொண்டு ஆஸனத்தை விட்டிறங்கி ஆலோசனையில் மிகவும் புத்தியுடைய மந்திரிகளை நோக்கிக்கேளீர் அமைச்சர்களே! யான் பெருமாள் விஷயத்திலாயினும், இளையபெருமாள் விஷயத்திலாயினும், சிறிதும் வன்மொழி மொழிந்திலேன்; தீச்செயலுஞ் செய்திலேன்; ஆயினும் இளையபெருமாள் வன்சினமுற்றனரென்று சிந்தை செய்கிறேன்; ஒருக்காலையில் என்மீது பகைகொண்ட யாரேனும் எனக்குத் தீங்குசெய்யச் சமயம்பார்த்து என்மீதில்லாத தோஷங்களையுரைத்து இளையபெருமாள் சினமுறச் செயதனர்கள் கொலோ? இவ்விஷயத்தில் நீவிரெல்லீரும் நன்காராய்ந்து அவர் சினமுறுவதற்குக் காரணம் யாதாகுமோ, உண்மையாக அறிந்துரைமின்; பெருமாளிடத்திலாயினும், இளையபெருமாளிடத்திலாயினும் எனக்கு அச்சமுறவிரகில்லையே? ஆயினும் காரணமின்றித் தோழமைகொண்டவர் என்சினமுற்றனரென்று எண்ணுகிறேன்; அதனாலேயே நடுக்கமுறுகின்றேன்; யாவருடனும் தோழமை செய்துகொள்வதென்பது எளிதே; பின்பு, அத்தோழமை யழியாவண்ணம் பாதுகாத்துக்கொள்வது மாத்திரம் அரிது; சித்தஞ் சஞ்சலமாதலின், அற்பவிஷயத்திலும் பிரீதி யழிந்துவிடுகிறதன்றே? ஆதலாலேதான் யான் அச்சமுறுகின்றேன்; பெருமாள் எனக்குச்செய்த மஹோபகாரத்துக்கு யான் என்னசெய்தால்தான் பிரதியுபகாரமாகும்; என்றிவ்வண்ணமுரைசெய்கையில், அருகிலுள்ள சிறியதிருவடி கேட்டுத் காமே கமக்குள் ஊகித்து மஹாராஜரை நோக்கிக் கேளீர்மஹாராஜரே!

தாங்கள் பெருந்தகவுடையராதலின், இவ்வண்ணம் நன்றிமறவாமலிருப்ப தென்பது இயல்பே யாதலின், ஆச்சரியமுறத்தக்கதன்று ; பெருமாள் தங்களுக் குபகாரஞ்செய்வதன்பொருட்டே யன்றே, அச்சமின்றித் தேவேந்திரனுக்கு நிகரானபராக்கரமமுடைய வாலியைக் கொலைசெய்தருளினர் எவ்வகையாலோசினை செய்யினும் பெருமாளிப்போது தங்கள்மீது கொண்டிருக்கின்ற கோபம் பிரணயகோபமாகக் காணப்படுகின்றதேயன்றி, புண்ணியமானதாக தோற்றுகின்றிலது ; தாங்கள் மதிமயக்குற்றிருக்கின்றமையின், கார்காலம் கழிந்து கூதிர்காலம் முதிர்ந்ததென்பதையும் அறிகின்றிலீரென்று காலத்தை யறிவிப்பதன்பொருட்டே பெருமாள் இளையபெருமாளை யிங்கனுப்பி யருளியிருக்கின்றனர் ; மலர்ந்த ஏழிலம்பாலை மரங்களினால் அழகுற்ற சரத்காலம் வந்திருக்கின்றதன்றே? ஆகாசமும் மேகங்களின் மறைவின்றி நின்மலமான வின்மீன்களையுடையதாகி விளங்குகின்றது ; ஆறு குளங்களும் தெளிவுற்றன ; திசைகளும் விளங்குகின்றன ; இவ்வண்ணம் உத்யோககாலம் சேர்ந்திருப்பதையும் தாங்களுணர்கின்றிலீர் ; ஆதலின், தாங்களிவ்வண்ணம் ஊக்கமற்றிருப்பதையறிந்தே இளையபெருமாளிங்கெழுந்தருளினர். பெருமாள் பாரிழந்து பத்தினியையும் பறிகொடுத்துத் துயருற்றிருக்கின்றமையின், அவராலேவப்பட்ட இளையபெருமாள் ஏதேனும் வன்மொழி மொழியினும் சினமுறாமல் பொறுத்தருள்க.

కృతాపరాధస్యహితేనాన్య త్పశ్యామ్యహంక్షమం
అనార్యజుష్టంబధ్వా లక్ష్మణస్యప్రసాదనాత్ ॥

க்ருதாபராதஸ்யஹிதே நாந்யத்பச்யாம்யஹம்க்ஷமம்
அநார்யஜுஷ்டம்பத்வா லக்ஷ்மணஸ்யப்ரஸாதனத்.

தாங்கள் பெருமாள்விஷயத்தி லிவ்வண்ணம் காலந்தப்பினமையின், அபராதஞ்செய்தீராயினர் ; ஆதலின், இப்போழ்து தாங்கள் கைகூப்பித் தொழுது இளையபெருமாளை இனியமொழிகளினால் சினந்தணியுமாறு தேற்றிச் சமாதானஞ் செய்வதைவிட மற்றொன்றும் தங்களுக்கிப்போது தக்கதாக எண்ணுகின்றிலேன் ; மந்திரிகளாயிருப்பவர் கேட்குங்காலையில், இதமுரைக்கவேண்டுவது கடமையாதலின், யான் இப்போது அச்சமின்றியுரை செய்தேன் ; பெருமாள் சினமுற்றுக் கையில் கோதண்டத்தை யெடுத்துநிற்பராகில், தேவாஸுரகந்தர்வாதிகளுடன் கூடிய எல்லாவுலகங்களையும் தம்வசம் செய்துகொள்ள வல்லவரல்லரோ ? ஆதலின், அவரை இப்போது சினமுறுவிப்பது தகுதியன்று ; பின்பும் சமாதானஞ்செய்யும்படியே நேருமன்றே? அன்றியிலே, நன்றிசெய்தவர் விஷயத்தில் இனியமொழி மொழிய வேண்டுமென்பதை விளுவல்வேண்டுமோ ? ஆதலின், தாங்கள் புத்திரமித்திராதிகளுடன் கூடி யவரை வணங்கிக் கணவனுக்குக் காந்தை படங்கியிருப்பதுபோலவே அடங்கியிருத்தலே நன்று ; பெருமாளுடையவும், இளையபெருமாளுடையவும், கட்டளைகளைத் தாங்கள் மனதிலும் தவிறநினைப்பது தீது ; தேவர்கோனுக்கு நிகரான ரூப பல பராக்கிரமஞ்ஞ ...

பெருமாருடைய திறமையும், தோள்வலியும், தங்கள் சித்தத்துக்கு விசதமே யன்றோ? ஆதலின், அவரை யன்புடனழைத்து வணங்கிச் சமாதானஞ் செய்தருள்க; என்று அமைச்சர்களின் நடுவில் மேன்மையாக மொழிந்து தேற்றி மகிழ்ந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் மூப்பதிரண்டாவது ஸர்க்கம்
முற்றிற்று.

மூப்பத்துமூன்றுவது ஸர்க்கம்.

சினங்கொண்டு வந்த இளையபெருமாளைத் தாரை இனியமொழிகளினால் தேற்றிச் சீற்றத்தை யாற்றியது.

அநந்தரம் சிறியதிருவடி யுரைசெய்த வாக்கியங்களை மஹாராஜர் கேட்டு அதுவே இதமென்றுணர்ந்து இளையபெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரும்படி கட்டளைசெய்ய அவ்வண்ணமே வானரர்களால் அழைக்கப்பட்ட இளையபெருமாள் பெருமாருடைய நியமனப்படிக்குக் கிஷ்கிந்தைக்குள்ளே சென்றனர். வாயில் காப்பவரெல்லோரும் இவரைக் கண்டு கைகூப்பி நின்றனர்கள். இவர் பெருமூச்செறிகின்ற நாகம்போல் வருகின்றமையின், வானரர்களெல்லோரும் அச்சங்கொண்டு கிட்டிச் சூழ்ந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்றனர்கள். இளையபெருமாரும் இரத்தினங்களிழைக்கப்பட்டும், மலர்ந்த காடு சோலைகளையுடையதும், மாளிகை மேன்மாளிகைகளிலே அடர்ந்தும், பலவகைப்பண்டங்கள் நிறைந்தும், வேண்டும் கனிகள் பழுத்தமரங்களிலுல் மணங்கமழ்ந்து விளங்கியும், தேவகந்தர்வாதிகளின் அம்சமுடைய வானரவீரர்கள் திவ்விய மால்ய வஸ்திரங்கள் தரித்து காணற்கினியராகி விளங்கியும், சந்தனம் அகரு தாமரை முதலிய வாஸனை திரவியங்களிலுல் மணமூற்றும், ஸுரைமதுக்களின் வாஸனை வீசியுமுள்ள ராஜவீதி யுடையதுமாகிய அந்தக் கிஷ்கிந்தையையும், நின்மலமான மல்யருஷிகளையும், முறையே அங்கதன், மைந்தன், துவிவிதன், கவயன், கவாக்ஷன், கஜன், சரபன், வித்யுன்மாலி, ஸம்பாதி, ஸூர்யாக்ஷன், அனுமான், வீரபாகு, ஸுபாகு, நளன், குமுதன், ஸுஷேணன், தாரன், ஜாம்பவான், ததிவக்த்ரன், நீலன், ஸுபாடலன், ஸுநேத்ரன் முதலிய வானரர் தலைவர்களுடைய மாளிகைகளையும் கண்டு அம்மாளிகைகள் மிகச் செல்வமுடையனவும், வெண்மைநிறமுற்ற சரத்கால மேகம் போன்ற வண்ணமுடையனவும், திவ்விய மாலைகளுடையனவும், மிகுந்த தனதான்யங்களுடையனவும், சிறந்த பெண்மணிகள் நிறைந்தனவுமாகி விளங்குவதைக் கண்டு வியப்புற்று வெண்மைநிறமுள்ள கோட்டைச் சுவரிலுலே சூழப்பட்டுப் பகைவர்கள் புகற்கரிய மஹாராஜருடைய தேவேந்திர பவனம்போன்ற மாளிகை கைலாஸமலைச்சிகரங்கள்போன்ற மேல்மாளிகைகளின் சிகரங்களாலும், பலவகைப் பழங்கள் பழுத்து மலர்கள் மலர்ந்து மணங்கமழ்ந்து

தழைத்த பற்பல மரங்களினூலும், தேவேந்திரனுலளிக்கப்பட்ட கற்பக மரங்களினூலும் மிக விளங்கியும், சுஸ்திரபாணிகளான சிறந்த பலமுடைய வாநரர்களினூல் வாயிலிலே காக்கப்பட்டும், திவ்விய மாலைகளினூல் அலங்கரிக்கப்பட்டும், பொன் மணித் தோரணங்கள் கட்டப்பட்டும் விளங்குவதைக்கண்டு அதற்குள்ளே கதிரவன் மேகமண்டலத்திடையில் தடையின்றிப் புகுவதுபோலப் புகுந்து ஏழுகோட்டைகளையும் தாண்டிச் சென்று பொன் வெள்ளிகளினூலே செய்யப்பட்ட கட்டில் முதலிய ஆஸநங்களையுடையதும், பற்பல அலங்காரங்களையுடையதுமான மஹாராஜநுடைய அந்தப்புரத்தைக்கண்டும், இனிய நிருத்த கீதவாத்தியங்களின் தொனியைச் செவியுற்றும், பற்பல ரூபயௌவநகர்விதர்களும், நற்குலத்திற் பிறந்தவர்களும், சிறந்த ஆடையாபரணங்களைத் தரித்தவர்களும், திருப்தியுடையவர்களும், காமபோகங்களில் ஆவலுடையவர்களும், சிறந்த போகோபகரணங்களை யுடையவர்களுமாகிய பெண்களையும், பரிஜன பரிவாரங்களையும் கண்டும் அப்பெண்களின் சதங்கைத்தண்டைகளின் ஒலியைக் கேட்டும் வெட்கமடைந்து அணிகளினிலியினூலே சினங்கொண்டு நல்லொழுக்கமுடையவராதலின், அப்பெண்களைக்காணுது அச்சங்கொண்டு மறையும்படி செய்வதற்காக தனுஷ்டங்காரஞ்செய்து அதனல் திசைகளெல்லாம் முழங்கச்செய்து ஏகாந்தமான ஓரிடத்தில்சென்று பெருமாளுடைய சோகத்தை நினைந்து வருந்தி நின்றனர். அந்த வொலியினல் இளையபெருமாள் அருகில் எழுந்தருளினரென்பதை யறிந்து மஹாராஜர் அச்சங்கொண்டு சிறந்த சிங்காஸநத்தினின்றும் அகன்று அங்கதன் முன் பென்னிடம் வந்துரைசெய்த துண்மையே; அவ்வண்ணமே யிளையபெருமாள் அருகிலெழுந்தருளிவிட்டனர்; தனுஷ்டங்காரம் கேட்கப்படுகின்றது; என்று ஆராய்ந்தறிந்து முகம்வாடிச் சிந்தைகொண்டு நடுங்கித் தாரையை நோக்கி, கேளடி அன்புள்ள என்னுயிகி! இயல்பாகவே சாந்தகுணமுடைய இளைய பெருமாள் சினங்கொண்டவர்போல வருவதற்குக் காரணம் யாதாகுமோ நீ யென்னென்று நினைக்கின்றனை; நரசிங்கமான அவர்காரணமின்றிச் சினமுறுவரல்லரோ? நாம் சிறிதேனும் இவர் விஷயத்தில் தீங்குசெய்தனமோ? இதனை நீ விரைவாக ஆராயந்து தேர்ந்துரைசெய்க; அன்றி, நீயே நேராகச் சென்று அவரைக்கண்டறிந்து இனிபமொழிகளினூலே தேற்றிச் சீற்றந் தணியுமாறு செய்யக்கடவை. அவர் உன்னை காண்பராயின், மநம் மகிழ்வாரேயன்றிச் சினமுறார்; பெரியோர்கள் பெண்களிடங்களில் ஒருக்காலும் தீமைசெய்யார்கள்; நீ போய் இனியவாக்கியங்களினூலே தேற்றக்கேட்டு மகிழ்ந்திருக்கையில், யான் இடையிலே வந்திளைய பெருமாளைக் கண்டு வார்த்தைச்சொல்லித் தேற்றுவேனென்றுரைசெய்தனுப்பினர். தாரையும் மகாராஜராலிவ்வண்ணமேவப்பட்டு மதமயக்கினல் கண்கள் சுழன்று கால்கள்விடறி அரைஞாணத்தொங்கவிட்டுக் கொங்கைகளின் பாரத்தினல் வணங்கி யிளையபெருமாளருகிற்சென்று நின்றனள். அந்த இளையபெருமாளும் இந்தத் தாரையைக்கண்டு பரத்தையல்களை யுற்றுப்பார்ப்பது பாவமென்று

தலைகுனிந்து பெண்ணருகிலிருப்பதனல் கோபந்தணிந்து உதாசினமாக நின்றனர் ; ஆயினும், அந்தத் தாரை மதுபானஞ் செய்ததிலேல நாணமின்றி இளயபெருமாளுடைய கண்ணேக்கங்குளிர்ந்து தெளிந் திருந்தமையின் அச்சமுந்தீர்ந்து இளயபெருமாளே நோக்கி,யன்புகூர்ந்து நல்வார்த்தைகளினலே தேற்றி மகிழ்விக்க முயன்றனள். கேட்டருளீர் தயரதன் திருமகனான இளயபெருமாளே ! தேவரீர் சீற்றங் கொண்டதற்குபாதுகாணாமுளது ; தேவரீருடைய கட்டளையின்படி யாவன் நடக்கின்றிலன் ; உலர்ந்த காடெங்கும் பற்றியெரிகின்ற காட்டுதீயை யாவன் அச்சமின்றி யெதிர்த்துள்ளேசெல்பவன் : என்றிவ்வண்ணம் மொழிந்த தாரையின் வாக்கிபத்தை இளயபெருமாள் கேட்டு அவளை நோக்கிக் கேளம்மா பெண்ணரசே! நீ மிகவும்நுண்மதி யுடையளாயிருந்தும் உன்பர்த்தாவான மஹாராஜர் இவ்வண்ணம் காமமயக்குற்று செய்கருமங்களை யுணராதிருக்கின்றரென்பதையும் அறிகின்றிலேயோ ? அவர் எம்மால் ராஜ்ஜியம் தமக்குவாய்த்ததென்பதையும், யாங்களிவ்வண்ணம் அவரை யடுத்திருக்கின்றேமென்பதையும், அறிகின்றிலரே ? இனத்தார் சுற்றத்தார் மந்திரிகள் எல்லோர்களுடனும் மதுவுண்டே மயங்கிக் கிடக்கின்றனரே ? அவர் எங்களுக்குநான்கு மாதம் கார்காலம் கழிந்தவுடன் பிராட்டியைத் தேடுவிக்கின்றேனென்று பிரதிஜ்ஞைசெய்துகொடுத்து அது கழிந்ததையும் அறியாமல் மதுவுண்டின்புற்றே மயங்கிக்கிடக்கின்றனரே?

సహిదరారసిద్యర్థం పానమేవంప్రశస్యతే
పానాదర్థశ్చదర్శశ్చ కామశ్చవతిహీయతే.

கஹிதர் மார்த்தவித்யர்த்தம் பாகமேவம்ப்ரசஸ்யதே
பாகாதர்த்தச்சதர்மச்ச காமச்சபரிஹீயதே.

ானத்திலல் தர்மார்த்தகாமங்கள் மூன்றுங்குறைந்தழிகின்றமையின் தர்மார்த்தங்கள் சித்திப்பதன்பொருட்டாக இவ்வண்ணம்பானஞ்செய்வதைப்பெரியோர்கள் புகழ்கின்றிலர்கள் ; நன்றி செய்தவர்களுக்குப் பிரதியுபகாரம் செய்யாதார்க்குத் தருமம் மிகவுங் குறைந்துவிடுகின்றது ; குணவாணனேதாழனேத் துறப்பதிலேலபொருளும் அழிந்துவிடுகின்றது ; தோழனேதருமத்திற்கும், அர்த்தத்திற்கும் காரணமல்லனே? மித்திரனே யுபேக்ஷைசெய்வதிலல் அவ்விரண்டும் அழிந்துவிடுமன்றே? இப்போது எமதுகாரியம் இவ்வண்ணம் நேர்ந்திருக்கையில், மஹாராஜர் இவ்வண்ணமிருப்பாராயின், யாங்கள் யாதுசெயில் தகுமோ அதனை நுண்ணறிவுடைய நீயேயாராய்ந்துரையாய் என்றுமொழிந்தனர். அந்தத்தாரையும் அவ்வாக்கியங்களைக்கேட்டு பெருமாளுடைய காரியத்தில் விசுவாஸம் தோற்றும்படியாக இளயபெருமாளே நோக்கிமொழியலுற்றனள். கேட்டருளீர் இளயபெருமாளே! தேவரீர் இப்போழ்துமஹாராஜர்மேல் கினமுறத்தக்க காலமன்று; பெரியோர்கள் தம்மையடுத்தவர்கள் மேலும் கடுஞ்சினம்கொள்வார்களோ?தேவரீர்களாலேதானே பொருளின்பங்களையுடைய இம்மஹாராஜருடைய மதமயக்கினலாக்கமற்றிருப்பதா

கிய இப்பிழையையும் பொறுத்தருள்க ; ராஜகுமாரரே ! வீரமுடையோர்கள் தமக்கு நிகரான வலிமைகொண்டெதிர்க்கின்ற பகைவர்மேலன்றே சினமுறுவார்கள் ; தமக்கீடில்லாத எளியர்மேலெவ்வண்ணஞ் சினமுறுவார்கள் ; அன்றியிலே, தேவரீர்போன்ற ஸத்துவகுணமுற்றுத் தவத்திற்கும் பிறப்பிடமானவர்கள் யார்மேலாயினும் சினமென்பதை யெவ்வண்ணம் எவர்தானுறுவார்கள் ; பெருமான் சினமுற்றதையும் அறிவேன் ; அதற்குக்காரணமான காலக்கழிவையும் அறிவேன் ; தாங்கள்செய்தகன்றியையும் அறிவேன் ; இப்போது யாதுசெயல்வேண்டுமோ அதனையும் அறிவேன் ; காமனுடைய திறமை மிகவும் வலியதென்பதையும் அறிவேன் ; அந்தக் காமனால் மஹாராஜன் எந்த ஜனத்தின்மீதாசையுறுவிக்கப்பட்டனனே, அதனையும் அறிவேன் ; தேவரீர் இவ்வண்ணம் சினமுற்றமையின், தேவரீர் புத்தி காமதந்திரத்திலூக்கங்கொண்டிலது ; காமவேட்கை மிகுந்த மனிதன் தேசகாலங்களையாயினும் அறம் பொருள்களையாயினும் அறிகின்றில னல்லனே ? எப்பொழுதும் என்னருகிலிருக்கின்றமையின், காமவேட்கை யதிகரித்து நாணமுமற்று மயங்கிக் கிடக்கின்ற மஹாராஜர் தேவரீர் தமையருக்குத் தோழனென்னும் முறையினால் தேவரீர்க்குச் சகோதரராதலின், அவர்மீதுள்ள இப்பிழையைப் பொறுத்தருள்க ; உண்டி சுறுங்கிப் புலன்களையென்று யோகஞ்செய்துகொண்டிருந்த மஹாமுனிவர்களும் காமனுக்குக்குறியாகி மயங்கினர்களெனின், இயல்பாகவே சஞ்சலசித்தமுடைய கபிஜாதியான இம்மஹாராஜர் விஷயஸுகங்களிலழுந்தி மயங்கிக்கிடப்பதென்பது வியப்போ ? என்று தாரை இவ்வண்ணம் மொழிந்து இளையபெருமாளை மகிழ்வித்து மீளவும் அவரை நோக்கி, மஹாராஜர்க்கிதமாகமொழியலுற்றனள். கேட்டருள்வீர் ராஜகுமாரரே ! மஹாராஜர் காமக்கடலில் மூழ்கி மயங்கியிருக்கினும் தேவரீர்கள் காரியத்தில் முன்பே முயற்சிசெய்யும்படி கட்டளை செய்தேயிருக்கின்றனர் ; ஆதலால், நாநாதேசநகரவாஸிகளான வானரர்கள் ஆயிரம், பதினாயிரம், கோடி, பத்துகோடி, நூறுகோடிகளாகச்சேர்ந்து வந்திருக்கின்றனர்கள் ; இதுவரையில் பரத்தையலைக் கண்ணுறலாகாதென்று புறத்திலே தானே நின்ற தேவரீரால் நல்லோர் நடக்கை பாதுகாக்கப்பட்டது ; தோழர் தோழருடைய பாரினைக் காண்பதுகடமின்மையினால் இகழப்படாததாகின், அந்தப்புரத்தினுள்ளே எழுந்தருள்க ; என்றிவ்வண்ணம் தாரையின் மொழியைக்கேட்ட இளைய பெருமாள் தாரையின் வேண்டுதலாலும், காலக்கழிவாகின்றதென்பதினாலும் உடன்பட்டுள்ளேசென்று சிறந்த ஆஸ்தரணமுடைய சிறந்த தங்கச்சிங்காதனத்தின்மேல் கதிரவன்போல விளங்குகின்றவரும், திவ்யாபரணங்களினால் நாநாவண்ணமுடைய மேனியுடையவரும், சிறந்தமாமலர் மாலைகள் சூழ்நல்லாடையுடுத்து அலங்காரஞ்செய்துகொண்டவரும், மேலைத்திரன்போல பிறரால் வெல்ல வொண்ணுதலுமான மஹாராஜர் திவ்யாபரணாலங்காரங்களையுடைய காமினியர்களுடன்கூடிச் சூழப்பட்டிருக்கக்கண்டு இருமடங்கு சினங்கொண்டு கண்கள் சிவந்த ஊழிகாலயமன்போல கோரரூபமுற்றுச் சென்றனர். மஹாராஜரும் சிறந்த சிங்காஸநத்திலிட்காற்று ருமை யின்

இளையபெருமாள் மஹாராஜரைக்கண்டு கோபித்தது. கஂதுஂ ணும் தன்மனையாளைத் தழுவிக்கொண்டு இளையபெருமாளெழுந்தருள்வதைக் கண்டனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில்மூப்பத்துமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

மூப்பத்துநான்காவது ஸர்க்கம்.

இளையபெருமாள் மஹாராஜர்க்குப் பெருமாளுடைய கட்டளையை யறிவித்தருளியது.

மஹாராஜர் இவ்வண்ணம் தடையின்றிச் சினங்கொண்டு வருகின்ற அந்த இளையபெருமாளைக் கண்டு அச்சங்கொண்டு மூண்டெரிகின்ற தீபோன்றவரும், பெருமாளுடைய வியஸனத்திலே பீடிக்கப்பட்டவருமான அவர் கிட்டுவதன்முன்னமே யாஸநத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட நெடிய சக்கரனுடைய த்வஜம்போல வெழுந்து நிற்கையில், ருமை முதலிய பெண்களும் உடனே வானிடையிலெழுகின்ற சந்திரனைத்தொடர்ந்து விண்மீன்களெழுவதுபோல எழுந்தனர்கள்; அப்பொழுது மஹாராஜரும் கைகூப்பிக் கற்பகம்போல அனைந்து நின்றனர்; இளையபெருமானும் ருமை முதலிய பெண்களுடன்கூடின மஹாராஜர் விண்மீன்கள் சூழ்ந்த பூர்ணசந்திரன் போலொளிக்கக்கண்டு சினங்கொண்டவரைநோக்கிக் கேளீர் மஹாராஜரே!

सत्त्वाभिजनसंपन्न स्यानृक्रोशोजितेंद्रियः।
कृतज्ञस्सत्यवादीच राजालोकेमहीयते॥

ஸத்வாபிஜனஸம்பன்ன ஸ்யானுக்ரோசோஜிதேந்த்ரியஃ।
க்ருதஜ்ஞஸ்ஸத்யவாதீச ராஜாலோகேமஹீயதே॥

ஸத்துவமுடையோனும், நற்குலத்திற்பிறந்தோனும், கருணை கூர்ந்தவனும், புலன்களைவென்றவனும், நன்றிமறவாதானும், சத்தியந்தவராதவனுமாகிய ராஜனே உலகினில் புகழப்படுகின்றனன். எந்த வேந்தன் அதருமமுற்றவனும், உபகாரஞ்செய்த தோழர்கள்விஷயத்திலேதானே பொய்யாகப் பிரதிஜ்ஞைசெய்தவனுமாகின்றனனோ, உலகினில் அவனிலுங் கொடியகொண்டவன் யாவனுளன்;—

शतमश्वानृते हन्ति सहस्रंतुगवानृते।
आत्मानंस्वजनंहन्ति पुरुषःपुरुषानृते॥

சதமச்வாந்ருதேஹந்தி ஸஹஸ்ரந்துகவாந்ருதே।
ஆத்மானம்ஸ்வஜனம்ஹந்தி புருஷஃபுருஷாந்ருதே॥

குதிரைவிஷயத்தில் பொய்யுரைப்பவன் நூறு குதிரைகளைக் கொலைசெய்தபாவத்தை யடைவன்; பசுவிஷயத்திலே பொய்யுரைசெய்பவன், ஆயிரம்பசுக்களைக் கொலைசெய்த பாவத்தை யடைவான்; மனிதன் விஷயத்

தில் பொய்சொல்லுமவன், தன்னினத்தாரையுங் கொலைசெய்து தானுங் கொலைசெய்து கொண்ட பாவத்தையடைவன் ; புருஷோத்தமரான பெருமாள்விஷயத்தில் பொய்யுரைப்பவன், யாது கதியை யடைவனே, நீயே யாராய்ந்தறியாய் ; கேளாய் வாநரர்கோனே ! முன்பொருவரிடத்தில் நன்றி பெற்றுக்கொண்டு பின்பு, அந்நன்றியை மறந்து பிரதி யுபகாரம் செய்யாதவன்யாவனே, அவன் எல்லாராலும் கொலைசெயற்குரியவன் ; முன்பு, தேசமுகதேவர் நன்றிமறந்தவனைக்கண்டு சினங்கொண்டொரு சுலோக மூரைசெய்தனர். அதனை மொழிகின்றேன் கேளாய் ;—

ब्रह्म घ्नेचसुरापेच चोरेभग्नव्रतेतथा ।
निष्कृतिर्विहितासद्भिः कृतघ्नेनास्तिनिष्कृतिः ॥

ப்ரஹ்மக்னேசஸுராபேச சோரேபக்னவ்ரதேததா ।
நிஷ்க்ருதிர்விஹிதாஸத்பிஃ க்ருதக்னேநாஸ்திநிஷ்க்ருதிஃ ॥

பிரஹ்மஹத்திசெய்தவனுக்கும், ஸுராபானஞ்செய்தவனுக்கும், களவு செய்தவனுக்கும், பிரஹ்மசர்யம் முதலிய விரதத்தைத் துறந்தவனுக்கும், முனிவர்கள் பிராயச்சித்தம் விதித்திருக்கின்றனர்கள் ; நன்றி மறந்தவனுக்குமாத்திரம் பிராயச்சித்தம் விதித்திலர் ; இல்லையென்றே கூறினர்கள் ; என்னும் பொருளுடையசுலோகமே அது. நீயவ்வண்ணம் நல்லொழுக்கமிலாதவனும், நன்றிமறந்தவனும், பொய்யனும் ஆகின்றனை ; முன்பு பெருமாளிடத்தில் உபகாரத்தைப்பெற்றுக்கொண்டு இப்போது அதற்கு பிரதி யுபகாரஞ்செய்கின்றிலையல்லையோ ? நீ ஸ்ரீராமனுக்குப் பிரதியுபகாரஞ் செய்யக் கருத்துற்றிருக்கின், இதுவரையில் பிராட்டியைத்தேடும் விஷயத்தில் முயற்சி செய்திருக்கவேண்டுமன்றே ? நீ யிவ்வண்ணம் அற்பமான கிராமியபோகங்களிலே விருப்பங்கொண்டு பொய்யாக பிரதிஜ்ஞைசெய்து தவளைபோலக் கற்றித் தன்னிடத்தில் வரும் தவளையைத்தின்னும் சர்பமும் போன்றவன் என்பதைப் பெருமாளிதுவரையிலு மறிந்திலர் ; ஆதலாலேதான் மஹாபாகரான பெருமாள் துராத்துமாவான உன்னுடன் தோழமைசெய்து கொண்டு வாலியையுங் கொலைசெய்து வ்வாநரராஜ்ஜியப்பட்டாபிஷேகஞ் செய்வித்தருளினர். நீ யிப்போது பெருமாள் செய்த நன்றியை மறந்து மயக்குற்றிருப்பாயாகில், உடனே கொடிய கணைகளிலைடிப்பட்டு முன்சென்ற வாலியைப்போய்க்காண்பாய் ; வாலி சென்றவழி யின்னும் புல்லெழுந்தழிந்து மறைந்திலது ; ஆதலின், சத்தியத்தில் நிலைகொண்டு கட்டுண்டிருக்க ; வாலி சென்ற வழியைச் சேரற்க ; நீ பெருமாலுடைய கூரிய கணைகள் வச்சிராயுதம்போலப் பாய்ந்துவருவதைக் கண்ணுறக் கருதுகின்றனைபோலும், ஆதலாலேதான் இவ்வண்ணம் நிரந்தரம் விஷய ஸுகங்களையே யனுபவித்துக் கொண்டு பெருமாலுடைய காரியத்தை மனதிலுங்கருதுகின்றிலை ; என்று சிறிதுந் தாக்ஷிண்யமின்றிப் படபடவென்று மொழிந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் மூப்பத்துநான்காவது ஸர்க்கம்
முற்றிற்று.

மூப்பத்தைந்தாவது லர்க்கம்.

மீளவும் தாரை இளையபெருமாளை இனியமொழிகளினல் ஸமாதானஞ்செய்து சீற்றத்தைத்தணித்தது.

இவ்வண்ணங் கொடுமொழிமொழிந்திகழ்ந்த இளையபெருமாள் ஒளி கொண்டெரிகின்ற தீபோல ஜ்வலிக்கக்கண்டு முழுமதிபோன்ற முகத்தை யுடைய தாரை இளையபெருமாளைநோக்கி கேட்டருளீர் இளையபெருமாளே! தேவரீர் இவர் விஷயத்தில் இவ்வண்ணம் வன்மொழிமொழிவதுந் தகுதியற் றது; இவருங் கொடுமொழிமொழிவதற்கு இடமாகார்; விசேஷமாக தேவ ரீர் வாக்கினல் கூறப்பட்ட கொடுமொழிகளை வானரராஜனை இவர் செவி யுறுவது தகுமோ? இம்மஹாராஜர் தேவரீர் உரைசெய்தவாறு ன்றி யறியா தாருமலர்; எகாந்தத்திலே தீங்குசெய்பவருமலர்; கொடுமைகொண்டவரு மலர்; பொய்யருமல்லர்; குடிலமுடையருமல்லர்; தாங்கள் செய்த உபகார த்தை இவர் மறந்திலர்; பெருமாருடைய அருளினலேயே மிகுந்த கீர்த்தி யையும், பெறற்கரிய கிஷ்கிந்தாராஜ்ஜியத்தையும், ருமையையும், என்னையும் அடைந்தனரல்லரோ? ஆயினும், இவர் முன்பு நெடுங்காலம் ஆகாரநித்திரை யின்றித் துன்புற்றமையின், இப்போது இப்பேரின்பத்தைப்பெற்று மயங்கி அவ்வக்காலங்களில் செயற்குரியவைகளையும் செய்யுமுணர்வற்றிருக்கின்ற னர்; முன்பு விசுவாமித்திரமஹாமுனி நெடுங்காலம் தவஞ்செய்துகொண் டிருந்தொருநாள் கிருதாசியென்னும் தெய்வப்பொதுமகளைக் கண்டு காமு ற்று அவளுடன் புணர்ந்துகொண்டிருந்து பத்துவருஷங்கள் கழிந்தும் அவ்வகளை யொரு பகலாகவே நினைத்தனரல்லரோ? அந்த மஹாமுனியே காமமயக்கினல் காலக்கழிவை யறிந்திலரெனின், மற்றவர்கள் மயங்கியிருப் பது வியப்போ? தேஹதர்மமான ஆஹார நித்திராமைதுனங்களையே முக் கியமாக எண்ணி நெடுங்காலந் துன்புற்று இப்போழ்தே இன்பமுற்று மயங் கிய இவருடைய இப்பிழையைப் பொறுத்தருள்க; உலகின் தன்மையை யாராய்ந்து உண்மையையறியாமல் மூடன்போல விரைவாகச் சினத்தையே மேற்கொண்டு வருத்தற்க; தேவரீர் போன்ற ஸத்துவகுணமுடைய பெரி யோர்கள் ஆராய்ந்தறியாமல் சீற்றமுறுர்களல்லரோ? மஹாராஜர் பொருட் டாக யானே தேவரீரை வேண்டுகின்றேன்; இக்கடுங்கோபத்தைத் துறந்து மகிழ்ந்தருள்க; பெருமாளுக்குப் பிரியமாயின், மஹாராஜர் ருமையையும், என்னையும், கிஷ்கிந்தாராஜ்ஜியத்தையும், மற்றுமுள்ள தனதான் யாதிகளையுந் துறந்துவிடுவரென்றே யான் நம்புகின்றேன்; மஹாராஜர் ராவணனைக் கொலை செய்து பெருமாளைப் பிராட்டியுடன் சேர்த்து ஹிராணியுடன் கூடின சந்தி ரனைப்போல விளங்கச்செய்வார்; இலங்காபுரியிலே அநேக லக்ஷங் கோடி ராக்ஷஸர்கள் குவைகுவையாக மிகக் கொடியவர்களாகவும், வேண்டியபடி ரூபந்தரித்துக்கொள்ள வல்லவர்களாகவுமிருக்கின்றனர்கள்; அவர்களெல் லோரையும் கொலைசெய்யாமல் ராவணனைக் கொலைசெய்வது ஒருவராலும்

முடியாது ; அவனைக் கொலைசெய்யாமல் பிராட்டியை மீட்பதுமரிது ; ஆதலின், அவனைக் கொலைசெய்வதற்குப் பலபேர்களுடைய உதவிவேண்டும் ; இவ்வண்ணம் வாலி யெனக்குரைத்திருக்கின்றனர் ; அவர் ராவணனுடைய ஸாரம் எல்லாம் நன்றுக அறிந்தவர்; யான் நேராகக் கண்டிலேனதலின், கேட்டபடி யுரைசெய்தேன் ; அன்றியிலே, தேவரீர்களுக்கு ஸஹாயம் செய்வதன்பொருட்டே அங்கங்குள்ள வாநரஸேனைகளையழைத்து வரும்படி தூதர்கள் அனுப்பப்பட்டனர்கள் ; அவர்கள் வருவதை யெதிர்பார்த்தே மஹாராஜர் இதுவரையில் புறப்படாமலிருக்கின்றனர் ; இவர் தூதர்களை யனுப்புங்காலையிலேயே இன்று முதல் பதினைந்து தினத்துக்குள் யாவன் வருகின்றிலனே, அவன் உடனே விசாரணையின்றி உயிர்வாங்குந்தண்டனைக்கு உள்ளாகுவானென்று கண்டிதமாகக் கட்டளைசெய்திருக்கின்றனர்; இன்றியதினமே அவர்கள் எல்லோரும் வந்து சேரவேண்டியவேளை; ஆதலின், அநேகமாயிரங்கோடி கரடிகளும், அவ்வளவு கோலாங்கூலங்களும், அவ்வளவு கருங்குரங்கு செங்குரங்கு வெண்குரங்குகளும், இப்போழ்தே இங்குவந்து கூடப்போகின்றன ; சீற்றந்தணிந்து மகிழ்ந்தருள்க ; தேவரீருடைய திருமுகமண்டலம் சினத்தினால் ஜ்வாலித்துக் கண்கள் சிவப்புற்றிருப்பதைக் கண்டு மஹாராஜர் பத்தினிகளெல்லோரும் வாலியைக் கொலைசெய்ததை நினைத்து மகிழ்வுகுன்றி வருந்துகின்றனர்களேயன்றி, இன்புறுகின்றிலர்கள்; ஆதலின், மகிழ்ந்தருள்க ; என்று தாரை இளையபெருமாளைத் தேற்றி மகிழ்வித்து மகிழ்ந்தனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தைந்தாவது ஸர்க்கம்
முற்றிற்று.

முப்பத்தாறுவது ஸர்க்கம்.

இளையபெருமாளும் மஹாராஜரும் சினமும் மயக்கமும்தீர்ந்து மகிழ்வுடன் ஸம்பாஷணைஞ் செய்து கொண்டது.

இவ்வண்ணந் தாரையுரைசெய்த வாக்கியம் விநயமும் தருமமும் இனிமையும் பொருந்தியிருந்தமையின், குளிர்ந்த தன்மையையுடைய இளைய பெருமாள் அதற்குடன்பட்டுக் கடுஞ்சினந்தீர்ந்து அருள் கூர்ந்து மகிழ்வு கொண்டு திகழ்கையில், மஹாராஜர் அதுகண்டு அவரிடத்தில் தோன்றிய அச்சத்தை நீங்கின வஸ்திரத்தைப்போலத் துறந்து தன் கண்டத்திலே அணிந்துகொண்டிருந்த சிறந்த நறுமலர்மாலைகளையும் அறுத்தெறிந்து விட்டு மதுபானமயக்கும் காமமயக்குந்தீர்ந்து சிறந்ததேஜோவலியுற்ற இளையபெருமாளை நோக்கி மகிழ்வுறும்படி மொழியலுற்றனர். கேட்டருளீர் இளையகோவே! முன்பு என்னுடைய செல்வமும், புகழும், கபிராஜ்ஜியமும் அழிந்துவிட்டன ; பின்பு இப்போழ்து பெருமாளுடைய அருளினாலே தானே அவை என்னால் அடையப்பட்டன ; அவ்வண்ணம் மஹோபகாரஞ்செய்த

அந்த மஹானுபாவனை பெருமாளுக்குப் பிரதியுபகாரஞ்செய்ய எவன் தான் திறமையுடையவனுகுவான்; ஆதலின், பெருமாளே தமது திறமையி னுலே பிராட்டியையும் அடைவார்; ராவணுதியரையுங் கொலைசெய்வார்; யான் ஸஹாயமாத்திரனுக அவருடன் சேர்ந்திருக்கவல்லனேயன்றி, மற்று யாது செய்ய வல்லேன்; அந்த மஹாபுருஷனுக்கு யாருடைய உதவிதான் விரும்பத்தக்கதாகும்; அவர் ஒரேகணையினுலேதானே ஏழு ஸாலமரங்களை யும், மலையையும், பூமியையும் துணித்துத் துளைத்தும் பிளந்தருளினரல்ல ரோ? அன்றியிலே, இவர் தனுஷ்டங்காரஞ் செய்கையிலே காடு மலை கடல் களுடன்கூடின பார்முழுதும் கிடுகிடென்று நடுக்கியதன்ரே? அவருக்கு யாருடைய உதவிதான் வேண்டும்; பெருமாள் புத்திர மித்திர களத்திராதி களுடன் கூடின ராவணனைக் கொலைசெய்வதன்பொருட்டெழுந்தருளுகை யில், யானும் பின்னேடர்ந்துமாத்திரம் செல்வேன்;—

యదికిఞ్చిదతిక్రాన్తం విశ్వాసాత్ప్రణయేనవా।
ప్రేష్యస్యక్షమితవ్య మ్మేనకశ్చిన్నాపరాధ్యతి॥

யதிகிஞ்சித்திக்ராந்தம் விச்வாஸாத்ப்ரணயேநவா
ப்ரேஷ்யஸ்யக்ஷமிதவ்யம் மேநகச்சின்ணுபராத்யதி

தேவரீர்கள் அடியேனிடத்தில் மிகவும் அருள்புரிந்திருக்கின்றமையின், பிழைசெயினும் பொறுத்தருள்வீர்களென்னும் விசுவாஸத்தினுலாயினும், தேவரீர் விஷயத்திலே அபராதஞ்செய்தேனையினும், யான் தெரண்டு பூண்ட வனென்பதினுலே அப்பிழையைப்பொறுத்தருள்க; உலகினில் ஒருவனுயி னும் அபராதம் செய்யாதானென்பதில்லை; ஆராய்ந்துணரில் எல்லோரிடத்தி லும் ஏதேனும் ஒருபிழையிருக்கவேயிருக்கும்; ஆதலின், சினந்தணிந்து மகிழ் ந்தருள்க; என்றிவ்வண்ணமுரைசெய்த மஹாராஜருடைய வாக்கியத்தை இளையபெருமாள் கேட்டு மகிழ்ந்து அவரை நோக்கிக் கேளீர் மஹாராஜரே! நீர் இவ்வண்ணம் வணக்கமுற்று அன்புகூர்ந்திருக்கின்றமையின், எம்மையர் எவ்வகையினுலும் உம்மால் இறையுடையராயினர்; உம்மிடத்தில் சிறந்த வலிமையும், மகிமையும், தூய்மையும் குடிகொண்டிருக்கின்றமையின், இந்தக் கபிராஜ்ஜியத்தை யாட்சிசெய்வதற்கு நீரே தக்கவர்; பெருமாள் உம்மைத் துணையாகக்கொண்டு விரைவாகவே ராவணனைக்கொலை செய்தருள்வாரென் பதிலையமிலது; நீர் தருமமுணர்ந்தவரும், நன்றியுடையவரும், போர்க்கள த்தில் மீளாது போர்பவருமாதலின், நீர் இவ்வண்ணம் இனிமையாக மொழி ந்தது மிகவும் தகுதியானது;—

దోషజ్ఞస్యతిసామర్థ్యే కోన్యోపాషితుమర్హతి।
వర్జయిత్వామమజ్యేష్ఠం త్వాంచవానరసత్తమ॥

தோஷஜ்ஞஸ்யதிஸாமர்த்யே கோந்யோபாஷிதுமர்ஹதி।

தன்னை யிகழ்பவரை யழிக்குந்திறமையிருக்கையிலேயும், தன்மீது நாட்டிய தோஷத்தை யுண்மையென்றுடன்பட்டு அதனைப் பொறுக்கும்படி யார் வணங்கி யிவ்வண்ணம் மொழிபவர் ; உம்மையும் எம்மையரையும் விட்டு மற்றை வருளர் ; ஒருவருமிலர் ; ஆதலின், நீர் தோள்வலியினுலும், பலத்தினுலும் குணங்களினுலும், பெருமாளுக்குத்தக்கவராகவே நீங்கள் துணை கூடினர்கள் ; ஆதலின், நீர் இப்பொழுதே இங்கிருந்து புறப்பட்டுச்சென்று மனவினையப் பறிகொடுத்ததினுல் மிக வருந்தி இளைத்திருக்கின்ற எம்மையரைத்தேற்றி மகிழ்வித்தருள்க ; பெருமாள் சோகத்தினுல் மொழிந்த வாக்கியத்தைக்கேட்டுச் சினங்கொண்டு நம் விஷயத்தில் யான் மொழிந்த வன் மொழிகளையும் பொறுத்தருள்க ; என்று மொழிந்து மகிழ்வித்து மகிழ்ந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் மூப்பத்தாருவது ஸர்க்கம்
முற்றிற்று,

மூப்பத்தேழாவது ஸர்க்கம்.

மஹாராஜருடைய கட்டளையின்படி வாநரசேனைகள் வந்து கூடியது.

இவ்வண்ணம் இளையபெருமாளருளிச்செய்த வாக்கியத்தை மஹாராஜர்கேட்டு மகிழ்ந்து அருகிலிருந்த சிறியதிருவடியைநோக்கிக் கேளீர் மாருதியே ! மஹேந்திரம், இமையம், விந்தியம், கைலாஸம் முதலிய வெண்மை நிறம்பொருந்தியும், செம்மையுற்று இளம்வெயில்போலவும் விளங்குகின்ற காற்றிசைகளிலுமுள்ள மலைகளிலும், மேற்றிசையில் கடலோரங்களிலும், உதயகிரி அஸ்தகிரிகளிலும் உள்ள சந்தனம் பனைமுதலிய பற்பல மரங்களடர்ந்த காடுகளில் வாழ்கின்றவர்களும், அஞ்சனமலைபோன்றவர்களும், கருமுகில் போன்றவர்களும், மததேவழத்தை நிகர்த்த தோள்வலியுடையவர்களும், ஆகியவர்களும், அஞ்சனமென்னும் மலையிலே வாழ்கின்றவர்களும், மேரு தாம்ரம் மஹாருணம் என்னும் மலைகளில் வாழ்பருவம், மற்றும் பற்பல காடுகளிலும், முனிவர்களின் ஆசிரமங்களிலும் வாழ்பவர்களுமான வாநரர்களை ஸாமதானங்களினுலே மகிழ்வித்து விரைவாக வந்து சேருமாறு செய்க ; முன்பு நான் அவர்களை யழைப்பதன்பொருட்டே கட்டளைசெய்தனுப்பிய தூதர்கள் தாமஸஞ்செய்யாமல் விரைவாக வருவதற்காக மீளவுந் தூதர்களையனுப்புக ; காமமயக்கில் மயங்கி யாவர் தாமஸஞ் செய்கிறார்களோ, அவர்களை என்னெதிரில் அழைத்துவருக ; என்னுடைய கட்டளையின்படி பத்து தினத்துக்குள்ளே எவர்வந்து சேருகின்றிலர்களோ, அவர்களுக்குடனே உயிர்வாங்குந் தண்டனை விதிக்கப்படும் ; ஆதலின், அநேகமாயிரங் கோடி வாநரர்கள் என்னுடைய கட்டளையினுல் விரைவாக ஆகாயத்தை மறைத்தெழுந்து சென்று சேனைகளெங்கெங்கிருக்கின்றனவோ, அவைகளை யுணர்ந்து கையுடனழைத்துவரக்கடவர்கள் : என்று கூ'ளை

யிட்டனர். சிறியதிருவடி யந்தக் கட்டளையைக்கேட்டு அவ்வண்ணமே சிற
ந்த பலமுடைய வாநரர்களை யனுப்பினர். அவர்களும் அவ்வாறே ஆகாய
மார்க்கத்தில் வாயுவேக மனோவேகமாய்ச் சென்று அங்கங்குள்ள வாநர்க
ளெல்லோரையும் பெருமாளுடைய காரியத்திற்காகத்துணைசெய்து மஹா
ராஜர் கட்டளையையு மறிவித்தனர்கள். அவ்வாநரர்களும் ஊழிகாலயமன்
போன்ற அம்மஹாராஜருடையகட்டளையைச் செவியுற்றவுடனே சிறிதுந்தா
மஸம் செய்யாமல் புறப்பட்டனர்கள். அவர்களுள் அஞ்சனகிரியில்வாழ்ந்து
க்கொண்டு அஞ்சன வண்ணமுற்றிருந்தவர்கள், மூன்றுகோடி சேனைகள்; அஸ்
தகிரியில் வாழ்ந்து தங்கநிறம்பொருந்தியவர்கள், பத்துக்கோடி சேனைகள்;
கைலாஸசிகரத்தில் வாழ்ந்து சிங்கத்தின் கேஸரம்போன்ற மேனியுடைய
வர்கள், அநேகமாயிரங்கோடிகள்; இமையமலையில் வாழ்ந்து வெண்மைநிற
முற்றவர்கள், ஆயிரமாயிரங்கோடி சேனைகள்; விந்தியமலையில் வாழ்ந்து
அங்காரகன் போன்ற வண்ணமுற்றவர்கள், அநேகமாயிரங்கோடிகள்; திருப்
பாற்கடலின் கரையில் பச்சிலை மரக்காடுகளில் வாழ்ந்து பசிய நிறமுடைய
வர்கள், கணக்கிறந்தவர்கள்; இவ்வண்ணம் வநங்களினின்றும், குகைகளி
னின்றும், ஆறுகளினின்றும், அநேகமாயிரஞ் சேனைகள் வானிடையில்
பரவி கதிரவனை யுண்பனபோலப்புறப்பட்டன; முன் சென்றவர்களை
துரைப்படுத்து வதற்காக பின்சென்ற வானரர்கள் அப்பொழுது இமயமலை
போய்ச் சேர்ந்தனர்கள். அம்மலையிலேதான் முன்பு சகலதேவர்களும்
மகிழ்வுறும்படி மகாதேவன் சிறந்த யாகம் செய்தனன்; அந்த யாகத்தின்
ஹோமதிரவியங்களின் பெருக்கினல் மதுரமுள்ள கந்தமூலபலாதிகள்
உண்டாயின; அவைகளை யாவன் ஒருவன் ஒருவேளை புசிக்கின்றானோ,
அவன் ஒருமாதம்வரையி பசிதாகமின்றி மகிழ்வான்; அக்கனி காய் கிழங்
குகளை அவ்வானரர்கள் பறித்து உண்டும், மகாராஜர் பொருட்டு அவை
களையும், மற்றுமங்குள்ள நறுமலர்களையும் பறித்தெடுத்துக்கொண்டும், அங்
கங்குள்ள சேனைகளை விரைவாகவரும்படி துரைசெய்தும், மீண்டு அச்சே
னைகளுக்கு முன்பே கிஷ்கிந்தை வந்து சேர்ந்து மஹாராஜரைக்கண்டு வண
ங்கி அவைகளை அளித்து அவரை நோக்கி வேந்தே! யாங்கள் தங்கள் கட்ட
ளையின்படி மலை, கடல், காடு முதலிய எல்லா இடங்களையும் சுற்றி அங்கங்
குள்ள வானரப்படைகளையும் துரைப்படுத்தி வந்தனம்; அவர்களும் வந்து
கொண்டிருக்கின்றனர்கள்; என்று விண்ணப்பஞ்செய்தனர்கள். மகாராஜ
ரும் அதுகேட்டு மிகமகிழ்ந்து அவ்வுபாயங்களையும் அங்கீகரித்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தேழாவது ஸர்க்கம்
முற்றிற்று.

மூப்பத்தெட்டாவது ஸர்க்கம்.

மஹாராஜர் இளையபெருமாளுடன் பெருமாளெழுந்தருளியிருக்கு மிடத்திற்கு வந்து அவரைக்கண்டு மகிழ்ந்தது.

இவ்வண்ணம் மஹாராஜர் அவ்வுபாயங்களைப்பெற்றுக்கொண்டு அவ்வானரர்களை இனியமொழிகளினல் மகிழ்வித்தனுப்பி தம்மையும் பெருமாளையும் கிருதார்த்தர்களாக நினைத்து மகிழ்ந்தனர். இளையபெருமாள் அப்பொழுது அவரைநோக்கி மஹாராஜரே! நம்மனம் உகக்குமாயின், காலக்கழிவுசெய்யாது இப்பொழுதே இங்கிருந்து புறப்படுக; என்று மொழிந்தனர். மஹாராஜர் அதுகேட்டு மகிழ்ந்து இவ்வண்ணமே ஆகுக வென்று உடன்பட்டு தாரை ருமை முதலிய மனைவியர்களையும் அனுப்பிவிட்டுவருக வென்று வாநரர்களைநோக்கி மொழிந்தனர். வாநரர்களும் அதுகேட்டு விரைவாக ஓடிவந்து கைகூப்பி நிற்கையில், மஹாராஜர் அவர்களுக்கு விரைவாகச் சிவிகையை கொணர்கவென்று கட்டளையிட்டனர். அவர்களும் அவ்வண்ணம் விரைவாக சிறந்த சிவிகையைகொணர்ந்து அறிவித்தலும், மஹாராஜர் இளையபெருமாளையும் அதின்மீது எழுந்தருளியிருக்கும்படி வேண்டித் தாமும் அவருடன் அதிலேறி இருந்து வெண்குடை பிடித்து, வெண்சாமரங்கள் வீசி, சங்கம் பேரிமுதலிய வாத்தியங்களை முழக்கி மகிழ்வுகொண்ட பற்பல வானரர்களினல் புகழப்பட்டும், படையேந்தி கொடுமைகொண்ட பல கோடி வானரப்படைகளினல் சூழப்பட்டும் புறப்பட்டு பெருமாள் எழுந்தருளியிருக்குமிடம் சேர்ந்து இளையபெருமாருடன் இறங்கி பெருமாளைக் கிட்டிவணங்கி கைகூப்பி நிற்கையில் உடன் வந்த வாநரர்கள் எல்லோரும் அவ்வண்ணமே தொழுது கைகுவித்தனர்கள். பெருமாரும் முகிழ்ந்த கலகோசங்களை உடைய தேங்கிய தடாகம்போன்ற வானரசேனையைக் கடாகூதித்து மகிழ்ந்து தம் திருவடிகளில் தலைவணங்கிய மஹாராஜரையும் பிரீதியினலும், வெகுமானத்தாலும், எடுத்தணைத்து அருகில் வீற்றிருக்கும்படி கட்டளை செய்து அவரை நோக்கி, மஹாராஜரே! அறம் பொருள் இன்பங்களை அவ்வவற்றிற்குரிய காலங்கள் அறிந்து யாவன் பகிர்த்தனுபவிக்கின்றனனே, அவனே அரசுக்குரியனாகுவான்; யாவன் அறம்பொருள்களைத்துறந்து காமத்தையே மேற்கொண்டு மயலுருகின்றனனே, அவன் மரத்துநுனியில் துயில்பவன்போல தன்னிலையினின்றும் வீழ்ந்தே தாழ்மைகொண்டு விழித்துக்கொள்வான்; பகைவரைக் கொல்வதிலும், தோழரைச் சேர்ப்பதிலும் ஊக்கங்கொண்டு அறம் பொருளின்பம் மூன்றினையும் தக்கபடி உண்பவனே ராஜதர்மமுடையவனாகுவான்; ஆதலின், இப்பொழுது முயற்சி செய்யும் காலம் நேர்ந்திருக்கிறதும், ஊக்கமற்றிருப்பது தகுதி அற்றதன்றே? ஆதலின், வாநரமந்திரிகளுடன் கூடிநன்கு ஆராய்க; என்று அருளிச் செய்தனர். மஹாராஜர் அதுகேட்டுப் பெருமாளை நோக்கி, இனியதோழரே! என்னுடைய செல்வமும், புகழும், கபிராஜ்யமும், மனைவியும், யாவும்

தேவரீருடைய திருஅருளினாலேதான் மீளவும்அடியேனுக்குவாய்த்தன;ஒருவன் செய்த உபகாரத்திற்கு பிரதிஉபகாரம்எவன் செய்யாதே, அவன்யாவரிலும் கடையனாகி இகழப்படுவான்; ஆதலின், அடியேன் தேவரீர் காரியத்தில் ஊக்கமற்றிலேன்; இவ்வானரர்கள் பாரெங்கும் சென்று அங்கங்குள்ள கரடி வானரகோலாங்குலங்களை அழைத்து வந்தனர்கள்; அவர்கள் காடு மலை கடல்களிலுள்ள எல்லா இரகசியங்களையும் அறிந்தவர்களும், தேவகந்தர்வர் முதலான தேவகணங்களின் புத்திரர்களும், வேண்டும்படி ரூபங்கள் தரிப்பவர்களும், சிறந்த தோள்வலி யுடையவர்களுமாகின்றனர்கள்; அவர்கள் இப்பொழுது நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், பத்து லக்ஷம், கோடி, அற்புதம், பிருந்தம், கர்வம், நிகர்வம், மகாகர்வம், ஸரோஜம், சங்கு, சமுத்திரம், அந்தம், மத்தியம், பரார்த்தம் என்று ஒன்றுக்கொன்று பதின்மடங்கு அதிகமுள்ள கணக்குடையனவும், கணக்கிறந்தனவுமாகிய பற்பல வானரசேனைகளுடன் கூடி வழியில் வந்துகொண்டிருக்கின்றனர்கள்; அவர்கள் மேருமந்தரம் போன்றவர்களும், சிறந்த பராக்கிரமமுடையவர்களுமாதலின், அச்சமின்றி கொடிப்பொழுதிலிங்கு எய்துவார்கள்; ராவணனையும் குலத்துடன் களைந்து வெற்றிகொண்டு பிராட்டியையும் மீட்டு அளிப்பார்கள்; ஆதலின், தேவரீர் ஒன்றுக்கும் சிந்தையின்றி மகிழ்ந்து உகந்தருள்க; என்று விண்ணப்பஞ்செய்து மகிழ்வித்தனர். பெருமானும் அதுகேட்டு மஹாராஜருடைய முயற்சிக்கு உகந்து அன்று மலர்ந்த சருங்குவளைபோன்ற திருமேனிவண்ணமுற்று விளங்கியருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது ஸர்க்கம்.

வானரசேனைகள் எல்லாம் மஹாராஜரிடம் வந்து கூடியது.

இவ்வண்ணமுரைத்து கைகுவித்து நின்ற மஹாராஜரைப் பெருமாள் மகிழ்ந்து தழுவி அவரை நோக்கித் தொழுதே! மேகம் மழைபொழிவதும், கதிரவன் இருளை அகற்றி வானை நின்மலமாக்குவதும், சந்திரன் பூமியை நிலவினால் திகழ்வித்பதும், எவ்வண்ணம் வியப்பன்றோ, அவ்வண்ணமே தும்போன்ற தொழர்களும் பிரத்தி உபகாரம் செய்வதும் வியப்பன்று; உபகாரத்தை விரும்பாமலே உதவி செய்பவர்களுக்கு இது எவ்வண்ணம் வியப்பாகும்; ஆதலின், நீர் என் காரியத்தில் இவ்வண்ணம் முயற்சியுற்றிருப்பதும் வியப்பன்று; நீர் இத்தகவுடையவரென்பதை முன்னமே அறிவேன்; யான் உம்முடன்சேர்ந்து போர்க்களத்தில் பகைவர்களை எல்லோரையும் கொல்லவும் வல்லேன்; ஆதலின், நீரே எனக்கு தொழரும், இனியருமாகி உதவிசெய்க; ராக்ஷஸாதமனை இராவணன் அனுஜன்லாதன் இந்தி

ராணியை எடுத்தோடி ஒளித்தது போலச் சீதாதேவியை வஞ்சனைசெய்து பறித்தோடினன் ; புலோமாஸுரனைப் பௌலோமீமணாளன் கொலைசெய்தா போலவே யான் அந்த ராவணனைப் போரில் கூரிய கணைகளினுலடித்துக் கொலைசெய்வேனென்று அருளிச்செய்துக்கொண்டிருந்தருளினர். அத்தருணத்திலேதானே பெருத்துகள் பூமியினின்றுமெழுந்து வெப்பமுற்ற வெய்யோனுடைய கொடிய வெயிலையும் மறைத்திருள்மூண்டு வானெங்கும் பரவியெழுந்தது ; அத்துகளினுமேல திசைகளும் காணப்பட்டில ; காடு கடல் மலைகளுடன் கூடிய பூமியும் அசைந்தது ; உடனே வருகின்ற கூரிய கோரப்பல்லுடையவர்களும், சிறந்த பலமுடையவர்களுமாகிய கணக்கிறந்த வானரசேனைகளினுமேல பத்துத்திசைகளும் மறைக்கப்பட்டன ; அவர்களுள் ஒவ்வொருவரும் அநேகமாயிரங்கோடி பரிவாரங்களுடையவர்கள் ; சிலர் நதிகளிலும், சிலர்கடல்களிலும், சிலர் மலைகளிலும், சிலர் காட்டிலும் வாழ்பவர்கள் ; எல்லோரும் மாமலைபோன்றவர்களும், மேகம்போல் கர்ஜனை செய்பவர்களுமானவர்கள் ; சிலர் பாலஸூரியன்போன்றவர்கள் ; சிலர் பூர்ணசந்திரனை நிகர்த்தவர்கள் ; சிலர் தாமரைத்தாதுவண்ணர் ; சிலர் வெண்மைநிறத்தவர் ; சிலர் மேருமலையில் வாழ்பவர் ; அவர்களுள் முதன் முதல் சதவலியென்னும் யூதபதி பதினையிரங்கோடி வானரர்களுடன் காணப்பட்டனன் ; பின்பு, தாரையின் தாதையான ஸுஷேணன் அநேகம் பதினையிரங்கோடி சேனைகளுடனும், ருமையின் பிதாவான தாரன் ஆயிரங்கோடி சேனைகளுடனும் காணப்பட்டனர்கள் ; பின்பு, வானரர்களனைவர்களுள் சிறந்தவனும், புத்திமானுமாகிய சிறியதிருவடியின் தகப்பனாகிய கேஸரி யென்பவன் அநேகமாயிரங்கோடி சேனைகளுடன் காணப்பட்டனன் ; பின்பு, கவாக்ஷன் ஆயிரங்கோடி கோலாங்கூல சேனைகளுடனும், தூம்ரன் இரண்டாயிரங்கோடி கரடி சேனைகளுடனும், பனஸன் மூன்றுகோடி சேனைகளுடனும், நீலன் பத்துக்கோடி கருங்குரங்கு சேனைகளுடனும், கவயன் ஐந்துகோடி வானரசேனைகளுடனும், தரீமுகன் ஆயிரங்கோடி சேனைகளுடனும், அசுவிநிதேவர்களினகுமாரர்களான மைந்த துவிவிதர்களிருவரும் தனித்தனி யாயிரங்கோடி சேனைகளுடனும், கஜன் மூன்றுகோடிசேனைகளுடனும், ஜாம்பவான் பத்துக்கோடிகரடி சேனைகளுடனும், ருமண்வான் நூறுகோடி சேனைகளுடனும், கந்தமாதனன் பத்துலக்ஷங்கோடி சேனைகளுடனும், யுவராஜனை அங்கதன் பதினையிரம் லக்ஷங்கோடி சேனைகளுடனும், ருமையின் தாதை யன்றியிலை மற்றுமுதாரனென்பவன் ஐந்துகோடி சேனைகளுடனும், இந்திரஜாலு பதினென்றுகோடி சேனைகளுடனும், ரம்பன் பதினேராயிரத்தெழுநூறுகோடி சேனைகளுடனும், துர்முகன் இரண்டுகோடி சேனைகளுடனும், அனுமான் ஆயிரங்கோடி சேனைகளுடனும், நளன் நூறுயிரங்கோடி சேனைகளுடனும், தரிமுகன் பத்துக்கோடி சேனைகளுடனும் காணப்பட்டனர் ; இவ்வண்ணமே சரபன், குமுதன், வஹ்நி, ரம்ஹன் என்பவர்களும் தனித்தனி பத்துக்கோடி சேனைகளுடன் வந்தனர்கள் ; இவர்போன்ற மற்றுமுள்ள கணக்கிறந்த யூதபதிகளும், அநேகமாயிரங்கோடி சேனைகளுடன் காடு கடல் மலைகளடங்

கிய மண்டலமெங்குநிறைந்துவந்தனர்கள்; இவர்களெல்லோரையுங்கணக் கிட்டுரைப்பது ஒருவர்க்கும் ஸாத்தியமன்று; இவ்வண்ணம் உலகினிலுள்ள வானரர்களெல்லோரும் தாவிக்கொண்டும், மேலெழும்பிக்கொண்டும், கர்ஜனை செய்துகொண்டும், மேகங்கள் ஸூரியமண்டலத்தைச்சூழ்ந்துகொள்வதுபோல மஹாராஜரைச் சூழ்ந்துகொண்டனர்கள்; பின்பனவர்களும் தத்தம் நாமங்களை யுரைத்து மஹாராஜர்க்குத் தலைவணங்கி யறிவித்தனர்கள்; சிலர் விநயங்கொண்டு கைகூப்பி மஹாராஜரருகில் நின்றனர்கள்; மஹாராஜரும் இவர்களெல்லோரையுங்கண்டு மகிழ்ந்து சேனைகளெல்லோரையும் காடு மலை முதலிய இடங்களில் சுகமுறுவாறு இறக்கிப் பெருமாளிடத்திலும் அவரவர்களினுடைய ரூபபல பராக்ரமாதிகளை விண்ணப்பம் செய்தனர். மஹாராஜர் யாவுமறிந்தவராதலின், அச்சேனைகளின் தன்மைகளை நன்கறிய வல்லவரல்லரோ?—

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தொன்பதாவது ஸர்க்கம்
முற்றிற்று.

நாற்பதாவது ஸர்க்கம்.

பிராட்டியைத் தேடுவதற்காக விநதனென்னும் யூதபதியை மஹாராஜர் கீழ்த்திசைக்குக் கட்டளைசெய்தனுப்பியது.

அநந்தரம் மஹாராஜர் பெருமகிழ்வுகொண்டு மஹாபல பராக்ரமமுடைய பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் அன்புள்ள தோழரே! காமரூபிகளும், சிறந்த பலமுடையோர்களும், மதமேவழும் போன்றவர்களுமாகிய என் கட்டளைக்குட்பட்ட வானரர்களெல்லோரும் வந்து சேர்ந்துவிட்டனர்கள். இவர்கள் அநேகமாயிரஞ் சேனைகளுக் கிறையவர்கள்; தைத்திய தானவர்கள்போலக் கொடுமை கொண்டவர்கள்; வியப்புறத்தக்க செயல்களிலேபெரும்புகழுடைந்தவர்கள்; எவ்வளவுகாரியஞ்செயினும்இளைப்புறார்கள்; முயற்சிசெய்வதிலும்; மேற்கொண்ட காரியத்தை முடிப்பதிலும் சிறப்புடையவர்கள்; சிலர் பாரிலும், சிலர் நீரிலும் நடப்பவர்கள்; இவர்கள் எல்லோரும் தேவரீருக்குத் தொண்டர்களாகித் தேவரீருடைய கட்டளையை யேயெதிர்பார்த்து நிற்கின்றனர்கள்; மிகவும் குருபத்தியுடையவர்கள்; இப்பொழுதுதேவரீர் திருவுளத்திலிருக்கின்ற காரியத்தைச்செய்துமுடிக்குந்திற

இந்தச்சருக்கத்தில் கணக்கிறந்தசேனைகள் மஹாராஜரிருக்குமிடத்திற் சேர்ந்தனவென்று கூறப்பட்டனது; சிறியதான அவ்விடத்தில் அவ்வளவு சேனைகளெவ்வண்ணமடங்கியிருந்தனவென்று சிலர் ஆக்ஷேபஞ்செய்வர்கள்; ஆயினும், இச்சருக்கத்திலேயும் அங்கங்கு (காமரூபிபிஃ) வேண்டுமாறு ரூபந்தரிக்கவல்லர்கள், என்று விசேடணமுரைத்திருப்பதிலுலேயே அந்த ஆக்ஷேபத்துக்கு சமாதானம் அறிந்துகொள்ளலாம்; எல்லோரும் வானிடையிலிருக்க வல்லவர்களாதலினாலும், சிலர் ஆகாயத்திலும், பலர் பாரிலும், மேனியைச் சுருக்கிக்கொண்டிருந்தனர்களென வுணர்க.

மையுடையவர்கள்; அநேகமாயிரங்கோடிவானரர்களுடன் தேவரீரையே யெதிர்பார்த்து நிற்கின்ற இவர்களுக்கு இப்பொழுது யாதுகட்டளைசெயின்றது மோ, அதனையருளிச்செய்தருள்க; இச்சேனைகளெல்லாம் தேவரீருடையனவே ; தேவரீராதீனமாயினவே ; ஆதலின், கட்டளைசெய்தருள்க ; இவர்கள் செய்யவேண்டும் காரியத்தையும் யான் நன்குணர்வேன்; ஆயினும், தேவரீரே உண்மையாகஅருளிச்செயல்வேண்டும்; என்றுவிண்ணப்பஞ்செய்துவேண்டினர். பெருமானரும் இவ்வண்ணமொழிந்த மஹாராஜர்வாக்கியத்தைக்கேட்டருளிமகிழ்ந்து அவரைத்திருக்கைகளினால்தழுவியவரைநோக்கி, மஹாராஜரே! இப்போது இவர்கள் செயல்வேண்டுவதைக் கூறுகின்றேன்கேளீர் ; என் பிராணநாயகியான ஜானகி பிழைத்திருக்கின்றனளோ? இலளோ? அந்த ராவணன் எங்குறைகின்றனனே? இவ்விஷயத்தைமாத்திரம் இவர்கள் உண்மையாக அறிந்து வரல்வேண்டும்; அதனையறிந்த பின்பு நாமிருவரும் ஆலோசித்து யாதுசெயின்றகுமோ, அதனையப்பொழுதுசெய்வோம்; இவ்விஷயத்தில் யாதையினும், லக்ஷ்மணனையினும் பிரபுவல்லோம் ; வானரர்களெல்லோருக்கும் இறையான நீரொருவரே பிரபு; ஆதலின் என்னுடையகாரியத்தின் நிச்சயத்தை நீரே கட்டளைசெய்தனுப்புக; என்னுடைய காரியத்தை யுண்மையாக அறிவதற்கு நீரொருவரே நன்குணர்கின்றீரல்லீரோ? நீர் நமக்குத்தோழரும், குருகுலவாஸஞ்செய்து கலைகளெல்லாவற்றையு மோதியவரும், மஹாபலபராக்கரமமுடையவரும், காலதேசங்களை யறிந்தவரும், நம் காரியத்தை நன்குணர்ந்தவரும், பற்பல காரியங்களைச்செய்து முடித்தவரும் ஆகின்றீர் ; ஆதலின், நீரே இவர்களுக்குக் கட்டளைசெய்தனுப்புக ; என்று அருளிச்செய்தனர். பெருமாளிவ்வண்ணம் அருளிச்செய்தவார்த்தையைமஹாராஜர் கேட்டுமகிழ்ந்து பெருமாளிளையபெருமாளிருவருக் கெதிரிலேயே விநதனென்கிற சேனைபதியையழைத்து அவனைநோக்கி மொழியலுற்றனர். கேளாய்சேனைபதியே! சோமசூர்யாம்சமுற்ற வானரசேனைபதிகளும், நீயும் மிகுதியாயுள்ளசேனைகளுடன்கூடிக்காலதேசங்களுக்குத்தக்கபடி செயற்குரியனவும், செயற்கரியனவும் இவையெனத்தேர்ந்து, காடு கடல்களுடன் கூடின கீழ்த்திசையிற் சென்று அங்கே சீதாபிராட்டி எழுந்தருளியிருக்குமிடத்தையும், இராவணன் வாழுமிடத்தையும் தேடியோரிடமும் விடாமல் நன்காராய்ந்துவருக ; அத்திசையில் வழியிலே பாகீரதி, ஸரயு, கௌசிகி, காளிந்தி என்னும் நதிகளும், யாமுனமென்னும் மலையும், ஸரஸ்வதி, ஹிரண்வது, சோணம் என்னும் நதிகளும், பற்பல காடுமலைகளடர்ந்த காளமலா என்னும் நாடும், ப்ரஹ்மமாலம், விதேஹமும், மாளவம், காசி, கோஸலம், மாகதம், புண்டரம், வங்கம் என்னுந் தேசங்களும், கோசகாரனென்னும் ராஜர்களின் ராஜதானியும், வெள்ளிகனியுடைய பூமியும் முறையே யிருக்கின்றன ; இவையெல்லாவற்றையும் முறையே தேடுக; அதற்குமேல் க்ஷீரகடல், அதனிடையில் பற்பல மலைகளும், நகர்களும், மந்தரமலையின் சிகரமும் இருக்கின்றன; அவைகளில் செவியில்லாதவர்களும், உதடிலே செவியுடையவர்களும், எம்முகமோன்ற முகமுடையவர்களும், ஜவனரென்பவர்களும், ஓரேகாலுடையவர்களும், அழிவற்ற

வரும், பலமுடையவரும், மனிதர்களைத்தின்கின்றவர்களும், ஆகியவர்களும், கிராதர்களும், செவியில் சிகையுடையவர்களும், தங்கம்போன்ற மேனியுடையவர்களும், பச்சைமீனையுண்பவருமாகிய பற்பல ஜாதிகள் வாழ்கின்றனர்கள்; அங்கு நீரிலுள்ளும் பாதி புவியுருவமும், பாதி மானிடவுருவமுமமைந்த கொடியஜாதிகளுமிருக்கின்றனவாம்; இதுவரையில் ஜம்பூத்வீபம், அதன்மேல் சிலத்தீவுகள் மலைவழியாலும், சிலத்தீவுகள் நாவங்களினாலும் அடையதக்கவை; சிலத்தீவுகள் ஆகாசமார்க்கமாகவே செல்வதற்குரியன; அவைகளிலும் சென்று தேடுக; அதன்மேல் ஏழுகண்டமாகப்பிரிந்த யவத்வீபம், அது நவமணிகளுடையதும், வெள்ளி தங்கங்களின் நிறமுடையதும், தங்கக்கனியுடையதுமாகின்றது; அதனைத் தாண்டிச் சிசிரமென்னும் மலை அதனுடைய சிகரம் வானுலகைச் சேர்ந்துளது; அங்கு தேவதானவர்கள் வாழ்கின்றனர்கள்; கீழ்ச்சொல்லிய இடங்களில் ஓரிடமாயினும் விடாமல் காடு மலையாறு குளம் குட்டை கோட்டை நாடு நகர்களெங்கும் பிராட்டியைத்தேடிவருக; அதன்மேல் செவப்புற்றும், ஆழ்ந்தும், விரைவாகப்பெருகுகின்றசோணமென்னும் நீரிருக்கின்றது; அதன்மேல் கடலின் அக்கரை அங்கும் சித்தசாரணஸேவிதமான பற்பல தீர்த்தங்களிருக்கின்றன; அங்கும் பிராட்டியாரையும் ராவணனையுந்தேடுக; அதன் மேலும் பற்பலத் தீவுகளிருக்கின்றன; அதன்மேல் கரும்பின்சாற்றின்கடல் அதுகாற்றினால் மிகவெழுந்தலைத்தொலிக்கின்றது; அங்குமிகவும்மாயாவிகளானஅஸுரர்கள் வாழ்ந்துகொண்டு மேலே செல்பவர்களை நிழலைப்பற்றி யிழுக்கின்றனர்கள்; அவர்களுக்கிவ்வண்ணந் திசைமுகதேவர் வரமளித்திருக்கின்றனர்; அங்கு நீங்கள் உபாயத்தினால் தரையிலேயேசென்று தாண்டுக; அதன்மேல் லோஹிதமென்னுங் கடல் ரத்தம்போலிருக்கின்றது; அதன்மேல் ஓங்கியுயர்ந்த இலவமரம்(சால்மலி)இருக்கின்றது; அதனால் அதன்மேலுள்ளதீவுக்கு சால்மலித்தீபமென்றுபெயர்; அங்கு பெரிய திருவடிக்கு விஸ்வகர்மன் கையிலைமலைபோன்ற திருமாளிகையையியற்றி யளித்திருக்கின்றனன்; அங்குள்ள மலைகளில் பற்பல உருவங்களுற்று பயங்கராளான மந்தேஹரென்னும் அஸுரர்கள் தொங்குகின்றனர்கள்; அவர்கள்தான் தினந்தோறுங் கதிரவனுதிக்கையில் வேதியர்களளித்த அர்க்யமென்னும் வச்சிரங்களினாலடிபட்டு நீரில் மடிந்து வீழ்கின்றனர்கள்; கதிரவன் கிரணங்களின் வெப்பந்தணிதலும் அவர்கள் முன்போலவே எழுந்துமலைகளின்மேலேறுகின்றனர்கள்; இவ்வண்ணம் உப்பு, கரும்பின்சாறு, ஸுரை, நெய், தயிர் என்னும் ஐந்து கடல்களையும், ஜம்பூ, யவம், பலக்ஷம், சால்மலி, குசம், க்ரௌஞ்சம் என்னும் ஆறுதீவுகளையும்கடந்து செல்லின் வெண்ணையுற்ற மேகம்போன்றகூஷீரோதமென்னுந்திருப்பாற்கடலிருக்கின்றது; அது அலைகளினிரையினால் முத்துவடம்போலக்காணப்படும்; அதனடுவில் ரிஷபமென்னும்மாமலை வெண்மைநிறமுற்று திவ்ய கந்தரசங்களுடைய வெள்ளிபோன்ற மலர்ந்தமரங்களினாலும் விளங்குகின்றது; அதில்தங்கத்தாதுள்ள வெள்ளித்தாமரைகள்மலர்ந்தசுதர்சனமென்னும் புஷ்கரிணியிருக்கின்றது; அங்கு தேவசாரண கந்தர்வ கின்னர கிம்புருஷாதி தேவகணங்

கள்மகிழ்ந்து விளையாடுகின்றனர்கள்; அக்கடலையும் தாண்டிச்செல்வீர்களா யின், நன்னீர்க்கடல் காணப்படும்; அதனிடையில்தான் படபாநலம் எரிந்து கொண்டிருக்கின்றது; அதனுலேதான் ஊழிகாலத்தில் எல்லாநீரும் பருகப் படுகின்றது; அக்கடலிடையில் வாழ்கின்ற சிறந்த உயிர்களும் அந்தத் தீயைக் கண்டஞ்சுகொண்டு கூவுகின்றன; அங்கு அவ்வொலியிக வொலிக்கின் றது; அத்தண்ணீர்க்கடலினக்கரையில் பதின்மூன்று காதத்திலே ஜாதரூப சிலமென்னும் சிறந்த தங்கமலையொன்றுளது; அம்மலையின்மேலே சந்திரன் போல் ஒளிவிடுகின்றவரும், தாமரையிதழ்போனற கண்களையுடையவரும், ஸகல லோகங்களாலும் பூஜிக்கப்பட்டவரும், ஆயிரம் தலையுடையவரும், நீல வஸ்திரமுடித்தவருமாகிய திருவநந்தாழ்வான் எழுந்தருளியிருக்கின்றனர்; அம்மலையின் நுனியிலேதானே மூன்று கிளையுள்ள பருத்துயர்ந்த தோர் தங் கப்பனைமரம் கீழ்த்திசைக்கெல்லையாக நாட்டப்பட்டு வேதியுடன் விளங்குகி ன்றது; அதற்குமேல் பொன்மயமான உதயகிரியிருக்கின்றது; அதன் சிகரம் நாறுயோஜனம் உயர்ந்துளது; அதிலுள்ள லால தால தமால கர்ணிகாரம் முதலிய மரங்களும் பொன்மயமாகவே மலர்ந்து விளங்குகின்றன; அதில் ஒரு யோஜனம் விஸ்தாரமும், பத்துயோஜனம் உயரமுமுள்ள ஸௌமனஸ மென்னும் ஒரு சிகரமிருக்கின்றது; முன்பு, பெருமாள் உலகத்தை யளக்கு கையில், அதன்மேலேதான் முதலடியையும் மேருவின்முனையிலிரண்டாவதடி யையும் வைத்தருளினர்; கதிரவன் தினந்தோறும் மேருவுக்கு வடபுறத்தைச் சுற்றிவருகையில், அச்சிகரத்தை யடையும்பொழுதுதான் தென்புறத்திலுள் ளோர்களினுல் காணப்படுகின்றனன்; அங்கு வைகாநஸரென்னும், வாலகில் யரென்னும் வேற்றுமையுடையமாமுனிவர்கள்தவஞ்செய்துக்கொண்டு கதிர வனுக்கு நிகராகக்காணப்படுகின்றனர்கள்; அதற்குஎதிரிலிருக்கின்ற ஸ்தான த்தில் கதிரவன் யாவராலுங் காணப்படுகின்றமையின், அதற்கு ஸுதர்சன த்வீபமென்று பெயர் கூறப்பட்டுளது; அம்மலைகளின் சிகரங்களிலும், குகை களிலும், ராவணனும் பிராட்டியும் இருக்கின்றனர்களோவென்று தேடிவரு அம்மலையினொளியும், கதிரவனொளியுஞ்சேர்ந்து செம்மையுற்று விளங்குகின் றமையின், காலைச்சந்தியென்னப்படுகின்றது; பிரஹ்மா உலகினைப்படைக் கையில், முதன்முதல் பூலோகத்திற்கு உதயகிரியை துவாரமாகச்செய்து சூரியனையும் அந்த இடந்தொடங்கிச்சுற்றுமாறு செய்தமையின், அத்திசை க்குப் பூர்வதிசை (கீழ்த்திசை) யென்னும் அம்மலைக்கு உதயகிரியென்று பெயரிடப்பட்டது; அம்மலையின் பின்புறங்களிலும் தேடுக; அம்மலையினப் புறத்திலே ஸமிய சந்திராதிகளின் ஒளிகளின்றி இருள்மூடியிருக்கின்றது; ஆதலின், அங்குச்செல்வது ஒருவராலும் முடியாது; அதுவரையிலும்தான் வானரர்களால் செல்லல்தகும்; ஆதலின், நீங்கள் அதுவரையிலுமுள்ள இட ங்களில் ஓரிடமாயினும்விடாமல் முழுதும் தேடிவரக்கடவீர்கள்; அதற்கு மேல் இருள்மூடியிருக்கின்றமையின், அதன்முடிவை யாமறிந்திலோம்; இவ் வளவிடங்களுக்கும் ஒரு மாதத்திற்குள்ளாகவே சென்று பிராட்டியையும், ராவணனையுந்தேடி இன்றைக்கு மூப்பதாவதினந் தப்பாமலிங்குவந்து

சேரக்கடவீர்கள் ; ஒருவரும் மாதங்கடந்து வரல்கூடாது ; அப்படி வருபவன் உயிர்வாங்குந் தண்டனைகுள்ளாகுவான் ; ஆதலின், நீவிரெல்லீரும் இந்திரன் திசையான கீழ்த்திசையையடைந்து யான் கூறினவும், கூறப்படாவுமாகிய இடங்களெல்லாவற்றிலும் பிராட்டியையும், ராவணனிருப்பிடத்தையுந்தேடி ஒரு மாதத்துக்குள்ளாக இவ்விடம் வந்து சேர்ந்து செய்திகூறியின்புற்று வாழ்வுறக்கடவீர்கள்; என்று மஹாராஜர் விதனென்னும் யூதபதிக்குக் கட்டளைசெய்து முடித்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

——: o :——

இந்தச் சருக்கத்தில் கீழ்த்திசையின் எல்லை கூறப்பட்டுளதே ? இது கிஷ்கிந்தை முதலாகவா ? மேருகிரிமுதலாகவா ? திருவயோத்திமுதலாகவா ? என்று சிலர் சங்கிப்பார்கள் ; இமையம், விந்தியம என்னும் இரண்டு மலையின் நடுவில் சராவதியென்னும் ஒரு நதியுளது ; அதுமுதலாகவென்றுணர்க ; சூரிய சித்தாந்தம், ஆர்யபடீயம் முதலிய சோதிடநூல்களில் பூமி என்னூறுயோஜனமே நீளமுள்ளதென்றும், ஐந்தாயிரஞ் சில்லரை யோஜனமே பரிதியுள்ளதென்றும் கூறியிருப்பதனாலும், இப்பொழுது ஊணர் முதலியோர்களும் அவ்வண்ணமே கண்டதாகக் கூறுகின்றமையினாலும், பூமி யுருண்டைவடிவாக விளங்கனிபோலச் சிறிதாகவே யிருக்கின்றதென்றும், ஸ்ரீபாகவதம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலிய புராணங்களில் பூமிதட்டையாகவும், ஐம்பதுகோடி யோஜனம் விஸ்தீர்ணமென்றும், மேரு முதலிய மலைகள் மிகவும் உயரமுள்ளனவென்றும், உப்புநீர்க்கடல் முதலாக ஏழுகடல்களுளவென்றும், முறையே ஒவ்வொரு கடல்களும், ஒவ்வொரு தீவுகளும், லக்ஷம் லக்ஷம் யோஜனம்விஸ்தீர்ணமுள்ளன வென்றும் கூறப்பட்டதுடொருந்தாதென்றும சிலர் சங்கிப்பார்கள் ; சோதிடநூல் செய்தவர்கள்தாம் கிரஹாதிகளை ஸ்புடஞ்செய்வதற்கு எவ்வகை யெளிதோ அவ்வகையாகக் கணக்கேற்படுத்திக்கொண்டனர்களேயன்றி, பிரபஞ்சத்தின் உண்மையைக்கூறவந்தவர்களல்லர்; ஆதலின், அவர்களுடைய வாக்கியம் திதி நிர்ணயாதிவிஷயங்களில் பிரமாணமேயன்றி, தத்துவவிஷயத்தில் பிரமாணமாகாது; ஊணர்முதலியவர்களும், ஓர் சிரியகிணற்றிலிருக்கின்ற ஆமை அக்கிணற்றைவிடப் பெரிய ஆறு குளங் கடல்களிருப்பதாகவே உண்படாததுபோல் சார்வாகர்முதலானவர்கள் தாம்கண்ணுல்கண்டவரையிலுமே பூமியென்பவர்களாதலின், அவர் வாக்கியமும் தத்துவவிஷயத்தில் பிரமாணமாகாது ; ஆதலின், அவர்களின் வாக்கியங்களைக்கொண்டு முக்காலப்பொருள்களையும் ஞானக்கண்ணினால் முற்றுமுணர்ந்த ஸ்ரீசுக பௌராணிகவியாஸ பராசரர்களின் திருவாக்குகளைப் பொய்யெனத்துணிபவன் எந்த மடையன்; அன்றியிலே, சோதிடநூல்களுக்கும் புராணங்களுக்கும் ஆராயுங்கால் விரோதமேயில்லை ; எனைனின், சோதிடர்கள் நாமிப்போழ்திருக்கும் இவ்விடத்தையே பூமியின் மேற்புறமாகவைத்துக்கொண்டு கோளம் பூகோளத்தைச் சுற்றுவதாகக் கூறினர்கள் ; இப்பொழுது நாமிருக்குமிடம் பூமியின் மேற்புறமேயன்று ; இது மேருகிரியின் தென்கிழக்கான தாழ்வரையேயன்றி, பூமியின் மேற்புறம் அன்று; ஆதலின், மேருமலையின் அடிவாரம் இதற்கு மிகவும் நெடியதூரத்திலிருக்கின்றது; அதற்குமேலேதான் பூமியின் விஸ்தீர்ணமிருக்கின்றது ; அதற்கு மேற்புறத்தில்தான் உப்புநீர்கடலின் விஸ்தீர்ணமிருக்கின்றது; அதற்குமேலேதான் மற்ற ஆறு கடல்களும், ஆறு தீவுகளும் மேன்மேலும் விஸ்தீர்ணமாயிருக்கின்றன ; அதற்குமேல் லோகா

லோக பர்வதமிருக்கின்றது; இவ்வுண்மையை மாமுனிவர்கள் கேசரகதி சித்தியிஞல் சென்று கண்டறிந்து மேருவின் நுனியை மேலாகவைத்துக்கோளம் மேருவைச்சுற்று கிறதென்றும், பூகோளத்தின் நிலை யித்தன்மைத்ததென்றும, புராணங்களில் தத்துவந் தை யருளிச்செய்திருக்கின்றனர்கள்; ஊணர் முதலானேர்களும் இப்பொழுது காமி ருக்கும் பரிதியைமாத்திரம் சுற்றி வருகிறார்களேயன்றி, மேருவின் நுனியையாயினும், இதற்குத் தென்முனையையாயினுஞ்சென்று கண்டிலர்கள்; அவர்கள் இதற்குத் தெற் கில் சுமார் இரண்டாயிரம் மயில்தூரம் சென்றிருப்பதும் அரிது; அதற்குமேல் லக்ஷம் மயில்தூரம் செல்லினும் பூமிமுடிவுபெறுது; அதற்குமேலேதான் பூமியின் விஸ்தீர் ணமிருக்கின்றது; இதனுண்மையை யறியாமல் முனிவர்களின் மொழியைப்பழிப்பது மடமையென்பதிலும் ஐயமுறுவார்களோ சான்ரோர்கள்; இப்போழ்திந்த கண்டத்தைச் சுற்றியிருக்கும் கடலும் உப்புநீர்க்கடலின் முனையேயன்றி, யதன்விஸ்தீர்ணம் பூமியின் விஸ்தீர்ணத்துக்கப்புறமே யுளது; அன்றியிலே, அவர்கள் பூமியே சுழன்றுகொண்டிரு க்கின்றதென்றும், சூரியன்ஒரேயிடத்தில்நிற்கின்றனனெனவும், மற்றுள்ளகிரஹங்கள் மாத்திரம் சுழலுகின்றனவென்றும், வேகத்திஞல் நமக்குப் பூமி சுழலுவதாகத் தோ ற்றுகின்றிலதென்றும், சூரியன் சுழலுவதாகத் தோற்றுவது பிராந்தி யென்றும், இப் பூமியும் கோளங்கள் போலவே ஆதார மின்றி ஆகாயத்திலிருக்கின்றதென்றும் கூறு கின்றனர்கள்; இதுவும் மடமையை விளக்குகின்றது; பூமி கிழக்குமுகமாகச் சுமார் ஒரு மினிட்டுக்கு இருபத்தைந்து மயிலுக்குக் குறையாமல் சுழல்வதாக அவர் கூறியிருக்கின் றமையின், அது மிகவும் பொருந்தாது; ஏனெனின், கலுழன் முதலிய சிறந்த பறவை கள் நாடோறுங் காலையிலெழுந்து ஆகாயத்தில் பறந்து சுமார் இரண்டு மூன்று மணி வரையிலும் கீழே யிறங்காமல் வேண்டும் திசைகளிற் சென்று இரை தேடிக்கொண்டு மீளவும் தங்கூடுகளில் மாலையில் வந்தடைகின்றன வல்லவோ? அது எவ்வண்ணம் பொருந்தும்; அவை கீழே யிறங்குவதற்குள் இப்பூமி யெவ்வளவுமயில்தூரம் சுழன்றி ருக்கவேண்டும்; சுமார் இரண்டாயிரம் மயிலுக்குமேலேயே சுழன்றிருக்கவேண்டுமே? இவ்வளவு வேகமாகப் பூமி சுழன்று கொண்டிருக்கையில், மறுபடியும் அப்பறவை யக் கூட்டைத்தான் எவ்வாறடையக்கூடும்; ரயில்வண்டி வேகமாகச் செல்லுகையில், யாரா லாயினும் ஏறக்கூடுகின்றதோ? ரயில்வண்டி வேகமாகச் செல்லுகையில், அதன்மேற் புறத்திலொருவனிருந்துகொண்டு ஓர் பறவையை யுயரப்பறக்கவிட்டு ஒரு காழிகை யப்பறவையை யாகாயத்திலேயே பறந்துகொண்டிருக்கச் செய்வாரெனில், மீளவும் அப்பறவை யந்த வண்டியைச் சேருமா? சேராதென்பது மடையனுக்கும் தெரியு மன்ரோ? அதற்குள் அந்த வண்டி சுமார் காற்பது மயிலுக்குக்குறையாமல் சென்றிருக் குமே? பூமிக்குத்தான் சுழலும் வழியிலேயே எல்லாவற்றையும் இழுக்கும்படியான சக்தியுளதெனின், பறவைகள் எப்பொழுதும் கீழ்த்திசையை நோக்கியே செல்லல் வேண்டுமேயன்றி, மற்றத்திசைகளில் ஒருக்காலும் செல்லல் கூடாது; ரயில்வண்டியி லும், நாவத்திலும் இருப்பவர்களுக்கு ஒருக்காலையில் பூமியும் நீரும் சுழல்வதாகத் தோற்றினபோதிலும் ஆராயுங்கால் ரயில்வண்டியும் நாவுமேமே சுழல்வதாக நன்கு விளங்குகின்றது; அவ்வண்ணமே சூரியன் சுழல்வதாகத்தோற்றிலும் நன்ரூக ஆரா ய்ந்து பார்க்குங் காலையிலாயினும் பூமி சுழல்வதாகத் தோற்றவேண்டுமென்ரோ? அப் படி யொருவர்க்குந் தோற்றுகின்றிலதே? அப்படியிருக்க முனிவர்களின் வாக்கியங் களையும் பொய்யென்று வாதித்து அனுபவத்துக்கும் விருத்தமாகப் பூமியே சுழலுகின் றதென்று சாதிப்பது என்ன மடமை; ஆதலின், சோதிடர்களின் கருத்தையும், மாமு னிவர்களின் மகிமையையும் அறியாமல் பிதற்றுகின்ற பேதையர்களின் வார்த்தையி லல் மயக்குறற்க; இதனைக்கண்டவர்களுக்கு ஒரு விரோதமும் தோன்றுது; சூரியர்தி கிரஹங்களின் நிலை சில விடங்களில் ஒருவிதமாகவும், சில விடங்களில் மற்றொரு

மஹாராஜர் தென்திசையின் விர்த்தாந்தங்கூறியது. கஉக்

நாற்பத்தேராராவது ஸர்க்கம்.

மஹாராஜர் தென்திசைக்கு வாநரர்களை யனுப்பியது.

மஹாராஜரிவ்வண்ணம் கீழ்த்திசைக்கு விநதன் முதலிய வாநரசேனை களை யனுப்பிவிட்டுத் தென்திசைக்கும் சிறந்த வாநரர்களை யனுப்பும்படி நிச்சயங்கொண்டு ஆநலகுமாரனுகிய நீலனையும், அங்கிலகுமாரராகிய சிறியதிரு வடியையும், திசைமுகதேவர் மைந்தனை ஜாம்பவந்தனையும், ஸுஷேஹாத் திரன், சராரி, சரகுல்மன், கஜன், கவாக்ஷன், கவயன், ஸுஷேணன், ரிஷ பன், மைந்தன், துவிவிதன், விஜயன், கந்தமாதனன், உல்காமுகன், அஸங் கன், அங்கதன் முதலியவர்களையும் அழைத்து இராவணனுறையிட மத் திசையிலென்பதை யறிந்தவராதலின், சிறந்த மிகுந்த சேனைகளையும் கூட் டிக்கொண்டு தென்திசையைத் தேடும்படி கட்டளைசெய்து மொழியலுற்ற னர். கேண்மின் அன்புடைய சேனாதிபர்களே! நீவிரெல்லீருஞ் சென்று தென்திசையில் எங்கெங்கு ஏகாந்தமான இடங்களுளவோ, அங்கங்கே சென்று சீதாதேவியாரையும், இராவணப்பயலையும் தேடிவருக; அதற்கு முறையே வழியுரைக்கின்றேன் கேளீர்; அநேக சிகரங்களையுடைய பற்பல காடுகளடர்ந்த விந்தியமலையையும், கொடிய கருநாகங்களையுடைய நர்மதா நதியையும், கோதாவரி, கிருஷ்ணை, வரதா, மேகலா, உத்கலா என்னும் நதி களையும், தசார்ணதேசத்திலுள்ள நகரங்களையும், அச்வவந்தி, அவந்தி என் னும் சிறந்த நாடுகளையும், விதர்ப்பம், ரிஷிகம், மாஹிஷகம், வங்கம், களிங் கம், கௌசிகமென்னுந் தேசங்களையும் முறையே தேடிப் பற்பல காடு மலைக ளடர்ந்த தண்டகாரணியத்தையும், அங்குப் பெருகி வருகிற அந்தக் கோதா வரியையும், ஆந்த்ரம், புண்ட்ரம், சோளம், பாண்ட்யம், கேரளம் என்னும் தேசங்களையும், அயோமுகமென்னும், ஸஹ்யமென்னும் பெயருடைய மலை களையும், அதினின்றும் பெருகிவருகின்ற காவேரியையும், அதன் சிகரத் தில் வீற்றிருக்கின்ற அகஸ்த்ய மஹாமுனிவரையும் சென்று காண்க. பின்பு, அவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தாம்ரபர்ணியென்னும் நதியையுங் தாண்டிச் செல்க; அந்த நதி இருகரையிலும் சந்தனமரங்களடர்ந்து தெளி

விதமாகவும் கூறப்பட்டிருப்பதற்கு ஒன்று மண்டலங்களின் நிலையையும், மற்றொன்று அம்மண்டலாதிஷ்டான தேவதையின் நிலையையும் கூறினதாகப் புலவர்கள் கருத் துரைத்திருக்கின்றனர்கள்; ஆதலின், இவ்வண்ணமுரைப்பது ஒரு நூலுக்கும் விரோத மில்லை; இந்தச் சருக்கத்திலும் மஹாராஜர் கீழ்த்திசையின் விஸ்தீர்ணமுறைகளை யுரைத்திருப்பதை யாராயுங்காலையிலும் இப்பொருளே நன்கமையுமென வனவர்க்கும் விளங்கும்; இதிலுரைத்தற்குரியது வெகுவாகவுளதாயினும் விரிவுக்கஞ்சி மௌன மடைந்தனம்.

இராவணனுடைய இருப்பிடம் தென்திசையில் இலங்கையென்பது மஹாராஜர் க்குத் தெரியுமாயினும், அவன் மாயாவியாதலாலும், ஸ்ரீராமசந்திரனுடைய தோள் வலிக்கஞ்சி வேறிடத்திலோடி யொளித்துக் கொண்டிருப்பனேவென்கிற ஐயத்தி னாலும், நாற்றிசைகளிலும் தூதனுப்பினரென வறிக.—

வுற்றுப் பெருங்கடலைச் சேர்கின்றமையில், காமினி காமுற்றுக் காந்தனிடம் செல்வதுபோல விளங்கும்; அதன்மேல் பொன்மயமான பாண்டியராஜர்களின் ராஜதானி கபாடபுரமுகும்; அதன்மேல் தென்கடலின் கரையில் அகஸ்தியமுனிவராலே தாபிக்கப்பட்ட மகேந்திரமென்னும் மலை யிருக்கின்றது; அது பொன்மயமாகியும், பற்பல காடுகளடர்ந்துமுளது; அதில் தேவகந்தர்வ ஸித்தசாரண கிந்நரகிம்புருஷாதி தேவர்களும், தேவரிஷிகளும் வாழ்வுற்று மகிழ்கின்றனர்கள்; அம்மலைக்குப் பர்வங்கள்தோறும் தேவேந்திரன் வருகின்றனன்; அதற்குமேல் நூறுயோஜன தூரத்தில் இலங்கா துவீபமிருக்கின்றது; அதுதான் அந்த ராவணனுக்கு வாழ்விடம்; ஆதலின், அங்கு மிகவும் ஊக்கத்துடன் பிராட்டியை நன்கு தேடுக; அங்கு மனிதர்கள் செல்வதரிது; அதற்குச் செல்லும்வழியிலே அங்காரகையென்னுமொரு கொடிய அரக்கி கடலிடையில் வாழ்கின்றனள்; அவள் ஆகாசத்தில் செல்லுமவர்களையும், அவர்களின் நிழலைப்பற்றி யிழுத்துக் கொலைசெய்கின்றனள்; ஆதலின், அவ்விடங்களில் மிகவும் ஊக்கத்துடன் சென்று எவ்வெவ்விடங்களில் ஜயந்தோற்றுகின்றதோ, அவ்வவ்விடங்களை நன்காராய்ந்து ஜயந்தீர்ந்து பிராட்டியைத் தேடுக; அந்த இலங்காபுரிக்குத் தெற்கில் நூறு யோஜனதூரத்தில் புஷ்பிதகமென்னும் சிறந்த மலை பல சிகரங்களை யுடையதாகிக் கதிரவன் போல ஜொலிக்கின்றது; அதில் ஒரு சிகரம் பொன்மயமாகியது; அதுதான் ஸூரியனுக்கு வாழ்விடம்; மற்றொன்று வெள்ளிமயமாயிருக்கின்றது; அது சந்திரனுக்கு வாழ்விடம்; அதில் மற்றும் பற்பல தேவகணங்களும் வாழ்கின்றன;—

నతంకృతఘ్నాఃపశ్యన్తి ననృశంసానాస్తికాః
ప్రణమ్యశిరసాశైలం తంవిమార్గధ్వంనరాఃం

நதம்க்ருதக்ஞாஃபச்யந்தி நந்ருசம்ஸாநாஸ்திகாஃ
ப்ரணம்யசிரஸாசைலம் தம்விமார்கத்வாநராஃ.

அம்மலையை நன்றியில்லாதவர்களும், கொடுமைகொண்டு ஜீவஹிம்ஸை செய்பவர்களும், வேதத்தைப் பிரமாணமாக, உடன்படாமல் நிரீசுவரவாதம் செய்கின்ற நாஸ்திகர்களும் கண்ணுறார்கள்; நீங்கள் அதனைக்கண்டு வணங்கிப் பின்பு, பிராட்டியைத்தேடுக; அதற்குமேல் பதினைந்துயோஜனதூரத்தில் ஸூரியவான் என்னும் மாமலையிருக்கின்றது; அதற்கு வழிமிகவும் செல்வதற்கு அரியதாகும்; அதற்குமேல் வைத்யுதமென்னும் மலை பற்பல மரங்கள் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனிந்துள; நீங்களங்கே சென்று காய் கனிகளை யுண்டு தேனையும் பருகி மகிழ்ந்து மேலே செல்லக்கடவீர்கள்; அதற்குமேல் மிகவும் கண்ணுறத்தக்க குஞ்சரமென்னும் மலை யுளது; அதன் சிகரத்திலேதான் விசுவகர்மன் அகத்தியமாமுனிவருக்கு ஆசிரமம் இயற்றி யளித்திருக்கின்றனன்; அம்மலையின்மேல் பத்து யோஜனமுயரத்தில் ஒரு யோஜனம் விஸ்தாரமுள்ள போகவதியென்னும் வாழ்விடமிருக்கின்றது; அதிலும் பன்னகர்களை வாழ்கின்றனர்கள்; அங்கு நாகராஜனை

வாஸ்கியும் வாழ்ந்துகொண்டிருக்கின்றன்; அங்கும் சென்று பிராட்டியைத் தேடுக; அதற்குமேல் பற்பல கூடமான இடங்களுள; அங்கும் நன்காராய்ந்து பிராட்டியைத் தேடுக; அதற்குமேல் ரிஷபம்போலவே உருவமண்மைந்த ரிஷபமென்னும் மலையுளது; அந்த ரிஷபகிரியில் கோரோசன வண்ணமுற்றதும், பதுமதள வண்ணமுற்றதும், தமாலதளவண்ணமுற்றதும், தீப்பொறிபோன்றதுமாகிய திவிய சந்தனம் உண்டாகின்றது; நீங்களதைக்கண்டு விருப்புற்று கையினல் தொடற்க; அவ்வந்தை ரோஹிதனென்னும் கந்தர்வர்கள் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றனர்கள்; அவர்களுக்கு இறையவர்கள் சைலூசன், கிராமணி, சிக்குரு, சுப்ரன், பப்ரு என்னும் ஐவர் வாழ்கின்றனர்கள்; சூரியன், சந்திரன், அக்கினிகள் போன்ற மேனியுடையநல்வினை செய்தவர்களும் அங்கு வாழ்கின்றனர்கள்; வானுலகம் பெற்றவர்களும் அங்கிருக்கின்றனர்கள்; அதுவரையில்தான் இவ்வுலகத்தவர்களால் செல்லலாகும்; அதற்குமேல் மிகவும் கொடியதான பிதிர்களின் உலகமிருக்கின்றது; அது உங்களுக்குச் செல்வதற்குரியதாகாது; அது மிகவும் கள்ளிருளினல் மூடப்பட்டிருக்கும்; அங்கேதான் யமதர்மராஜனுடையஸம்யமினியென்னும் ராஜதானியுளது; இதுவரையில்தான் நீங்கள் செல்வதற்கும் பிராட்டியாரைத் தேடுவதற்கும் திறமை கொள்வீர்கள்; ஆதலின், நீங்கள் அதுவரையிலும் சென்று எல்லாவிடங்களிலும் நன்முகப்பிராட்டியைத் தேடியவர் செய்தியையறிந்து வரக்கடவீர்கள்; யாவனொருவன் இவ்வண்ணந்தேடி ஒருமாதத்துக்குள்ளாக என்னிடம் வந்து கண்டேன் சீதாதேவியை யென்று மங்களங்கூறுவானே, அவன் என்னுடன் கூடி எனக்கு நிகரான போகங்களைப்பெற்று மகிழ்ந்து வாழ்வான்; அவனிலும் இனியன் எனக்கு மற்றொருவனுமிரான்; அவனே எனக்கு உயிரினும் இனியவன்; அவன் ஏதேனும் அபாதஞ்செயினும், எனக்கினியனாகவே எண்ணப்படுவான்; நீங்கள் அளவற்ற பலபராக்கிரமமுடையவர்களும், உற்சுவத்திற் பிறந்தவர்களும், நுண்ணறிவுடையவர்களுமாகின்றீர்கள்; ஆதலின், நீங்கள் பிராட்டியை எவ்வண்ணங்கண்டு மகிழ்வீர்களோ, அவ்வண்ணம் கல்முயற்சி செய்து சென்று காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரக்கடவீர்கள்; என்று மஹாராஜர் ஜாம்பவான், அனுமான், அங்கதன் முதலானோர்களுக்குத் தென்திசையின் வழியுரைத்து விடைகொடுத்தனுப்பினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தோராவது ஸர்க்கம்
முற்றிற்று.

கீழ்த்திசையிற்போலத் தென்திசையில் முழுதலும் செல்வதற்கு நடுவில் யமலோகம் புகற்கரிய காதலின், தடையாகின்றது; தென் கிழக்காகவாவது, தென்மேற்காகவாவது சுற்றிக்கொண்டே பூமியினடிப்புறத்தை யடையவேண்டும்.

புஷ்பிதகம் என்னும் மலைவரையிலுமே சூரிய சந்திரர்கள் தக்ஷிணையனத்தில் சாய்கின்றனர்கள்; அதற்குமேலுள்ளவர்களுக்கு சூரிய சந்திரர்கள் எப்பொழுதும் வட

நாற்பத்திரண்டாவது லர்க்கம்.

மஹாராஜர் மேற்குத்திசைக்கு வாநரர்களை யனுப்பியது.

மஹாராஜர் இவ்வண்ணம் ஜாம்பவான் முதலாநேர்களைத் தென்திசைக்கு அனுப்பி மேற்றிசைக்கனுப்புவதற்காக தாரையின் தந்தையான ஸுஷேணனை யழைத்துத் தமக்கு மாமனராதலின், அவரை வலஞ் செய்து வணங்கி மொழியலுற்றனர். கேளீர் மரீசிமஹாமுனியின் குமாரரான மாரீசரே ! நீர் மற்றுமுள்ள மரீசி குமாரர்களுடனும், மற்றுமுள்ளாஷி குமாரர்களான வாநரர்களுடனும் புறப்பட்டு மேற்றிசைக்கு இரண்டு லக்ஷம் சேனைகளின் திரள்களுடன் சென்று தேடுக; சராவதி நதியினின்றும் மேற்காக நீங்கள் செல்வீர்களாயின், முறையே ஸுராஷ்ட்ரம், பாஹ்லீகம், சூரம், பீமம் முதலிய செழிப்புள்ள தேசங்களும், பற்பல நகரங்களும், புன்னாகவகுளாதத் தாலகங்களின் திரளுடைய பெரிய வனமும், தாழுஞ்சோலைகளும் காணப்படும்; மேற்குதிசைநோக்கிப் பெருகுகின்ற பற்பல நதிகளும், பற்பல யோகிகளின் ஆசிரமங்களும், பற்பல காடுகளும், மலைகளும், நீர் மரஞ் செடி கொடிகளற்ற மருகாந்தாரமும், உயர்ந்த சிலைகளும் முறையே காணப்படும்; அங்கெல்லாம் பிராட்டியை நன்றாகத் தேடி அதற்கு மேற்கில் செல்வீர்களாயின், பச்சிமசமுத்திரம் தென்படும்; அதன் தீரத்தில் தாழை தமாலங்களின் காடுகள் மிருந்துள; வாநரர்கள் அவ்விடங்களில் மிகவும் மகிழ்வுறுவார்கள்; அங்குள்ள காடுகளிலும், மலைகளிலும், பிராட்டியையும், இராவணனையும் தேடுக; அன்றியிலே, அங்கே முரசீபட்டணம், ஜடபுரம், அவந்திபுரம், அங்க

புறத்திலேயே காணப்படுவார்கள்; ஒருவர்க்கு பல விடங்களில் வீடிருப்பது போலவே ஸுரிய சந்திராகஸ்திய வாஸுகி முதலாநேர்களுக்கும் வேண்டுங்காலங்களில் வாழ்வதற்காக அங்கங்கு வாழ்விடக்களுளவென்றுணர்க. அவர்கள் தெய்வத்தன்மையுடையவர்களாதலின், ஒருவரே பலவிடங்களிலும் பல உருவங்கொண்டிருப்பார்கள்.

மஹாராஜர் முன்பு பெருமாளுடன் ராவணனிருப்பிடந்தெரியாதென்றுரைத்திப்பொழுது இராவணனிருப்பிடத்தை யுரைத்தனர்; ஆதலின், அவர் பொய்யரல்லரோவெனின், பொய்யரல்லர்; முன்பு ராவணனுக்கு வீழ்விடம் இலங்கையாயினும், பிராட்டியைப் பரித்துவந்த பின்பு, அங்கு வாழ்கின்றானென்பது நிச்சயமில்லை; அச்சத்தினால் வேறிடத்திலும் ஒளிந்து வாழ்வான்; அப்போழ்து அவனிருக்குமிடத்தைத் தேடுவதற்குச் சேனைகளும் ஸ்வாதீனத்திலில்லை; ஆதலின், அப்பொழுது பெருமாளுக்கிருந்த துரையில் சந்தேகமா யுரைசெயினும், அப்போழ்தே பிராட்டியைத்தேட முயற்சி செய்வார்; அவ்வண்ணம் இலங்கைக்கு வந்து பார்த்து இராவணன் அங்கிராதகில், பின்பு செய்வது யாது; ஆதலின், பெருமாள் காரியம் அப்போழ்து முடிவுபெறுமல் சிரமம்மாத்திரம் அதிகமாகும்; என்று ஆராய்ந்தே அப்பொழுது அந்தச் சங்கதியை யுரைசெய்யாது மறைத்தனரெனவுணர்க; ஒருவருக்குத்தீங்கு நேரும்படியான பொய்யே பொய்யாகுமல்லது, ஒருவர்க்குந் தீங்கில்லாமல் ஒருவர்க்கு இதமான பொய் பொய்யாகாது; மஹாராஜர் முன்னமே பெருமாளுக்கு இராவணனிருப்பிடத்தை யுரைசெயின், தமது காரியம் முடிவுபெறுதென்று பொய்யுரைசெய்தனரென்று சிலர் கூறுவார்கள்; அது தோழமைக் குரியதாகாதாதலின், பொருந்தாது.

லோமை, மிகவும் மரங்களடர்ந்த அலகூதமென்னும் வநம், மற்றும் பற் பல நாடு நகரங்களுமுள; விந்து நதிக்கும், ஸாகரத்திற்கும், ஸங்கமபூமியிலே மேறவகிரியென்னுமொருமலே பற்பல சிகரங்களே யுடையதாகி விளங்குகின் றது ; அதன் தாழ்வரைகளிலே சிறகுகளேயுடைய சிங்கங்கள் வாழ்கின்றன ; அவைகள் திமிதிமிங்கிலங்களேயும், யானைகளேயும் எடுத்துப் பறந்து தத்தம் கூடுகளுக்குச் செல்லுகின்றன; மதமேறி யிறுமாப்புற்று மேகங்கள்போலப் பிளிறுகின்ற களிறுகளும் அக்காடுகளில் திரிகின்றன; அம்மலையின் சிகரமும் பொன்மயமாகி வியன்றுயர்ந்துளது ; அவ்விடங்களிலும் தேடுக ; அதற்கு மேல் பச்சிமசமுத்திரத்தில் பாரியாத்திரமென்னும் மலேயுளது; அதனுடைய சிகரம் பொன்மயமாகி நூறுயோஜனம் வியன்றுயர்ந்துளது ; அதன்மேலே வேண்டுமாறு ரூபந்தரிக்கவல்லத் தீபோல விளங்குகின்ற இருபத்து நான் குகோடி கந்தர்வர் வாழ்கின்றனர்கள் ; அவர்கள் மிகக்கொடியர்களாதலின், நீங்களவரருகிற் செல்லற்க ; அங்குள்ள காய் கனி முதலியவைகளேயும் விரும் பற்க; அவர்கள் அவைகளேக் காத்துக்கொண்டிருக்கின்றனர்கள் ; அவ்விடங் களில் நீங்கள் மிகவும் ஊக்கத்துடன் முயற்சிசெய்து பிராட்டியைத் தேடுக; வாநரஜாதியுடையவர்களுக்கு அவர்களிடத்தில் அச்சமுறல் வேண்டிவ தில்லே ; அதற்குமேல் வைதூரியவண்ணமுற்று வச்சிரமணிகளுடையதாகிப் பற்பல மரஞ்செடிகளடர்ந்துள்ள வச்சிரமென்னும் மாமலே நூறுயோஜநம் உயர்ந்தும், அகன்றும், ஒளிகொண்டு விளங்குகின்றது ; அங்குள்ளகுகை களிலும் பிராட்டியாரைத் தேடுக ; அதற்குமேல் கடலில் நான்காவது பாகத்திலே சக்கரவான் என்னும் மலே யுளது ; அங்கு முன்பு விசுவகர்மன் ஆயிரம் அரமுடைய திருச்சக்கரத்தையியற்றினன் ; ஸ்ரீமந்நாராயணன் ஓர வதாரத்தில் ஹயக்கிரீவனென்னும் தானவனேக் கொலேசெய்து அவனால் பறிக்கப்பட்ட சக்கரத்தையும், பஞ்சஜனனென்னுந்தானவனேக் கொலே செய்து அவனுடையளலும்பிறலுண்டாகிய பாஞ்சஜன்யமென்னும் சங்கத் தையும் பறித்தருளினர். அந்தச்சக்கரவானென்னும் மலேயின்தாழ்வரைகளி லும், குகைகளிலும், இராவணனேயும் பிராட்டியாரையும் தேடுக ; அதற்கு மேல் அறுபதினாயிரம் யோஜனதூரம் தாண்டிச்சென்வீர்களாயின், வராஹ மென்னும் மலே பொன்மயமான சிகரங்களேயுடையதாகி யாழ்ந்த கடலிடை யில் விளங்குகின்றது; அதன்மேலேதான் ப்ராக்ஜ்யோதிஷமென்னும் பொன் மயமான பட்டணமிருக்கின்றது; அதில் மிகவுங்கொடிய தன்மையுடைய நர காஸுரன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனன்; அவ்விடங்களிலும் இராவண னேயும் பிராட்டியாரையுந் தேடுக ; அதனேயுந் தாண்டிச் செல்வீர்களாயின், மேகவான் என்னும் மாமலே பொன்மயமாகி யெங்கும் விளங்குகின்றது; அதில் பன்றி, யானே, புலி, கரடி, சிங்கம் முதலிய விலங்குகள் கர்ஜனே செய்து அதனால் தோன்றிய பிரதி தொனியைக்கேட்டு மிகவும் கூவுகின்றன ; அத ன்மேலேதான் முதலில் தேவேந்திரன் தேவராஜ்ஜிய பட்டாபிஷேகஞ்செய் யப்பட்டனன் ; அதனேக்கடந்து முறையே அறுபதினாயிரந்தங்கமலேகளே காண்பீர்கள்; அதிலுள்ள மரங்களும் பொன்மயமாகிப் பூத்துத் தழைத்து

விளங்குகின்றது ; அம்மலைகளின் நடுவிலே ஸாவர்ணி மேருவென்னும் ஒரு மஹிமமற்றுள்ள மலைகளுக்கு அரசன்போலவேவிளங்குகின்றது; அதுவையோ னீடத்தில் வரம்பெற்று ஓரிரவும் பகலும் தன்மேல் வாழ்ந்ததேவகந்தர்வ தானவ பசு பக்ஷி முதலிய வெல்லா வஸ்துக்களையும் பொன்மயமாக்குகின் றது; தேவகந்தர்வாதிகளும், ஸப்தரிஷிகளும், அஷ்டவஸுக்களும், விசுவே தேவர்களும், மற்றுமுள்ள தேவ முனிக்குழாங்களும் தினந்தோறும் அங் கெய்தி மாலைப்பொழுதில் ஸூரியனை நோக்கிப் பூஜை செய்கின்றனர்கள் ; அவர்களால் பூஜிக்கப்பட்டவுடனேதான் இரவி இங்குள்ளோர்களால்காண ற்கரியனாகி அஸ்தகிரியை யடைகின்றனன் ; அங்கிருந்து அஸ்தகிரிக்குப் பதி னாயிரம்யோஜன தூரமிருக்கின்றது ; அவ்வளவுதூரத்தையும் சதிரவன் அரைமுகூர்த்தத்தில் தாண்டி மறைந்து விடுகின்றனன் ; அம்மலையின் சிக ரத்திலே பொன்மயமாகியும், பொன்மயமான பசு பக்ஷி முதலியவைகளையு டையதும், பலவகை மரங்களடர்ந்ததுமாகியதோர்பட்டணம் விசுவகர்ம னாலே இயற்றப்பட்டுளது ; அதிலேதான் பாசஹஸ்தனை வருணன் வாழ் கின்றனன் ; அந்த ஸாவர்ணி மேருவுக்கும், அஸ்தகிரிக்கும், இடையில் பத்து முனையுள்ள பருத்தயர்ந்த பனைமரமொன்றுளது ; அதுவும் பொன்மயமாகி யதும், விசித்திரமான வேதியுடையதுமாகி விளங்குகின்றது ; அங்குள்ள எல்லாவிடங்களிலும், ஆறுகுளங்களிலும், பிராட்டியாரைத்தேடுக ; அந்த ஸாவர்ணி மேருவின்மீது மேருஸாவர்ணி யென்னும் மஹாயோகி தமது தேஜ ஸ்ஸினாலேயே விளங்குகின்றனர் ; கதிரவன்போல் ஒளிக்கின்ற அம்மேரு ஸாவர்ணி மாமுனிவரை நீங்களெல்லோருங் கண்டு பணிந்து பிராட்டியின் சங்கதியையும் கேட்டறிந்து கொள்க ; இவ்வளவுதூரம் வரையிலேதான் கதிரவன் ஒளிக்கச்செய்து இருளையகற்றி யஸ்தகிரியை யடைந்து மறைகின் றனன் ; இதுவரையிலும்தான் உங்களாலே செல்லல்தகும் ; அதற்குமேல் கதிரவனொளியின்றி யிருள்மூண்டு அளவற்றிருக்கின்றது ; அதற்கும் மேலே நாம் சென்றிலோம் ; கேட்டறிந்துமிலோம் ; இதுவரையில் நீங்கள் சென்று

கீழ்திசையைப்போலவே மேல்திசையினும் ஸூரியகிரணம்முழுதலும்வியாபிக்கின் றமையின், ஸஞ்சரிக்கத்தக்கதாகின்றது ; தென்திசையில் அவ்வண்ணமில்லாமல் இரு ள்மூடியிருக்கின்றமையின், செல்லற்கரியதென்றே யியம்பிஞரேயன்றி, முடிவு கூறவி ல்லை ; இத்திசையிலும் ஏழுகடல்களும் அதனதனது தீவுகளும் உள ; விசேஷமின்மை யின், எடுத்துக் கூறப்படாவாயினும், கூறப்பட்டனவாகவே எண்ணல் வேண்டும் ; இவ் வண்ணம் நாற்றிசைகளிலும், ஏழுகடலையுங் கடந்து லோகாலோக பர்வதம் சுற்றி யிரு க்கின்றது ; அதற்குமேலும் இருள்மூடி யளவற்ற இடமிருக்கின்றது ; இப்படி லோகா லோகந்தாண்டி நெடுந்தூரம் இருளில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ஜுனனை யழைத்துக் கொண்டுபோய் பிரகிருதி மண்டலத்துக்குள்பட்ட ஸ்ரீவைகுண்டமென்னும் வேறொரு திவ்விய லோகத்திற்கு எழுந்தருளினரென்று ஸ்ரீமஹாபாரதாதிகளிலுமிருக்கின்றது; இவ்வண்ணமாராயுங்கால் முனிவர்கள் முக்காலப் பொருள்களையுமுணர்ந்து உண்மையா கக் கூறியதைப் பிழையென்று பழிப்பவரைவிட மடையருமுளரோ ? ஆதலின், எல் லோரும் இவ்விடங்களிலெழுதிய நோட்ஸுகளை,நன்காராய்ந்து பழிப்பவர்களுக்குத்தக்க ஸமாதானங் கூறக்கடவர்கள்.

பிராட்டியின் செய்தியையும், இராவணனொளித்திருக்குமிடத்தையும் அறிந்துகொண்டு ஒருமாதத்திற்குள் மீண்டெய்தித் செய்தி யுணர்த்தக்கடவீர்கள்; ஒருமாதத்திற்குமேல் ஒருவனுமிருக்கக்கடவனல்லன்; அப்படியிருப்பவன் உயிர்த் தண்டனைக் குள்ளாருவான்; உங்களுடன் கூடவே எனக்கு மாமனரும், மிகவும் வீரமுடையவருமாகிய இந்த ஸுஷேணர்வருகின்றனர்; நீங்களெல்லோரும் இவருடைய கட்டளையின்படி நடந்துகொள்ளக்கடவீர்கள்; இவரும் சிறந்தவர்; நீங்களும் சிறப்புற்றவர்கள்; ஆதலின், நீங்களிருவரும் எனக்கு முதன்மையானவர்கள்; ஆதலின், இவரை முன்னிட்டுக்கொண்டு மேற்றிசையைத் தேடிவருக; பெருமாளுடைய பிரிய மஹிஷியான பிராட்டியாரைக் கண்டு வருவீர்களாயின், பெருமாள் செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரமாகுமாதலின், எல்லோரும் நல்வினையராகுவோம்; ஆதலின், யாதுரைசெய்யாவிடினும், காலதேசங்களுக்குத்தக்கபடி யெவ்வண்ணஞ் செயல்வேண்டுமோ, அவ்வண்ணஞ்செய்து காரியத்தைமுடித்துக்கொண்டு வருக; என்றிவ்வண்ணம் மஹாராஜர் கட்டளைசெய்தனர். ஸுஷேணன் முதலிய வாநரர்களும் அதனைக்கேட்டு மகிழ்ந்து அவ்வண்ணமே மேல்திசைமுழுதும் தேடிவருவோமென்று உடன்பட்டு அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பிரயாணப்பட்டனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்திரண்டாவது ஸர்க்கம்
முற்றிற்று.

நாற்பத்து மூன்றாவது ஸர்க்கம்.

மஹாராஜர் வடதிசைக்குச் சதவலியென்னும் யூதபதியைக் கட்டளைசெய்தனுப்பியது.

மஹாராஜர் இவ்வண்ணம் தம்மாமனராகிய ஸுஷேணனை மேற்குத்திசைக்கு வழியுரைத்தனுப்பி விட்டுப்பின்பு சதவலியென்னும் மிகவும் வீரமுடைய வாநரனை யழைத்து ராஜதருமத்தை நன்குணர்ந்தவராதலின், தமக்கும் பெருமாளுக்கும் நயம் விளையுமாறு மொழியலுற்றனர். கேளாய் சதவலி! நீ உன்னைப்போன்ற சிறப்புற்ற அநேகமாயிரம் வாநர சேனைகளுடனும், யமதர்மராஜன் குமாரர்களுடனும், அமைச்சர்களுடனும் கூடிப்புறப்பட்டு இமயமலையையே அலங்காரமாகவுடைய வடதிசையை நோக்கிச் செல்லுக; அங்குள்ள விடங்களுள் ஓரிடமும் விடாமல் பிராட்டியாரைத் தேடுக; இக்காரியம் நிறைவேறுமாயின், பெருமாள் திருவுள முகந்தருளுவர்; அப்பொழுதுதான் நாம் கடன் தீர்ந்தவர்களாகுவோம்; நமக்குப் பெருமாள் பெருதவிசெய்தருளினரல்லரோ? ஆதலின், அதற்குப்பிரதியுபகாரஞ் செய்தோமாயின், நம்பிறவி பயன்பட்டதாகும்;—

ఆర్థినః కార్యనిర్వ్యత్తి మకుర్వరపియశ్చ యేత్
తస్యాస్యాత్సఫలంజన్మ కింపునఃపూర్వకారణః

அர்த்தினஃகார்யனிர்வ்ருத்தி மகர்துரபியச்சயேத்
தஸ்யஸ்யாத்ஸபலஞ்சன்ம கிம்புநஃபூர்வகாரணஃ.

ஒருவன் நமக்குபகாரஞ் செய்திலனெயினும் அவன் காரியத்தை யாவன் செய்கின்றனமே, அவனுடைய பிறப்பும் பயனுடையதாகுமெனின், முன்பே கன்றி செய்தவனுடைய காரியத்தைச் செய்பவனுடைய பிறவி பயனுளதாகுமென்பதில் ஐயமுறல் வேண்டுமோ ? ஆதலின், இதனை இதயத்தில் நினைந்துகொண்டு நமக்கிதஞ்செய்பவர்களாதலின், பிராட்டியார் எவ்வண்ணம் காணப்படுவரோ, அவ்வண்ணம் முயற்சிசெய்து தேடுக ; அன்றியிலே, இந்தப் பெருமாளும் ஸர்வ பூதங்களுக்கும் இறையவரும், பூஜை செய்துகொள்வதற்குரியவரும், நமக்கும் இனிய தோழருமாகின்றனர் ; ஆதலாலும், நீங்கள் இக்காடுகளிலும், நதிகளிலும், மலைகளிலும், நன்கு தேடுக ; அங்கிருந்து புறப்பட்டு ம்லேச்சம், புளிந்தம், சூரஸேனம், ப்ரஸ்த்தலம், பரதம், சூரு, மத்ரம், காம்போஜம், யவனம், சகம், ஆரட்டம், பாஹ்லீகம், ரிஷிகம், பௌரவம், கண்டகம், சீன, பரமசீன, நிஷாதர், தரதம் என்னுந் தேசங்களையும் சென்று தேடுக; அங்கிருந்து இமயமலை சேர்ந்து லோத்ரம், சந்தனம், தேவதாரு முதலிய காடுகளிலும், இராவணனுடன் பிராட்டியாரைத் தேடுக; அங்கிருந்து தேவகந்தர்வ ஸேவிதமான சோமாசிரமத்தையும், அங்கிருந்து காளமென்னுமுயர்ந்த மலையையும் சேர்ந்து அங்கங்குள்ள காடுகுகை முதலிய விடங்களிலும் பிராட்டியாரைத் தேடுக; அங்கிருந்து செல்வின் பொன்மயமாகிய ஸுதர்சனமென்னும் மாமலையும், அதற்குமேல் அநேகங்கோடி பறவைகளுடைய தேவஸகமென்னும் மாமலையும் காணப்படும் ; அவ்விடங்களிலும் தேடுக ; அங்கிருந்து நூறுயோஜநம்வரையில் ஆறு குளங் குட்டை காடு செடி பசு பக்ஷி மிருகங்களொன்றுமின்றி மருகாந்தாரமாயிருக்கின்றது ; அதனை மிகவும் விரைவாகத் தாவிச் செல்வீர்களாயின், வெள்ளிநிறமுள்ள கைலாஸமென்னும் மாமலையையடைந்து மகிழ்வீர்கள் ; அம்மலையின்மேலேதான் சரத்கால மேகம்போன்ற பொன்னிலங்காரஞ்செய்யப்பட்ட சிறந்த பெருமாளிகையை விசுவகர்மன் குபேரனுக்கு இயற்றி யளித்திருக்கின்றனன் ; அவ்விடத்தில்தான் விசாலமான மானஸமென்னும் ஸரோவரம் தாமரை அல்லி ஆம்பல் கருநெய்தல் செங்கழுநீர் முதலிய மலர்கள் மலர்ந்தும், ஹம்ஸஸாரஸாதியான நீர்ப்பறவைகளொலித்தும், தெய்வப்பொது மகளிர்களிறலே நீர்விளையாடலாடப்பட்டும் விளங்குகின்றது ; அங்கேதான் யக்ஷர்களனைவர்க்கும் இறைவனாகிய குபேரன் யக்ஷர்களுடன் மகிழ்ந்து வாழ்கின்றனன் ; அங்கும் அதைச்சூழ்ந்த மலைகளிலும் பிராட்டியாரையும் ராவணனையுந் தேடுக ; அங்கிருந்து க்ரௌஞ்சமென்னும் மலையைச்சேர்ந்து மிகவும் ஊக்கத்துடன் அதனது பிலத்தினுள்ளே செல்லுக ; அங்கு தேவர்களாலும் பூஜைசெய்யப்பட்ட சிறந்த

மாயோகிகள் வாழ்கின்றனர்கள்; அம்மலையிலுள்ள எல்லாவிடங்களிலும் பிராட்டியாரைத் தேடுக; அங்கிருந்து அவ்ருக்ஷம், காமனசலம், மானஸம், விஹாகாலயம் என்னும் நான்கு மலைகளையும் சேர்ந்து தேடுக; அங்கு தேவதானவராக்ஷஸர்களெல்லாருவரும் செல்லுகின்றிலர்; அங்குள்ள விடங்களிலும் தேடுக. இம்மலைகளெல்லாம் க்ரௌஞ்சகிரியைச் சூழ்ந்துள்ள மலைகள்; அங்கிருந்து செல்லின் மைநாகமலை, அங்கேதான் மயாஸுரன் தனக்கு அரண்மனைகட்டிக்கொண்டிருக்கின்றனன்; குதிரையின் முகமுள்ள கிம்புருஷர்களின் பெண்மூர்களும் அங்குவாழ்கின்றனர்கள், அவ்விடங்களிலும் தேடுக; அங்கிருந்து செல்லின், சித்தர், வைகானஸர், வாலகில்யர் முதலிய மாயோகிகளின் ஆச்ரமமிருக்கின்றது, அங்குச்சென்று அவர்களைக்கண்டு வணங்கி விஷயம்பூண்டு பிராட்டியாருடைய செய்தியையும் விஜ்ஞாபித்து கொள்க; அங்கு பொற்றாமரைகள் மலர்ந்து பாலஸூரியன்போன்ற அன்னப்பறவைகளொலித்து வைகாநஸமென்னும் சிறந்த ஸரோவரமொன்றுளது; அவ்விடத்திலேதான் குபேரனுக்கு வாஹனமான ஸார்வபௌமமென்னும் திக்கஜம் பெண் யானைகளுடன் கூடியுலாவிக்கொண்டிருக்கும்; அந்த வைகாநஸ ஸரஸ்ஸைத் தாண்டிச் செல்லின், ஸூரியசந்திரநக்ஷத்திரங்களொன்றுமின்றியும், மேகங்களின்றியும், அளவற்றும் இருக்கினும் அங்குள்ள மாயோகிகள் கதிரவன் கிரணங்கள்போல வொளிக்கின்றமையின், அவ்விடமெங்கும் எப்பொழுதும் பகல்போலவே அம்முனிவர்களின் தேஜஸ காந்தியினாலே விளங்கும்; அவ்விடத்தைத் தாண்டிச் செல்லின் சைலோதையென்னும் பெரிய நதியிருக்கின்றது; அதன் இருகரையிலும் கீசகமென்னும் வேய்கள் அடர்ந்திருக்கின்றன; அவைகளை அங்குள்ள சித்தர்களை இக்கரையிலிருந்து அக்கரையிலும், அக்கரையிலிருந்து இக்கரையிலும் சாய்ந்து ஏற்றிக்கொண்டு கொணர்ந்து விடுகின்றன; அவ்விடத்திலேதான் உத்தரகுருக்ஷேத்ரமிருக்கின்றது; அந்த இடத்திலும் நல்வினையற்றவர்கள் வாழ்வுறார்கள்; அதற்குமேல் பொற்றாமரை மலர்களையும், இந்திரநீலவைடூர்யமயமான இலைகளையுமுடைய பற்பல தாமரைகளையுடைய ஆறுகள் பலவாறாக இருக்கின்றன; அங்குள்ள மடுவுகளும், கதிரவன்போலொளிக்கின்ற பொற்றாமரைகளிலேலே விளங்குகின்றன.; அவ்வாறுகளிலும் சிறந்த மணிமயமாகிய இலைகளையும், பொன்மயமாகிய தாதுகளையுமுடைய கருநெய்தல்களும், பொன்மணலுற்று முத்துக்கள் சூழ்ந்த மணற்குன்றுகளும், நவமணிமயங்களும், பொன்மயங்களுமாகி எப்பொழுதும் தளிர்த்தும் பூத்தும் காய்த்தும் கனித்துமுள்ள மரங்களும், மணிமயமாகிய பறவைகளும் விளங்குகின்றன; அன்றியிலே அம்மரங்கள் அங்குள்ளவர்களுக்கு வேண்டியவைகளெல்லாமளிக்கின்றன; சில மரங்கள் அங்குள்ள காமினியர்களும், காமிகளும் அணிவற்குரிய பற்பல அணிகளையும், ஆடைகளையுமளிக்கின்றன; சில மரங்கள் பற்பல விநோதமான சயனங்களையும், மலர் மாலைகளையுமளிக்கின்றன; சிலமரங்கள் பலவகைப் பானங்களையும், பற்பல பக்ஷ்யங்களையுமளிக்கின்றன; அங்குள்ள பெண்களும் நற்குண நற்செய்கையுற்றவர்களும், ரூபயௌவனமும்

டையவர்களும் ஆகின்றனர்கள் ; அவ்விடங்களில் தேவகந்தர்வ கின்னர கிம்புருஷ ஸித்த வித்யாதர நாக யக்ஷாதி தேவகணங்களும், காந்தையர்க ளுடன் கூடி இன்புறுகின்றனர்கள் ; அங்குள்ள யாவரும் கதிரவன்போன்ற மேனியுடையவர்களும், நல்வினை செய்தவர்களும், இன்பமுடையவர்களும், வேண்டியவைகளை யெல்லாம் பெற்று மகிழ்ந்தவர்களும், காமினியர்களு டன் சேர்ந்திணைபிரியாதவர்களுமாகின்றனர்கள் ; அவ்விடத்தில் நிருத்த கீத வாத்தியங்களினொலியும், மந்தஹாஸவொலியும் கூடி யாவருக்கு மினி மையாகக் கேழ்க்கப்படுகின்றது ; அவ்விடத்தில் மகிழ்வற்றவனும், மனவி னையப் பிரிந்தவனும் ஒருவனுமிலன் ; தினந்தோறும் அவ்விடத்தில் நற்கு ணங்கள் வளர்கின்றன ; அதனைக் கடந்து செல்லின் வடகடல் கட்புல னாகும் ; அதனிடையில் ஸோமகிரியென்னும் பொன்மலை யொன்றுளது ; இந்திரலோகத்திற்கும், பிரஹ்மலோகத்திற்கும் செல்லுகின்ற தேவர்கள் அவ்வழியாகவே செல்லல் வேண்டுமாதலின், அதனைக் கண்ணுறுவார்கள் ; அவ்விடம் இரவில் கதிரவனுடைய காந்தியுற்றிலதாயினும், அம்மலையினொ ளியினாலே பகல்போலவே விளங்கும் ; அம்மலையின்மேலும் விசுவரூபியும், ஸ்ரீயஃபதியுமாகிய பகவானும், பதினொன்று ருத்திரரும், நான்முகனும், பற்பல பிரஹ்மரிஷிகளினாலே சூழப்பட்டவர்களாகி எழுந்தருளி யிருக்கின் றனர்கள் ; அந்த உத்தரகுருக்ஷேத்திரத்திற்கு மேலே நீங்களொருக்காலே யிலும் செல்லற்க ; அதற்குமேல் ஒருவர்க்கும் செல்வதெளிதாகாது ; அந்த ஸோமகிரி தேவர்களாலும் செல்லற்குரியதன்று ; ஆதலின், அந்த ஸோம மலைவரையிற்சென்று அதனைக்கண்டு உடனே மீண்டெய்துக ; இதுவரை யிலுமே வாநரர்களால் செல்லற்குரியது ; அதற்குமேல் கதிரவனொளியின்றி யும், மூடுவின்றியும் இருத்தலால் அதன்மேல் யாமறிந்திலோம் ; இதுகா றும் எம்மால் கூறப்பட்ட இடங்களிலும் கூறப்படாதுள்ள இடங்களிலும் சென்று பிராட்டியாரையும், இராவணனையும் தேடி வருக ; இவ்வண்ணம் நீங்கள் சென்று பிராட்டியாரைத் தேடி வருவீர்களாயின், பெருமானுக்கும் நமக்கும் இனிது செய்தீர்களாகுவீர்கள் ; அன்றியிலே, நம்முடன் சேர்ந்து பகைவர்களையும் வென்று பிராட்டியாரையும் பெருமானுக்களித்து எம்மால் பூஜை செய்துகொள்ளப்பட்டவர்களாகி புத்திர மித்திர களத்திராதிகளு டன் கூடி வாழ்வீர்கள் ; ஆதலின், இக்காரியத்தில் மிகவும் ஊக்கங்கொண்டு தேடி வாரீர்கள் என்று மஹாராஜர் கட்டளை செய்தனுப்பினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்து மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

மஹாராஜர் வடதிசைக்கு வழி கூறுவதில் மேருமலையைக் கூறுயிலரே யென்று சிலர் கேட்பார்கள் ; அதேகமாயிரம் பொன்மலைகளுளவென்னுமிடத்திலே தானே மேருகிரியுமிருப்பதாக வெண்ணுக ; அன்றியிலே, மூன்னர் தாம் நேராகச்சென்று கண்ணால் கண்ட வழியைமாத்திரம் முறையே கூறினராதலின், தாம் செல்லும் கீழ்ல யிலும் மேருகிரிக்குச்செல்லாது அதனை இடக்குப்பக்கமாகக் கொண்டிருப்பாராதலின்,

நாற்பத்துநான்காவது ஸர்க்கம்.

பெருமாள் சிறியதிருவடியிடத்தில் தமது மோதிரத்தைப் பிராட்டியாருக் டையாளமாக அளித்தருளியது.

மஹாராஜர் இவ்வண்ணம் நான்குதிசைகளுக்கும் வாநரர்களை யேவி விட்டு மீளவும் சிறியதிருவடியை யழைத்து இவரே மிகச் சிறந்தவரும், யாவு மறிந்தவரும், தாம் மேற்கொண்ட காரியத்தை யூக்கத்துடன் செய்து முடிப் பவருமாதலின், இக்காரியத்தையும் எவ்வகையிலும் செய்து முடிப்பரென்று நிச்சயங்கொண்டு மொழியலுற்றனர். கேளீர் வாயுகுமாரராகிய அனு மானே! உமக்குப் புவியிலாயினும், ஆகாயத்திலாயினும், வானுலகிலாயினும், பொன்னுலகிலாயினும், நீரிலாயினும், தீயிலாயினும் தடைகண்டிலேன்; நீர் தேவாஸுர நாககந்தர்வ நரகிந்நரர் முதலாமோர்களையும், எல்லாவுலகங்களை யும், காடு கடல் மலைகளையும் நன்குணர்கின்றீர்; கதியும், வேகமும், தேஜஸ் ஸும், உபாயமும், உம்முடைய தந்தையிடத்திற் போலவே உம்மிடத்திலும் குடிகொண்டிருக்கின்றன; தோள்வலியிலும், வலிமையிலும், காந்தியிலும், புத்தியிலும் உமக்கு நிகரான பூதம் ஒன்று மிலது; ஆதலின், பிராட்டியார் எவ்வண்ணங் கட்புலனுருவாரோ, அவ்வண்ணம் நீரே யாராய்ந்து செய்யக் கடவீர். அதற்குத்தக்க பல புத்தி பராக்கிரமங்கள் உம்மிடத்திலேதானிரு க்கின்றன; காலதேசங்களுக்குத் தக்கபடி நீரே நடக்க வல்லவர்; என்று மகிழ்ந்து மஹாராஜர் மொழிந்தனர். மஹாராஜரிவ்வண்ணம் சிறியதிருவடி யிடத்தில் நம்புதலுற்று மீளவும் மொழிந்தமையினாலும், இவரும் தாம் மேற்கொண்ட காரியத்தை முடிப்பவர்போலவே தோற்றப்படுகின்றமையி னாலும், இவரே இக்காரியத்தை ஸாதித்துக்கொண்டு வருவாரென்றுராய்ந் துணர்ந்து தீரமும், முயற்சியும், ஊக்கமுங்கொண்டு விளங்குகின்ற அவரைக் கடாகூவித்துப் பிராட்டியார் தமது திருக்கரத்தினுள்ளிருப்பதாகவே எண்ணி மகிழ்வுகொண்டு அவரை யிருகிலழைத்துத் தமது திருநாமத்துடன் விளங் குகின்ற கணையாழி மோதிரத்தைக் கழற்றி யவர் கையிலளித்து அவரை நோக்கிக்கேளீர் நல்லன்பீர்! ஜனகராஜன் திருமகளாகிய என்னையிக்கு இஃது நல்லடையாளமாகும்; அவள் இதனைக் கண்ணுறுவளாயின் நீர் நம் மிடத்திலிருந்து வந்தீரெனவே நிச்சயங்கொண்டச்சந்தீர்ந்து கண்டு செய் தியுரைசெய்வாள்; உம்முடைய முயற்சியும், பலமும், பராக்கிரமமும்,

---

அவ்வாறே கூறினரென வுணர்க; வடதிசையிலும் மற்றத்திசைகளிற்போலவே ஏழு கடல்களும், தீவுகளும் உளவாயினும் தாம் சென்றிலராதலாலும், மனுஷ்யஸஞ்சார மதற்குமேலில்லாமையாலும், மஹாராஜர் கூறியிலர்; இவ்வண்ணமுரைசெய்ததினால் அனுபவத்திற்கும், சோதிடத்திற்கும், புராணாதிகளுக்கும், சிறிதும் விரோதமில்லை; ஆதலின், இவ்வண்ணமே யுண்மையென்றுணர்ந்து அற்பர்களின் வாக்கியக்களினால் ஐயமுறற்க;—

சிறந்த நல்லறிவும், மஹாராஜர்க்கும்மிடத்திலுள்ள நம்புதலும் சேர்ந்து எனது காரியம் கைக்கூடித்தென்று நம்புவிக்கின்றனபோலும் என்றருளிச் செய்தனர். அந்தச் சிறியதிருவடியும் அம்மோதிரத்தை வாங்கிக்கொண்டு தலைமேலஞ்சலி செய்து வணங்கிப்பெருமாளுடைய திருவடிகளைத்தொழுது சிறந்த மிகுந்த சேனைகளுடன் கூடிப் புறப்படுகையில், கார்ப்பருவம்தீர்ந்து மேகங்களின் மறைவின்றி விளங்குகின்ற வானிடையில் விண்மீன்களுடன் கூடிய முழுமதிபோல விளங்குகையில், மீளவும் பெருமாளவரை நோக்கிக் கேளீர் மகாபல பராக்கிரமமுடையோரே! உம்முடைய தோள்வலியைச் சேர்ந்தே யான் எனது காரியத்தை முடித்துக்கொள்ள நிச்சயங்கொண்டிருக்கின்றேன்; ஆகையால், அந்த ஜனகசக்கரவர்த்தியின் திருமகள் எவ்வண்ணங் காணப்படுகின்றாளோ அவ்வண்ணம் முயற்சிசெய்து காரியத்தை முடித்துக்கொண்டு மகிழ்ந்து மீண்டெய்துக; என்று அருளிச்செய்து வாழ்த்தியனுப்பியருளினர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்து நான்காவது ஸர்க்கம்
முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது ஸர்க்கம்.

நாற்றிசையிலுமனுப்பப்பட்ட வாநரர்களெல்லோரும்
திரும்பிவந்தது.

பின்பு மஹாராஜர் மீளவும் வாநரசேனாபதிகளெல்லோரையும் அழைத்து அவர்களை நோக்கிக் கேளீர்கள் அன்பர்களே! நீவிரெல்லீரும் சென்று யானுரைத்தவண்ணம் எல்லாவிடங்களிலும் பிராட்டியாரைத் தேடிப் பெருமாளுடைய காரியத்தை எவ்விதத்திலும் நிறைவேற்றிக்கொண்டு யானிட்ட அவதிக்குள்ளாக வந்து சேர்ந்து செய்தி யுரைசெய்யக்கடவீர்கள்; என்று கட்டளையிட்டனர். அவ்வானரப்படைத்தலைவர்களெல்லோரும் அக்கொடிய ராஜசாஸனத்தைக்கேட்டு உடனே வானிடையிலெழுந்து மின்மின் பூச்சிகள்போல எங்கும் பரவிப் பூமியை மறைத்துக்கொண்டு புறப்பட்டனர்கள். பெருமாளும் இளையபெருமாளுடன் அந்த ஒரு மாஸம் வரையில் அந்தப்

---

* மஹாராஜர் மீளவும்சிறியதிருவடியையழைத்துப்புகழ்ந்துரைசெய்தமையினாலே, மஹாராஜர்க்கும் தெய்வத்தன்மையுளதென்றும், முக்காலப்பொருளறிவுளதென்றும் நன்குவிளங்கும்; பெருமாளும் கணையாழி மோதிரமளித்தருளினமையின், தாமே பரதெய்வமென்பதும், தமது சங்கற்பம் இவ்வண்ணமே யுளதென்பதும் தோற்றுவதற்காகவே அவ்வண்ணஞ் செய்தருளினரென்றறிக; அங்ஙனமிலதாயின், அநேகமாயிரம் பூதபதிகளிருக்கையில், சிறியதிருவடியையே மீளவுமழைத்து ஏன் கணையாழி யளித்தருளினர் பெருமாளுரைமின்.—

பிரஸ்ரவண மலையிலேதானே யெழுந்தருளியிருந்தனர். அப்போழுது சதவலியென்னும் யூதபதி யநேகமாயிரம் வாநரசேனைகளுடன் கூடி மேருகிரியினல் விளங்குகின்ற வடதிசையை நோக்கிச் செல்வதற்குச் சன்னைகஞ் செய்தனன். விநதனும் அவ்வண்ணமே கிழக்கு நோக்கிச் செல்லமுயன்றனன். சிறியதிருவடியும் தாராங்கதாதிகளுடன் கூடித் தென்திசைநோக்கிப் புறப்பட்டனர். ஸுஷேணன் மேற்றிசையை நோக்கிப் புறப்பட்டனன். இவ்வண்ணம் மஹாராஜர் எல்லாத்திசைகளுக்கும் வாநரர்களை யேவிவிட்டு மனமகிழ்வுகொண்டனர். அவ்வாநரர்களும் இவ்வண்ணம் மஹாராஜரால் ஏவப்பட்டவர்களாகித் தத்தந் திசையை நோக்கிப் புறப்பட்டனர்கள். அவர்கள் செல்லுங்காலையிலேயும், எவ்வகையிலும் பிராட்டியாரை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருவோம்; இராவணனையும் கொலைசெய்வோம்; என்று கூவிக்கொண்டும் கர்ஜனை செய்துகொண்டும், துள்ளிக்கொண்டும், தாவிக்கொண்டும், ஓடிக்கொண்டும், வீரவாதம் பேசிக்கொண்டும், யான் ஒருவனே இராவணனைப் போர்க்களத்திற் கொலைசெய்து விடுவேன்; அவனை வலுவிலடித்துப் பிராட்டியாரையும் மீட்பேன்; யாரெருவனே செல்வேன்; நீவிரெல்லீரும் நின்மின்; இராவணன் பிராட்டியாரைப் பாதாளத்தில் மறைத்திருப்பாரையினும் கண்டு பிடித்து மீட்டுக்கொண்டெய்துவேன்; மரங்களையும் முறிப்பேன்; மலைகளையும் பேர்த்துத் தள்ளுவேன்; பூமியையும் பிளப்பேன்; கடல்களையும் கலக்குறச் செய்வேன்; யான் நூறுயோஜனம் தாண்டுவேன்; யான் ஆயிரம் யோஜனம் தாண்டுவேன்; யான் எவ்வளவுயோஜனமாயினும் தாண்டுவேன்; எனக்குப் பாரிடையிலாயினும், கடலிலாயினும், மலைகளிலாயினும், காடுகளிலாயினும், பாதாளத்திடையிலாயினும் செல்வதற்குத் தடை சிறிதுமிலது; என்று வாநரர்களெல்லோரும் தனித்தனி வீறுகூறிக்கொண்டும், மஹாராஜரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தைந்தாவது ஸர்க்கம்

முற்றிற்று.

நாற்பத்தாறுவது ஸர்க்கம்.

மஹாராஜர் தாம் முன்பு பார்முழுதும் சுற்றியதற்குக் காரணத்தைத் தம்மை விஜ்ஞாபியருளிய பெருமாளுக் குரைசெய்தது.

இவ்வண்ணம் வாநரர்களெல்லோரும் தத்தம் திசை நோக்கிச் சென்றபின்னர், பெருமாள் மஹாராஜரை நோக்கித் தோழரே! நீர் நாற்றிசைக்குந் வழியுரைசெய்தனீரே? அதனை யெவ்வண்ணம் நீர் அறிகின்றீர் என்று விஜ்ஞாபியருளுதலும், மஹாராஜர் பெருமானை நோக்கிக் கேட்டருளீர் எம்

பெருமானே ! யாவற்றையும் விரைவாக வுரைசெய்கின்றேன் ; முன்பு மஹிஷவேஷங்கொண்டு வந்த துந்துபியென்னும் அஸுரனை என் தமையனை வாலி துரத்திக்கொண்டு எப்பொழுது மலயமலையை நோக்கி யோடினனோ, அப்பொழுது துந்துபி அம்மலயமலையின் குகைக்குள்ளே சென்றனன் ; வாலியும் அவனைக் கொலைசெய்ய நினைத்து அதற்குள்ளே புகுந்தனன் ; பின்பு யான் ஒரு வருஷம்வரையில் அக்குகையின் வாயிலைக்காத்துக்கொண்டிருக்கையிலும் வாலி வந்திலன் ; பின்பு, அதினின்றும் மிகுந்த இரத்தம்தோன்றி அக்குகை நிறைந்துவிட்டது ; யானதனைக்கண்டு வியப்புற்று வாலியே யிறந்துவிட்டனனென்றெண்ணி இதுகாறும் வாலி மீண்டெய்தாமையினால் பிழைத்திலனென்றே நிச்சயங்கொண்டு அந்த மஹிஷன் வெளியே புறப்படாமல் அக்குகையினுள்ளேயே அழிந்திறக்கக்கடவனென்று அக்குகையின் துவாரத்தைப் பெருஞ்சிலையினால் மூடிவிட்டு இனியண்ணன் வருவானென்னுமாசை நீங்கித் துன்புற்றுக் கிஷ்கிந்தைக் கெய்தித் தாரையுடனும், ருமையுடனும் கூடிக் கிஷ்கிந்தாராஜ்ஜியத்தைப் பெற்றுத் தோழர்களுடனும் கூடியச்சமின்றி யரசாட்சிசெய்து வாழ்ந்துகொண்டிருந்தேன் ; பின்பு, வாலியும் அந்தத் துந்துபியைக் கொலைசெய்து வெற்றிக்கொண்டெய்தினன் ; யானவனைக்கண்டவுடனே மகிழ்வும் பயமும்கொண்டு கௌரவஞ்செய்து தலைவணங்கி வேண்டிக் கபிராஜ்ஜியத்தை யளித்துவிட்டேன் ; இவ்வண்ணம் யான் உண்மைகூறி வேண்டி வணங்கியிருக்கையிலும், வாலியென்மீது சினங்கொண்டு என்னைக்கொலைசெய்யத்துணிந்து கொடுமைகொண்டு மதிகெட்டு என்னை நாட்டினின்றும் ஓட்டிவிட்டனன் ; யானும் அவ்வண்ணமே அனுமான் முதலிய நான்குமந்திரிகளுடன் கூடி நாடுவிட்டோடுகையிலும், அவன் சினந்தணியாமல் பின்னெடுர்ந்தோடிவந்து துரத்தினன் ; அப்பொழுது யான் அவனால் துரத்தப்பட்டவனைகிச் செல்லுகையில், காடு செடி மலையாறு கடல் நாடு நகர் தீவுகளுடன் கூடின இப்பார்முழுதும் அலாத சக்கரம்போலக் காணப்பட்டு மாட்டின் குளம்படிபோல் தாண்டவும்பட்டது ; அப்பொழுதுதான் யான் வாலியினாலே துரத்தப்பட்டு முன்பு கீழ்த்திசையிற்சென்று பற்பல காடு கடல் ஆறு தீவுகளையும், உதயகிரியையும், திருப்பாற்கடலையும் கண்டு மீண்டு வந்து தென்திசையிலோடிப் பற்பல மலைகளைக் கண்டு மீண்டெய்தி மேற்றிசையிலோடிப் பற்பல தேசங்களையும், கடல்களையும், அஸ்தகிரியையும் கண்டு மீண்டு வடதிசையிலோடி இமயம் மேரு முதலிய மலைகளையும், வடகடலையும் கண்டு அங்குந் துரத்தப்பட்டு எங்கும் புகலிடமின்றித் தவித்தேன் ; அப்பொழுது மிகவும் புத்தியுள்ள அனுமான் என்னை நோக்கி, மஹாராஜரே ! இப்போழ்துதான் எனக்கோரிடம் நினைவில் வந்தது ; மதங்கமாமுனி தம்மாசிரமத்தில் வாலி வருவானையின், தலையிற் சிதறுண்டு இறக்கக்கடவனென்று சாபமிட்டிருக்கின்றனர் ; அவ்விடத்திற்சென்று யாம் வாழ்வுறுவோமாயின், அச்சந்தீர்ந்தின்புறுவோம் ; என்று மொழிந்தனர். யானதுகேட்டுணர்ந்து உண்மையென்றுடன்பட்டு ரிசியமூகமலை சேர்ந்து வாழ்வுற்றேன் ; வாலியும் மதங்கசாபபயத்தாலே அந்த

மதங்காசிரமத்தினுள் வந்திலன்; ஸ்வாமீ! இவ்வண்ணம் யான் முன்பு பார் முழுதுந் திரிந்து பின்பு ரிசியழுகஞ்சேர்ந்தேன்; ஆதலால்தான் யான் கண்டவண்ணம் வழ்யுரைசெய்தேன் என்று விண்ணப்பஞ் செய்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தாறுவது ஸர்க்கம்

முற்றிற்று.

நாற்பத்தேழாவது ஸர்க்கம்.

தென்திசை நீங்கலான மூன்று திசைகளிலும் சென்ற வாநரர்கள் பிராட்டியாரைத்தேடிக் காணுமல் மீண்டெய்திவிட்டது.

——:o:——

முன்பு, பிராட்டியாரைத் தேடிப் பார்ப்பதன்பொருட்டு மஹாராஜராலே கட்டளைசெய்தனுப்பப்பட்ட வாநரர்களெல்லோரும் புறப்பட்டு ஆறு, தளம், சுட்டை, டிதருகள், ஆகாயம், காடு, நகரங்கள், கோட்டைகள், கடல்கள், மலைகள் முதலிய எல்லாவிடங்களிலும் பிராட்டியைத் தேடிக்கொண்டு மஹாராஜராலே கூறப்பட்ட ஆறு, கடல், மலைகளிலுந் தேடினார்கள்; எல்லோரும் இவ்வண்ணம் பகல் முழுதும் ஆகாயத்தின்மேற்சென்று தேடி இரவில் பாரிலிறங்கினார்கள்; இவ்வண்ணம் புறப்பட்டதினம் முதலாகக்கொண்டு ஒருமாசம் வரையிலும் தேடி யெங்கும் பிராட்டியைக் காணுமல் ஆசை யொடுங்கி மீண்டெய்தி மஹாராஜரைக் கண்டு செய்தி யுரை செய்து ம்ாலியவந்த மலை சேர்ந்தனர்கள். இவ்வண்ணம் மஹாடலமுடையவிநதன் அமைச்சர்களுடனும், சேனைகளுடனும், கிழ்த்திசை முழுதலும் தேடிப் பிராட்டியைக் காணுமல் ஒரு மாசத்திற்குள்ளாக மஹாராஜரிடம் வந்து விட்டனர்; பின்பு, வடதிசையினின்றும் சதவலியும் அவ்வண்ணமே மகிழ்வுருன்றி வந்துவிட்டனன். பின்பு, ஸுஷேணனும் சேனைகளுடன் மேலதிசை முழுதலும் தேடிப் பிராட்டியாரைக் காணுமல் மாதம் முடிவினத்தில் வந்து சேர்ந்தனன்; இவ்வண்ணம் எல்லோரும் மீண்டு வந்து அந்த பிரஸ்ரவணகிரியில் பெருமாளிஷ்வபெருமாள்களுடன் வீற்றிருந்த மஹாராஜரைக் கண்டுவணங்கி மஹாராஜரே! எங்களால் எல்லாமலைகளும், எல்லாக் காடுகளும், எல்லாப் புதர்களும், எல்லா நதிகளும், எல்லாக் கடல்களும், எல்லாத்தீவுகளும், எல்லாநாடுகளும், எல்லாக்குகைகளும், தங்களால் கூறப்பட்டனவும், கூறப்படாவும், பற்பல சேடி கொடிகளடர்ந்த குஞ்சங்களும் தேடப்பட்டன; புகற்கரிய தேசங்களிலும், புகற்கரிய ஏற்றத்தாழ்வுள்ள இடங்களிலும் சென்று தேடினோம், மிகப் பெரிய உயிர்களையும் கண்டு கொலை செய்தனம், எங்கும் பிராட்டியாரைக் கண்டு மகிழ்ந்திலம்;

ஆயினும், பிராட்டியார் எந்தத்திசையை நோக்கி எழுந்தருளி யிருக்கின்றனரோ, அந்தத் தென்திசையை நோக்கியே சிறந்த பல பராக்கிரமமும், நற்குலமும், நற்செயலும், நன்மதியும், நற்புகழும், மகாமஹிமையும் பொருந்திய மஹாபல குமாரராகிய அநுமான் சென்றிருக்கின்றனர்; ஆதலின், அவரே தப்பாமல் பிராட்டியார் எங்கிருக்கினும் தேடிக் கண்டு மகிழ்ந்து வந்து நற்செய்தி யறிவிக்கப்போகின்றனர்; என்று எல்லோரும் ஒரு மொழியாக மொழிந்தனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தேழாவது ஸர்க்கம்

முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது ஸர்க்கம்.

தென்திசையிற்சென்ற சிறியதிருவடி முதலானோர் நடுவழியில் ஓர ஸுரனைக் கண்டு கொடிய ராவணனென்றெண்ணிக் கொலைசெய்தது.

அங்கே சிறியதிருவடியும் தான், அங்கதன் முதலிய வானரர்களுடன் கூடிமஹாராஜர் கட்டளையின்படி நெடுந்தூரஞ்சென்று விந்திய மலை தொடங்கியதனுடைய குகைகளிலும், புகற்கரிய காடுகளிலும், அதனைச் சூழ்ந்துள்ள மலைகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும், அடர்ந்துயர்ந்து வளர்ந்த காடுகளிலும், காடுகளடர்ந்துள்ள பற்பல குன்றுகளிலும் தேடியும், ஜனக சக்கரவர்த்தியின் திருமகளாகிய ஸீதாதேவியை யெங்கும் கண்ணுற்றிலர்; ஆயினும், மேன்மேலும் முயற்சியுற்று அங்கங்குள்ள காய்கனி கிழங்குகளைப்புசித்துக்கொண்டும், அங்கங்கிரவிலுறைந்துகொண்டும் செல்லுகையில், பற்பல குகைகளையுற்றும், நீர் மருஞ் செடி கொடிகளின்றியும், பசு பக்ஷி மிருகம் முதலிய உயிர்களின்றியும், கோரமாயுள்ளதோர் தேசம் காணப்பட்டது; அந்த வானர யூதபர்களெல்லோரும் அவ்விடத்தையுந் தாண்டிச் சென்றும், அத்தன்மையதாகிய காடுகளை நேர்ந்தமையின், அங்கும் பிராட்டியாரைத் தேடிமிகவும் இளைப்புற்று வருந்தியும், அச்சமின்றி மற்றிருகாட்டினுள்ளே புகுந்து அங்குள்ள மரங்களும், தளிர் மலர் காய் கனிகளின்றியும், ஆறுகள் நீரின்றியும் இருந்தமையின், கிழங்குகள் கூட வாய்க்காமல் எருமை, மான், யானை, குதிரை, புலி, கரடி முதலிய விலங்குகளும், காட்டிலுள்ள பறவைகளுமின்றியும், மரஞ் செடி கொடிகளின்றியும், குளங்களிலும் நீர் வற்றித் தாமரை முதலியவை யுலர்ந்து தும்பியன்னம் முதலியவைகளினையற்றும் இருந்தமையின், மிக வாடிப் பசி தாகங்களினால் வருந்தினார்கள்; முன்பு, அவ்வனம் செழிப்புற்றிருக்கையில், கண்டு வென்னும் மாமுனி

யங்குத் தவஞ்செய்துகொண்டிருந்தனர். அப்போழ்தொருநாள் பதினாறு வயதுள்ள அம்முனிவருடைய குமாரன் வழிதப்பி யக்காட்டினுள்ளே சென்று மீண்டெய்தாமலிறந்துவிட்டனன். அதனால் அம்முனிவர் மிகச் சீற்றங்கொண்டு அந்தக்காடழிந்து மரஞ் செடி கொடிகளின்றியும், நீரின்றியும், பசு பக்ஷிகள் முதலிய உயிர்களின்றியும், கோரமான மருகாந்தாரமாகும்படி சாபமிட்டனர். அதுமுதல்தான் அக்காடு அவ்வண்ணமாகிவிட்டது ; அந்த வானரர்கள் அந்த கோரமான காட்டினுஞ்சென்று மலைகளின் குகைகளிலும், ஆறுகளின் பிறப்பிடங்களிலும், மிகவும் ஊக்கம்கொண்டு தேடியும், பிராட்டியைக்கண்டின்புற்றிலர்கள் ; ஆயினும், இவர்கள் இளைப்புழுமல் மேன்மேலுந் தேடிச் செல்லுகையில், மிகவுங் கொடுஞ்செயலுடையோனும், கொடிய ரூபமுடையோனும், அச்சமற்றோனுமாகிய ஓரசுரனைக் கண்டு அவனுடன் போர்வதன்பொருட்டு ஸந்நாஹஞ் செய்துகொண்டனர்கள். அவனும் இவர்களைக்கண்டு வாரீர் வானரர்களே ! நீங்களெல்லீரும் என்னையிலகப்பட்டுகொண்டு இப்பொழுதே இறக்கக்கடவீர்கள் ; என்று வீரவாதஞ்செய்து மலைபோலணைசந்தெதிர்த்தோடி வந்தனன் ; இவ்வண்ணமவன்கையை யுயரவெடுத்துக்கொண்டு முட்டியால் குத்தும்படி வருவதை யுவராஜனை அங்கதன் கண்டு சினமூண்டு இவனிராவணனே யென்று எண்ணங்கொண்டு எதிர்த்து வந்து கரதலத்திலோங்கி யோரறையறைந்தனன் ; அந்த அஸுரன் உடனே வாயிலுல் உதிரத்தைக் கக்கிகொண்டு ஊழிகாலத்தில் காற்றினால் சாய்க்கப்பட்ட மாமலைபோலச் சாய்ந்து தரையில்வீழ்ந்துயிர்மாய்ந்திறந்தனன் ; அவ்வானர வீரர்களும் அவனிறந்ததைக் கண்டு மகிழ்ந்து வெற்றியினால் விளங்குபவர்களாகி அங்குள்ள மலைக்குகைகளிலெல்லாவற்றிலும் ஓரிடமாயினும் பாக்கியின்றித் தேடி அங்கிருந்து புறப்பட்டு மற்றோர் காட்டிற்சென்று அங்குந்தேடிப் பிராட்டியைக்காணுமல் மகிழ்வு குன்றி இளைத்துள்ளோருஞ் சோர்ந்தோர்மரத்தடியிலுட்கார்ந்து சிந்தைகொண்டனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்திரட்டாவது ஸர்க்கம்

முற்றிற்று.

நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம்

அங்கதன் முதலானோர்கள் மற்றும் பிராட்டியைத் தேடியது.

அநந்தரம் அங்கதகுமாரன் மிக வருத்தமுற்றிருக்கினும் யாவுமுணர்ந்தவனுதலின், நன்காராய்ந்து முகூர்த்தகாலஞ்சென்றிளைப்பாறி அவ்வானரர்களெல்லோரையும் நோக்கி மொழியலுற்றனன். கேளீர்களன்பர்களே ! காடு, செடி, புதர், மலை, குகை, ஆறு, குளம், குட்டைமுதலிய எல்லாவிடங்களிலுஞ் சென்று நன்முகத்தேடியும் ஸ்ரீஸீதாதேவியையாயினும், அந்த ராவணனையாயினுங் கண்டிலோம் ; மஹாராஜர் கெடுவிட்டமாதம் ஒன்றிலும்

வெகுதினங்கடந்துவிட்டது. அவரோ மிகவுங் கொடுமையான தண்டனை செய்பவர்; ஆகையால், நீங்களெல்லோரும் கூடிச் சோம்பலையும், துன்பத்தையும், துயிலையும் துறந்துவிட்டுப் பிராட்டியாரை நன்முகத்தேடக்கடவீர்கள்; இவ்வண்ணஞ் செய்வோமாலல் பிராட்டியாரைக் காண்போம்.

అనిర్వేదశ్చదాక్ష్యంచ మనసశ్చాపరాజయః ।
కార్యసిద్ధికరాణ్యాహు స్తస్మాత్తేతద్ధ్రువీమ్యహం ॥

அநிர்வேதஞ்சதாக்ஷ்யஞ்ச மனஸச்சாபராஜயः ।
கார்யஸித்திகராண்யாஹு ஸ்தஸ்மாதேததத்ப்ரவீம்யஹம் ॥

வெறுப்பின்மை, நுண்ணறிவுடைமை, செய்திறமை, மனங்குன்முமை இவை யெவரிடத்திருக்கின்றனவோ, அவர்கள் மேற்கொண்ட காரியம் கைக்கூடுமென்பார்கள்; ஆதலின், யானிவ்வண்ணஞ் சொல்லுகின்றேன்; ஆதலின், இப்போதும் துன்புறுமல் அந்தக்காடு முழுதலுந்தேடிப் பிராட்டியைப் பார்க்கக்கடவீர்கள்.

అవశ్యంక్రియమాణస్య దృశ్యతేకర్మణఃఫలం ।
అలంనిర్వేదమాగమ్య నహీనోమీలనంక్షమం ॥

அவச்யங்க்ரியமாணஸ்ய த்ருச்யதேகர்மணஃபலம் ।
அலம்நிர்வேதமாகம்ய நஹீநோமீலநம்க்ஷமம் ॥

ஒருவன் மிகவும் ஊக்கங்கொண்டொருகாரியஞ் செய்வானுனல் எவ்விதத்திலும் அதற்குப் பலன்கிடைக்குமேயன்றிக் கிடையாமல்போகாது; ஆதலின், இதுவரையிலும் வெறுப்புற்றிருந்ததுபோதும், இனிமேல் யாமிவ்வண்ணம் கண்களை மூடிக்கொண்டிருப்பது தகுதியற்றது; மஹாராஜர் மிகச் சினமுடையவரும், கொடுந்தண்டனை செய்பவருமாதலின், எப்பொழுதும் அவரிடத்தில் அச்சமுறல்வேண்டும்; பெருமாளும் மஹாமகிமையுடையவராதலின், அவரிடத்திலும் அச்சமுறல்வேண்டும்; எல்லோரும் இதமுறல்வேண்டுமென்றிவ்வண்ணமுரைசெய்தேன்; பின்புங்களுக்கெவ்வண்ணந் தோற்றுகின்றதோ அவ்வண்ணஞ்செய்க; அன்றியில், யாதுசெயின் தகுமோ அதனை யுரைசெய்யக்கடவீர்கள். என்றிவ்வண்ணம் யுவராஜன் மொழிந்த வாக்கியத்தைக் கந்தமாதனனென்பவன் கேட்டு தாகத்திலேலை மிகவும் வருத்தமுற்றிருந்தமையின், கூவியுரைக்கத் திறமையின்றி, மந்தமாக மொழியலுற்றனன். கேட்டுணர்ந்தீர்களோ வீரர்களே! யுவராஜர் மிகவும் கலந்தருமாறு மொழிகின்றனர். இதமாகவும், அனுகூலமாகவுமுள்ள இவருடைய வாக்கியத்தின்படிசெய்க; மறுபடியும் மலைகளையும், குகைகளையும், ஆறு, மலையருவி, காடு முதலிய விடங்களையுமடைந்து திரிவோம்; மஹாராஜர் உரைசெய்த விடங்களிலுஞ் சென்று தேடுக; என்று, கந்தமாதனனும் மொழிதலும், வானரர்களெல்லோரும் மீளவுமெழுந்து விந்தியமலையின் காடு

கள் துடங்கித் தென்திசையைநோக்கிசென்று தேடிக்கொண்டு வருகையில், சரத்காலமேகம்போன்ற குகைகளையும், சிகரங்களையுமுற்று விளங்குகின்ற வெள்ளிமலையையும், அதன்மேலுள்ள வழிலம்பாலை முதலிய காடுகளையும்தேடியும்பிராட்டியாரைக்காணமல் மிகவும்இளைப்புற்று மனங்குன்றி அங்குள்ள மரத்தடிகளில் முகூர்த்தகாலமிருந்திளைப்பாறி மீளவும் புறப்பட்டுச் சிறிய திருவடி முதலாகவுள்ள வானரர்களும், ஒன்றுகச்சேர்ந்து விந்தியமலையினடிதொடங்கித் தென்திசை முழுதலும் தேட முயற்சிகொண்டு அங்கங்குச் சுற்றி யலைந்தனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம்

முற்றிற்று

ஐம்பதாவது ஸர்க்கம்.

சிறியதிருவடி முதலானோர்கள் ரிக்ஷபிலமென்னுங்

குகையினுள்ளே புகுந்துவிட்டது.

மீளவுமிவ்வண்ணம் தாரன், அங்கதன் முதலானோர்களுடன்சேர்ந்து விந்தியமலையின் குகைகளிலும், அதனைச் சேர்ந்துள்ள காடுகளிலும், சிங்கம், புலி, கரடி முதலியவிலங்குகளுள்ள புதர்களிலும், ஆறுகளிலும், மேடுபள்ளங்களுள்ள மாமலைகளிலும், மலையருவிகளிலும், அம்மலைகளின் கொடுமுடிகளிலும் தேடிக்கொண்டு வருகையிலதானே மஹாராஜர் கெடுவிட்ட அந்த ஒருமாதமும் கடந்துவிட்டது; அவ்விடங்களில் புகற்கரிய இடங்களெங்கெங்குளவோ, அவ்விடங்களிலெல்லாம் சிறியதிருவடி தப்பாமல் தேடிவந்தனர். அன்றியிலை கஜன், கவாக்ஷன், கவாயன், கந்தமாதனன், மைந்தன், துவிவிதன், ஜாம்பவான், அங்கதன், ஸுஷேணன், நளன், தாரன் முதலிய யூதபதிகளையும், அருகிலுருகில் சென்று ஓரிடமாயினும் தப்பாமல் தேடி வரச்செய்தனர். இவ்வண்ணமெல்லோரும் பற்பல இடங்களிலுந் தேடிக்கொண்டு வருகையில், புகற்கரிய ரிக்ஷபிலமென்னும் பெரிய தோர் பிலத்தின் துவாரத்தைக்கண்டு பரிதாகத்திலுல் மிகவும் வருந்தி இளைத்து நின்றனர்கள். அந்தக் குகை மயனென்னுந் தானவனால் பாதுகாக்கப்படுகின்றமையில், யாவராலும் புகலரிது. அதினின்றும் குரௌஞ்சம், அன்னம், ஸாரசம், சக்கரவாகம் முதலிய நீர்ப்பறவைகள் நீரிலுல் நனைந்தும், தாமரைத் தாதுபடிந்து செம்மையுற்றும் புறப்பட்டன; குளிர்ந்து நன் மணமுற்று மந்தமாருதமும் வீசிற்று; அந்த வானரர்களெல்லோரும் அதனைக்கண்டு வியப்புற்று அதனுள்ளே தாமரைக்குளமொன்றிருத்தல் வேண்டுமென்றாகை கொண்டு மிகவும் பல பராக்கரமமுடையவர்களாகையாலே அச்சமென்பதின்றி யந்த பிலத்தினுள்ளே புகுந்தனர்கள். அது பற்பல ஜந்துக்கள் நிறைந்

தும், பாதாளம்போல் கண்ணுறற்கரியதாகிப் புகுவதற்கும் கூடாமலிருள் மூடி யிருந்தது ; மாமலையின் சிகரம்போன்ற அனுமான் அதுகண்டு காடுகளெல்லாம் நன்குணர்ந்தவராதலின், மற்றுள்ள வாநரர்களெல்லோரையும் நோக்கிக் கேளீர் அன்புள்ள நேசர்களே ! யாம் காடு, மலை, புதர் முதலிய எல்லாவிடங்களிலும் தேடிதேனும், ஓரிடத்திலும் பிராட்டியாரைக்காண்கின்றிலோம் ; பெரும்பாலும் இளைப்புற்றனம் ; இந்தக் குகையினின்றும் அன்னம், ஸாரஸம், குரௌஞ்சம் முதலிய நீர்ப்பறவைகள் நீரில் நனைந்து மகிழ்ந்து வருகின்றன ; இதனுலிக்குகைக்குள் குளமோ நடவாபியோ சிறந்த நீருற்றிருத்தல் வேண்டும் ; இந்தப் பிலத்தின்வாயிலிருக்கின்ற மரங்களும் நனைந்தீரமுற்றிருக்கின்றன ; ஆதலின், எல்லோரும் இதனுள்ளே புகுந்து நெடுந்தூரம் சென்று பார்ப்போம் என்று மொழிந்தனர். வாநரர்களெல்லோரும் அதனைக்கேட்டு உடன்பட்டு மிக விருள்மூடிய அந்தக் குகைக்குள்ளே புகுந்து சிங்கம் முதலிய மிருகங்களையும், பறவைகளையும் பார்த்துக்கொண்டே இருள்மூடிய இடஞ்சேர்ந்து அதனுள்ளேயும் வாயுவேகமாகச்சென்றார்கள் ; கண்மாத்திரம் ஒன்றினையுங்காணுமல் பயனற்றிருந்தது ; இவ்வண்ணம் அவர்கள் கண்களைமூடிக்கொண்டு வேகமாகச்செல்லுகையில் நெடுந்தூரம் சென்றபின்னர் பிரகாசத்தைகண்டு கண்களைத்திறந்து பார்க்கையில், அங்கு மிகவும் அழகுற்றதாயும், பற்பல மரங்களடர்ந்துமுள்ள இடத்தைக்கண்டாநந்தமடைந்தனர்கள் ; அதுவரையிலும் எல்லோரும் ஒருவர்க்கொருவர் கைகளைப்பற்றிக்கொண்டும், கட்டிக்கொண்டும் சென்றனர்கள் ; இதற்குள்ளாக அவர்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாகி மதிமயங்கி நீர் நீரென்று நீரையே கோரிக்கொண்டு ஒருகாதத்திற்குமேல் நடந்து இளைத்து முகம்வாடி வெளிச்சத்தைக்காணுமல் இனிப் பிழைத்துப் புறத்திற் செல்வோமென்னுமெண்ணங்குன்றி இறப்போமென்றே நிச்சயங்கொண்டு சிறிது காலஞ் சென்ற பின்புதான் அந்த வெளிச்சம் காணப்பட்டது. பின்பு, அதனுள்ளே பொன்மயமாகி எரிகின்ற அக்கினிபோலொளிக்கின்ற ஸால, தால, தமால, புன்னாக, குடஜ, வஞ்சுள, தவ, சம்பக, நாக, கர்ணிகாராதிகளான மரங்கள் பொன், வெள்ளி, நவமணிகள் மயங்களான பூங்கொத்துகளினாலும், செவ்விய தளிர்களினாலும், அதன்மேலே சிரோபூஷணம்போல்படர்ந்த கொடிகளினாலும், பொன்னணிகளினாலும் திகழ்வுற்று பால சூரியன்போல விளங்கி வைடூரிய மணிமயமான வேதிகளையுடையனவாகி விளங்குவதையும், இந்திர நீலம் வைடூரியங்கள் போன்ற தண்ணீர்பொருந்திய தீமரைத் தடாகங்களினும், பொன்மயமான கமலங்களும், நீர்ப்பறவைகளும், மீன் முதலிய நீர் வாழுமுயிர்களும், ஸூரியன்போல விளங்குவதையும், தங்கம் வெள்ளிகளால் செய்த விமானங்களும், கோபுரங்களும், பொன்மயமானகவாக்ஷங்களுற்றும், முத்துவடங்கள் தொங்கவிட்டும், நவமணிகளிழைத்தும் விளங்குவதையும், பொன், வெள்ளி, வைடூரியங்களால் செய்த சிறந்த வீடுகளையுங்கண்டுமகிழ்ந்தனர்கள். பொன்மயமான மரங்களும், தளிர்த்துப் பூத்து காய்த்துப் பழுத்துப் பொன்மயமான வண்டுகள் பொருந்தித் தேன் பெருகத்திகழ்ந்தன ;

நவமணிகளிழைத்த சயனங்களும், ஆஸனங்களும், சிறந்த வாஹனங்களும், பொன், வெள்ளி, வெண்கலம், இவைகளினால்செய்த பாத்திரங்களும், அகரு, ஹரி, சந்தனம் முதலிய நன்மண வஸ்துக்களும், நின்மலமான கந்தமூலபலாதிகளாயுள்ள உண்டிகளும், சிறந்த பானங்களும், உருசியுள்ள மதுவும், உயர்ந்த விலையுற்ற ஆடைகளும், விசித்திரமான கம்பளங்களும், மான்தோல்களும், அங்கங்கு வைக்கப்பட்டு எரிதழல்போல விளங்கின ; வாநரர்கள் அவைகளையுங் கண்டு வியப்புற்று அங்கங்கு தேடிக்கொண்டு செல்லுகையில், அருகில் ஒரு பெண்மணி மரவுரியுடுத்து, மரையுரிபோர்த்து உண்டிசுருங்கித் தவஞ்செய்து தேஜஸ்வினால் ஜ்வலிக்கின்ற மேனியுற்று விளங்கக்கண்டு அச்சமும் வியப்புங்கொண்டு சுற்றிலும்நின்றனர்கள். அவர்களுள் சிறியதிருவடி தீரங்கொண்டு அவளருகிற் சென்று அவளைத்தொழுது கைகூப்பி வணக்கமாக அவளை நோக்கி, அம்மா பெண்ணரசே ! நீர் யாவர் ; இக்குகையாருடையது ; இங்குள்ள மணிகளும், பொன் வெள்ளிகளும் யாருடையன ; இம்மாளிகைகளுள் யார் வாழுகின்றனர்கள் ; என்று வினவினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பதாவது ஸர்க்கம்

முற்றற்று.

ஐம்பத்தோராவது ஸர்க்கம்.

அந்த ரிக்ஷபிலத்தின் வரலாற்றை அங்குள்ள சுயம்பிரையென்பவள் சிறியதிருவடி முதலானோர்க் குரைசெய்தது.

• சிறியதிருவடி இவ்வண்ணம் வினவி மீளவும் மரையுரியுடுத்துத் தவஞ் செய்து தருமத்தை மேற்கொண்டு மஹாமகிமைகொண்ட அந்தப் பெண் மணியை நோக்கி, அம்மா ! நாங்களெல்லோரும் பசிதாகத்தினால் மிகவும் இளைத்து வருந்தி நள்ளிருள் கொண்ட இக்குகையினுள்ளே விரைவாகப் புகுந்து வந்தோம் ; இங்கு வந்தும் மிகவும் ஆச்சரியமுறத்தக்கனவும், எங்கள் போன்றவர்களால் கண்ணுறுவத்தற்கும், வினவுதற்கும் அரியனவுமாகிய இவ்விடங்களைக்கண்டு வியப்பும், அச்சமும் கொண்டோம் ; இங்குள்ள பொன்மயமாகிப் பாலசூரியன்போன்ற உத்தியானவநங்களும், நின்மலமான காய், கனி, கிழங்கு முதலிய உணவுகளும், பொன்விமானங்களும், வெள்ளி வீடுகளும், பொன் ஜாளரங்களும், நவமணி வடங்களாலலங்கரிக்கப்பட்ட சயனங்களும், தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனித்துமுள்ள பொன்மயமான மரங்களும் எவருடையவைகள் ; யாருடைய மகிமையினுலே பொற்றூமரைகளும், இவ்வண்ணம் பொன்மாளிகைகளும், பொன்மரங்களும் உண்டாயின ; மீன், ஆமை முதலிய ஜல ஜந்துக்களும் பொன்மயமாகியுலாவுகின்றனவே ? இவ்விடத்திற்கு இவ்வளவு மஹிமை யாருடைய தபோபலத்தினுலுண்டாயிற்று ; யாங்களிம்மகிமையை யறிந்திலோமாதலின், குறைவறமொழிந்து எங்களுடைய ஐயத்தைத் தீர்த்தருளீர் என்று வினவினர்.

அந்த யோகினியும், சிறியதிருவடி யிவ்வண்ணமுரைசெய்த வாக்கியத்தைக்கேட்டு எல்லாவுயிர்களுக்கும் இதமேசெய்பவளாதலின், சிறியதிருவடியை நோக்கிக் கேளீர் மஹாநுபாவரே! மயனென்னுந் தானவன் சிறந்த மாயைகளையுடையனாகி யிருக்கின்றனன். அவன்தான் தன்மாயையினாலே இந்தப்பொன்மயமாகிய வநத்தையும், விமானங்களையும், மாளிகைகளையும், நடவாபிபொற்றூமரைகளையும் இயற்றினன். அவன்தான் முன்பு தானவர்களெல்லோருக்கும் விஸ்வகர்மனாகிச் சிற்பவேலைகளெல்லாவற்றையும் செய்துவந்தனன். அவன் இந்த வநத்தில் அநேகமாயிரவருஷங்கள் தவஞ்செய்து நான்முகனைக்கட்புலனாக்கி யவரிடத்தில் சிற்பசாஸ்திரங்கள் யாவும் குறையின்றி யுணரும்படி வரம்பெற்ற பின்புதான் சிறப்புற்றனன். பின்பும் திறமையினால் இங்கு வெகு விநோதமான பொருள்களையுமியற்றிச் சிறிது காலம் வாழ்ந்துகொண்டிருந்தனன். இவ்வண்ணம் அவன் வாழ்ந்துகொண்டிருக்கையில், ஹேமையென்னும் தெய்வப்பொதுமகளைப் பலாத்காரஞ்செய்து புணர்ந்துகொண்டிருந்தமையின், அதனைத் தேவேந்திரனறிந்து இங்கு வந்து வச்சிராயுதத்தினாலவனையடித்து வெருட்டிவிட்டனன். பின்பு இந்த வநத்தையும் அந்த மயன் அந்த ஹேமை யென்பவளுக்கே அளித்துவிட்டனன். யான் மேருஸாவர்ணியின் குமாரி சுயம்பிரையென்னும் பெயருடையேன்; யான் அந்த ஹேமையின் வரமாகிய இவ்விடத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றேன். அந்த ஹேமை எனக்குத் தோழியாதலின், அவளுடைய வரத்தினால் மகிமையுற்றிதனைப் பாதுகாத்து வருகின்றேன்; இவ்வண்ணம் என்னுடைய வரலாற்றையுரைசெய்தேன்; நீங்கள் இந்தக் கோரமான காடுகளில் திரிவதற்குக் காரணம் யாது; யாது பயன்; புகற்கரிய இவ்வநத்தை யெவ்வண்ணங்கண்டீர்கள்; நீங்கள் மிகவும் பசிதாகத்தினால் இளைப்புற்றிருக்கின்றமையின், இங்குள்ள காய்கனிகிழங்குகளைப் புசித்து தண்ணீர் பருகி யிளைப்பாறிப் பின்பு விடையுரைசெய்யக் கடவீர்கள் என்று அன்புகூர்ந்து மொழிந்து மகிழ்வித்தனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தோராவது ஸர்க்கம்

முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம்.

சிறியதிருவடி சுயம்பிரைபைக்குத் தாங்களங்கேவந்ததற்குக் காரணமுரைசெய்தது.

——:o:——

பின்பு, வாநரர்களெல்லோரும் சுயம்பிரையின் வாக்கியத்தைக்கேட்டு மகிழ்ந்து காய் கனி கிழங்குகளையுண்டு, நன்னீர்பருகி, இளைப்பாறி மகிழ்கையில், தருமபுத்தியுள்ள அந்த சுயம்பிரை வீரமுடைய அந்தவாநரர்களெல்லோரையும் நோக்கிக் கேளீர்கள் வாநரர்களே! கனிகளையுண்டதி

ஸல் உங்களுக்குப் பசிதணிந்திளைப்புத்தீர்ந்ததா ? யான் விஞவியதற்கு யிடையான் கேட்பதற்குரியதாயின், உரைசெய்க ; கேட்டு மகிழ்வேன் என்று மீளவும் விஞவினள். சிறியதிருவடி யவ்வாக்கியத்தைக்கேட்டு அவளை நோக்கி வஞ்சமின்றி யுண்மையாக முறையே மொழியலுற்றனர். கேளம்மா பெண்ணரசே ! சகலலோகங்களுக்கும் அதிபதியும், மஹேந்திர வருணர் களுக்கு நிகரானவரும் தசரதசக்ரவர்த்தியின் திருமகனருமாகிய ஸ்ரீராம பத்திரர் இளையபெருமாளுடனும், சீதாதேவியென்னும் ஜனகசக்ரவர்த்தி யின் திருமகளான பாரியையுடனும் கூடித் தந்தையின் சத்தியவாக்கியத்தை ரக்ஷிப்பதன் பொருட்டுத் தண்டாகாரணியத்திற்கு எழுந்தருளினர். அந்தச் சீதாதேவியை இராவணன் கபடத்தினால் களவுசெய்து பறித்துக் கொண் டோடிவிட்டனன் ; பின்பு, அவர் ரிசியமூகஞ்சென்று சுக்கிரீவரென்னும் மஹாராஜருடன் கட்புச் செய்துகொண்டு வாலியை வென்று கிஷ்கிந்தாராஜ் யத்தை யவர்க்களித்தருளினர். மஹாராஜர் அந்த நன்றியினாலே எங்களை யந்தப்பிராட்டியார் எழுந்தருளியிருக்குமிடத்தைத் தேடி வருமாறு கட் டளை செய்தனர்.. அதனால் யாங்களெல்லோரும் இந்த யம திசையை நோக்கிப் புறப்பட்டுத் திரிகின்றனம் ; அவ்வண்ணம் திரிந்து எங்கும் பிராட்டியைக்காணுமல் பசிதாகத்தினால் இளைத்து வருந்தி மரத்தடியிலுட் கார்ந்தோம் ; அங்கெல்லோரும் முகம் வாடிச் சிந்தைகொண்டு சோகசா கரத்தின் கரையைக்காணுமல் வருந்தி நாற்புறங்களிலும் பார்க்கையில், இந்த பிலத்தைக்கண்டனம் ; இந்த பிலம் மரஞ்செடி கொடிகளடர்ந்து இருள்மூடியிருந்தாலும் இதிலிருந்து ஹம்ஸ ஸ்ராஸாதிகளாயுள்ள நீர்ப்பற வைகள் நீரில்மூழ்கி யீரத்துடன் சிறகுகளை யுதறிக்கொண்டு புறப்பட்டன; யான்தனைக்கண்டு இதனுள்ளே புகுந்து பார்ப்போம், இங்கே நீர் இருக்கு மென்று எல்லோரையும் பார்த்துரைத்தமையின், யாவரும் அதற்குடன் பட்டு இதனுள்ளே புகுந்தனர்கள். பின்பு, எல்லோரும் ராஜகாரியத்தில் துரையுடையோர்களாதலின், வழியில் நல்விருள்மூடியிருக்கினும் அச்சமுற் மல் ஒருவர்க்கொருவர் கட்டிக்கொண்டு இங்குவந்து கண்களைத்திறந்து விநோதங்களைக்கண்டு மகிழ்ந்தனம் ; இவ்வண்ணம் யாங்கள் பிராட்டியைத் தேடுவதன்பொருட்டு முழுதுந்திரிந்து இங்கெய்தியும்மையும் கண்டு மகி ழ்வுகொண்டோம் ; உம்மால் அதிதிபூஜையாக அளிக்கப்பட்ட காய் கனி கிழங்குகளைப் புசித்துப் பசிதீர்ந்து நன்னீரைப் பருகித் தாகமுந்தணிந்து உயிர்மாய்ந்திறக்குங்காலையிலே உம்மால் பாதுகாத்தளிக்கப்பட்டு மகிழ்ந் தோம் ; நீர் செய்த இந்த மஹோபகாரத்திற்கு யாங்கள் யாது பிரதி யுப காரஞ் செய்யக்கடவோம் உரைசெய்யக்கடவீர் ; என்றிவ்வண்ணம் சிறிய திருவடி யுரைசெய்த வாக்கியங்களை யாவுமுணர்ந்த அந்த சுயம்பிரபை கேட்டு மகிழ்ந்து வாநரயூதபதிகளெல்லோரையும் நோக்கிக் கேளீர் வாநர சேனாதிபர்களே ! நீங்களிங்கெய்தி என்னிடத்தில் அதிதிபூஜையைப் பெற்றுக் கொண்டதனாலேயே யான் மிகவும் ஆநந்தமுற்றேன் ; தருமங்குன்றுமல்

தவஞ்செய்கின்றனனக்கு உங்களால் செய்யத்தக்க செயல்யாதுளது? ஒன்று மில்லை ; ஆதலின், நீங்களெல்லோரும் சுகமாகச்சென்று வாழ்க ; என்று மொழிந்தனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐம்பத்துமூன்றுவது ஸர்க்கம்.

வாநரார்களெல்லோரும் நுகூபிலத்து நின்றும் புறத்தில் வந்து மஹாராஜர் கெடுவிட்ட காலங்கழிந்தும் பிராட்டியைக் காணுமல் போனதைச்நுறித்து மிகச் சிந்தித்து வெறுப்புற்றிருந்தது.

இவ்வண்ணம் சுயம்பிரபை இனிமையாக மொழிந்த வாக்கியத்தைச சிறியதிருவடி கேட்டு அவளை நோக்கிக் கேளம்மா ஓ யோகினி ! யாங்களெல்லோரும் உம்மையே சரணமாக அடைந்தோம்; மஹாராஜர் எங்களுக்குக் கொடுத்திருந்த கெடுவு இந்த பிலத்தில் புகுந்தலைந்துதிரிவதில்கடந்து விட்டது ; மீளவும் இதினின்றும் புறத்திற் செல்லும் வழியையும் நன்கறிகின்றிலோம் ; ஆதலின், நீர் அருள்செய்து இதினின்றும் எங்களைப்புறப்படுத்தக்கடவீர். மஹாராஜர் கட்டளையை மீறித் திரிந்து அச்சங்கொண்ட எங்களைப்பாதுகாத்தருள்க ; எங்களால் மிகப்பெரியகாரியஞ்செய்யத்தக்கதுளது; ஆயினும், இதனுள் புகுந்து அதனையும்செய்துமுடித்திலோம்; என்று வேண்டினர். அந்த ஸுயம்பிரபை யதுகேட்டுஅவரை நோக்கிக்கேளீர் நல்லோரே ! இதனுள்ளே புகுந்தவர் மீளவும்உயிருடன் புறத்திற்செல்லார் ; ஆயினும் யான்செய்த தபோநியமபலத்தினுலேஉங்களெல்லோரையும் புறத்திற்சேர்ப்பேன் ; நீங்களெல்லோரும் கண்களைமூடிக்கொள்க ; கண்களைத்திறந்துகொண்டிங்கிருந்து புறத்திற்செல்வதரிது ; என்று மொழிதலும், வாநரர்களெல்லோரும் உடனே கண்களை மூடிக்கொண்டு கைகளினுலும் மறைத்துகொண்டனர்கள். அவ்வண்ணமே அவர்களை சுயம்பிரபை தன்னுடைய யோகமகிமையினுலே ஒருநொடிப்பொழுதுக்குள்ளாகவே அந்த பிலத்தினின்றும் புறத்திற் சேர்த்து புறத்தில் வந்து திசையறியாமல் மயங்கிய அந்த வாநரர்களை நோக்கிப்பாரீர்கள் யூதபர்களே ! பற்பல மரஞ் செடி கொடிகளடர்ந்த இம்மலைதான் விந்தியம் என்னப்பட்டது ; இங்கே காணப்படுகின்ற மலைதான் பிரஸ்ரவண மென்பது ; எதிரில் காணப்படுகின்றதுதான் தக்ஷிண சமுத்திரம் ; இனி நீங்கள் சுகமாகச் செல்லுக ; யானிருப்பிடம்போய்ச் சேர்கின்றேன் ; உங்களுக்கு நலமுண்டாகக்கடவது. என்றுரைசெய்து தேற்றி யந்த பிலத்தினுள்ளே புகுந்தனள். பின்பு, அந்த வாநரர்களும் அங்கிருந்தே அளவற்றுக் [illegible] கண்களைக்கொய்கின்ற கான்கடலைக்கண்டு திகைத்து

தின்றனர்கள் ; மயாஸுரன் மாயையினுலியற்றிய அந்த குகைக்குள்ளே இவர்களிருக்கையிலேதானே மஹாராஜர் கெடுவிட்ட அந்த ஒரு மாதமும் தீர்ந்துவிட்டது ; ஆதலின், அவர்களெல்லோரும் அந்த விந்தியகிரியின் தென்புறத்தில் உட்கார்ந்து சிந்தையுற்று வருந்தினர்கள். அப்பொழுது வஸந்தகாலத்தில் மலர்கின்ற மரங்களெல்லாம் மலர்ந்திருந்தமையின் அவர் களதனையுங்கண்டு வஸந்தகாலம் வந்ததென்றறிந்து காலங் கழிந்து விட்ட தேயென்னு அச்சமதிகரித்து அங்கிருந்து கீழே யிறங்கினர்கள். பின்பு, மூப்புடையவர்களும், சிறப்புடையோர்களும், நன்மதியினர்களுமாகிய வாநர யூதபதிகளெல்லோரையும் அங்கதகுமாரன் நோக்கி மொழிய லுற்றனன். கேளீர்கள் தோழர்களே ! யாமெல்லோரும் மஹாராஜருடைய கட்டளையினு லன்றே புறப்பட்டு வந்தோம்; யாம் பிலத்திலிருக்கையிலேதானே அவர் கொடுத்த கெடுவு சென்று விட்டதை யறிகின்றிலீர்களோ ? யாம் ஐப்பசி மாசத்திலேயே பெருமாள் மஹாராஜருக்கிட்டிருந்த வருஷாகாலம் நான்கு மாதங்களும் கழிந்துவிட்டனவென்று அறிந்தவர்களல்லோமோ ? அது முதல் பிரயாண ஸந்நாஹஞ்செய்து புறப்பட்டோமே ; பின்பு, மஹாராஜர் நமக்கிட்ட காலமும் கழிந்துவிட்டதே ; இனி யாம் செயல்வேண்டிய காரி யம் யாதுளது ? நீங்கள் மஹாராஜரிடத்தில் மிகவும் நம்பிக்கை யுடையவர் களும், நீதிமார்க்கத்தை நன்குணர்ந்தவர்களும், பிரபுவின் இதச்செயலில் அபிநிவேச முடையவர்களும், எல்லாச்செயல்களி லும் நிறமை யுடையவர் களும், எல்லாவிடங்களி லும் மேற்கொண்டகாரியங்களைச்செய்து முடிக்க வல்லவர்களென்று புகழுற்றவர்களுமாதலின், என்னை முன்னிட்டுக்கொண்டு மஹாராஜருடைய கட்டளையின்படி. வந்தீர்கள் ; ஆயினும், இப்போழ்து மஹாராஜருடைய கட்டளையை மீறினமையின், எல்லோரும் அவருடைய தண்டனைக்குள்பட்டு இறத்தல்வேண்டுமென்பதிலையமில்லை ; மஹாராஜரு டைய கட்டளையை மீறி எவன்தான் இன்புறுவான் ; ஆதலின், காலம் சென்றுவிட்டமையின், நாமெல்லோரும் இங்கே பிராயோபவேசஞ்செய் திறப்பதே நலமென்று தோற்றுகின்றது ; மஹாராஜர் இயல்பாகவே கொடுமைகொண்டவர் ; இப்போழ்து இறையாகவுமாயினர் ; ஆதலின், பிழை செய்த நம்மைப் பொருத்தருளார் ; ஒருக்கால் சீதையின் செய்தியை யறிந் துகொண்டு சென்றாலும் பொறுப்டார் ; இப்போழ்து காரியமின்றிச் செல் வின், பொருப்பாரோ ? ஆதலின் பிள்ளை, மனைவி, பொருள், வீடு முதலியவை களைத்துறந்து இப்போழ்திங்கே பிராயோபவேசஞ்செய்வதே நலமாகும் ; நாமிப்போழ்து மீண்டுச் செல்வோமாயின், மஹாராஜர் நம்மைத்தண்டனைக் குட்படுத்துவாரென்பதிலும் ஐயமுளதோ ? அங்கே சென்றிறப்பதைவிட இங்கே இறப்பதே மேலாகும் ; அன்றியிலே மஹாராஜர் என்மீது அன்பு கூர்ந்திளவரசுப்பட்டங் கட்டிவித்திலர் ; குற்றமென்பதின்றி யருள்பெருகி வளர்ந்த பெருமாளே எனக்கு இள்வரசுப்பட்ட மளித்தருளினர். முன்பு என் தந்தைமீதுள்ள பகையை என் மேலும் பிகக்கொண்ட மஹாராஜர் என் மீதிந்தப்பிழையை வியாஜங்கொண்டு என்னைக்கொலைசெய்துவிடுவர் ; நீங்கள்

என்மேல் அன்புடையீர்களாயினும் மஹாராஜர் என்னைத்தண்டனை செய்கையில், நீங்கள் துன்பங்கொண்டு தலைகுனிந்து துன்புறுவீர்களல்லது, வேறு யாதுசெய்ய வல்லீர்கள்; அவ்வண்ணம் உங்களைத் துன்புறுத்துவதினால் யாது பயன்; ஆதலின், தூய்மைகொண்ட இந்தத் தென்கடலின் கரையிலே தானே பிராயோபவேசஞ்செய்வேன்;என்றிவ்வண்ணம் யுவராஜன் மொழிந்த வாக்கியத்தையவர்களெல்லோருங்கேட்டு தீனங்கொண்டு அங்கதனைநோக்கி, இளவரசே! நீர் உரைசெய்த துண்மையே; மஹாராஜர் கொடுமை கொண்டவர்; பெருமாள் மனையாள்மேல் மிகமோகமுற்றவர்; ஆதலின், சீதாதேவியைக் காணுமல் நாம் அங்கே செல்வோமாயின், மஹாராஜர் பெருமாளுக்கு மகிழ்ச்சி செய்வதற்காக நம்மெல்லோனையுங் கொலைசெய்வார்; ஆதலின், பிழைசெய்தபின்பு மஹாராஜர் அருகில் செல்வது தக்கதன்று; ஆதலின், இவ்விடத்திலே தானே பிராட்டியாளைத் தேடிக் கண்டாவது, அன்றியில், உண்மைபாகச்செப்தியறிந்தாவது செல்லலாகுமேயன்றி,இல்லாவிட்டால்இங்கே தானே பிராயோபவேசஞ் செயல்வேண்டும்; இப்படியே மஹாராஜரிடம் செல்வோமாயின், யமலோகம்போய்ச் சேர்வோமென்பதில் ஸந்தேகமில்லை; என்றுரைசெய்தனர்கள். இவ்வண்ணம் அச்சங்கொண்டு சிந்தையுற்றுரை செய்த வானரர்களின் வாக்கியத்தைத் தாரனென்பவன் கேட்டு அவர்களை நோக்கி, அன்பர்களே! நீங்கள் அச்சங்கொண்டு துன்புறற்க; நீங்களெல்லோரும் உடன்படுவீர்களாயின், மீளவும் இக்குகையினுள்ளே சென்று வாழ்வோம்; இந்த பிலம் மயாஸுரனல் மாயாபலத்தினாலே இயற்றப்பட்டதாதலின், பிறர் புகற்கரியதும், பற்பல காய் கனிகளைத் தருகின்ற மரஞ் செடி கொடிகளையுடையதும், நன்னீர் நல்லுண்டிகள் மிகுந்தது மாகின்றது; இங்கு நாம் வாழ்வோமாயின், தேவேந்திரனுக்காவது, சக்கரவர்த்தித் திருமகனுருக்காவது, மஹாராஜருக்காவது அச்சமுறல்வேண்டுவதில்லை; என்று மொழிந்தனன்.வானரர்களெல்லோரும் அந்த அங்கதனுடைய வாக்கியத்தையும், தாரனுடைய வாக்கியத்தையுங் கேட்டு இதமென்றுணர்ந்து எல்லோனையும் நோக்கி, நேசர்களே! எவ்வகையிலாயினும் யாம்எவ்வண்ணம் மஹாராஜரால் கொலைசெய்யப்படாமல் இன்புற்று வாழ்வோமோ, அவ்வண்ணம் ஆலசியஞ்செய்யாமல் உடனே செய்துகொள்ளல் வேண்டுமென்று ஓரோ மொழியாக மொழிந்தனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்து மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

விந்தியமலை கிஷ்கிந்தைக்கு வடக்கே யிருக்கின்றமையின், தென்திசையில் தேடப்போனவர்கள் வடக்கே என் சென்றனர்கள்; செல்லினும் மீளவும் கிஷ்கிந்தையை தாண்டிச் செல்லுகையில், அங்குள்ளோர்களால் காணப்பட்டிலார்களா? என்று சிலர் ஆக்ஷேபஞ் செய்வார்கள்; மூன்பே சாராவதியென்னும் நதியை நடுவாக வைத்துக்கொண்டு அங்கிருந்து கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்று திசைகளை யவரவர்களுக்கு மஹாராஜர் வகுத்தளித்தனரென்பதைக்குறித்துக் காட்டி யிருக்கின்ற [illegible] வேண்டிய பாகமாதலின்,

ஐம்பத்துநான்காவது லர்க்கம்.

சிறியதிருவடி அங்கதனுக் கிதங்கூறல்.

——:0:——

இவ்வண்ணம் முழுமதிபோன்ற காந்தியுடைய தாரன் முதலிய யூதபதர் மொழிந்த வாக்கியத்தைச் சிறியதிருவடி கேட்டு அங்கதனுக்கு இளவரசுப்பட்டத்தை யாளுவதற்குரிய திறமையையும், ஒருவர் மொழிவதை விரைவிலறிந்து கொளல், அதனை மறவாமை, நினைவுடைமை, அதனைப் பிறர்க்குரைக்குந்திறமை, கற்பனை செயல், ஒருவர் கூறிய வாதத்திற்குத் தக்க பதில் கூறியதனை நிராகரித்தல், ஒருவர் கூறிய வாக்கியத்தில் பொருளுணர்தல்,உண்மையை யாராய்ந்தறிதல், (கிரஹணம், தாரணம்,ஸ்மரணம், பிரதிபாதனம், ஊஹம், அபோஹம், அர்த்த விஜ்ஞானம், தத்வஜ்ஞானம்,) என்னும் புத்திகுணங்களைட்டும்; பாகுபலம், மனோபலம், உபாயபலம், பந்துபலம் என்னும் நான்கு பலங்களும்; காலதேசங்களை யறிதல், மனவுறுதி, எல்லாத்துன்பங்களையும் பொறுத்தல், எல்லாவற்றையும் அறிதல், திறமை, தோள்வலி, இரஹஸ்யபத்தைப் புறப்படுத்தாமை, முன் நடந்ததை யொத்து நடத்தல், உற்சாஹமுடைமை, திறமையறிதல், நன்றியறிதல், தஞ்சமடைந்தவர்மேல் அருளுடைமை, பகைவர்மேல் பொறுமையுடைமை, சபலமுறுமை என்னும் பதினைங்கு குணங்களும் நிறைந்து தேஜோபல பராக்ரமங்களாலே சுக்லபக்ஷத்தில் மூன்றுவது பிறைச் சந்திரன்போல் மேன்மேலுமட்வளர்கின்ற தன்மைபொருந்திப் புத்தியில் தேவகுருவையும், பராக்கிரமத்தில் தந்தையையும் நிகர்த்துத் திகழுந் தன்மையுடையவ ரென்று உணர்ந்து அவன் யாவுமறிந்தவனையினும், தாரன் வாக்கியத்தைக் கேட்டு மகாராஜர்மேல் சந்தேகங்கொண்டு வருந்தி மயங்குவதையும் கண்டு அவனைத் தேற்றி யுடன்படுத்தமுயன்று ஸாமம், தானம், பேதம், தண்டம் என்னும் நான்குபாயங்களுள் மூன்றுவதான பேதோபாயத்தை யெடுத்துரைத்து வாநரர்களெல்லோரையும் பிராயோபவேசஞ் செயல்வேண்டுமென்னும் ஒருமைப்பட்ட மதத்தைவிட்டு வெவ்வேறு மதமுறுமாறு செய்து அங்கதனையும் நோக்கி, அச்சமுறுமாறு மொழியலுற்றனர்.

அதற்குத் தெற்கான விந்திய மலையையும் இவர்கள் தேடவேண்டுவது இயல்பேயன்றே? முன்பு எங்குங் காடாகவே யிருந்தமையின், இவர்கள் மீண்டு வருகையில், அந்த திஷ்கிந்தைக்கு மேற்காகவாவது, கிழக்காகவாவது வந்திருக்கின் அங்குள்ளோர்களுக்கு இவர்கள் எவ்வண்ணந் தென்படக்கூடும்; அன்றியிலே, லை தூ கட்டுவதற்கு முன்பு அந்த விந்தியமலையின் சிறுகுன்றுகள் தென்கடல் சமீபம் வரையிலுளவெனவும், அவற்றிற்கும் விந்தியமென்றே பெயருளதெனவும் உடன்படல் வேண்டும்; ஆகையாலேதான் அந்த விந்தியமலையினின்றும் வாநரர்கள் தென்கடலெக்கண்டனர்களென்று கூறப்பட்டுளதும், ஸம்பாதியை இவர்கள்விந்தியமலையும் அருகிலுள்ள தென்கடலுக்கு எடுத்துக்கொண்டு போயினர்களென்று கூறப்படுமதுவும் பொருந்துகின்றன; அன்றியில், தென்கடலருகிலுள்ள மலயம் என்னும் மலைக்கும் விந்தியமென்றும் பெயருளதாக உடன்படல்வேண்டும்; இப்படியானால் ஒரு விரோதமிலதென்று அறிக; மஹாவீர சரித்திரத்தில் பவபூதி யுரைத்திருக்கின்றனர்.

கசஅ கிஷ்கிந்தாகாண்டத்தில் நிசஅது ஸர்க்கம்.

கேளாய் இளவரசே ! நீ மிகவும் திறமைகொண்டு பல விதத்திலும் உன் தந்தைக்கு நிகராகியவனுதலின், தந்தையிலும் பாதுகாக்கப்பட்ட இந்தக் கபிராஜியத்தைப் பாதுகாக்க வல்லவனுகுகின்றனை ; கபிகள் இயல்பாகவே நிலையற்ற புத்தி யுடையவர்கள் ; அன்றியிலே, இப்போழ்து மனிஷிமக்கள் முதலோரைப் பிரிந்து திரிந்து வருந்தி யிருக்கின்றனையின், உனது கட்டளை யின்படி பொறுமைகொண்டு கடவார்கள் ; ஆதலின், இந்த ஜாம்பவான், நீலன், ஸுஹோத்திரன், கடையில் யான், இவ்விவல்லோரும் சாமதானுதி குணங்களிலுலே யுன்மதப்படி யொருக்காலேயிலும் நடவோம் ; எல்லோர்க்கும் எதிராகவே இவ்வண்ணமுரைசெய்கின்றேன் ; ராஜநீதி யுணர்ந்தோரும், பலமுடையோன் பலமிலாதானுடன் பகைத்திருப்பது நலந்தருவதெனக் கூறினர்களே யன்றிப் பலமற்றவன் பலமுடையோனுடன் பகைத்திருப் பதைப் புகழ்கின்றிலர் ; ஆதலின், பலமிலாதான் நன்மை பெறல்வேண்டு மாயின், பலவானுடன் பகையுறக்கடவனல்லன் ; இப்போழ்து மஹாராஜர் வானரர்களெல்லோர்க்கும் இறையும், பெருமானுக்குத் தோழருமாதலின், பலவானுகின்றனர் ; நீ பலமிலாதானுகின்றனை ; ஆதலின், நீ மஹாராஜருடன் பகைகொண்டிவ்வண்ண முரைப்பது தகுதியற்றது ; நீ இந்த பிலத்தை நல் லரணுக நினைக்கின்றனேபோலும், இதனை யழிப்பது இளையபெருமானுடைய கணைக்கொரு பெரிதன்று ; முன்பிந்திரன் வச்சிராயுதத்தினுலடித்திந்த பிலத்திற்கு துவாரம் மாத்திரஞ் செய்தனன். இளையபெருமானிதனைக்கூரிய கணைகளினுல் உலர்ந்த இலையைப்போலச் சிதறுற வடித்தருளுவர் ; இளைய பெருமானிடத்தி லிவ்வண்ணந் திறமைகொண்டு மாமலைகளையும் பிளக்க வல்ல கணைகள் வெகுவாகவுள ; நீ யூரைத்துறந்திங்கிருக்கவேண்டுமென்று எப்போழ்து கருதுகின்றனையோ, அப்போழ்தே இவ்வானரர்களெல்லோரும் உன்னைத்துறந்து திரும்பிச்செல்வதுண்மை ; புத்திரமித்திரகளத்திரங்களை யுந்துறந்து காடுகளிலலைந்து வருந்திப் பகிலுண்டு சிந்தைகொண்ட இவர்கள் உன்னைத்துறந்து மீண்டுச் செல்வார்களென்பதிலும் ஐயமுளதோ ? இவ்வண் ணம் இனத்தார் சுற்றத்தார் முதலிய எல்லோர்களாலும் துறக்கப்பட்டுத் தனியே நிற்பா யாகில், புல்லனையினும் அதனைக்கண்டு பகைவரோ வருகின்ற னர்களோ வென்று அச்சமுற்று வருந்துவாய் ; நீ இவ்வண்ணம் ஸ்வாமிகாரி யத்திலுக்கமற்றுப் பகைத்துத் தனியே நிற்கின், இளையபெருமானுடைய கணைகள் உன்மேல் பாய்ந்து வருத்துமென்பதில் சந்தேகமில்லை ; இவ்வண் ணமன்றியிலே விநயம்பூண்டு எங்களுடன் சேர்ந்து வருவாயாகில், நாம் பட்டபாடுகளை மஹாராஜர் முறையே கேட்டுச் சரிதானென்றுடன்பட்டின் மேல் பகையின்றி யுன்னையும் ராஜியத்திலே நிலைக்கச்செய்வர் ; மஹாராஜர் உனக்கு சிற்றப்பனும், தருமபுத்தியுடையோரும், உன்மீதன்புடையோரும், ஸத்தியம் தவறுதாரும், தூய்மையுடையோரும், கசடற்றவருமாதலின் உன்னை யொருக்காலும் கொலைசெய்யத் துணிவுகொள்ளார் ; உன் தாயார் [illegible] மனைவியை போலாகுவினையிடம், அவர்க்கு நீயன்றி வேறே [illegible]

திரனில்லாமையாலும், அவர் உனக்கொருதீங்கும் செய்யார்; ஆதலின், மீண்டெய்துக; என்று சிறியதிருவடி யங்கதகுமாரனுக்கிதங்கூறியருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்து நான்காவது ஸர்க்கம்
முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம்

வாநரர்களொல்லோரும் தமக்குக்குறித்த காலம் தீர்ந்துவிட்டதன்மேல் அச்சங்கொண்டு ப்ராயோபவேசஞ் செய்தது.

இவ்வண்ணம் சிறியதிருவடி இதமாகவும், தருமமாகவும், மதுரமாகவும் உரைசெய்த வாக்கியத்தை யங்கதகுமாரன் கேட்டு மாருதியைநோக்கிக் கேளீர் ஆஞ்சநேயரே! கலைக்குறு புத்தியும், ஆத்ம சுத்தியும், மனசுத்தியும், தன்புறுத்தாமையும், கசடின்மையும், பராக்ர மமும், தீரமும், என் சிற்றப்பனிடத்தில் தோற்றுகின்றில; அவன் தமயனராகிய என் தந்தைபிழைத்திருக்கையிலேதானே அவருக்குப் பிரியமுள்ளபாரியையும், தமக்குத்தருமத்திலை மாதாவுமாகிய என் மாதாவைச் சேர்ந்தனனல்லனே? அன்றியிலே, என் தந்தை யுத்தஞ்செய்வதன்பொருட்டுக்குகையினுள்ளே சென்றிருக்கையில், அக்குகையின் வாயைக் கல்லிலையடைத்துவிட்டுவந்தனனல்லனே? அத்தன் மையனாகிய அவன் தருமத்தையெவ்வண்ணமறிவான்; அன்றியிலே, பெரு மாளுடன் அக்கினிஸாக்ஷியாகத் தோழமை செய்துகொண்டு அவரால் பேருதவியையும் பெற்றுஅந்நன்றியை மறந்து மயங்கிக்கிடந்தனனே? பின்பு, இலையபெருமாளுடைய சீற்றத்திற்கச்சமுற்றேயன்றே, பிராட்டியாரைத் தேடும்படி வாநரர்களுக்குக் கட்டளையிட்டனன். இத்தன்மையனான என் சிற்றப்பனிடத்தில் தருமமெவ்வண்ணமுளதாகும்; அவ்வண்ணம் பாவிப்பும், நன்றியற்றவனும், உணர்வற்றவனும், சபலமுடையோனுமாகிய மஹாராஜனிடத்தில் உயிர்வாழ்ந்துய்ய. விருப்புற எவன்தான் விசுவாஸமுறுவான்; உலகினில் அரசர்கள் தமக்கு ஓளரஸனுமகன்நற்குணமுடையோனாயினும், அல்லனாயினும், அவனுக்கேபட்டங்கட்டுவிப்பார்களேயன்றிப் பகையின் மகனுக்குக் கட்டுவிப்பார்களோ? யான் அவனுக்குப் பகையானவாலியின் புத்திரனும், பகைத்து வேறுபட்டிருப்பவனும், கட்டளையைமீறியபராதஞ் செய்தவனும், அவனிலும் குறைந்த சத்தியுடையோனும், பலமற்றவனுமாதலின், மீண்டுக் கிஷ்கிந்தைக்குச் சென்றெவ்வண்ணம்முயிர்வாழ்வேன்; அவன் கொடியவனும், தீயோனும், தீமைசெய்பவனுமாதலின், யான் அங்கே சென்றவுடனே கபடஞ்செய்து என்னைப்பற்றி விலங்குபோட்டுக் காவலிலிடுவான்; ஆதலின், யானங்கே சென்று இவ்வண்ணந் தீமையுறுவதை விட இங்கேதானே ப்ராயோபவேசஞ்செய்திறப்பது நன்று; ஆதலின், நீவிரெல்லீரும் இவ்வண்ணமெனக்கனுமதி செய்தருளி மீண்டுத் தம்மிருப்பிடம்போய்ச் சேர்ந்து வாழ்க; யானிங்கேதானேப்ராயோப

மோசஞ்செய்திறந்துவிடுமேனை யன்றி, மீண்டெய்தேனென்று பிரதிஜ்ஞை செய்கின்றேன் ; மிகவும் பலவான்களான ஸ்ரீராமலக்ஷ்மணர்களையும், என் சிற்றப்பனையும் கண்டு யான் வந்தன பூர்வமாகக் குசல முரைசெய்தே னென்று மொழிக ; அவ்வண்ணமே ருமையையும், தாரையையும் கண்டு செப்தி யுரைத்துத் தேற்றுக ; என் தாய் என்மீது மிகவும்அன்புடையவ ளாதலின், யானிவ்வண்ணமிங்கே இறந்து விட்டேனென்பதைக் கேட்பா ளாயின், உடனே சோகத்தினுலுயிரை விட்டுவிடுவளென்பதிலையமில்லை ; என்று மொழிந்தனன். உடனே எழுந்து தருப்பங்கொணர்ந்து பரப்பி ஜாம்பவான் முதலிய பெரியோர்களைப்பணித்து அழுதுகொண்டேயந்தப் புல்லணையில் ப்ராயோபவேசஞ்செய்து இனி இவ்வண்ணம் காலங்கடந்தும் பிராட்டியைக்காணுமல்மீளுவதில்லையென்று றுதிகொண்டனன். இவ்வண்ணம் அங்கதன் ப்ராயோபவேசஞ்செய்துவிட்டதை வாநரர்களெல்லோருங்கண்டு கண்ணீர் பெருக்கித் துன்புற்றுச் சுக்கிரீவனை நிந்தனை செய்துகொண்டும், வாலியைப் புகழ்ந்துகொண்டும், அங்கதகுமாரனைச் சூழ்ந்துப்ராயோபவே சந் தாழுஞ் செய்யத் துணிந்து யுவராஜாவினுடைய கருத்தையும் உண் மையாக அறிந்து கால்கைகளை யலம்பி யாசமனஞ்செய்து ஸங்கல்பித்துக் கொண்டு கிழக்கு முகமாக தெற்கு நுனியான தருப்பங்களின்மேல் படுத்து இறப்பதற்குத் துணிந்து பெருமாள் வனவாஸமுழுந்தருளியதையும், தசரத சக்கரவர்த்தி வானேறியதையும், ஜனஸ்தானத்தில் கரதூஷணரியிறந்ததை யும் ஜடாயு டெருவிசும்பு பெற்றதையும், இராவணன்பிராட்டியாரைப் பறித் தோடியதையும், தனிவீரனை வாலி யிறந்துவிட்டதையும், பெருமாள் மஹா ராஜர்மேல் சீற்றங்கொண்டதையும், முறையே முறையிட்டுக்கொண்டு புலம்பினர்கள். இவ்வண்ணம் இவர்களினுடைய அழுகுரலினுலே மேககர் ஜனையினுலே போல அம்மலையெங்குமொலிக்கப்பட்டு ஸம்பாதியைப் புறத் தில் வருமாறு செய்தனம்யின், அவர்களுக்கு மஹாபயத்தை விளைப்ப தாயிற்று. *

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தைந்காவது ஸர்க்கம்
முற்றிற்று.

ஐம்பத்தாறுவது ஸர்க்கம்.

ப்ராயோபவேசஞ்செய்த வாநரர்கள் ஸம்பாதியைக்கண்டு ஸம்பாஷணஞ் செய்தது.

இவ்வண்ணம் அங்கதன் முதலிய வாநரர்களெல்லோரும் எவ்விடத் தில் ப்ராயோபவேசஞ்செய்திருக்கின்றனர்களோ, அவ்விடத்திற்கே கழுகு

---

* வாநரஜாதியில் ஸோதர்களுள் யாவன் இறந்துவிடுகின்றனனே, அவன் மனை வியை யிருப்பவன். பாரியையாக வைத்துக்கொள்வது ஜாதிதருமமென்று காணப்படு கின்றது ; ஆகையாலேதான் பெருமாள், வாலி ருமையுடன் புணர்ந்ததற்கு அவனைப் பழித்தருளினர். தாரையுடன் புணர்ந்த மஹாராஜரைப் பழித்திலர் ; இக்கருத்து இந்த

வாநரர்கள் ஸம்பாதியைக் கண்டு சம்பாஷித்தது. கருக

கழுகுக்கிறையும், ஜடாயுவுக்கு மூத்தோனும், சிரஞ்சீவியுமாகிய ஸம்பாதி யென்னும் கழுகு சிறந்த பல பராக்கிரமமுடையோனதலின், அச்சமின்றி அந்த மலையின் குகையினின்றும் புறப்பட்டு அவ்வானரர்களைக் கண்டு மகிழ்ந்து இவ்வண்ணம் மொழியலுற்றது ;—

विधिःकिलनरंलोके विधानेनानुवर्तते ।
यथायंप्रेषितोभर्त्रा शिरसान्महदागतः ॥
விதிःகிலநரம்லோகே விதாநேநாநுவர்ததே ।
யதாயம்விஹிதோபக்ஷ்யச் சிரான்மஹ்யமுபாகதः ॥

அந்தோ ! தெய்வமானது தகுதியான ஸம்விதானத்துடன் கூடியே அவனவனை யனுசரித்து வருகின்றது ; அவனவன் வேறே உபாயம் தேட வேண்டுவதில்லை ; நெடுங்காலமாகப் பசியுற்ற எனக்கிவர்களைத் தெய்வமே உணவாகக்கொணர்ந்தளித்ததன்றோ? ஆதலின், ப்ராயோபவேசஞ்செய்திருக் கின்ற இவ்வாநரர்களுள் முறையே இறப்பவர்களைப் புசித்துப் பசிதணிந்து மகிழ்வேன் ; என்றிவ்வண்ணம் ப்ராயோபவேசஞ்செய்த தம்மைப்பார்த்து அந்த ஸம்பாதி மொழிந்த மொழியை யங்கதகுமாரன் கேட்டு மிகவும் ஆயாஸமுற்றுச் சிறியதிருவடியை நோக்கிப் பாரீர் மாருதியே ! சீதை யென்னும் வியாஜத்திலே யமதர்மமஹாராஜனே நம்மெல்லோரையுங் கொலைசெய்வதற்காக விவ்விட மெய்தினன். பெருமாளுடைய காரியத்தை யும் செய்தோமல்லோம், மஹாராஜருடைய கட்டளையின்படியும் நடந்தோ மல்லோம், இவ்வண்ணம் நம்மெல்லோர்க்கும் தற்செயலாகவே தீங்குநேர்ந்த தன்றோ ? பிராட்டியைப் பாதுகாத்தளிப்பதன்பொருட்டுக் கழுகுகளுக்கி றைவனாகிய ஜடாயுவும் இராவணனுடன் போர்செய்து அவனுல்வாளாலறுக்கப் பட்டிறந்தனனென்பதை நீங்கள்கேட்டிலீர்களோ ? அவ்வண்ணம் எல்லாவு யிர்களும் விவேகமற்ற ஜாதியாகிய பசு பக்ஷி முதலியவைகளும், அகில புவ னதாரணுகிய ஸ்ரீராமசந்திரன் பொருட்டு உயிரை யிழந்தும் நம்போலவே உதவி செய்கின்றன ; நட்பும் தயையுமுடையவர்கள் பெருமாள் பொருட்டி வ்வகையாகத் தனித்தனி யுபகாரஞ்செய்கின்றனர்கள். ஆதலின், நீங்களும் அவ்வண்ணமே யுபகாரஞ் செய்வதற்காக வுயிரைவிடுக; ஜடாயு தருமமுணர்ந்தவராதலின், பெருமாளுக்குப் பிரியஞ்செய்து உயிரையும் விட்டு நல்வீடு பெற்று மகிழ்ந்தனன். நாம் பெருமாள் பொருட்டுயிரைவிடத்துணிந்தும், அவ்வுயிர் மாயுமுபாயம் வினாவாக நேர்ந்திலதாதலின், இவ்வண்ணம் காடு களில் திரிந்தலைந்து தேடி வருந்தியும் பிராட்டியைக் காணுமலும், உயிர் மாயாமலும் வருந்துகின்றோம்; அந்த ஜடாயு இராவணனுலடிபட்டு நற்கதி யுற்று மகிழ்ந்தனன் ; நம்மைப்போல மஹாராஜர்க்கிவ்வண்ணமச்சமுற்றுச் சிந்தைகொள்ள விரகின்மையினுல் நல்வினையினராயினர். முதலில் தசரதசக் கரவர்த்தி யிறந்தமையின், ஜடாயு இறக்கும்படி நேர்ந்தது ; ஜடாயு இறந் தமையின், இராவணன் பிராட்டியைப் பறித்துக்கொண்டு தடையின்றி யோடிவிடும்படி நேர்ந்தது ; அவன் ஓடிவிட்டமையின், நாமெல்லோரும்

இவ்வண்ணமிலக்து உயிரை மாய்க்குங்காலம் நேர்ந்தது ; முதலில் தசரத மஹாராஜரே இறந்திலராயின், பெருமாள் தண்டகாரணியும் புகுமாறு நேராது ; அதனல் நமக்கித்துயாமும் நேராது ; என்றிவ்வகையாகப் பெருமாளிளைய பெருமாளிருவரும் திருவாணியத்தில் வாஸஞ்செய்ததையும், இராவணன் ஸீதாதேவியைப் பறித்ததையும், ஜடாயு அவனுடன் போர்செய்திறந்ததையும், பெரும்மாள் மஹாராஜருடன் தோழமைகொண்டு வாலியைக் கொலை செய்ததையும், இடையில் கரதூஷணதி ஸம்ஹாரத்தையும். இதற்கெல்லாம் கைகேயியின் வரமே மூலமாயிற்றென்பதையும், முறையே யுரைசெய்து வருந்தினன். இவ்வண்ணம் வாநரர்களெல்லோரும் ப்ராயோபவேசஞ்செய்துபடுத்திருப்பதைப் பார்த்தும், அங்கதகுமாரன் புலம்பலைக்கேட்டும், கழுகுகளுக்கிறையான ஸம்பாதி மனங்குன்றி வருந்தியவர்களை நோக்கிக்கூவி மொழியலுற்றனர். யாரடா அவன் என்னுயிரிலும் இனியனைஜடாயுவின் மேல் கொடுமொழி மொழிகின்றவன் ; அதனல் என் மனம் நடுங்குகின்றது ; ஜனஸ்தானத்தில் என் தம்பிக்கும், இராவணனுக்கும் எவ்வண்ணம் போர் நேர்ந்தது; அன்புள்ள ஸோதரனுடைய ஜடாயுவென்னும்பெயர் நெடுங்காலத்திற்கு இப்போதுதான் கேழ்க்கப்பட்டது ; புகற்கரிய இம்மலையினின்றும் இறங்க விரும்புகின்றேன் ; ஆதலின், நீவிரெல்லீரும் என்னைப்பற்றி யிறக்க கடவீர்கள். மிகவும் தோள்வலியினல் புகழப்பட்ட என் தம்பியின் பெயரை யுரைத்தமையின், உங்களிடத்தில் மிகவும் மகிழ்வுளனுகின்றேன்; வாரீர் வாநரவீரர்களே! என்தம்பி ஜனஸ்தானத்தில் வாழ்கின்றனனே அவன் இராவணனுடன் போர்செய்து ஏன் இறந்தனன் ; இவன் தசரதசக்கரவர்த்திக்கு எவ்வண்ணந் தோழனுயினன் ; ஸ்ரீராமசந்திரன் அந்தத் தசரதமஹாராஜர்க்கு இனிய திருக்குமாரரல்லரோ ? இதுகளைக் கேட்டுணர விரும்புகின்றேனுதலால், குறையற மொழிக ; யான் கதிரவனுடைய கொடிய கிரணங்களினுலெரிக்கப்பட்ட சிறகுடையேனுதலால், இறங்கிவரத் திறமை கொள்ளுகின்றிலேன் ; ஆதலினல், என்னையும் இறக்கிவிடக் கடவீர்கள் என்று சம்பாதி மொழிந்தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தாறுவது ஸர்க்கம்

முற்றிற்று.

ஐம்பத்தேழாவது ஸர்க்கம்.

வாநரர்களெல்லோரும் ஸம்பாதியின் வினவுக்கு விடை கூறியது.

இவ்வண்ணம் ஸம்பாதி சோகத்தினல் தீனமாகமொழியினும் அவ்வாக்கியத்தையந்த வாநரர்களெல்லோரும் கேட்டும் முதலில் இறந்தவர்களைப் புசிப்பேனென்றுரைத்தமையின், அவ்வாக்கியத்தை நம்பாமல் இப்பறவை இவ்வண்ணம் அன்பன்போல நம்மருகில் வந்தெல்லோரையும் புசித்துவிடு

மென்றே எண்ணங்கொண்டும், நாம் எவ்விதத்திலும் ப்ராயோபவேசமே
சிசெய்துவிட்டமையின், இது புசிக்கின் வருத்தமின்றியேயிறந்து மகிழ்வோமே
ன்று மனந்துணிந்து படுத்திருந்தனர்கள். பின்பு, அங்கதகுமாரனைமுந்து
இது யாதுசெய்யினுஞ் செய்கவென்றுஉறுதிகொண்டு அப்பறவையை மலை
யினின்றும் கீழேயிறக்கி யதனை நோக்கிமொழியலுற்றனன். கேளாய் புள்ளி
றையே ! ரிக்ஷராஜஸ் என்னும் வாநராராஜன் மிகவும் வீரமுடையனகி யிருந்
தனன். அவனுக்கு வாலி, சுக்கிரீவன் என்னும் இரண்டு புத்திரர்கள் ; அவர்
களுள் வாலி யென்பவர் மஹாபல பராக்கிரமமுடையராகிக் கிஷ்கிந்தா
ராஜ்யத்தைப் பாதுகாத்து வந்தனர். பின்பு, தசரதசக்கரவர்த்தியின் திரு
மகனராகிய ஸ்ரீராமசந்திரன் இளையபெருமாளுடனும், பிராட்டியாருடனும்,
தந்தையின் வாக்கியத்தைப் பாதுகாப்பதன்பொருட்டுத் தண்டகாரணியத்
துக்கெழுந்தருளினர். அத்தருணத்தில்இராவணனென்னும் அரக்கர்கோமான்
அவ்விருவர்களையும் மோசஞ் செய்து பிராட்டியாரைப் பரித்தோடினன்.
அந்தத் தசரதமஹாராஜர்க்குத் தோழராகிய ஜடாயுவென்னும் பக்ஷிராஜன்
அதனைக்கண்டு இராவணனை யதிர்த்துப்போர்செய்து அவனுடைய தேரை
யும்முறித்துப் பிராட்டியைக் கீழேவிடும்படி செய்து நெடுநேரம் போர்ந்து
யிளைப்புற்றனர். இவ்வண்ணம் அவர் மூப்பினாலும், நெடுநேரம் போர்ந்தத
னாலும் வருந்தியிருக்கையில், அந்தக் கொடிய இராவணன் அவனை வாளா
லறுத்து வெற்றிகொண்டு மீளவும் பிராட்டியைத் தேர்மேலேற்றிக்கொண்டு
ஓடி விட்டனன். பின்பு, பெருமாள் பிராட்டியைக்காணுமல் இளையபெருமா
ளுடன் தேடிக்கொண்டு வருகையில், ஜடாயுஅவர்க்குச் செய்தியுரைத்து
யிறந்தனர். பின்பு, பெருமாள் அவர்மேலருள்கொண்டு அவருக்கு தஹன
ஸமஸ்காரம் செய்து நற்பேறு தந்தருளுதலும், உடனே யவர் வானேறி
மகிழ்ந்தனர். அநந்தரம் பெருமாள் இளையபெருமாளுடன் மீளவும் தேடிக்
கொண்டு வருகையில், என் தந்தையுடன் பகைகொண்டு மந்திரிகளுடன்
ரிசியமூகமலையில் வாழ்ந்துகொண்டிருந்த என் சிற்றப்பனுகிய சுக்ரீவனைக்
கண்டு அவனுடன் தோழமை செய்துகொண்டு என் தந்தையைக்கொலை
செய்து சிற்றப்பனுக்கு முடிசூட்டிவித்தருளினர். வாநரர்களெல்லோர்க்
கும் அதிபதியாகிய அந்த ஸுக்ரீவன் அந்த நன்றிக்காகப் பிராட்டியைத்
தேடியனிப்பதாக உறுதிகூறி எம்மெல்லோரையும் அழைப்பித்துப்
பிராட்டியானைத் தேடி வரும்படி நாற்றிசைகளிலும் அனுப்பினர். இவ்வண்
ணம் யாங்கள் பெருமாளாலேவப்பட்டுடனே புறப்பட்டுஓரிடமும் விடாமல்
தேடியும் இரவில் கதிரவனொளியைக் காண்பதரிதுபோலப் பிராட்டியைக்
காண்கின்றிலோம் ; இங்கு மயனுவியற்றப்பட்டரிகூபிலத்துக்குள் புகுந்து
அலைந்தமையின், மஹாராஜர் எங்களுக்கிட்டகெடுவு ஒரு மாதமும் தீர்ந்து
விட்டது ; அதனல் மஹாராஜர்க்கு அஞ்சி ப்ராயோபவேசஞ் செய்யத்
துணிந்திருக்கின்றனம் ; யாங்கள் பிராட்டியையும் காணுமல் காலமுங்
கடந்து சென்றபின்பு, மகாராஜரும் பெருமாளும் சீற்றங்கொள்ளின் யாங்கள்
உயிர் வாழ்வற்று மகிழ்வது அரிதன்றே ? ஆதலின், அங்குச்சென்று

இகழ்வுற்றிறப்பதை விட இவ்விடத்திலேதானே ப்ராயோபவேசஞ்செய்திறப்பது லெமென்று கருதி இவ்வண்ணம் ப்ராயோபவேசஞ்செய்திருக்கின்றனம் ; என்று அங்கதகுமாரன் ஸம்பாதியை நோக்கி மொழிந்தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தேழாவது ஸர்க்கம்
முற்றிற்று.

ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம்.

ஸம்பாதி வாநரர்களுக்குப் பிராட்டி யிலங்கையி
லிருக்கின்றனளென வுரைசெய்தது.

இவ்வண்ணம் வாநரர்கள் உயிரைவிடுவதிலும் துணிவுகொண்டு தீனமாக மொழிந்த வாக்கியத்தை ஸம்பாதி செவியுற்றுக் கண்ணீர்பெருக்கியவர்களை நோக்கிக் கேளீர் வாநர வீரர்களே ! எவனைக் கொடிய இராவணனால் கொலைசெய்யப்பட்டனனென மொழிகின்றீர்களோ, அந்த ஜடாயுவைக்கினேயோனுகின்றனன்; ஆதலின், அவனைக் கொலைசெய்த ராவணன்மேல் மிகவும் பகைகொள்ளுகின்றேன் ; ஆயினும், மூப்புற்றும், சிறகுகள் எரிந்தும் இருக்கின்றமையால், அந்தப் பகையைத் தீர்த்துக்கொள்ள வல்லமை கொள்ளுகின்றிலேன் ; முன்பு மஹேந்திரன் விருத்திராஸுரனைக் கொலைசெய்த காலத்தில் யானும் ஜடாயுவும் யௌவநமுடையவர்களாயிருந்தோம் ; அப்போழ்து யாங்களிருவரும் உயரப்பறப்பதில் யார் சிறந்தவர் என்பதை யறிவதன்பொருட்டு ஒருவருக்கொருவர் வாது கூறிக்கொண்டு வெகு வேகமாகப் பறந்து ஸூரியமண்டலத்தருகில் சென்றோம் ; அத்தருணத்தில் நடுப்பகலாயினமையின், ஜடாயு ஸூரியனுடைய வெப்பத்தை ஸஹிக்கமாட்டாமல் மிக வருந்தினன் ; யானது கண்டு. அன்பினல் அவனைச் சிறகுகளினல் மறைத்துக்கொண்டேன் ; ஆதலின், யான் கதிரவனெளியினலெரிக்கப்பட்டு விந்தியமலைமேல் வீழ்ந்தேன் ; அதுமுதல் யானிவ்விடத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றேன் ; பின்பு, ஜடாயுவின் செய்தியை யரிந்திலேன் ; என்று மொழிந்தனன். யுவராஜனதுகேட்டு நுண்ணறிவினனுதலின், மீளவும் அவனை நோக்கிக் கேளீர் ஸம்பாதி ! நீர் ஜடாயுவுக்கு மூத்தோர்என்பது உண்மையாயின், யானுரைத்த வாக்கியத்தைக் கேட்டபின்பு: அந்த இராவணன்மேல் கடுஞ்சினம் தோன்றியிருத்தல் வேண்டுமன்றே ? அவனைக் கொலைசெய்யுந்திறமையிலதாயினும் அவ்வாழ்விடத்தை யுணர்வீராயினும் மொழிக ; நன்காராயுந் தன்மையின்றி இவ்வண்ணம் நம்மெல்லோனையும் பகைத்த அந்த ராவணன் அருகிலிருக்கின்றனனே ? நெடுந்தூரத்திலிருக்கின்றனனே ? என்று விணவினன். ஸம்பாதியதுகேட்டு வாநரர்களெல்லோனையும் நோக்கிக் கேளீர் வாநரயூதபர்களே ! யான் எரிக்கதிரகளை யோதைம். ஈடப்பினமையாகலின், யாதுசெய்வதற்கும்

திறமை கொள்ளுகின்றிலேன் ; ஆயினும், வாயிலாயினும் பெருமானுக்கு உதவி செய்கின்றேன் ; யான் அதலம், விதலம் முதலிய கீழ்ஏழ்லோகங்களையும், பூர்புவஃ முதலிய மேலேழு லோகங்களையும் கண்கண்டிருக்கின்றேன்; முன்பு, தேவாஸுரர்கள் போர்செய்ததையும், அவர்கள் கூடித் திருப்பாற்கடலைக் கடைந்ததையும் அறிவேன் ; யான் ஸ்ரீராமனுக்கு உதவி செய்வேனென்று மூயன்றலும் மூப்பினால் வெற்றியும், திறமையும் அற்றிருக்கின்றேன் ; யான் ஒருநாள் ஆகாயத்தில் அந்த ராவணன் ஒருபெண்மணியைத் தேர்மீதேற்றிக் கொண்டோடக்கண்டேன் ; அவள் அந்தோ ஸ்ரீராமா ! அந்தோ லக்ஷ்மணா! என்று கூவிக்கொண்டும், கால் கைகளை யுதறிக்கொண்டும், அணிகளை யறுத்தெரிந்துகொண்டும் வருந்தினள் ; உங்களுடையவாக்கியத்தைச் செவியுற்றபின்னர், அவளே ஸீதாதேவி யாதல்வேண்டுமென்று எண்ணுகிறேன் ; அவள் கருமுகில் போன்ற அந்த இராவணனுடைய அருகில் மின்னற்கொடி போல விளங்கினள். அந்த ராவணன் வாழுமிடத்தையும் உரைக்கின்றேன் கேளீர் ; அவன் விச்ரவஸு என்னும் மஹாமுனிவருக்குப் புத்திரன், குபேரனுக்குத் தம்பி, அவன்தான் இராவணனென்னும் பெயருடையவன் ; அவன் இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனன் ; அந்த இலங்கையும் இங்கிருந்து நூறுயோஜனதூரத்திலிருக்கின்றது; அதனைவிசுவகர்மன்மிகவும் விசித்திரமாக இயற்றினன் ; அஃது பொன்மயமாகிய துவாரங்களாலும், கவனிகளிழைத்து விசித்திரமான டொன் வேதிகளாலும், கதிரவன்போல வொளிக்கின்றமிக வுயர்ந்த மதிளாலும் அலங்காரஞ்செய்யப்பட்டுளது ; அவ்விடத்தில் இராவணனுடைய அந்தப்புரத்தில் ஸ்ரீஸீதாதேவிராக்ஷஸிகளால் பாதுகாக்கப்பட்டு வாடி வருந்தி முன்னுடுத்த வெண்பட்டையேயுடுத்திக்கொண்டு சிந்தையுற்றிருக்கின்றனள். ஆதலின், நீவிரெல்லீரும் நூற்றுயோஜனந்தூரங் கடலைக்கடந்து செல்வீர்களாயின், அவ்விடத்தில் பிராட்டியைக் காணலாகும் ; அங்கு இராவணனும் மிகவும் அரண் செய்துகொண்டிருக்கின்றனன் ; அவ்விடஞ் செல்வீர்களாயின், தடையின்றிப் பிராட்டியைக் காண்பீர்கள் ; யான் ஞானத்திறல். இவ்வண்ணம் அறிகின்றேன் ; குலிங்கம் முதலிய தானியத்தால் பிழைக்கின்ற பறவைகளுக்குக் கண்ணெக்கம் முதன்மையானது ; காய் கனிகளினால் பிழைக்கின்ற காக்கை முதலிய பறவைகளுக்கு அவைகளைவிட இருமடங்கதிகமானது; நீர்காக்கை, க்ளஞ்சம், குரரம் என்னும் பறவைகள் அவைகளில் மும்மடங்கு சிறந்தவைகள் ; பருந்துகள் அவைகளைவிட நாலுமடங்கு சிறப்புற்றன ; கழுகுகள் அவைகளைவிட ஐமடங்கு சிறந்தன ; பலம், வீரியம், ரூபம், யௌவனம் இவைகளையுடைய அன்னப்பறவைகள் அவைகளைவிட ஆறுமடங்கு சிறந்தன ; அருணகருடர்கள் அவைகளெல்லாவற்றிலும் சிறந்தவர்கள் ; அந்த அருணனிடத்து நின்றும் யாங்களெல்லோரும் பிறந்தனம் ; ஆதலின், யானிங்கிருந்தே இலங்காத்தீவில் இராவணன் வீதாதேவி முதலானோர் இருப்பதைக் காண்கின்றேன் ; எமக்கும், அந்த அருணகருடாகளுக்குள்ள திவ்விய தேஜஸ்ஸும், திவ்யஜ்ஞானமும், சிறந்த பலமும் உள ; ஆதலாலும்

உண்டியின் திறமையினாலும், இயல்பினாலும், யானிங்கிருந்தே நூறு யோஜனைதூரத்துக் கப்புறமிருக்கின்ற இலங்கையில் வாழ்கின்ற ராவணனையும் பிராட்டியையும் கண்ணுறுகின்றேன்; எங்களுக்கு நெடுந்தூரத்திலுள்ள உணவையறியுந் திறமை இயல்பாகவே யுளது; கோழிகள் காலினருகிலுள்ள பொருளையே யறியும்; அந்த ராவணன் யாவராலும் இகழத்தக்க தீச்செயல் புரிந்து என் தம்பியைக்கொலைசெய்தமையின், அதற்குப் பிரதிசெய்யவேண்டுவது ஆவசியகமாகியது; ஆதலின், யான் அது செய்யுந்திறமையற்றவனையினும், வாக்கினாலாயினும் ஸகாயம் செய்கின்றேன்; ஆதலின், நீங்கள் இக்கடலேத்தாண்டி இலங்காத்தீவுக்குச்செல்லும் உபாயத்தை யாராய்ந்தணரக் கடவீர்கள்; அங்குச் சென்றபின்னர் பிராட்டியைக்கண்டு ஸேவித்து மேற்கொண்டகாரியம் கைக்கூடிவருவீர்கள்; யான் சிறகற்றிருக்கின்றமையின், என்னைக் கடல்கரையைச் சேர்க்க; யான் என் தம்பி ஜடாயுவின் பொருட்டுத் தருப்பணஞ்செய்யக் கருதுகின்றேனென்று மொழித்தனர். வாநரர்களெல்லோரும் அதுகேட்டு அவ்வண்ணமே யவனைக் கடல்கரைசேர்த்து அவர் நீரிலாடித் தருப்பணஞ் செய்தபின்பு, மீளவும் அவனை இருப்பிடஞ் சேர்த்துப் பிராட்டியின் செய்தி யுணர்ந்தமையின், மிக மகிழ்ந்தனர்கள். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம்
முற்றிற்று.

ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம்.

ஸம்பாதி வாநரர்களுக்கு மீளவும் பிராட்டியின் செய்தி கூறியது.

பின்பு, வாநரர்களெல்லோரும் அமிழ்தத்துக்கு நிகராகிய அந்தச் சம்பாதியின் வாக்கியத்தைச் செவியுற்று மகிழ்தலும், அவர்களுள் புத்தியினாலும் வயதினாலும் சிறந்த ஜாம்பவான், மற்றுள்ள வாநரர்களுடன்சூழ்ந்து மீளவும் ஸம்பாதியை நோக்கிக் *கழுகுகளுக்கிறையே! ஸீதாதேவியெவ்விடத்தில் காணப்பட்டனள்; யாரால் காணப்பட்டனள், அவளை யெடுத்தோடினவன் யாவன்; இவைகளையெல்லாம் நீர் குறையறமொழிக; எங்களெல்லோர்க்குந் தஞ்சமாகுக; பேரிடி விழுந்தாப்போல விழுகின்ற பெருமாளினையபெருமாள்களினுடைய கூரிய கணைகளுக்கு யாவனினையாகப் போகின்றவன்; என்று வினவினர். ஸம்பாதியும் அதுகேட்டு முன்னமே

---

* ஐம்பத்தொன்பதாவது சருக்கமுதல், அறுபத்து மூன்றுவது சருக்கம் முடிவுவரையில், ஐந்து சருக்கங்கள் அநேகம் பிரதிகளில் எழுதப்பட்டில; சங்கதிகளும் முன்பின் தொடர்ச்சிக்குக் கொஞ்சம் விரோதமாகக் காணப்படுகின்றன; ஆதலின், வேறு கிரந்தங்களிலிருந்து சேர்க்கப்பட்டனவென்று எண்ணப்படுகின்றன; ஆயினும், பல புத்தகங்களிலிருக்கின்றமையின், வியாக்கியானஞ் செய்யப்படுகின்றன; என்று வியாக்கியானஞ் செய்தவர்களெல்லோரும் எழுதியிருக்கின்றனர்கள்; ஆதலாலேதானே யானும் அந்தச் சருக்கங்களுக்குத் தர்ஜமா செய்கின்றேன்; —

மகிழ்வுகொண்ட அவ்வானரர்களை மீளவும் மகிழ்விப்பவராகி மொழியலுற்ற னர். கேளீர் வானர யூதபர்களே! யான் பிராட்டியை இராவணன் அபகரித் ததைக் கேட்டவண்ணம் கூறுகின்றேன் : அப்போது பார்த்தவனையும், பார் த்த இடத்தையும் உரைசெய்கின்றேன் ; அதேகம் யோஜனதூரம் அகன்ற இந்த மலையின்மேலே வீழ்ந்து நெடுங்காலமாய் பல பராக்கிரமங்கள் ஒடுங்கி படங்கி வாழ்கின்றேன் ; யானிவ்வண்ணம் பறக்குந்திறமை யற்றிருக்கின்ற மையின், ஸுபார்ச்வன் என்னும் என் புத்திரன் தினந்தோறும் எனக்குண வுகொணர்ந்தளித்துப் பாதுகாத்து வருகின்றனன்.

తీక్ష్ణకామాస్తుగన్ధర్వా స్తీక్ష్ణకోపా భుజఙ్గమాః ।
మృగాణాస్తుభయ స్తీక్ష్ణం తత స్తీక్ష్ణతరా వయం ॥

தீக்ஷ்ணகாமாஸ்துகந்தர்வாஸ் தீக்ஷ்ணகோபாபுஜங்கமாஃ ।
ம்ருகாணந்துபயந்தீக்ஷ்ணம் ததஸ்தீக்ஷ்ணதராவயம் ॥

கந்தர்வர்கள் கடுங்காமமுடையவர்கள் ; நாகங்கள் கடுஞ்சினமுடைய வை ; மான்களுக்கு அச்சங்கடுமையானது ; யாங்கள் கடும்பசி புடையவர் கள்; என்பது இயல்பன்றே? ஆதலின், எனக்கு வேறு தப்பாமல் என்பு த் திரன் உணவுகொண்டளித்து வருகையில், ஒருநாள் எனக்குணவு தேடி யெங்குமகப்படாமல் கதிரவன் மறைந்த பின்பு வாளா வந்து சேர்ந்தனன். ஆதலின், யான் மூப்பினாலும், பசிதாகத்தினாலும், சினமதிகமாகி யவனையிக ழ்ந்தேன் ; அப்போழ்தவன் என்னை வணங்கிச் சினந்தணியுமாறு இனிமை யாக மொழியலுற்றனன். கேளீர் அன்புள்ள பிதாவே! யான் வழக்கப்படி புமக்காஹாரத்தைத் தேடிக்கொண்டே யாகாயத்திற்பறந்து மஹேந்திரம லையின் துவாரத்தை மறைத்துக் கடலிடையிலுலாவுகின்ற அதேகமாயிரம் ஜந்துக்களையும் கொலைசெய்யுமாறு அவைகளின் வழியைமறைத்து நின்றே ன் ; அப்போழ்தொருவன் நன்றுகக் கூட்டப்பட்டமைபோன்ற மேனியு டையனைகிக் கதிரவனுதித்தாப்போல ஒளிக்கின்ற ஓர் பெண்மணியை யெடு த்துக்கொண்டோடி வந்தனன் ; யானவர்களைக்கண்டு இவர்களை யின்று உணவாகக் கடவர்களென்று நிச்சயித்து அவர்களை யெதிர்த்து வழியை மறைத்தேன்; அப்போழ்தவன் என்னைக்கண்டு விநயம்பூண்டு வணங்கி வழி விடும்படி இனிமையாக வேண்டி வருந்தினன்.

నహీసామోపపన్నానాం ప్రహర్తావిద్యతేక్వచిత్ ।
నిచైష్వపిజనఃకశ్చిత్ కిమంగబతమద్విధః ॥

நஹிஸாமோபபந்நானம் ப்ரஹர்தாவித்யதேக்வசித் ।
நீசேஷ்வபிஜநஃகச்சித் கிமங்கபதமத்விதஃ ॥

இனிய மொழிகளை மொழிந்து தஞ்சமென்றடைந்தவர்களைக் கடுமை கொண்டு கொலை செய்பவன் இழிகுலத்தோர்களிலும் எங்குமொருவனும் இலன் ; அங்ஙனமாயின், நற்குலத்திற்பிறந்த என்னைப்போன்றவன் சரண

கருஅ கிஷ்கிந்தாகாண்டத்தில் நிகழ்வது ஸர்க்கம்.

மடைந்தவனைக் கொலை செய்வாமோ ? ஆ ! ஆ ! ஆதலின், யான் அவர்களைக் கொலை செய்யாமல் வழிவிட்டருளினேன் ; ஆதலின், அவன் தடையின்றி யொளியிலை வானைக்குமொலிக்கச்செய்து சென்றனன் ; அப்போழ்து ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற பூதங்களெல்லாம் வந்து என்னைக்கண்டு மகிழ்ந்தனர்கள். மகரிஷிகளும் அப்பா நீ நன்று செய்தனை ; நன்குவாழ்க ; என்று வாழ்த்தினர்கள். அப்போழ்து யான் அவர்களைநோக்கி, அவன் யாவனென்று வினவுகையில், அவன் இராவணனென்றும், தசரத மஹாராஜன் திருமகனாகிய ஸ்ரீராமசந்திரனுடைய தருமபத்தினியாகிய ஸ்ரீஸீதாதேவியைப் பறித்தோடுகின்றனனென்னவும் மொழிந்தனர்கள். அந்தப் பெண்மணியும் அனிகளறுத்து சிதறிபும், வெண்பட்டு நழுவியும், சோகத்திலை மோகமடைந்தும், ராமா ! லக்ஷ்மண ! என்று கூவிக்கொண்டும் சென்றனள். யான் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தமையின், காலக்கழிவாய் விட்டது. ஆதலின், இப்பிழையைப்பொருத்தருள்க ; என்று என் புத்திரனுகிய ஸுபார்சுவன் வந்து கூறினன். அதனை யான் செவியுற்றும், அவன் பிராட்டி விஷயத்தில் பட்ட அபராதத்திற்குத் தக்க சிக்ஷைசெய்யுந் திறமை கொண்டிலனுதலின், யாதுந்தோற்றுமல் அற்பன்போலிருந்தேன் ; இப்போழ்து யான் வாக்கினால் மாத்திரம் ஸஹாயம் செய்வது முடியும் ; ஆதலின் உனை செய்கின்றேன் ; கேளீர்கள் ; உங்களெல்லோர்க்கும் புத்தியினை லுதவிசெய்கின்றேன் ; பெருமாளுடைய காரியம் யாதுளதோ, அஃது என்னுடைய காரியந்தான் ; இதில் சிறிதும் சந்தேஹமிலலை ; நீங்கள் சிறந்தவர்களும், புத்தியுடையவர்களும், வாஸவனுலும் வெல்லவொண்ணுதவர்களுமாதலின், மஹாராஜர் உங்களை யனுப்பினர். பெருமாளிலையபெருமாள் இவ்விருவர்களுடைய பாணங்களும் மூவுலகங்களையும் அழிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் வல்லமையுடையன ; இராவணனும் மிகவும் தேஜோபல பராக்கிரமமுடையவனே ; ஆயினும், மிகவுந் திறமை கொண்ட உங்களுக்கு ஒன்றும் அரியதன்று ; ஆதலின், இனி நீங்கள் காலக்கழிவு செயல்வேண்டாம் ; உங்களைப்போன்ற புத்திமான்கள் செயற்குரிய காரியங்களில் அச்சமுற்றுக் காலக்கழிவு செய்யார்கள் ; ஆதலின், உடனே புறப்பட்டு இலங்கைக்குச்சென்று பிராட்டியைக் கண்டு மகிழ்க ; என்று ஸம்பாதி மொழிந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுபார்ச்வன் ராவணனைக் கொலை செய்யாமல் விட்டதற்கு மாயோகிகள் மகிழ்ந்து வாழ்த்தினதற்குக் காரணம்யாதெனில், சரணமடைந்தவனைப் பாதுகாத்தனன் என்பதினாலும், இராவணனைக்கொலைசெயின், கூடப் பிராட்டியையும் கொலைசெய்து விடுவனென்பதினாலும், ஒருக்கால் இராவணனைமாத்திரம் கொலை செய்தாலும் ராக்ஷஸர்கள் எல்லோரும் பெருமாளால் கொலைசெய்யப்படார்கள் என்பதினாலும், அப்படிக்கெல்லாமில்லாமல் இராவணனைக் கொலைசெய்யாது விட்டுவிட்டதே மகிழ்ந்து வாழ்த்துவதறகுக் காரணமென்றுணர்க.

ஸம்பாதி வாநரர்களுக்கு தன் செய்தி கூறியது. கருக

அறுபதாவது ஸர்க்கம்

ஸம்பாதி தன்னுடைய முற்செயலை மீளவும் வாநரர்களுக்கு மொழிந்தது.

அநந்தரமவ்வண்ணம் ஸ்நானஞ்செய்து ஜடாயுவின்பொருட்டுத் தருப்பணஞ்செய்து இருப்பிடம் வந்து சேர்ந்த ஸம்பாதியை யங்கதன் முதலிய வாநரர்கள் எல்லோரும் சூழ்ந்துட்கார்ந்தனர்கள். ஸம்பாதியும் அவர்களிடத்தில் விசுவாஸமுற்று மகிழ்ந்து அவர்களை நோக்கி மொழியலுற்றனர். மஹாபலபராக்கிரமமுடைய வாநரர்களே! எனைச்சல் போடாமல் ஏகமனமுடையராகிக் கேளீர்கள். யான் பிராட்டியானை எவ்வண்ணமறிகின்றேனே அதனுண்மையை மொழிகின்றேன்; முன்பு, யான் இம்மலையின் சிகரத்தில் சிறகுகளிரிந்து வீழ்ந்தேனே, அப்போழ்து உடனே மோகமடைந்து ஆறுதினங்கழிந்து மோகந்தெளிந்து மனம் வருந்தி யெழுந்து பத்துத்திசைகளிலும் கண்திறந்து பார்க்கையில், யாதொன்றுந் தெரிந்திலது; பின்பு கடல், மலை, யாறு, குளம், காடு, கடற்கரைகளைக் கண்ணுற்றுப் பார்க்கையில், மகிழ்ந்த பறவைகளை யுடையதாகிக் குகைகளையும், சிகரங்களையும பொருந்தித்தென்கடலுக்கு வடகரையிலிருக்கின்றமையின், இந்து விந்தியமென்னும் பெயருடைய மலையென்று நிச்சயங்கொண்டேன்; முன்பிவ்விடத்தில் தேவர்களாலும் பூஜிக்கப்பட்டு மிகவும் புண்ணியகரமான ஓராசிரமமிருந்தது; அதில் நிசாகரரென்னும் மாயோகி கடுமையாகத் தவஞ்செய்து கொண்டிருந்தனர். யான் அவனைக் காணவேண்டுமென்றெண்ணி இம்மலைச் சிகரத்து நின்றும் இரங்கி மிகவும் வருத்தமுற்று அவ்வாசிரமமடைந்தேன்; அம்முனிவர் முன்பு ஜடாயுவினையும், என்னையும் பலமுறை காணப்பட்டவர்; எங்கள்மேல் மிகவும் அன்புள்ளவர்; அவருடைய ஆசிரமத்தில் எப்பொழுதும் மந்தமாருதம் வீசும்; தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனித்துத் தழையாத மரம் ஒன்றுமிலது; அவ்வாசிரமத்தில் ஓர் மரத்தடியில் அவரைக் காண்பதன்பொருட்டு உட்கார்ந்தேன்; பின்பு, அம்முனிவர் நீராடித்துய்யதுயிலுடுத்து வடக்கு நோக்கி யருகிலெழுந்தருள்க்கண்டேன்.; அவரைக் கரடி, சிங்கம், யானை, நாகம் முதலிய கொடிய ஜந்துக்களும், உயிர்களெல்லோரும் திசைமுகதேவனைச் சூழ்வதுபோலச் சூழ்ந்து பகை நீங்கி வருகின்றன; பின்பு அம்முனிவர் ஆசிரமஞ்சேர்ந்தபின்னர், அரசன் அரண்மனை சேர்ந்தபின்னர் அவனைச் சூழ்ந்து வந்த சேனைகளெல்லாம் மீண்டுச் செல்வனபோல அவைகளும் மீண்டுச் சென்றன; பின்பு, அம்முனிவர் என்னைக்கண்டு மகிழ்ந்து மீளவும் எழுந்து என்னருகில் வந்து என்னை நோக்கிப் புள்ளிறையே! நீயிங்கு வந்த காரியம் யாது; உன்னுடைய உரோமங்கள் விகாரமடைந்திருப்பதைக்கண்டால் உன் சிறகுகள் தீயால் எரிக்கப்பட்டனவென்றும், உடல் மிகவும்வ்ரணமுற்று மிகவும் நோயுடையதென்றும் அறியப்படுகின்றது; முன்பு, இரண்டு கழுகுகளைக் கண்டிருக்கின்றேன்; அவை காற்றுக்கு நிகரான வேகமுற்றும், வேண்டுமாறு உருவந்தரித்தும், கழுகுகளுக்கிறைகளாகவிருந்தன; அவற்றுள்

மூத்தது ஸம்பாதி, இரண்டாவது ஜடாயு, அவர்களுள் நீஸம்பாதி யென்பவ னல்லையோ ? முன்பு நீங்களிருவரும் மானிடரூபங்கொண்டு என்னை வணங்கி னீர்களல்லீரோ? அத்தன்மையனை உனக்கு இப்போழ்து வியாதி யுண் டாகியதும், சிறகுகளெரிந்ததுமேன் ? இவ்வண்ணம் நீயேதேனுஞ் செய்த பிழைக்காக யாரேனுந் தண்டனை செய்தாரோ ? இவைகளை யெல்லாம் விளவுகின்ற என்பொருட்டுமொழிக; என்று மொழிந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபதாவது ஸர்க்கம்
முற்றிற்று.

அறுபத்தோராவது ஸர்க்கம்.

இதுவுமது.

——:o:——

கேளீர் வானர யூதபர்களே ! அநந்தரம் யான் அந்த நிசாகரமாமுனி யை நோக்கிப் பிறரால் செயற்கரிய கொடியதாகிய யான் செய்த ஸாஹஸச் செயலை யுரைசெயலுற்றேன் ; கேட்டருளீர் மாதவச் செல்வரே ! என்னு டைய சிறகுகளெரிந்து மெய்யெல்லாம் விரணமாயிருப்பதினாலும், காணத் தாலும், அதனை நன்கு மொழியுந் திறமையுறுகின்றிலேன் ; யானும் என் தம்பி ஜடாயுவும் கொழுப்பினல் செருக்குற்று மதிமயங்கி யொருவர்க்கொ ருவர் வாது கூறிக்கொண்டு நம்மிருவருள் யார் சிறந்தவரென்பதை யறிவத ன்பொருட்டு ஆகாயத்திலுயரப்பறக்கும்படி கயிலைமலையின் சிகரத்தில் அங் குள்ள முனிவர்களுடைய முன்பாக ஸூரியன் உதயமாகும் பொழுது புறப் பட்டு சூரியன் அஸ்தமயமாகுமளவும் அவனருகிற்சென்று பின் செல்லல் வேண்டுமென்று பிரதிஜ்ஞை செய்துகொண்டோம்;பின்பிருவரும் அம்முனி வர்களின்உடன்பாட்டின்மேல் அப்படியேபுறப்பட்டுவானிடையிற் சென்று பூதலத்திலெங்கும் நகரங்களைத் தேர்ச்சக்கரம்போன்றனவாகவும், சிலவிடங் களில் நிருத்தகீதவாத்திய கோஷங்களையும், சில விடங்களில் வேத கோஷங் களையும், சில விடங்களில் செவ்வியு வஸ்திரங்களையுடுத்து மகிழ்ந்து பாடு கின்ற தெய்வப்பெண்களையும் கண்டோம்; இவ்வண்ணம் மேன்மேலும் பறந்து கதிரவன் செல்லும் வழி சேர்ந்து கீழே பார்க்கையில், பாரிலுள்ள பற்பல உயர்ந்த மரங்களடர்ந்த காடுகளும் புல்லுள்ள விடங்கள்போலக் காணப்பட்டன ; பூமி பற்பல உயர்ந்த மலைகளுடையதாகியும் சிறிய கற்க ளுடையதுபோலும், அகன்ற நதிகளுடையதாகியும் மெல்லிய நூல்களினாலே சுற்றப்பட்டதுபோலும் காணப்பட்டது ; இமயம், விந்தியம், மேரு முதலிய சிறந்த மலைகளும், மடுவினிடையில் யானைக்குட்டிகளிருப்பனபோலக் காணப்பட்டன ; அவ்வண்ணம் மிகவும் உயரச் சென்று கொண்டிருக்கை யில், எங்களிருவர்க்கும் அதிகமான வேர்வை நீரும், சிரமமும், அச்சமும், மயக்கமும், இருளும், மூர்ச்சையும் உண்டாயின; அப்பொழுது இதுகிழக்கு, இது தெற்கு, இது மேற்கு, இது வடக்கு என்று ஒரு திசையும் நன்குணரப்

பட்டிலது ; ஊழிகாலத்தில் உலகமெல்லாம் ஸங்கர்ஷணக்கினியிலல் எரிக்கப்பட்டாப்போல் காணப்பட்டது ; யான் அத்தருணத்திலும் உட்புலனைக் கட்புலனுடன் சேர்த்துத் தீரங்கொண்டு கதிரவனை நிமிர்ந்து பார்த்தேன் ; அப்போழ்தவன் எங்களுக்குப் பூமிக்குச் சரியாகக் காணப்பட்டனன் ; அப்பொழுது ஜடாயு அந்த வெப்பத்தைப்பொறுமல் வருந்திக் கீழே வீழ்ந்தனன். யானது கண்டு அவனைப் பாதுகாப்பதன்பொருட்டுச் சிறகுகளினல் மறைத்துக்கொண்டே கீழிலிறங்கினேன் ; ஆதலால், ஜடாயு எரிக்கபட்டிலன் ; யான் அறியாமல் அவனுக்கு மேலே சென்றமையின், எரிக்கப்பட்டேன் ; அப்போழ்து யான் ஜடாயுவை விட்டுச் சிறகுகளெரிந்து மோகங்கொண்டு விந்தியமலையின்மேல் வந்து வீழ்ந்தேன் ; அப்போது ஜடாயு ஜனஸ்தானத்தில் வீழ்ந்திருப்பானென்று ஊஹித்தேன் ; கேட்டருளீர் மாயோகியே ! யான் இவ்வண்ணம் சிறகுகளும் எரிந்து கழுகுகளின் ராஜ்ஜியத்தைபுந்துறந்து உடன் பிறந்த ஜடாயுவையும் விட்டுப் பிரிந்து நிரமையுமழிந்து இவ்வண்ணம் வருந்துவதைவிட இறப்பதே சிறப்பென நினைக்கின்றேன் ஆதலின், இதன் சிகரத்திலிருந்து கீழே வீழ்ந்திறப்பேன் ; என்று மொழிந்து வருந்தினேன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்தேராவது ஸர்க்கம்
முற்றிற்று.

அறுபத்திரண்டாவது ஸர்க்கம்.

நிசாகராமாமுனி ஸம்பாதிக்கு இதமுரைத்தது.

கேளீர் வாநரயூதபர்களே ! யானிவ்வண்ணம் மொழிந்து கண்ணீர் பெருக்கியழுது வருந்தினேன் ; பேரருள் பூண்ட அம்முனிவரும் என்னுடைய புலம்பலைக்கேட்டு என்மீதருள்கொண்டு முகூர்த்தகாலந் தியானஞ்செய்து பின்பென்னை நோக்கிக் கேளப்பா ஸம்பாதி ! நீ இவ்வண்ணந் துயரமுறற்க ; உன்னுடைய பகூஷங்களும் முளைக்கப்போகின்றன ; கண்களும் காணப்போகின்றன ; வலிமையும் உறுதியும் வீரமும் உளதாகும் ; சாஸ்திர ரஹஸ்யத்தில் உன் விஷயமாகச் சிறந்த காரிய முண்டாகுமென்று கேட்டிருக்கின்றேன் ; இப்போழ்து ஜ்ஞாநதிருஷ்டியிலல் பார்த்ததிலும் அதுஉண்மையெனவே காணப்பட்டது ; இக்ஷ்வாகுமஹாராஜன் குலத்தில் தசரதனென்னும் மஹாராஜர் ஒருவர் பிறக்கப்போகிறார். அவருக்கு ஸ்ரீராமனென்னுந் திருக்குமார் அவதரிக்கப் போகிறார். அவர் பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலிப்பதன்பொருட்டு லக்ஷ்மணனென்னும் தம்பியுடனும், ஸீதையென்னும் பிராட்டியுடனும், தண்டகாரணியஞ்சேர்ந்து வாஸஞ்செய்யப்போகிறார். அப்போது ராவணனென்னும் ராக்ஷஸராஜன் தேவதானவாதிகளினல் அழிவில்லையென்னும் செருக்கினல் அந்தச் சீதாதேவியை ஜனஸ்தானத்திலிருந்து மோசஞ்செய்து அபகரித்துக்கொண்டு போகப்போகிறான். அந்தச் சீதாதேவியும்

அவன் வீடு சேர்ந்து வேண்டும் பொருள்களை யளித்து ஆசையுறும்படி செய்யப்பட்டும் பதி சோகத்தில்மூழ்கி யொன்றையும் இலக்ஷியஞ்செய்யாம்ல் உணவுமின்றி யிருக்கப் போகிறாள். அதனைத் தேவேந்திரனறிந்து அவளுக்கு இரஹஸ்யமாய்த் தேவர்களுக்கும் அரிய பரமான்னங் கொணர்ந்தளிக்கப்போகிறான். அதனைப் பிராட்டி கண்டு இந்திரனுலிம்து அளிக்கப்பட்டதென வுணர்ந்து அதில் முதலில் ஒரு பாகமெடுத்து என்பர்தா தம்பியுடன் உயிர்வாழ்ந்துய்யினும், தெய்வத்தன்மையை யடைந்திருக்கினும், இது அவர்பொருட்டாகக்கடவதென்று தனையில் வைத்துவிட்டு மிகுதியைப் புசிக்கப் போகிறாள். பின்பவளைத் தேடுவதன்பொருட்டு ராமனுலனுப்பப்பட்டு வாநரர்கள் தேடிக்கொண்டு வரப்போகிறார்கள். கேளாய் ஸம்பாதி ! அப்போழ்து நீயவர்களைக் கண்டு பிராட்டி யிருக்குமிடத்தை யுரைசெய்யக்கடவை. நீ இத்தன்மையனை எங்குஞ் செல்லற்க ; திறமை யற்றவனுகி எங்கேதான் செல்வாய் ; ஆதலின், தேசகாலங்களை யுணர் ; இவ்விடத்திலேயே அவர்களுடைய வரவை எதிர்பார்க்க ; அப்போழ்து உனக்குச் சிறகுகளும்முளைக்கப்போகின்றன ; உனக்கிப்போழ்தே சிறகுகள் முளைக்குமாறு செய்வதற்குத் திறமையிருக்கையிலும், மனமுறுகின்றிலேன் ; நீ இங்கிருந்துகொண்டே இவ்வண்ணம் வாநர்களைக்கண்டு பிராட்டி யிருக்குமிடத்தை யுரைசெய்வாயாகில், உலகங்களெல்லோர்க்கும் உபகாரஞ் செய்தவனுகுவாய் ; அந்தக் காரியம் அந்த ராமலக்ஷ்மணர்களிருவருக்குமாத்திரமே யன்று ; அது பிராஹ்மணர்கள், தேவர்கள், முனிவர்கள், தேவேந்திரன் இவர் முதலிய எல்லோருடைய காரியமே யாகின்றது ; யானும் அந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களைக்கண்டு ஸேவித்துக் கண்கள்குளிர்ந்து மனமகிழ்ந்தின்புறல்வேண்டுமென்று விரும்புகின்றேன் ; ஆயினும், மூப்புற்றுத் திறனையற்ற இந்த சரீரத்துடன் நெடுங்காலம் வாழ்வுற விரும்புகின்றிலேன் ; ஆதலின், இந்த சரீரத்தை விட்டு விட்டு வானேற விரும்புகின்றேன் ; ஆதலால், நீ இவ்விடத்திலேயே வாழ்க ; என்று முக்காலப்பொருள்களையும் உணர்ந்தவராதலின் மனமகிழ்ந்து மொழிந்து தேற்றி யருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்திரண்டாவது ஸாகசமம்
முற்றிற்று.

அ று ப த் து மூ ன் று வ து ஸ ர் க் க ம்.

வாநரர்கள் ஸம்பாதியிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தென்கடலின் வடகனை சேர்ந்து அதனை எங்ஙனந் தாண்டுவதெனச் சிந்தையுற்றது.

கேளீர் வாநரர்களை ! அந்த நிசாகரமாமுனி இவ்வகையாகப் பற்பல இனிய மொழிகளை மொழிந்து என்னைத் தேற்றி விடைகொடுத்தனுப்பித் தாமும் தம்மாசிரமத்தினுள்ளே சென்றருளினர், யானும் அந்தக் குகையி

னின்றும் புறப்பட்டு மெல்ல மெல்ல இம்மலையின் சிகரத்திலேறி யுங்கள் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் ; இப்போழ்து அந்த நிசாகர மாமுனி யுரைசெய்து சென்று எண்ணையிரம் வருஷங்களாகின்றன ; அதுமுதல் அவருடைய வாக்கியத்தைக் கருத்திற்கொண்டு தேசகாலங்களை எதிர் பார்த்திருந்தேன் ; அம்முனிவர் மஹாப்ரஸ்தானஞ்சென்று பேறு பெற்றனர், யான் அதுமுதல் பற்பலச் சிந்தைகொண்டு வருந்தி யுயிரை விடுவதில் துணிவுகொண்டிருந்தும் அம்முனியின் மொழியை நினைந் திறந்திலேன் ; எழுந்தெரிகின்ற தீபம் இருளை யழித்து விடுவதுபோல அம்முனி வாக்கியமே என்னுடைய துயரத்தையும் அழித்துக்கொண்டு வந்தது ; இராவணனுடைய திறமை என்னுடைய புத்திரன் திறமை யினும் அற்பமானதென்று யான் அறிந்திருக்கின்றேனாதலின், அப்போது இராவணனைத் தகைந்து பிராட்டியைப் பாதுகாத்து என் மீட்டுக்கொண்டு வந்திலையென்று என் மகனையும் இகழ்ந்து மூனிந்தேன் ; அவன் அவ்வண்ணம் வந்து விட்டமையின், பிராட்டியை விட்டுப் பிரிந்த அந்த ஸ்ரீராமலக்ஷ்ம ணர்களையும் பாதுகாக்கப்பட்டிலர்கள் ; ஆதலின், என் மகன் என்பொருட்டு நன்மைசெய்தாலுங்கியிலன் ; எனக்கும் தசரதசக்ரவர்த்திபிதுள்ள நேசம் அத்தன்மையது ; என்றிவ்வண்ணம் மொழிந்துகொண்டிருக்கையில், அவ் வானரர்களுக்கெதிரிலேதானே அந்த ஸம்பாதிக்குச் சிறகுகளிரண்டும் முன் போலவே முளைத்து வளர்ந்தன ; ஸம்பாதியும் தனக்கிவ்வண்ணம் செவ்விய இறகுகளுள்ள சிறந்த சிறகுகளினால் தன்னுடைய சரீரம் திகழ்வதைக்கண்டு மகிழ்ந்து வானரர்களையும் நோக்கிப் பாரீர்கள் வானரர்களே ! எனது சிறகுகளி ரண்டும் சூரியகிரணங்களினால் எரிந்துவிட்டபோதிலும் மீளவும் முன்போலவே தோன்றி விளங்குகின்றன ; யான் சிறகுகளெரிவதன்முன்னம் இருந்தவண் ணமாகவே சிறகுகளும், தோள்வலியும், வலிமையும், திறமையும், பௌருஷ முமே குறையின்றி யுண்டாயின ; ஆதலின், நீங்களும் நன்றுக முயற்சிசெய்க ; பிராட்டியான்காண்டு மகிழ்வீர்கள் ; அவ்விஷயத்தில் எனக்கு இவ்வண்ண மே சிறகுகள் தோன்றியதே நற்சகுனமாகின்றது ; என்றிவ்வண்ணமாக ஸம்பாதி யவ்வதன் முதலாகவுள்ள . வானரர்களைநோக்கி யுரைசெய்து தனக்கு வானிடையிற்பறக்குந் திறமையுண்டாகியதைப்பரிசோதித்துகொள்வதன் பொருட்டு மேலெழுந்து பறந்து சென்றுவிட்டது ; அந்த வானரயூதத்

· ஸம்பாதி வானரர்களை நோக்கிச் சீதாதேவியை இராவணன் கொண்டுபோகும் போது என் சிறகுகளெரிந்துந் திறமையற்றுமிருந்தமையின், அவனுடன் போர்செய் திலேனென்று மொழிந்தது ; பின்பு, தன் மகன் அவர்களைக்கண்டும் சீதாதேவியைப் பாதுகாவாமல் வந்ததற்குச் சினங்கொண்டிகழ்ந்தேனென்றும் மொழிந்தது ; ஸ்ரீராம னிடத்தில் அவ்வளவு பக்தங்கொண்டிருந்தும், பின்பு சிறகுகள் முளைத்தபின்னர்தனக் கு பல பராக்கிரமங்கள் முன்போலவே தோன்றினவென்றுரைசெய்தும், அவர்களைமா த்திரம் பிராட்டியைத்தேடும்படி சொல்லித் தான் பறந்துவிட்டதாகக் கூறப்பட்டிருக் கின்றது ; இப்போது இதுவும் அவர்களுடன் சேர்ந்து என் தேட முயற்சி செய்தில னென்ன, ஸம்பாதிக்கு அம்முனிவர் உரைசெயும்போது அவர் மூக்காலப்பொருள்களையு

தலைவர்களும் அந்த ஸம்பாதியின் வாக்கியத்தைக்கேட்டு பெருமகிழ்வு கொண்டு சிங்கம் போலக் கர்ஜனைசெய்து அபிஜித்தென்னும் நடுப்பகல்வேளையில் அங்கிருந்தெழுந்து வாயுவேகமனோவேக முற்றவர்களாதலாலும், ஸீதாபிராட்டியின் செய்தி கேட்டுப் பெருஹர்ஷம் அதிகமானமையினாலும், எவ்விதத்திலும் பிராட்டியைத்தேடிக் காண்போமென்னு முறுதிகொண்டு தென்திசைநோக்கிச் சென்றனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்து மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்து நான்காவது ஸர்க்கம்

வாநரர்களெல்லோரும் தென்கடலைக்கண்டு அதனைத் தாண்டுவதன் பொருட்டுத் தங்தமக்குள்ள திறமையைக் கூறுமாறு நிச்சயஞ் செய்துகொண்டது.

——:0:——

இவ்வண்ணமாக வாநரர்களெல்லோரும் ஸம்பாதியுரைசெய்த வாக்கியத்தைக்கேட்டு மகிழ்ந்து இராவணனுக்கிருப்பிடமாகிய இலங்காத்தீவில் பிராட்டியைத் தேடும்படி நிச்சயஞ்செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டு உலகமனைத்துக்குரும் பிரதிபிம்பமோ என்று ஐயமுறுமாறு ஸகலவஸ்துகளும் நிறைந்து விளங்குகின்ற கடலின் வடகரைசேர்ந்து சேனைகளை யிறக்கித் தாமுமிருந்து பருத்து நீண்ட உருவங்கொண்டு கோரமாகவும், விகாரமாகவுமுளள பற்பல ஜலஜந்துக்கள் வாய்திறந்து கூவி விளையாடவும், பேரலைகள் மோதவும், நடுவிலுறங்குகின்றதுபோலும், மற்றோரிடத்திலாடுகின்றதுபோலும், சில விடத்தில் மலைகள்போல மேலெழுந்தோங்கியும், பாதாளதலத்தில் வாழுந் தானவர்களுரைந்தும், பார்ப்போர்க்கச்சந்தருவதுமாகிய கடலைகண்டனர்கள். அவர்களுள் அற்பர்களாகியிசைவர் அச்சமுற்றனர்கள்; சிலர் ஆகாசம்போல முடிவிடமின்றி வியன்றகன் றுளதே? இதனைவ்வண்ணங்கடந்து சென்று பிராட்டியைத் தேடுவோமென்று தைத்தனர்கள். இவ்வகையாகக் கடலைகண்டு துயரங்கொண்ட வலீ முகங்களை யங்கதகுமாரன் தேற்றி மொழியலுற்றனன். கேளீர் அன்பர்களே!—

முணர்ந்தவராதலின், பிராட்டியைச் சிறியதிருவடியே தேடி வந்து பெருமாளுக்குச் செய்தி யுரைசெய்வார்; ஆதலின், நீ யவர்களுக்குச் செய்திமாத்திரம் உரைசெய்து நீ வேண்டுமிடத்திற்குச் செல்லென்றும் உரைசெய்திருப்பார்; அதனை இங்கு மொழிவது முக்கியமன்றென்று உரைசெய்திலனென்று ஊகித்தல் வேண்டும்; இல்லாவிட்டால் இராவணன் ஜடாயுவைக் கொலைசெய்துவிட்டதுபோல நம்மையும் கொலை செய்வானென்று அச்சமுற்றுச் சென்றிலனென்றுரைத்தல்வேண்டும்; இவ்விருவழியையும் விட்டு வேறு வழி யவ்வினைவுக்கு விடையாகாதென்றுணர்க.

அங்கதன் வாநரர்களைத்தேற்றி கடலிலக்கடக்க ஏவியது.

నవిషాదేమనఃకార్యం విషాదోదోషవత్తమః।
విషాదోహి నిపురుషం బాలంక్రుద్ధఇవోరగః॥

నవిషాదేమనఃకార్యం విషాదోదోషవత్తమః।
విషాదోహన్తిపురుషం బాలమ్క్రుద్ధ ఇవోరగః॥

துன்பத்தின்மீது மனனைச் செல்லவிடலாகாது; துன்பமென்பதே மிகவுந் தோஷமுடையது; எனங்கொண்ட நச்சரவம் பாலகனைக் கொலை செய்வதுபோலத் துன்பமே மனிதனைக் கொலை செய்வது; பராக்கிரமகாலத்திலும் துன்பமென்பதுளதாயின், அது அதனை யடக்கி விடுகின்றது; இவ்வாறு உற்சாகமடங்கித் துன்பமதிகமாயின், யாதுபயன்தான் கைக்கூடும்; என்றிவ்வகையாக அங்கதகுமாரனுரைசெய்து தேற்றி யன்றிரவுபோக்கிமறுதினமுதயத்திலெழுந்து மீளவும் ஸபைகூட்டி யாலோசனை செயலுற்றனன். அவ்வழி முகச் சேனையும் அந்த அங்கதகுமாரனைச் சூழ்ந்து தேவேந்திரனைச் சூழ்ந்த தேவசேனைபோல விளங்கியது; அந்த கபிசேனையையந்த யுவராஜனும், சிறியதிருவடியும் தவிர மற்றியாவன் தான் வசப்படுத்தியாளவல்லவனுளன்; ஆதலின், அங்கதகுமாரன் அச்சேனையையெல்லாம் பேசாமலும், கூவாமலும், நகையாமலும், பகையாமலும், சத்துசெய்யாமலுமிருக்கச்செய்து வாநரயூதபர்களையும் உடன்படுத்தி யவர்களைநோக்கிக் கேளீர் நேசர்களே! இப்போழ்திங்குள்ளோரில் யாவன் இக்கடலிக்கடந்து மஹாராஜனை சத்தியந்தவறுதவராகச்செய்துநம்மெல்லோரையும் மகிழ்விக்கவல்லவன்; நூறுயோஜனதூரம் இடையிலிளைப்புறுமல்தாண்டுந் திறமையுடையோன் யாவன்; யாவன் மஹாராஜர் கட்டளையை நிறைவேற்றி நம்மெல்லோரையும்தண்டனையினின்றும் மீட்கவல்லவன்; யாம் யாவனுடைய திறமையினால் இங்கிருந்து மகிழ்ந்து திரும்பிச்சென்று வீடு சேர்ந்து புத்திரமித்திரகளத்திராதிகளுடன் சேர்ந்தின் புறுவோம்; யாருடைய பேருதவியினால் மீண்டெப்திப்பெருமாளினையபெருமாள் மஹாராஜர் இவர்களைகண்டு மகிழ்வோம்; நம்மில் இவ்வண்ணந் திறமைகொண்டவன் யாவனே, அவன் இப்போழ்தங்ஙனமே செய்து மஹாராஜர் கட்டளையைநிறைவேற்றுவேனென்று அபயமளித்தருளக்கடவன். என்றிவ்வண்ணம் வாலி மைந்தன் மொழிந்த மொழியை எல்லோருங்கேட்டும் ஒருவரும் மறுமொழி மொழியாமல் சித்திரம்போல அசைவற்றிருந்தனர்கள். தாராகுமாரனதுகண்டு மீளவுமவரை நோக்கிக் கேளீர் யூதபர்களே! நீவிரெல்லீரும் பலமுடையோருள் சிறந்தவர்கள்; அழிவற்ற திறமையுடையீர்கள்; புகழுற்ற நற்குலத்திற் பிறந்தீர்கள்; பலமுறை யாவராலும் புகழ்ந்துரைக்கப்பட்டீர்கள்; உங்களுக்கு மூவுலகிலும் எவ்விடத்திலும் எவர்க்காயினும் செல்லுங்காலியில் இதுவரையில் தடை நேர்ந்திலது; ஆதலின், என் சிந்தை யுறுகின்றீர்கள்; இதனைத்

தாண்டும் விஷயத்தில் யார்க்கு எவ்வளவு திறமையுளதோ, அதனையுண்மையாக முறையே யுரைசெய்மின் ; என்று விளுவினன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்து நான்காவது ஸர்க்கம்
முற்றிற்று.

அறுபத்தைந்தாவது ஸர்க்கம்.

அங்கதன் முதலிய வாநரர்களெல்லோரும் தந்தம் திறமையைக்கூறி யந்தக் காரியத்தை முடிப்பவர் யாவருளரெனச் சிந்தையுறுகையில், ஜாம்பவான் சிறியதிருவடியை யேவமுயன்றது.

அநந்தரம் அங்கதன் வாக்கியத்தை வாநரர்களெல்லோரும் கேட்டுத் தத்தந் திறமையை முறையே கூறலுற்றனர். அவர்களுள் கஜனென்பவன் யான் பத்துயோஜனந் தாண்டுவேனெனவும், கவாக்ஷன் இருபது யோஜனந் தாண்டுவேனெனவும், கவயன் முப்பது யோஜனந் தாண்டுவேனெனவும், சரபன் நாற்பது யோஜனந் தாண்டுவேனெனவும், கந்தமாதனன் ஐம்பது யோஜனந் தாண்டுவேனெனவும், மைந்தன் அறுபது யோஜனந் தாண்டுவேனெனவும், துவிவிதன் எழுபதுயோஜனந் தாண்டுவேனெனவும், ஸுஷேணன் எண்பது யோஜனந் தாண்டுவேனெனவும் முறையே மொழிந்தனர்கள். அப்போழ்து ஜாம்பவான் அதுகேட்டு அவர்களோ நோக்கிக் கேளீர் யூதபர்களே ! யான் முன்னம் மூப்பின்றி இளையோனாகியிருக்கையிலே எனக்கும் மிகவும் தாண்டுந் திறமையும், தோள்வலியுமிருந்தன ; இப்போழ்து வயது சென்று மிகவும் மூப்புடையேனையினேன் ; ஆகவின், மிகத் திறமைகொண்டிலேன்; ஆயினும், இத்தருணத்தில் உபேக்ஷைசெய்வது தகுதியற்றது ; இவ்விஷயத்தில் பெருமாள் மஹாராஜர் இருவரும் மிகவும் அன்புகூர்ந்து ஆவல் கொண்டு நம்பி நம்மை யனுப்பியிருக்கின்றார்களல்லரோ ? ஆதலின், எனக்கிப்போதுள்ள திறமையை யறிவிக்கின்றேன் ; யானிப்போழ்து தொண்ணூறு யோஜனந் தாண்டுவேனென்பதில் சந்தேஹமிலது ; என்றுரைசெய்து டீளவும் அவர்களை நோக்கி, வீரர்களே ! தாண்டுவதில் எனது திறமை இவ்வளவேயென்றெண்ணற்க ; மஹாபலிசக்கரவர்த்தி யாகத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு திரிவிக்ரமாவதாரஞ் செய்தருளுகையில், அவனைப் பிரதக்ஷிணஞ்செய்து மகிழ்ந்தேன் ; இப்போழ்து மூப்புடையேனினுமையின், தாண்டுந்திறமை சூறுகினமையின், இப்போது எனது திறமை இவ்வளவேயென்று எண்ணுகின்றேன் ; யானிவ்வளவுதூரஞ் செல்வதிலுமெமது காரியம் முடிவுபெறுகின்றிலது ; ஆதலின், யாது செய்வேனென மொழிந்தனர். அப்போழ்து மஹாதீரனை யுவராஜன் ஜாம்பவானை நோக்கிக் கேளீர் ரிக்ஷபதியே ! யான் இந்த நூறு யோஜனதூரமுஞ்சென்று அக்கரை சேர்வேனென்பதிலையமிலது ; ஆயினும், மீண்டிங்கெய்துவேனோ எய்தேனோவென்று ஐயமுறுகின்றேன் ; எய்துவேனென்று மனம் உறுதி கொள்ளுகின்றிலது ; என்றுரைத்

தனன். ஜாம்பவான்தூகேட்டு அவனைநோக்கி, இளவரசசே ! நீர் இக்காரி யத்தை முடிக்குந் திறமை யுடையீரென்பதிலையமிலது ; நூறென்பதென்ன கணக்கு ; ஆயிரம், லக்ஷம் யோஜனமாயினும் நீர் தாண்டுவதற்கும், மீண்டெ ய்துவதற்குந் திறமையுடையீரே ; ஆயினும், யாவனையும் கட்டளைசெய்தனு ப்பவல்ல யஜமானன் ; எங்கும் அனுப்பத்தக்கவனுகான் ; நீர் இவ்வாகரர்கள னவர்க்கும் யஜமானன்; இவரெல்லோரும் உமக்கு அடிமை பூண்டவர்கள் ; அன்றியிலே, பிரபுவென்பவன் படர்களுக்கு மனையாளை நிகர்த்தவன் ; இவ் வண்ணம் முன்னோர் மொழிந்திருக்கின்றனர்கள். ஆதலின், பாரினையைப் போல நீர் எங்களால் பாதுகாக்கத்தக்கவர் ; அன்றியிலே, இக்காரியமென் னுங் கனிக்கு நீர் வேர்போன்றவர் ; ஆதலின், கனி பழுப்பதன்பொருட்டு வேரோ பாதுகாக்கத்தக்கது ; இதுதான் காரியவாதிகளின் நீதி ; வேர் அழி யாதிருந்தாலன்றே, தளிர், பூ, காய், கனிகள் உண்டாகும் ; ஆதலின், இக் காரியத்திற்கு வேர்போலக் காரணமாகிய நீர் பாதுகாக்கத்தக்கவர் ; அன்றி யிலே, எங்களுக்கெல்லாம் நீர் இளவரசனும், இராஜபுத்திரனுமாகின்றீர் ; உம்மைப்பற்றியே யாங்கள் காரியங்களை யெல்லாம் நிறைவேற்ற வேண்டும் ; நீர் செல்வது தகுதியற்றது ; என்று மொழிந்தனர். அங்கதகுமான் அது கேட்டு மீளவும் அவரை நோக்கிக் கேளீர் ஜாம்பவானே ! யான் இப் போழ்து உமது வாக்கியத்தின்படி செல்லேனையின், வேறே செல்ல வல்லவன் யாவனுமிலனே ? ஒருவரும் செல்லாமல் காரியம் கெடுமாயின், மீளவும் நாமெல்லோரும் முன்போலவே ப்ராயோபவேசஞ் செய்திறக்க வேண்டுமல்லது வேறு கதி யாதுளது ; மஹாராஜர் கட்டளையைச் செய்து முடிக்காமல் அங்கே செல்வோமாயின், உயிர்வாழ்ந்தெவ்வண்ணமின்புறுவோ ம் ; மஹாராஜர் அருள்செய்வதற்கும், வெகுண்டு தண்டனை செய்வதற்குந் திறமை யுற்றவரல்லரோ ? ஆதலின், அவர் கட்டளையைச் செய்யாமல் அங் குச் செல்வோமாயின், உடனே பிறப்போமே ? ஆதலின், நீர் யாவுமுணர்ந் தவராதலின், இக்காரியத்திற்குத் தீமை யெவ்வண்ணம் நேராமல் நிறைவே றுமோ, அவ்வண்ணம் நன்றாக ஆலோசனை செய்து மொழிக ; என்று மொழிந்தனர். ஜாம்பவானும் அதுகேட்டாராய்ந்து மீளவும் அங்கதனை நோக்கிக் கேளீர் யுவராஜனே ! நாம் மேற்கொண்ட இக்காரியத்திற்கு ஒரு குறையும் நேர்வதில்லை ; யாவன் இக்காரியத்தைக் குறையின்றிச் செய்து வருவானை, அவனைக்கண்டறிந்து ஏகுகின்றேன் பாரீர் ; என்று மொழி ந்து பின்பு, வானரர்களெல்லோர்க்கும் சிறந்தவரும், பல பராக்கிரமமுடைய வரும், நற்புகழும், நன்மதியும், நட்புமுடையவருமாகிய அனுமான் ஓரிடத் தில் தனியே வீற்றிருக்கக்கண்டு அவர் மகிழ்ந்தெழுந்து செல்லுமாறு ஏவுதல் செய்ய முயன்றனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்தைந்தாவது ஸர்க்கம்

முற்றிற்று.

அறுபத்தாறுவது லர்க்கம்.

ஜாம்பவான் சிறியதிருவடியின் மகிமையைப் புகழ்ந்து அவனைச் சென்று காரியத்தை முடிக்குமாறு உடன்படுத்தியது.

அதேக நூறுயிரம் வாநரசேனைகள் அலைகடலைக்கண்டஞ்சுகொண்டு வருந்துவதை ஜாம்பவான்கண்டு சிறியதிருவடியைநோக்கி, வாரீர்மாருதி! நீர் மஹாவீர முடையோரும், பற்பல நூல்களையுங் கற்றவரும், தீரமுடையோருமாகியும் எகாந்தமாக வீற்றிருப்பதேன்; யாங்களிவ்வண்ணமாலோசனை கொண்டிருக்கையிலும் என் மறுமொழி மொழிகின்றிலீர்; நீர் பராக்கிரமத்திலும், தேஜஸ்ஸிலும், தீரத்திலும், மஹாராஜரையும், பெருமாளையும், இளையபெருமாளையும் நிகர்த்திருக்கின்றீர்; அரிஷ்டநேமியென்னுங் காசிய பருக்கு விநதையிடத்திலவதரித்த கருத்மானென்று புகழ்கொண்டபெரிய திருவடி மகாபலமுடையவர்; பறவைகளெல்லாவற்றிற்குமிறை, அவர் அடிக்கடி பன்னகர்களைக் கொலைசெய்வதன் பொருட்டுக் கருங்கடலிடையிவ்வேகமாகப் பறந்து வருவதை யான்கண்ணுற்றிருக்கின்றேன்; அவருக்குச் சிறிகிலுள்ள பலம் உமக்குப் புஜத்திலிருக்கின்றது; உமது விக்கிரமமும், வேகமும், பலமும், புத்தியும், தேஜஸ்ஸும், வலிமையும் அவருக்குக் குறைந்தனவல்ல; இவ்வண்ணம் எல்லாக்குணங்களும் சிறந்திருக்கையில், என் மௌநமுற்றிருக்கின்றீர்; உமது தன்மையை நீர் அறிகின்றிலீரோ? புஞ்சிகஸ்தலையென்னும் தெய்வப்பொதுமகள் சாபத்தினால் அஞ்சனை யென்னும் வாநரப்பெண்ணாகப் பிறந்து பெருப்புகழ்கொண்டு கேஸரியென்னும் வானரசிகாமணிக்குப் பத்தினியாக விருந்தனள்; அவள் மூவுலகிலும் மிக்க வழகுடையவள்; சாபவசத்தாலேயே யவ்வண்ணம் வானரியாகிக் குஞ்சரனென்னும் வானரயூதபனுக்குப் புத்திரியாகிக் கேஸரிக்கு மணமாலை சூட்டினள். அவள் ஒருநாள் மானிடப் பெண்ணுருவங்கொண்டு மிகவும் அழகுடையளாகி பற்பல கலனையுமணிந்து வெண்பட்டுடுத்து மலையிலுனியிலுலாவுகையில், அவளை வாயுபகவான்கண்டு மயல்கொண்டு வெண்பட்டினையசைத் தவிழ்த்துவிட்டு திண்டிருண்டவிரண்டு துடைகளையும், பருத்துயர்ந்த கொங்கைகளையும், மலர்ந்தமுகத்தையும், பருத்தகன்ற நிதம்பங்களையும், நுண்ணிய பிடியுளடங்குந் துடியிடையினையும், ஆழ்ந்த நாபியையும், மற்றுமுள்ள குற்றமற்ற அவயவங்கள் யாவற்றையும் கண்டு. காமவேட்கை மிகுந்து அவளை இருகைகளாலு மெடுத்தணைத்துத் தழுவிக்கொண்டனன். உடனேயந்த அஞ்சனைதேவிகண்டு அச்சங்கொண்டு யாரடா நீயென்னுடைய கற்பினையழிக்கவிரும்புகின்றவன்; என்று சினந்தான்ற வினவினள். வாயுபகவானதுகேட்டு அவளை நோக்கிக் கேளாய் பெண்மணியே! யான் உனது கற்பினை யழிக்க வந்திலேன்; மனதிலுன்மீது மயல்கொண்டு மயல் தீருமாறு கைகளினால் தழுவிக்கொண்டேனல்லது, மற்று யாதுதீமையுஞ்செய்யேன்; இதனாலுனது கற்பு அழியாது; என்னருளினாலுனக்கிரு

நற்புதல்வன் பிறக்கப்போகின்றான். அவன் மிகவும் திறமையும், வலிமையும் மதியும், பலமும், பராக்கிரமும் உடையனாகித் தாண்டுவதிலும், மென்மேல் செல்வதிலும், பாய்வதிலும் எனக்கு நிகராகுவான் ; என்றுமொழிந்து மகிழ்ந்தனன் ; அஞ்சனை யதுகேட்டுப் பெருமகிழ்வுகொண்டு உடனே கருவுடையளாகிக் குகையில் உம்மைப்பெற்றனள் ; உடனே நீர் எழுந்து பாலஸூரியன், அப்பொழுதே உதயமாகக்கண்டு செவியதோர் பெருங்கனியென்றெண்ணி யதனைப்பறித்துப் புசிப்பதன்பொருட்டு வான்மீது அநேகமாயிரம் யோஜனதூரம் சென்று, அந்தக்கதிரவனுடைய வெப்பத்தினு லெரிக்கப்படினும், சிறிதும் துன்புறுமல் மேன்மேலும் செல்வதைநவக்கிரஹங்களுந் கண்டச்சங்கொண்டோடுகையில், தேவேந்திரனது கண்டோடிவந்து, சதகோடியினலும்மையடித்தனன், உடனே நீர் அந்த மலையினுனியில் பக்கமாக வீழ்ந்தமையின் உமது கபோலம் கல்லறைப்பட்டு முறிந்தும், அழியாமலிருந்ததனல், உமக்கு அனுமான் என்னும் திருநாமமுண்டாயிற்று ; இவ்வண்ணம் நீர் தம்போளியினலும், கல்லினலும், கபோலங்களில் அடிபட்டு வீழ்ந்ததை வாயுபகவான்கண்டு சினங்கொண்டு, மூவுலகினிலெங்கும் வீசாமல் நல்லோர்களுடைய வுயிர்களையும் அடக்கி, யடங்கியிருந்தனன். அப்போழ்தெல்லோரும் மூச்சின்றித்தவிக்கையில் இந்திரன் முதலிய தேவர்களெல்லோரும் அச்சங்கொண்டோடிவந்து வாயுபகவானைக்கண்டு, நன்மொழிமொழிந்து சினத்தையாற்றி மகிழ்விக்கையில் அப்பொழுது நான்முகதேவன் உமக்கு ஆயுதங்களொன்றினலும் அழிவில்லை யென்று வரமளித்தனன் ; தேவேந்திரனும் நீர் வச்சிராயுதத்தாலடிபட்டும் அழிவுறுதிருந்ததுகண்டு மகிழ்ந்து, நீர் எப்பொழுது மரணத்தைக் கோருகின்றீரோ ! அப்பொழுது தன் இறக்கக்கடவீரென்று வரமளித்தனன். ஆதலின் நீர் அவ்வண்ணம் கேசரிக்கு கேஷத்திரஜனும், வாயுபகவானுக்கு ஔரசனும், அஞ்சனைனந்தனனும் தேஜஸ்ஸினலும், தாண்டுவதினலும், வாயுதேவனையே நிகர்ந்தவரும் ஆயுதாதிகளால் தீங்கும், இறப்பும், அற்றவரும் ஆகிச்சிறப்புற்றிருக்கின்றீர் ; யாங்களிப்போழ்து திறமையற்றிருக்கின்றோம் ; ஆதலால், நீர் ஒருவரே யிப்பொழுதெங்களைப் பாதுகாத்தளிக்கக்கடவீர். நீர் திறமையும், கேள்வியும், வலிமையும்கொண்டு பெரிய திருவடிபோலவே விளங்குகின்றீரல்லீரோ ; யான்முன்னே சூப்புறுதிருக்கையில் பெருமாள் த்ரிவிக்ரமாவதாரஞ் செய்தருளுகையில் அவரை இருபத்தோருதரம் வலஞ்செய்து பணிந்தேன் ; தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைகையில் அப்போழ்து அமிழ்ந்தோற்றுவதற்கு வேண்டிய மூவிகைகளைப்பற்பல விடங்களிலிருந்தும் வினவாகக் கொணர்ந்தளித்தேன் ; அத்தன்மையனுகியும் நானிப்பொழுது சூப்புற்றுத் திறமைகுன்றி யொடுங்கியிருக்கின்றேன் ; இப்போழ்து நீர் ஒருவரோ எம்மெல்லோரினும் சிறப்புடையீர் ; ஆதலின் நீர் இப்போழ்து பெருகிவளர்ந்து, கடலைத்தாண்டமுயற்சிகொள்க ; உமதுதிறமையைக் கண்ணுரக்கண்டுமகிழ இவ்வானரசேனைகளெல்லாம் விரும்புகின்றன ; ஆதலின் யூதபர்தலைவரோ! எழுந்திருக்க, கடலைத்தாண்டுக ; உமதுகதி, யெல்லாப்பூதங்களையும்விடச் சிறந்த

தன்மேரு ; இவ்வாநரர்களெல்லோரும் துண்டுற்றிருக்கின்றார்களே ; இத்தரு ணத்திலும் நீர் உபேணக்குயேன் செய்கின்றீர். பெருமாள் வளர்ந்து மூவுல கங்களையும் மூன்றடிகளாக அளந்ததுபோல நீரும்வளர்ந்து இக்கடலேயோ ரடியாக அளக்கக்கடவீர் ; என்றிவ்வகையாக ஜாம்பவான் புகழ்ந்தூணைசெய் தனர். சிறியதிருவடியதுகேட்டு மகிழ்வுகொண்டு அவ்வண்ணமேசெய்வே னென்று உறுதிகூறி யவ்வாநரர்களெல்லோரும் மகிழுமாறு பேருருவங் கொண்டெழுந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்தாறுவது லைக்கம்.

முற்றிற்று.

அறுபத்தேழாவது லைக்கம்.

சிறியதிருவடி யலைகடலைத்தாண்டுவதன் பொருட்டு மகேந்திர மலைமேலேறிநின்று வாநரர்களை மகிழ்வித்து மகிழ்ந்தது.

இவ்வண்ணம், சிறியதிருவடி நூறுயோஜனதூரங் கடலைத்தாண்ட முயற்சி கொண்டதை வாநரர்களெல்லோருங்கண்டு பெருமகிழ்வு கொண்டு கிலு ! கிலு ! என்று கூவியும், சிறியதிருவடியைப்புகழ்ந்தும் வியப்புகொ ண்டு பெருமாள் உலகமளக்குகையில், ப்ரஜைகளெல்லோரும் கண்ணுற்றுப் போலக் கண்ணுற்றிருந்தனர். இவ்வண்ணம் புகழப்பட்ட சிறியதிருவடியும், மிகவளர்ந்துலாங்கூலத்தை யுதறியடித்துமகிழ்வினால் பலமதிகமாகி மிக வொளிகொண்டு பேருருவம்பூண்டு மலைக்குகையில்சீறியசிங்கம் வளர்வது போல வளர்ந்து திகழ்ந்தனர் ; அப்போதவருடைய முகம்பழுக்கக்காய்ச் சின மடக்குபோலவும், புகையின்றி யெழுந்தெரிகின்ற அக்கினிபோலவும் விளங்கிற்று. அவர் அப்பொழுது வாநரர்களினடுவினின்று,எழுந்துபெரியோ ர்களைப்பணிந்தவரை நோக்கி மொழியலுற்றனர். கேளீர் அன்புள்ளதாழ் களே! என்தந்தையாகிய வாயுபகவான்; வானிடையிலெழுந்து, வீசுவாராகில் மலைச் சிகரங்களையும் வேகத்தினால் பறித்துத் தள்ளவல்லவர் ; அவருடைய வேகம், வைநதேயாதிகளுக்குமிலது. யான் . அவ்வருக்கும் ஓளரஸகுமாரனு கையால் வேகத்தில் எனக்கு நிகராகியவன் ஒருவனுமிலன். யானிங்கிருந்த மிகவுயர்ந்துள்ளமேருகிரியையும் இடையிலெங்கு முட்காராமல் சென்றடை வேன். இவ்வண்ணம் ஒருதரமேயன்று பலமுறை செல்வினும் வருத்தமு றேன். அலைகடலையும், கைகளினால் கலக்கி, யதின்வேகத்தினால் ஆறு, குளங், கடல், மலைகளுடன் கூடிய பார் முழுமையும் பறித்திவிடவும் வல்லேன். இக்கடலும் என்னுடையதுடையின் வேகத்தால் மேலெழுந்து பெருமுத லைகளும் புரண்டு கரைகடந்து செல்லும் ; பெரியதிருவடி வானிடையில் முன்னெழுந்துபறந்து செல்வினும், யான்பின்சென்று பலமுறையிலும் அவனைப்பிடிக்கவல்லேன் ; உதயகிரியினின்றும் சுரியனுடன், புறப்பட்டு அவன் அத்தகிரியையடைவதன் முன்னமேயான் அத்தகிரிசேர்ந்து பூமி யைத்தொடாமலேயீளவும் உதயகிரிவந்துசேர்வேன். இவ்வண்ணம் வானி

டையில், செல்லுகின்ற உயிர்களெல்லாவற்றையும் யான்வேகத்திலை மறச செல்வேன்; கடலையும் சோஷிக்கும்படிச்செய்வேன்; பூமியையும் பிளப்பேன்; மலைகளையும் பொடிசெய்வேன்; தாண்டுகையில் ஊருவின் வேகத்தினல், கடலையும்மேலெழச்செய்வேன்; யானிப்போழ்து ஆகாயத்திலெழும்பிச் செல்லுகையில், பற்பல மரஞ் செடிகொடிகளின் மலர்கள் பின்றொடர்ந்து வரும்; ஆதலின், எனது வழி வானிடையில் சுவாதிநக்ஷத்திரத்தின் வழி போல விளங்கும். யான் ஆகாயத்தில்பாய்ந்து, பறந்தும் உயர்ந்தும் இறங்கியும்செல்லுகையில், எல்லாப்பூதர்களும் என்னைக்கண்டு மகிழ்வார்கள்; என்னுடைய மிகப்பெரியவுருவத்தையுங்கண்டு மாழுகிலெனவும் எண்ணுவார்கள். அவ்வண்ணம்யான்செல்லுகில் மேகங்களையுஞ்சிதறவடிப்பேன்; மலைகளையும் அசைப்பேன்; கடலையும் கலக்குறச்செய்வேன்; தாண்டுமவிஷயத்தில் எனக்குள்ளதிறமை வாயுபகவான் வைநதேயர் இவ்விருவர்க்குமேயன்றி மற்றெவருக்குமில்லை; ஆதலின் யான்செல்லுகிலென்னைத்தொடர்ந்து வரத் தக்கவரெருவனுமிலன்; மேகத்தினின்றும் மின்னற்கொடிதோன்றி மின்னுவதுபோல் பின்னி ஒருநொடிக்குள்ளாகவே நெடுந்தூரஞ்சென்று அக்கரைசேர்வேன். எனது உருவமும், உலகமளந்த மகாவிஷ்ணுவின் உருவம் போல வளரும்; என்னுடையமனம் மிகவும் தெளிவுற்றிருக்கின்றமையினலும், செயலும் தடையின்றிவளர்கையாலும், பிராட்டியையான்கண்டு களித்தே மீண்டெய்துவேனென்று நிச்சயமுறுகின்றேன். ஆதலின் நீவிரெல்லீரும் மகிழ்க; துஞ்சற்க; வேகத்தில் வாயுபகவானுக்கும், பலத்தில் பெரியதிருவடிக்கும் நிகராகுவேன். பதினையிரம்யோஜனதூரம், தடையின்றிச் செல்வேனெனவுறுதி செய்வேன். சதகோடியைக்கையிலேந்திய தேவேந்திரனையினும் நாலுமுகங்களையுடைய விதாதாவாயினும் அமிழ்தத்தைக் கையில்வைத்துக்கொண்டு பாதுகாக்கினும் அவர்களையும் வென்று, அவ்வமிழ்தத்தைப் பறித்துக் கொண்டுவருவேன்; அநேகமாயிரம் அரக்கர்களுடன் கூடிய இலங்காத்தீவையே வேருடன்பறித்தெடுத்துக்கையிலேந்திவருவேன். என்றிவ்வகையாகச் சிறியதிருவடி வானரர்களை நோக்கி வீறுகூறினர்.

இவ்வண்ணங்கர்ஜனைசெய்து மொழிந்த சிறியதிருவடியின்மொழியை யவ்வானரர்களெல்லோரும்கேட்டு மிகவும் மகிழ்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில், ஜாம்பவான் மகிழ்வுகொண்டு சிறியதிருவடியை நோக்கிக் கேளீர் அனுமானே! நீர் வீரங்கொண்டு இவ்வண்ணம் மொழிந்ததினல் இவ்வானரர்களெல்லோருடையவும் சோகக்கடல் வற்றியாநந்தக்கடல் பொங்குகின்றது; இவ்வானரர்கள் உம்க்கு நலம்விளையுமாறுகூடி வாழ்த்துகின்றனர்கள். ஆதலின், நமதுகாரியம் தடையின்றிக்கைக்கூடும்; இவர்களின் ஆசீர்வாதத்தினலும், முனிவர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் அருளினலும், காரியம் ஜயம் பெறுமாறு நீர்மேலெழுந்து தாண்டுக; நீர் மீண்டு வருமளவும், நாங்களெல்லோரும் ஒரு காவில் நின்றெதிர் பார்த்திருப்போம்; இனி எங்களெல்லோர்களினுடைய வுயிர்களும் உம்முடைய அதீனமாயின வல்லவோவென்று வேண்டினர். சிறியதிருவடி யதுகேட்டு மகிழ்ந்து அவர்களை

கஎஉ கிஷ்கிந்தாகாண்டத்தில் சுஎ-வது ஸர்க்கம்.

தோக்கி, யூதபதிகளே ! யாவிங்கிருந்தே மேலெழுவேனையின், என்னுடைய வேகத்தை இந்தப்பூமிபொறுமலழுந்திவிடும் ; இம்மஹேந்திரமலையின் சிகரங்கள் திடங்களாகவும், விஸ்தாரமாகவுமிருக்கின்றன ; ஆதலின், அச்சிகரங்களின்மேலேறித் தாண்டுமாறு வேகங்கொள்ளுகிறேன் ; இச்சிகரங்கள் பற்பல மரங்களடர்ந்தும், பலவகைத் தாதுக்கள் நிறைந்தும் இருக்கின்றமையின், யான் நூறுயோஜனதூரஞ்செல்லுமாறு வேகமுறுகையில், என்னுடைய பாதங்களின் வேகத்தைப் பொறுக்கும்என்று மொழிந்து அவர்களை யுடன்படுத்தி யந்த மஹேந்திரமலையின் சிகரத்தின் மேலேறினர் ; அம்மலை பலவகைப்பட்ட மரங்களடர்ந்தும், மான்களடர்ந்தும், புல்லுள்ள பூமியுடையதாகியும், பற்பல மலர்கள் மலர்ந்த கொடிகள் நெருங்கியும், எல்லாமரங்களும் எப்பொழுதும் தளிர்த்தும், பூத்தும், காய்த்தும், கனித்தும், தழைந்தும், சிங்கம் யானை புலி கரடிகளாலாவியும், பற்பல பறவைகளொலித்தும், மலையருவிகள் பெருகியும், சிகரங்களினால் மிகவுமுயர்ந்தும் இருக்கினும் மஹேந்திரனுக்குநிகரான பராக்கிரமமுள்ள இந்தச்சிறியதிருவடியின் திருவடிகளினால் பீடிக்கப்பட்டதாகி யழுந்தினமையின், சிங்கத்தினலடிக்கப்பட்டமதயானை போல வொலிசெய்தது ; மலையருவிகளை மிகவும் பெருக்கிற்று ; சிகரங்கள் முறிந்து வீழ்ந்தன ; மரங்கள் சாய்ந்தன ; மான்களும், யானைகளும் அச்சங்கொண்டலைந்தன; இணைபிரியாமல் மதுபானஞ்செய்தின்புறுகின்ற கந்தர்வர்களும், வித்தியாதரர்களும், மற்றுமுள்ளதேவகணங்களும், பறவைகளும் அச்சமுற்று மேலெழுந்தனர்கள்; மஹோரகங்களும் அச்சமுற்றடங்கின; சிகரங்களசைந்தன ; அப்பொழுது புற்றினின்றும் பாதி வெளியில்வந்த பாம்புகள் அப்படியே யுழுந்திவிட்டமையின், அவைகளினால் அம்மலை பதாகைகளையுடையது போலவும், முனிவர்களும் அச்சங்கொண்டு தன்னைவிட்டோடின்னமையின் பெருங்காட்டில் துணைவிட்டுப்பிரிந்த வழிநடப்பவன் போலவும் விளங்கிற்று ; அந்தச் சிறியதிருவடியும் இவ்வகையாக அம்மஹேந்திரமலையின்மேலேறி இயல்பாகவே வேகமுடையராதலின், வேகஞ்செய்வதிலூக்கமுற்றும், வாநரர்களுள் மிகவீரமுடையராதலின், பகைவர்களைக்கொலைசெய்ய வல்லவரும், சிறந்த மகிமையுடையராதலின், நன்மனமுடையவருமாகியும் மனத்தைத்தன்வசமாக்கி யச்சமென்பதை யகற்றி யிலங்கையை நினைந்து அங்குச்சென்று செயற்கரியகாரியங்களையெல்லாம் செய்துமுடித்துவருவேனென்று உறுதிக்கொண்டு தாமும் மகிழ்ந்து தம்முடன் வந்த வாநரர்களெல்லோரையும் மகிழ்வித்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்தேழாவது ஸர்க்கம்